காவேரி
பிப்ரவரி, 1960
50 காசு
C. Kondiah Raju
M. RAMALINGAM

உச்ச நிலைக்கு விருத்தியடைந்துள்ள **உன்னத** விற்பனை.



லோமா உங்கள் கேசத்தை கருமை யுடன் விளங்கச் செய்வதுடன் அதை எழிலுடன் பிரகாசிக்கவும் செய்கின்றது. அதனால்தான் பெரியோரும், சிறியோரும், ஆடவரும், பெண்டிரும், எல்லோரும் ஒருமுகமாக, இந்தியாவிலும், மற்றும் வெளிநாடுகளிலும் லோமாவையே விரும்பி வாங்குகிறார்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்குவதில் பாரினில் புகழ்பெற்றது.

பூரண ஏஜெண்டுகள் :

எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்—1

ஏஜெண்டுகள் :

ஸி. நரோத்தம் அன்டு கோ. பம்பாய்—2

TAM

மதராஸ் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் ஜே. பாலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட், மதராஸ்.

ஸிலோன் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் சிர்ருல் காதீர் & கோ.,
41 & 43, 2-வது கிராஸ் தெரு, கொழும்பு-11.

விரைவில் வருகிறது
தமிழ் மக்களை
ஆனந்த வெள்ளத்தில்
திளைக்க வைக்க
வாஹினியின்
ராஜமகுடம்
தயாரிப்பு & டைரக்ஷன்
பி.என்.ரெட்டி
BAKTHA

தபால் பில்லைகளை கவனமாக ஒட்டி

தபால்கட்டுகளின் வேகத்தை அதிகரியுங்கள்



* சரியான மதிப்புள்ள தபால் பில்லைகள் ஒட்டுங்கள்

போதுமான தபால் பில்லை இல்லாததும், தபால் பில்லையே ஒட்டப்படாததுமான கடிதங்கள் கணக்கெடுப்பதற்காகத் தனியாக வைக்கப்பட்டு தாமதமாக அனுப்பப்படும்.

* விலாசம் உள்ள பக்கத்தின் வலது மேல் மூலையில் அவைகளை ஒட்டுங்கள்

கடிதங்களை பாகுபாடு செய்வதன் நேரத்தைக் குறைக்கும். தானே இயங்கும் இயந்திரத்தால் தபால் பில்லைகளில் சீக்கிரமாக முத்திரையும் இடலாம்.



* தேவையான மதிப்பிற்கு குறைந்த எண்ணிக்கையுள்ள தபால் பில்லைகளே உபயோகியுங்கள்

இதனால் விரிவாக விலாசம் எழுத அதிக இடம் கிடைக்கும். முத்திரையையும் வேகமாக இடலாம்.



* கீழே விழும்படி தபால் பில்லைகளை ஒட்டாதீர்கள்

தபால் பில்லைகள் கீழே விழுந்தால் அக்கடிதம் தபால் தலை ஒட்டப்படாதது என்று மதிக்கப்படும். பட்டுவாடா செய்வதில் தாமதமும் ஆகலாம்.

தபால் பில்லைகள் போதுமான அளவு இல்லாமலும் சரியானபடி ஒட்டப்படாமலும் இருந்தால் அக் குறிப்பிட்ட கடிதத்தின் பட்டுவாடா தாமதமாவதுடன், இலாகாவின் வேலை முறையில் தடங்கலும் ஏற்படும்.

தபால் பில்லைகளை கவனமாக ஒட்டுங்கள்

DA 59/356 TM

உங்களுக்கு சிறந்த முறையில்
சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி.
இலாகா

காவேரி

பொருளடக்கம்

விகாரி-ஸு மலர் 19	பிப்ரவரி — 1960	தை இதழ் 6

வயோதிகத்தின் படிகள்	...	கோமாளி	...	4
அண்டவெளி	...	டி. எஸ். பிரபலநாதன்	...	5
வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்	...	என். பி. சேஷாத்ரி	...	9
தொழில் துணுக்குகள்	...	விசால்தேவ்	...	15
டில்லித் தபால்	...	கே. ஸ்ரீநிவாஸன்	...	19
இன்பமே இங்கே வா! (தொடர்கதை)	...	தி. சேஷாத்திரி	...	23
வீரவனிதை	...	அ. சுப்பையா	...	34
விஞ்ஞானத் துணுக்குகள்	...	நா. கி. நாகராசன்	...	41
சுசீலாவின் உள்ளம்	...	எஸ். ரங்கநாயகி	...	45
கட்டழகி	...	வனமாலிகை	...	55
பெண்களுக்கு மட்டும்	...	எஸ். விஜயா	...	60
சபரிமலை ஐயப்பன்	...	லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்	...	65
வஜ்ர வீணை (தொடர்கதை)	...	கே. சுந்தராம்பாள்	...	70
சலனம்	...	மயிலன்	...	75
சிறுவர் பகுதி	...	எஸ். விசாலாட்சி	...	83
நினைக்கவில்லை	...	இராச மாரப்பா	...	86
திரை உலகம்	...	விச்வம்	...	95

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள்: அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

விகாரி-ஸூ மலர் 19 | "சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" | தை இதழ் 6

[வயோதிகத்தின் படிகள்]

"கோமாளி"

முப்பதுக்குமேல் போனுல், முன்கோபம் வருமென்றுணர்ந்தும்,
தப்பேதுமில்லாத மனைவிதனை, தடிகொண்டுத் தாக்கிவிட்டு,
எப்போதும் மனையாளை, ஏங்கித் தவிக்கவிட்டு;
குப்பைமேட்டுக் கோதைகளை, கூசாமல் காணச்செல்வதேனே?.

நாற்பது வயதுக்குமேல், நாய்க்குணம் வந்ததென்று,
பற்பல காரணங்காட்டி, பழமொழிபோல் சொல்லியிருந்தும்,
நற்றலைமீதுள்ள மயிரெல்லாம், நரைகண்டு உதிர்ந்திடினும்;
பற்றியமனைவிதனைக் கைவிட்டு, பரத்தைகளை நாடுவதேனே?.

ஐம்பது பிராயந்தன்னில், ஐம்புலனும் சோர்ந்துவீழ்ந்தும்,
அம்புவி வாழ்க்கைதனில், அழகாக ஆடையுடுத்தி,
வம்பாகப்பேசிச் சிரித்து, வகைவகையாய் இன்பந்துய்த்து;
தம்பதி வாழ்க்கையிலேஓர், தவறுதல் செய்வதேனே?.

அறுபது வயதடைந்தும், அங்கமெலாந் தளர்ந்தும்,
மறுபிறவி மனிதனைப்போல், மங்கைமேல் நாட்டங்கொண்டு,
குறுநகை செய்துகாட்டி, குறைகளை மறைத்துவைத்து;
இறுமாந்திருப்பதேனே? இன்னும் குமரனென எண்ணமோ?.

எழுபதுக்குமேல் ஆகியும், இன்பவாழ்க்கை கனவுபோல்தோன்ற,
பழுதடைந்த கண்ணைக்கொண்டு, பார்க்கத்துடிக்கும் ஆசை,
விழுதில்லா ஆலமரம்போலே, வீழ்ந்து மடிவதுகண்டு;
அழுதழுது அவஸ்த்தைப்பட்டு, அல்லலுற்று வாழ்வதேனே?.

எண்பது வயதானுல், இருப்பது கடினமென்றெண்ணி,
கண்ணெனக்காத்த உடம்பு, காலனுக்கு இரையாகுமுன்,
எண்ணிய தருமமெல்லாம், இடைவாழ்வில் செய்துமுடித்து;
பண்ணிய பாவத்திற்கெல்லாம், பிராயச்சித்தம் செய்யாததேனே?.

"அண்ட வெளி"

டி. எஸ். பிரபலநாதன்

முகவுரை

வான ஆராய்ச்சி, மனிதன் பகுத்தறிவு பெற்று வாழத் தொடங்கிய கால முதலே, மனிதனின் ஆராய்ச்சி அறிவிற்கு ஆரம்பம் செய்து வைத்தது.

வாழ்வியல் தொல்லைகளினின்று விடுபடும் சிறிது நேரத்தில் இயற்கையின் எழிலையும், வானத்தின் விந்தைகளையும் கண்டு மகிழ் வெய்தினுன் அக்கால மனிதன்.

துன்பத்திலும் இன்பங்கண்டு இயற்கையில் ஆண்டவனைக் கண்டவன் ஞானியானுன். இயற்கை எழிலை தூரிகை கொண்டு வரைந்து மகிழ்வெய்தியவன் ஓவியனுனுன். இயற்கையில் கலையைக்கண்டு இன்புற்ற தன் உள்ளத்து உணர்ச்சிகளை கவியாக்கி அவ் வியற்கையை வழிபட்டவன் கவிஞனுனுன். கல்லிலே செதுக்கி இயற்கைக்கு உருவம் தந்து தனக்கும், அதற்கும் அழியாப் புகழ்தேடிக் கொண்டவன் சிற்பியானுன். வானத்தையும், அண்டவெளியின் விரிவையும், அதில் 'நீக்கமறநிறைந்து' இருக்கும் விண்மீன்களையும், உலகுக்கு உயிர் தரும் சூரியனையும் கண்டு அவைபற்றி ஆராயத் தொடங்கியவன் வானநூற் புலமை பெற்ற (விஞ்)ஞானியானுன்.

நாகரீகம் வளர வளர விரிவுபெற்ற வான நூற் புலமை ஒரு கலையாகவே கருதப்பட்டு மக்களால் போற்றி வளர்க்கப்பட்டது. ஆனுல், இக்கலையைச் சிலர் தங்கள் நன்மைக்கும் பயன் படுத்திக் கொண்டார்கள் போலும். கோள்களின் சலனத்திற்கும் மக்களின் வாழ்விற்குந் தொடர்பு படுத்திப்பேச சோதிடன் தோன்றினுன். வானத்தை ஆராயப்போய் வாழ்வின் இன்ப துன்பங்களை ஆராயவே இக்கலை பயன்படுத்தப்படத் தொடங்கியது.

ஆனுல், கடந்த மூன்று நூற்றுண்டுகட்கு முன்பு வாழ்ந்த கலீலியோவின் கண்டுபிடிப்புகள் மக்களை விழிப்புறச் செய்தன. அதே சமயம் மதத்தில் நம்பிக்கை கொண்ட சிலர் அவரை வெறுத்தனர். இன்னல் பலவற்றிற்கு உள்ளாகி தான் சொன்னவை, செய்தவை அனைத்தும் பொய் என்று அவரை ஒப்புக்கொள்ளவும் செய்துவிட்டனர்.

அறிஞர் சிலர் கலிலியோவிற்குப் பின்னர், அவர் வழியைப் பின்பற்றி ஆராய்ந்து அவர் கண்டு பிடிப்புகள் உண்மையெனக் கண்டனர். பிறகு கடந்த மூன்றே நூற்றுண்டுகளில் வான ஆராய்ச்சி வெகுவாக வளர்ந்து இப்போது வானவெளியில் ராக்கட் செலுத்துமளவிற்கு முன்னேறியது.

அறுபத்துநான்கு கலைகளில் ஒன்ருக தமிழர் வான ஆராய்ச்சியை அக்காலத்துப் பயின்றனர். ஆனுல், இப்போதோ வான ஆராய்ச்சி பற்றிய தமிழ் நூல்களும் இலவாயின. இப்போது விழிப்புற்ற தமிழறிஞர் பலர் வான ஆராய்ச்சியில் உளம் செலுத்தியிருக்கின்றனர். சில நூல்களும் வெளிவந்துள்ளன.

கடந்த 7 ஆண்டுகளாக இத்துறையில் நான் பல ஆங்கில நூல்களையும் சில தமிழ் நூல்களையும் வான ஆராய்ச்சிக்காக படித்துப் பார்த்தேன், இலக்கியங்களையும் விட்டு விடவில்லை. கடந்த நான்கு மாதங்களாக எனக்கு உள்ளத்தில் ஒரு எழுச்சி உண்டாயிற்று. நான் இதுவரைசேகரித்த பல குறிப்புகளைப் படித்துப்பார்த்தேன்.

நாமும் தமிழன்னைக்குத் தொண்டு செய்தால் என்ன என்ற எழுச்சியின் விளைவுதான் இச்சிறு ஆராய்ச்சிக் கட்டுரை. இதில் கூறப்படும் செய்திகளும், அளவுகளும் பல பல நூல்களை ஒப்பு நோக்கி கூடியவரை சரியானவைகளாகவே இருக்குமாறு செய்தேன். தமிழன்னை இதை நிச்சயம் ஏற்று, என்னை மேலும் மேலும் எழுத வாழ்த்துவாள் என்ற எண்ணத்துடனே இக்கட்டுரையை எழுதி முடித்தேன்.

முகவுரை மிக நீண்டுவிட்டது. இருப்பினும் கடைசியாக ஒரு வார்த்தை. இக்கட்டுரையைப் படித்து வான ஆராய்ச்சியில் விருப்பம் அடைந்தவர்கள் உண்டு என்று எனக்குத் தெரிந்தாலே அதுவே எனக்கு அன்னுர் அளித்த மிகப் பெரிதான பொற்குவியல் போன்ற பரிசாக எண்ணி மகிழ்வேன், இனி கட்டுரையைப் படியுங்கள். வணக்கம்.

அத்தியாயம் 1

"சூரியன்" (SUN)

அண்டவெளியை ஆராய நினைக்கும் நமக்கு முதலில் நம் கண் முன் தோன்றுவது சூரியன். காணக் கண் கூசும் பேரொளியுடன், வெப்பத்தையும், சோர்ந்த உயிர்கட்கு ஊக்கத்தையும் தந்து உலகையே இயங்கவைப்பது சூரியனல்லவா? இதற்கு இத்தகைய வெப்பம் எங்கிருந்து வந்தது? இதற்குத் தோற்ற முடிவுகள் உண்டா? அப்படியானுல் இது எப்போது தோன்றியிருக்கும்? என்பனபோன்ற ஆயிரமாயிரம் வினக்கள் நம் முன் எழுகின்றன.

நாம் வாழும் பூமியினின்று 92900000 மைல் தொலைவில் உள்ளது சூரியன். இதன் எடை எவ்வளவு தெரியுமா? 32939021 டன்கள். கணக்கிட்டுப் பாருங்கள். வியப்பாக இருக்கிறதல்லவா. நம் பூமியைப் போன்று இதுவும் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளவும் செய்கிறது. அப்படி ஒரு முறை சுற்ற 25 நாள் 9 மணி 7 மணித்துளிகள்கால மாகிறது,

அத்துடன் சூரியன் தன் கோள் குடும்பத்துடன் அபிஜித் என்ற மீனை நோக்கி ஓடுகிறதாம்! இதற்குச்சரியான காரணம் இன்னும் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்படாத ஒன்று.

சூரியனின் மேற்புற வெப்பம்6000°C என்று கணக்கிட்டுள்ளார்கள். இத்தகைய வெப்பத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட நம் பூமியைத் தாக்குவதில்லை. அப்படியிருந்தும் பூமியினில் உள்ள நீர் நிலைகள், கடல்களிலிருந்து கோடிக்கணக்கான டன் நீர் ஆவியாகிறது. மேகமாக மாறிய இந்த ஆவி பிறகு வேண்டு மிடங்களில் வேண்டுமளவு மழையாகப் பொழிகிறது. தாவரங்கள் தங்கள் உணவாகிய "ஸ்டார்ச்" என்னும் சர்க்கரைப் பொருளைத் தயாரித்துக் கொள்ளவும் சூரியனின் ஒளி தேவைப்படுகிறது. இக்காலத்தில் சூரிய வெப்பத்தைக் கொண்டு சமைக்கவும், ஒளியின் உதவியினுல் மின்சாரம் உண்டாக்கவும், ரேடியோவை இயக்கவும் தக்க பல கருவிகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

சூரியனின் இத்தகைய கொடிய வெப்பத்திற்குக் காரணங்களையும் சிறிது ஆராய்வோம். பல ஆண்டுகட்கு முன்பிருந்தே இதற்குப் பல தேற்றங்கள் (Theorys) கூறப்பட்டன. முடிவான கருத்துக்களாக எதுவும் இருக்கவில்லை. பிறகு அணுவைப் பிளந்து அதன் அளப்பரும் ஆற்றலை உணர்ந்த பிறகுதான் இதற்குப் பொருத்தமானதொரு காரணம் கண்டுபிடிக்கப் பட்டது. அணு பிளவுறும்போது அளப்பரும் வெப்பத்தையும், ஒளியையும், கதிர் வீச்சையும் அளிக்கிறது, சூரியனிலோவெனில் ஒவ்வொரு விநடியும் கோடிக்கணக்கான அணுக்கள்அழிந்து படுகின்றன. அதனுல் ஏற்படுவதே சூரியனின் வெப்பம்.

மேலும் சூரியன் ஆண்டுக்குச் சில அடிகள் வீதம் சுருங்குகிறதாம்! இதுவும் வெப்பத்திற்குக் காரணமாகிறது, இப்படி சூரியன் ஆண்டுதோறும் சுருங்கிக் கொண்டும், அதிலுள்ள சத்துப் பொருளின் அணுக்கள் அழிந்துகொண்டும் இருந்தால் ஒருகாலத்தில் சூரியனே இல்லாமல் போய்விடுமோ என ஐயுறலாம். அப்படி சூரியன் அழிந்துபட்டு நவமாக (Nava) போவதற்கும் இன்னும் பல கோடி கோடி ஆண்டுகள் செல்லவேண்டும். அப்படி நவமாக, சக்தியிழந்த வெறும் உருண்டையாக மாறிவிட்டாலும் பிறிதொரு காலத்தில் வேருெரு பெரிய விண்மீனுடன் மோதுண்டு தன் இழந்த சக்தியைப் பெற்று விடலாம். மேலும் அத்தனை காலம் பூமியில் உயிரினம் வாழுமா என்பது சந்தேகம். அப்படி வாழ்ந்தாலும் அத்தகைய அழிவை அறிந்து தங்களைக் காத்துக்கொள்ள அக்கால மக்கள் சிறந்த விஞ்ஞான அறிவு பெற்றவர்களாக இருப்பார்கள்.

அத்தியாயம் 2

"கோள்களின் தோற்றம்"

(THE BIRTH OF PLANETS)

சூரிய குடும்பத்தில் இப்போது அறியப்பட்ட வரை 9 கோள்கள் உள்ளன. அவை சூரியனிலிருந்து முறையே புதன் (Mercury), வெள்ளி (Venus), பூமி (Earth), செவ்வாய் (Mars), வியாழன் (Jupiter), சனி (Saturn), யுரெனஸ் (Uranus), நெப்தியூன் (Neptune), ப்ளூடோ (Pluto) என்பன.

கோள்களின் பிறப்பு பற்றிய தெளிவான முடிவுகள் கிடைக்கவில்லை. இருப்பினும் சில வான நூல் அறிஞர்களின் கருத்துக்களை ஆராய்வோம்

நம் கற்பனைக்கெட்டாத ஒரு காலத்தில் இப்போது கோள்கள் இருக்கும் இடங்களில் ஒரு வகையான (சக்தி)க் கனல் மேகம் பரவியிருந்ததெனவும், அதுவே பிறகு நாளடைவில் இறுக்கமடைந்து கோள்களாக உருவாகியது எனவும் சில விஞ்ஞானிகள் கருதினர்.

ஆனுல் இக்கருத்து பல விஞ்ஞானிகளால் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

காரணம் அண்டவெளியில் கனல் மேகம் இருந்திருந்தாலும் அது கரைந்து படுமேயன்றி கோள்களாகக் கெட்டிப்பட வியலாது

சப்தபதி

தாராசங்கர் பானர்ஜியின்

உன்னதமான - விருவிருப்பையூட்டும்

[சிறு நவீனம்] குறு நாவல்

நெஞ்சை அள்ளும் சம்பவங்களையும், மனித உள்ளத்தின் ஆசாபாசங்களையும் ஆசிரியர் மிக அழகாகச் சித்தரித்திருக்கின்ருர்.

இந் நாவல் நமக்குச் சொல்லும் கதை அற்புதமானது. 12 முறை இதன் பதிப்புகள் வெளியாகியுள்ளதே இதற்கொரு சான்ருகும்.

மங்கையொருவள் மீது கொண்ட காதலுக்காக தன் தர்மத்தையே துறந்துவிடும் ரெவரெண்டு கிருஷ்ணசாமி ஆதி வாசிகளிடையே தான் செய்யும் தொண்டில் தன் தர்மத்தைக் காண்கிருர். அவர் காதலைப் புறக் கணித்து தன் கடமையை நிறைவேற்றி விட்டதாக நினைத்த நங்கையின் வாழ்வோ அவலமாகின்றது.

*

காதல், கடமை, மதம், தர்மம், எனும் பல மோதல்களிடையே இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னணியிலே உருவாகின்றது இந் நவீனம்.

என்றும், அப்படி உருப்பெற்றாலும் சுழற்சியும், கவர்ச்சி சக்தியும் (Grairsational Power) பெற வியலாது என்றும் கூறினர்.

அடுத்த படியாகக் கூறப்போகும் கருத்து ஓரளவிற்கு எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் பட்டது. அதாவது ஒரு காலத்தில் சூரியனை விடப் பல மடங்கு பெரிதும் சக்தி வாய்ந்ததுமான வால்மீன் ஒன்று சூரியனை அணுகியிருக்க வேண்டுமெனவும், அப்போது அது தன் இராக்கதக் கவர்ச்சியினால் சூரியனிலிருந்து ஒரு பாகத்தை வலித்திழுத்து நீண்ட ஒரு புகையிலைச் சுருட்டு போன்ற வடிவத்தில் செய்திருக்க வேண்டுமெனவும் கூறுவர். சுரு சுருவென அண்ட வெளியில் இழுத்தெறியப்பட்ட பாகம் நீண்டகாலம் சுழன்று கொண்டிருந்து பின்னர் இடையிடையே கொஞ்சம் கொஞ்சமாக இறுகி இப்போதையக் கோள்களாக மாறியிருக்கிறது என்றும் கூறுவர்.

கோள்கள் தங்களையும் சுற்றிக்கொண்டு, சூரியனின் கவர்ச்சி எல்லையையும் விட்டகலாமல், சூரியனைச் சுற்றி ஓடுவது மேற்காணும் கருத்தை வலியுறுத்துகின்றது. எனினும் இக்கருத்திலும் முரண்பாடு இல்லாமல் இல்லை. எல்லாக் கோள்களும் ஒருபுறமாகச் சுழல, சில உபகோள்கள்மட்டும் எதிர்புறமாகவும், செங்குத்தாகவும் சுழல்கின்றன. இப்படி சில உபகோள்களின் சலனம் மட்டும் மாறுபடக் காரணம் இன்னதென்று புலனாகவில்லை. இதற்கு வருங்கால ஆராய்ச்சிதான் பதில் சொல்லவேண்டும்.

அத்தியாயம் 3

"கோள்கள்" (PLANETS)

1. "புதன்" (Mercury.)

இதுவரை கோள்களின் தோற்றம்பற்றிச் சிறிது தெரிந்துகொண்டோம். இனி ஒவ்வொரு கோளைப்பற்றியும் தனித் தனியே ஆராய்வோம்.

சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கோள் புதன். இதை வெற்றுக் கண்களால் காணவியலாது. ஆண்டில் சில தினங்கள்மட்டுமே இதைக் காண்பது முடியும். எப்போதும் இது சூரியனின் ஒளிப் பிழம்பில் ஒன்றிக் கிடக்கின்றது.

இக்கோள் சூரியனிலிருந்து 36000000 மைல் தொலைவில் உள்ளது. இதன் குறுக்களவு 2774 மைல். அதாவது பூமியின் குறுக்களவில் 4-ல் ஒரு பங்கு. நிலாவின் அளவுள்ளது. பூமியின் பொருண்மை (Mass)-யில் ·34 பங்குதான் உள்ளது. அடர்த்தி மட்டும் 4·80 மடங்கு.

இக்கோளின் முக்யத்துவம் யாதெனில், பூமிக்கு எப்படி நிலா தன் ஒரு முகத்தையே காட்டிக்கொண்டு சுழல்கின்றதோ அப்படியே இதுவும் சூரியனுக்குத் தன் ஒரு பக்கத்தையே காட்டிக் கொண்டிருக்கிறது. ஆகையால் இக்கோளின் ஒருபுறம் எப்போதும் பகல். தகிக்கும் வெப்பம். மறுபுறம் எப்போதும் இரவு. குளிர் 0°-க்கும் கீழே. அதிசயமான கோள் இல்லையா?

2. "வெள்ளி" (Venus)

துல்லியமான வானில் வெள்ளிய ஒளி வீசுவதால் இக்கோளிற்கு வெள்ளி என்று பெயர் வந்தது போலும்.

இதன் குறுக்களவு ஏறக்குறைய நம் பூமியைப் போன்றுள்ளது. அதாவது 7566 மைல் 30 மணி நேரத்தில் தன்னைத்தான் சுற்றிக் கொள்கிறது. 5 பங்கு அடர்த்தியும், ·82 பங்கு பொருண்மையும் உள்ளது இக்கோள்.

இது ஒரு முறை சூரியனை வலம்வர ஏறக்குறைய 226 நாட்கள் காலம் ஆகின்றது. இது சூரியனிலிருந்து 67200000 மைல் தொலைவில் உள்ளது. தொலை நோக்கியின் மூலம் இக்கோளை நோக்கினால் நீராவியுடன் உயிரியமும் (Oxygen) கலந்த கனத்த மேகமண்டலமும், காற்று மண்டலமும், இதைச் சுற்றிலும் விரவிக்கிடப்பது தெரிகிறதாம். இதனால் இக்கோளின் மேற் பரப்பை சரியாக ஆராயக்கூட வில்லை.

தோற்றத்திலும், கன அளவுகளிலும், வெப்ப நிலைகளிலும் இக்கோள் நம் பூமியை ஒத்துள்ளது.

3. "பூமி" (Earth)

நாம் வாழும் இவ்வுலகைப் பற்றிச் சிறிது அதிகமாகவே நாம் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

இது சூரியனிலிருந்து 92900000 மைல் தொலைவில் உள்ளது. ஒருஆண்டளவில் சூரியனை ஒரு முறை வலம் வருகிறது. தன்னைத் தானே மணிக்கு 1000 மைல் வேகத்தில் 24 மணி 37 மணித்துளிகள் கால அளவில் சுற்றிக் கொள்கிறது. அடர்த்தி தண்ணீரைவிட 5,53 பங்கு அதிகம். பூமத்தியரேகையில் இதன் சுற்றளவு 25000 மைல். குறுக்களவு 7927 மைல்.

இதன் வயது குறைந்த அளவு 360 கோடி ஆண்டுகளாவது இருக்க வேண்டுமென்பது நில நூல்வல்லார் துணிபு. இருப்பினும் இதன் மேல் மக்களினம் தோன்றி சுமார் 50000 ஆண்டுகளே ஆகியிருக்க வேண்டுமென்பது உயிர் நூல்வல்லார் முடிவு. அக்காலம்வரை இது வெறும் பாழ் வெளியாக ஊழிக்கனலெனக் கொதித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறது.

(அடுத்த இதழில் முடிவுபெறும்)



வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்

திட்டம் வகுக்கும் தமிழ் நாட்டின் தவப் புதல்வர்

என். பி. சேஷாத்திரி

"ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே; ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று" என்று பல வருடங்களுக்கு முன்பே பாடினார் கவி சுப்பிரமணிய பாரதியார். அவர் கனவு பலித்தது. மகாத்மா காந்தி போன்ற பெரியோர்களின் இடைவிடாத உழைப்பினாலும், பல ஆயிரக்கணக்கான மக்களின் தூய்மையான தியாகத்தாலும், அடிமையில் சிக்கியிருந்த பாரத நாடு, ஆகஸ்டு 15, 1947-ல் சுதந்திரம் அடைந்தது. ஆங்கிலேயர் வெளியேறினர். பாரத நாடு சுதந்திரம் பெற்றுவிட்டாலும், "ஆங்கிலேயர்களைப்போல் திறமையுடன் நம்மால் அரசாங்கத்தை நடத்த முடியுமா? நமக்கு அனுபவமில்லை. நம்மிடம் திட்ட வட்டமான செயல்கள் ஒன்றுமில்லை" என்று ஒரு சாரார் மனம் போனபடி பேசிவந்தனர். மற்ற நாடுகளும் சுதந்திரத்தை இந்தியா எவ்வாறு பயன்படுத்துமோ என்று அச்சத்துடன் கவனிக்க ஆரம்பித்தன. இம்மனக் கிலேசங்களுக்கும், அச்சத்திற்கும் ஆப்பு அடித்தார் ஒருவர். அவர் சிறந்த அறிவாளி, அனுபவமும் ஆற்றலும் கொண்டவர். மேலும், அவர் தமிழ்த்தாயின் புதல்வர் என்று நினைக்கும்பொழுது, நமக்கு எவ்வளவு பெருமிதம் ஏற்படுகிறது. இப்பெரியார்தான் மத்திய திட்டக் கமிஷனின் உபதலைவராகப் பணியாற்றிவரும் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்.

குடகு நாட்டில் பிறந்து மைசூரில் வளர்ந்தாலும் தமிழ் நாட்டைத்தான் வளப்படுத்துவேன் என்று சபதம் செய்துகொண்டு வரும், பொன்னியாறு பாயும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த 'வாங்கல்' கிராமத்தில் ஸ்ரீமான் திருவேங்கடாச்சாரியாரும், அவர் சகதர்மிணி ஸ்ரீமதி ரங்கம்மாள் அவர்களும் மக்களின் அன்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமாகி

வி. டி. கிருஷ்ணமாச்சாரி தன்னுடைய வசிக்குமிடமாகிய 5, ஜான்பாத், டில்லியில் குதூகலத்துடன் இருக்கிறார்.

வாழ்ந்து வந்தார்கள். தமிழ்நாடு பல தவப் புதல்வர்களை பெற்றெடுத்துள்ளது. அந்தப் பரம் பரையில், ஸ்ரீமான் திருவேங்கடாச் சாரியார் தம்பதிகளுக்கு, சீரிய புதல்வராக 1881-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 8-ம் தேதியில் ஸ்ரீ வி. டி கே. ரோகிணி நக்ஷத்தி ரத்தன்று தோன்றினார்கள். கிருஷ்ண பகவா னின் திரு நக்ஷத்திரத்தில் பிறந்ததினால் அவருடைய திரு நாமத்தைச் சூட்டினார்கள் போலும். பிற் காலத்தில் பெரிய அறிவாளி யாகத் திகழ்வார் என்பதற்கான அறிகுறிகள் ஸ்ரீ வி. டி. கே அவர்களிடம் இளமைப் பரு வத்திலேயே காணப்பட்டன. ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறினார். சென்னை மாகாணக்கல்லூரியில் பி. ஏ. பட் டமும், பிறகு சட்டக்கல்லூரியில் பி. எல். பட்டமும் பெற்றார். ஆங்கிலம் மாத்திர மின்றி, வடமொழியிலும், தமிழிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்.

கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன், அரசாங கத்தாரால் நடத்தப்பட்ட 'மாகாண சிவில் சர்விஸ்' பரிட்சையில் முதன்மையாகத்தேறி, 1903 ம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் உ த வி கலெக்டராக நியமிக்கப்பட்டார். தஞ்சையிலும் இப்பதவியை வகித்தார். அக்காலத்தில் இப்பெரிய பதவிகளெல்லாம் ஆங்கிலேயர்களுக்கே கொடுக்கப்பட்டன. மேலும் பதவியேற்ற இந்தியர்களுக்குத் தரும சங்கடமான நிலைமைகள் ஏற்பட்டதுண்டு. தேசபக்தி ஒரு பக்கமும், மக்களுக்கு பயன் தரும் வகையில் அப்பக்தியை ஆக்க முறை யில் செயல் படுத்த சந்தர்ப்பம் அளிக்கும் பதவியும், அதன் அடிமைத்தனம் ஒரு பக்க மும் வாட்டிற்று. இந்த நிலையில், ஆங்கிலேய மேலதிகாரிகளுக்கு இசைவாகவும், பாமர ஜனங்களுக்கு உதவியாகவும் வேலை செய் வது சிரமமானது. இச் சூழ்நிலையில் ஸ்ரீ வி. டி. கே. பணியாற்றினார்கள். அவர் களின் அறிவையும் ஆற்றலையுங் கண்ட அர சாங்கத்தினர் அவரைக் கொச்சி ராஜ்யத் திற்கு தலைமை வரி வசூல் (1908-11) அதிகா ரியாக நியமித்தார்கள். பின்னர் (1913-1916) வரை சென்னை ரெவின்யு போர்டில் உதவிக் காரியதரிசியாக சேவை செய்தபின், "சவுத் பரோ" கமிட்டியின் விசேஷ அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இந்தக் கமிட்டியில் ஸ்ரீ வி. டி. கே. அவர்களின் சேவை மிகவும் மகத் தானது. அதன் பின் விஜயநகர சமஸ்தானத் துக்கு டிரஸ்டியாக (1919-22) இருந்து, அந்த சமஸ்தானத்தின் புகழ் ஓங்கும்படி செய்தார். பிறகு ஒருவருடகாலம் ராமநாதபுரம் ஜில்லா வின் கலெக்டராக பணியாற்றினார். அவரு டைய அன்பும் அறிவும் அந்த ஜில்லா மக்களைக் கவர்ந்தது. அடுத்த படியாக சென்னை சட்ட இலாகா காரியதரிசியாகப் பதவி வகித்தார். அவருடைய பெரும் ஆற்ற லையும் மதிநுட்பத்தையும் கண்ட இந்திய சமஸ்தானாதிபதிகள் தங்களுடைய ராஜ்யத் துக்கு ஸ்ரீ வி. டி. கே. அவர்களை பயன் படுத்த முயற்சித்த போட்டியில், பரோடா சமஸ்தானாதிபதி வெற்றி கண்டார். அதன் பயனாய் ஸ்ரீ வி. டி. கே. அவர்கள் பரோடா சமஸ்தானத்தின் திவானாக 17 வருடங்கள் (1927-44) சேவை செய்தார். அவர்கள் தலைமையின் கீழ் சமஸ்தானம் மிகவும் முன் னேறி, இதர சுதேச சமஸ்தானங்களுக்கு வழி காட்டியது. இப்பொழுது நாம் அமுலில் கொண்டுவரும் கிராம புனருத்தாரண திட் டங்களை அந்தக் காலத்திலேயே செயலுக்குக் கொண்டு வந்தவர் ஸ்ரீ வி. டி, கே. பரோடா மக்கள் என்றென்றும் இப்பெரியாருக்கு நன்றி உள்ளவர்களாய் இருப்பதில், ஆச்ச ரியம் ஒன்றுமில்லை. 1946-லிருந்து 1949 வரை ஜெய்ப்பூர் சமஸ்தானத்தின் பிரதம ராய் இருந்து மக்களுக்கு பல நன்மைகள் செய்து இருக்கிறார். இன்று ராஜஸ்

தானின் தலைநகராய் விளங்கும் ஜெய்பூர் நகரின் உன்னத நிலைக்கு அடிகோலியவர் ஸ்ரீ வி. டி. கே. ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியவரும் இவரே. தங்களுடைய நன்றி உணர்ச்சியைத் தெரியப் படுத்தும் வகையில். சென்ற 4—10—59 அன்று இப் பல்கலைக் கழகம் ஸ்ரீ வி. டி. கே. அவர்களுக்கு, 'டாக்டர் ஆப்லாஸ்' பட்டம் அளித்து கௌரவித்தது. இப் பல்கலைக் கழகத்தின் தற்போதைய அத்யட்சகர் ராஜஸ்தான் கவர்னர் குர்முக் நிகால்சிங் பேசுகையில் ஸ்ரீ வி. டி. கே. அவர்களை கௌரவிப்பதன் மூலம், பல்கலைக் கழகம் தன்னைத் தானே கௌரவித்துக்கொண்டது. ஸ்ரீ வி. டி. கே. இப் பல்கலைக் கழகத்தின் தந்தையும் போஷகரும் ஆவார்" என்று கூறினார். இதனால் ஸ்ரீ வி. டி. கே. அவர்களின் சேவையை ஜெய்பூர் மக்கள் என்றும் மறவார்கள் என்று கூறலாம் அல்லவா? இந்திய அரசியல் நிர்ணய சபையின் உபதலைவராக 1947 லிருந்து 1949 வரை பணியாற்றினார். பிறகு சுதேச சமஸ்தானங்களின் நிதி நிலைமையை அறிய இந்திய சர்க்காரால் ஏற்படுத்தப் பட்ட கமிஷனுக்குத் தலைமை வகித்துப் பேருதவி செய்ததுடன் கூட, பல வலிமையுள்ள சுதேச சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கும் மாபெரும் சேவையை செய்தார். பின்னர் ஓராண்டு காலம் (1949-50) இந்திய சர்க்காரின் நிதிவரிக் கமிஷனின் தலைவராக இருந்தபின், மத்திய திட்டக் கமிஷன் உருவானதும், பிரதமர் நேருவுக்கு உதவியாக, மக்களுக்குப் பெரும் பணி செய்ய, அக்கமிஷனின் உபதலைவராக நியமிக்கப் பட்டார். பாரதநாடு வளம்பெற்று செழித்தோங்க அல்லும் பகலும் முழு மூச்சுடன் வேலை செய்து வருகிறார்.

ஸ்ரீ வி. டி. கே. அவர்கள் இந்தியாவின் சார்பில் பல தூதுகோஷ்டிகளின் தலைவராக வெளிநாடுகள் சென்று இந்தியாவின் பெருமையை உலக மக்கள் அறியும்படி செய்திருக்கிறார்.

லண்டனில் நடைபெற்ற மூன்று வட்ட மேஜை மகாநாடுகளிலும், பாரதத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டார். ஐக்கிய மகா சபையின் முதல் கூட்டத்திற்கும் சென்று சிறப்பித்தார். இவரிடம் பெரு மதிப்பு வைத்திருந்த பிரிட்டிஷ் அரசாங்கம், ஸ்ரீ வி. டி. கே. அவர்களுக்கு ஸர், ராவ் பகதூர், முதலிய பட்டங்கள் அளித்து கௌரவித்தது.

ஸ்ரீமதி ரங்கம்மாள் கிருஷ்ணமாச்சாரி

சுதந்திர இந்தியாவில் ஸ்ரீ வி. டி. கே. அவர்களின் அறிவும், ஆற்றலும், அனுபவமும் மக்களின் சுபிட்சத்திற்காக முழுவதும் உபயோகிக்கப்படுகிறது. முழு மனத்துடனும், ஆத்ம திருப்தியுடனும், இப்பொழுது தாய் நாட்டிற்குச் சேவை செய்து கொண்டிருக்கிறார். இச்சேவையில் சொல்ல முடியாத உற்சாகம், ஊக்கம், திருப்தி. இவரிடம் பெரும் மதிப்பும், நம்பிக்கையும், வைத்திருக்கிறார் பாரதப் பிரதமர் நேருஜி. மக்களின் உற்சாகம், முயற்சி, ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்தையே சர்க்காரின் முக்கிய சாதனையாக ஸ்ரீ வி. டி. கே. கருதுகிறார். சுபிட்சத்திற்காக நாம் வேலை செய்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரும் சாதனைகளைக் கண்டோம். இப்பொழுது முடியுந் தருவாயிலிருக்கும் இரண்டாவது திட்டத்தில் விவசாயம் மட்டுமின்றி தொழில் பிரிவுகளிலும் வளர்ச்சி பெற வேலை செய்கிறோம். மூன்றாவது திட்டத்துக்கும் ஆலோசனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இத்திட்டங்களின் வெற்றியே ஸ்ரீ வி. டி. கே. அவர்களின் கனவும், நினைவுமாக இருந்து வருகிறது. இவ்வெற்றியே அவருக்கு ஆத்ம திருப்தியை அளிக்கும். கிராம மக்களின் வேலையின்மையைப் போக்கவும், அவர்களின் சௌகர்யங்களை அதிகரிக்கவும், ஸ்ரீ வி. டி. கே. ஒரு உபாயம் கூறு

கிறார். விவசாய வேலையற்ற வீண்காலத்தில் மக்கள் ஒன்று சேர்ந்து கிராமத்தின் பொது நலனுக்கு உதவும் சாதனங்களை உற்பத்தி செய்ய வேண்டும். கிராமங்களில் பலதேவைகள் உள்ளன. சாலைகள் அமைக்க, கிணறு குளங்கள் வெட்ட, காடுகள் வளர்க்க, கிராம மக்கள் தங்கள் நேரத்தையும் சக்தியையும் உபயோகப்படுத்தலாம். நாட்டில் 7 கோடி குடும்பங்கள் உள்ளன. இவற்றில் 5 கோடி குடும்பங்களுக்கு வருடத்தில் 5 மாதங்களுக்கு மாத்திரமே வேலை இருக்கிறது. எஞ்சியுள்ள வீண் காலத்தில், கால் பாகத்தை நிர்மாண வேலையில் பயன்படுத்தினல், விவசாயிகளின் வருமானம் 5 வருடங்களில் 20 சத வீதம் உயரும். கிராம மக்களின் தராதரத்தை உயர்த்தி, இந்தியாவை சுபிட்சமாக்க அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் அல்லவா? அதனல் ஔவைப் பிராட்டியின் 'வரப்புயர, கோல் உயரும்' என்னும் முதுமொழியை நன்ருக உணர்ந்திருக்கிறார் ஸ்ரீ வி. டி. கே.

திட்டக் கமிஷனில் தினமும் மத்திய அரசாங்கத்தின் இலாகாக்களுடனுவது, ராஜ்ய சர்க்கார்களுடனுவது, அல்லது அயல்நாட்டுப் பிரதிநிதிகளுடனுவது ஆலோசனைக் கூட்டங்கள் நடந்தவண்ணமாயிருக்கின்றன. குளிர் நாட்களில்கூட, காலையில் ஒன்பது மணிக்கு அலுவலகத்துக்குச் சென்றுகொண்டு, பல விதமான பிரச்னைகளை, இந்தத் தள்ளாத வயதில்கூட, எளிதிலே தீர்த்துவைக்கிறார். எந் நேரத்திலும் பாரதத்தின் சுபிட்சத்திற்காக தனது சொந்த சௌகர்யங்களையும் தியாகம் செய்யும் உத்தமர். சமீபத்தில் ஒரு நாள் அவரைக் காணும் பொருட்டு, அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றிருந்தேன். மாலை சுமார் 6 மணி இருக்கும். என்னுடன் பேசி முடித்த பிறகு, ஏதோ முக்கியமான சொந்த வேலையை கவனிப்பதற்காக தமது மனைவியாருடன் காரில் ஏறிக்கொண்டு கிளம்புகின்ற சமயம், திட்டக் கமிஷனிலிருந்து சில பைல்கள் வந்தன. அதைப் பார்த்தபின் தன் மனைவியாரை மட்டும் போகச் சொல்லி விட்டு, அந்தப் பைல்களை கவனிக்கச் சென்று விட்டார். இதுமாதிரி அனுபவங்கள் ஸ்ரீ மதி வி. டி. கே. அவர்களுக்குப் பற்பல.

இவ்வறிஞரின் திரு உருவப் படத்தை சென்னையில் 1956-ம் வருடத்தில் திறந்து வைத்துப் பேசுகையில், ஜனதிபதி டாக்டர் ராஜன்பாபு பெரிதும் சிலாகித்து: "இந்தத் தள்ளாத வயதில் கூட ஸ்ரீ வி. டி. கே. முழு உற்சாகத்துடன் இளைஞனைப்போல் தேசத்திற்குச் சேவை செய்கிறார். திட்டக்கமிஷனில் பணி செய்வது மிகவும் கடினமாயினும், அதைத் தன் திறமையால் நிர்வகிக்கிறார். இந்தியாவில் உள்ள எவ்விஷயத்தையும் செவ்வனே கூறும் திறமை யுள்ளவர். இந்தியாவுக்கு அரும் பெரும் சேவை ஆதி முதல் செய்து கொண்டுவரும் இப்பெரியாருக்கு இணை இவரேதான். இவருடைய ஸ்தானத்தை இன்னெருவரால் பூர்த்தி செய்யமுடியாததால்தான், தன்னுடைய தள்ளாமையைக் கூடப் பாராமல் அரும்பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார்" என்று புகழ்ந்தார்.

நமது திட்டங்களையும், அவை நிறைவேற்றப்படும் வேகத்தையும் கண்டு அந்நிய நாடுகள் இந்தியாவைச் சிலாகிக்கின்றன. இந்திய நாட்டுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பிரமுகர்கள், ஸ்ரீ வி. டி. கே. அவர்களையும், திட்டக் கமிஷனின் திறமையையும் கண்டு வியக்காமல் திரும்பிச் செல்வதில்லை. நாட்டில் பல இடங்களில் உருவாகிவரும் தொழிற்சாலைகளையும், அணைக்கட்டுகளையும் நிர்மாணிக்கத் திட்டம் வகுத்த செல்வச் சிற்பி ஸ்ரீ வி. டி. கே. அவர்களை, மகாகவி பாரதியார் இன்று உயிருடன் இருந்தால், பல கவிகள் பாடிவாழ்த்தியிருப்பார். பாரதியாரின் கனவெல்லாம் நினைவு ஆகின்றதல்லவா?

ஓய்வு நேரங்களில் பொருளாதாரமோ, அரசியலோ படித்துக் கொண்டிருப்பார். ஆங்கில இலக்கியங்களும் சம்ஸ்கிருத காவியங்களும், ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களும், பாரதியாரின் கவிதைகளும், வள்ளுவரின் திருக்குறளும் இவரது உற்ற நண்பர்கள்.

ஸ்ரீ வி. டி. கே. அவர்கள் டென்னிஸ், பிலியர்ட்ஸ். போன்ற விளையாட்டுகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். தெய்வ சிந்தனையுள்ளவர். அன்பும், சாந்தமும் நிறைந்த உள்ளம். எப்பொழுதும் சிரித்த முகம். சங்கீதத்தில் மிகுந்த ரஸனை உள்ளவர். தஞ்சம் அடைந்தவர்களுக்கு அஞ்சேல் என்று கூறி அபயம் அளிப்பவர்.

ஸ்ரீ வி. டி. கே. அவர்களின் இவ்வளவு சாதனைகளுக்கும், வாழ்க்கையில் வெற்றிக்கும் உடனிருந்து கை கொடுத்து மெருகு வைப்பவர் அவருடைய சகதர்மிணி ஸ்ரீமதி ரங்கம்மாள் அவர்கள். ஸ்ரீரங்கம் 'தொட்டியம்' குடும்பத்தில் உன்னதமாக வாழ்ந்த வக்கில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களின் புத்திரியாக, 75 வருடத்திற்கு முன்பு பிறந்து, ஸ்ரீரங்க நாயகியின் நாமத்தைப் பூண்டவர். இவர்களின் திருமணம் 1896-ம் வருடத்தில் ஸ்ரீரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. அந்நாள் முதல். "மணமும், பூவும்"போல் இருவரும் சீரிய வாழ்க்கை நடத்தி வருகின்றனர். "காதலன் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து" என்ற முதுமொழிப்படி, ஸ்ரீமதி ரங்கம்மாள் அவர்கள் தம் கணவர் மனம் கோணது அவருக்குப் பணிவிடைகள் புரிவதுடன்,

உலகத்திலுள்ள சிறந்த சந்தன



Buy the Best - Buy

MYSORE GOVERNMENT SANDALWOOD OIL

GUARANTEED B.P. (1932) STANDARDS.

மரங்களிலிருந்து

தயாரிக்கப்படுபவை.

★

மைசூர் சந்தன மரங்களுக்குப் பெயர் பெற்றது. மைசூர் அரசாங்கத்தாரின் தலைசிறந்த முயற்சியுடன் உங்களுக்காக தயாரிக்கப்படுகிறது — 'மைசூர் கவர்ன்மெண்ட் ஸாண்டல்வுட் ஆயில்' அரசாங்க தொழிற்சாலையில் விஞ்ஞான முறைப்படி எண்ணெய் வடிக்க, சிறந்த மரத்தின் மத்திய பாகங்களே உபயோகிக்கப்படுகின்றன.

★

கவர்ன்மெண்ட் ஸாண்டல்வுட் ஆயில் பாக்டரி

மைசூர்

பாரத பெண் குலத்திற்கும், மக்களின் பொது நன்மைகளுக்கும், தொண்டாற்றி வருகிறார்கள். சென்னையில் உள்ள சாரதா வித்யாலயம் இன்று உன்னத நிலையில் விளங்குவதற்கு, அடிகோலியவர் ஸ்ரீமதி ரங்கம்மாள் அவர்களே. கடந்த 40 வருடங்களாக இந்த ஸ்தாபனத்தின் லக்ஷியத்திற்காகப் பாடுபட்டிருக்கிறார். இவருடைய முயற்சியால்தான் 1956ல், மூன்று லக்ஷ ரூபாய் சிலவில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு, ஸ்ரீ வி, டி. கே. அவர்களால் திறக்கப்பட்டது. அவ்வமயம் ஸ்ரீமதி ரங்கம்மாளின் உருவப் படத்தைத் திறந்துவைத்துப்பேசிய சென்னை கல்வி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம், ஸ்ரீமதி ரங்கம்மாளின் பொதுநல சேவைகளைப் பெரிதும் பாராட்டினர். இதே மாதிரி பரோடாவிலும் மாதர்குலத்தின் நன்மைக்காக, ஒரு கைத்தொழில் ஸ்தாபனத்தை நிறுவி, அதற்கும் இரண்டு லக்ஷ ரூபாய் சிலவில் ஒரு கட்டடம் எழுப்பித் தந்தார். இது தவிர பரோடாவிலும், ஜெய்ப்பூரிலும், பல மருத்துவசாலைகளை ஏற்படுத்தி ஏழைகளுக்கு வைத்திய வசதி கிட்டுமாறு செய்தார். ஸ்ரீமதி ரங்கம்மாளின் மகத்தான சேவை, பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு உதவி செய்ததுதான். மகாலெக்ஷ்மி போல் இருக்கும் இவ்வன்னையார், எளியோர்களிடம் மிகவும் இரக்கம் கொண்டவர். பல பேர்கள் இவர்களுடைய உதவியால் படித்து முன்னுக்கு வந்து இன்று பெரிய பதவிகளை வகிக்கின்றனர். தன்னால் ஆன உதவியை எப்பொழுதும் சிரித்த முகத்துடன், செய்யும் ஸ்த்ரீ திலகம்.

சிறிதும் படாடோபம் இல்லாமல் எளிய வாழ்க்கையை நடத்திக்கொண்டு, நாட்டுக்கு நற்பணி செய்யும் ஸ்ரீ வி. டி. கே. தம்பதிகளை பாரத மக்கள் என்றென்றும் மறவார்கள். தெய்வப் புலவரின் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வாக்குக்கு இப்பெரியோர்கள் ஒரு சான்று. வருங்கால சந்ததிகளுக்கு இவர்களது உயர்ந்த பண்பாடும் சாதனைகளும் வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நவஇந்தியாவை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்ட ஸ்ரீ வி. டி. கே. அவர்களுக்கு பிப்ரவரி 7-ந் தேதியுடன் 79 ஆண்டுகள் பூர்த்தியாகி, 80 ஆண்டு பிப்ரவரி 8, 1960 அன்று ஆரம்பமாகிறது. தமிழ் மக்களின் சார்பாக ஸ்ரீ வி. டி. கே. தம்பதிகள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ, இறைவனுக்குக் கரங்கள் குவிக்கின்றோம்.

உமேஷ் யோக தரிசனம்

(முதல் பாகம்)

ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராட்டி ஆகிய நான்கு மொழிகளில்

(ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி எழுதியது.)

ஜீரணக்கருவி, நரம்பு, சுவாசகோசம், மூத்திர உறுப்புகள், மற்றும் வேறு அவயவங்கள் ஆகியவற்றைச் சீராக இயங்கவைக்கும் வழிவகைகளைக் கூறும் யோக சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிய அருமையான விளக்கம். யோகம், இயற்கை வைத்தியம், ஜீவாணுக்களின் இயல்பான வல்லமை, மனத்தத்துவச் சிகிச்சை முதலியவற்றின் வாயிலாகப் பல வேறு நோய்களை முற்றும் குணப்படுத்தமுடியும் என்பதை, 108 அசல் யோகாசனப் படங்கள் நிரம்பிய இந்த நூல் நன்கு விளக்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் வாசகசாலையிலும் கட்டாயம் இருக்கவேண்டிய புத்தகம் இது.

விலை: ரூ. 15/-; தபால் செலவு ரூ. 2/- தனி. வி. பி. பி. கிடையாது.

யோகாசன சித்திரப்படங்கள்

வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக்கவரும் விதத்தில் பெரிதாகச் சித்தரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். விலை ரூ. 2-50. தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

ராம்தீர்த் பிராமி தைலம்

ஸ்பெஷல் நெ. 1
ரிஜிஸ்டர்டு

விலை: பெரிய புட்டி ரூ. 4/-; சிறிய புட்டி ரூ. 2/-.

எங்கும் கிடைக்கும்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர், சென்ட்ரல் ரயில்வே, பம்பாய்-14, போன்: 62899.

ராம்தீர்த் பிராமி ஆயில் டெப்போ, 257, தங்கசாலைத் தெரு, சென்னை-1

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

நீரோட்ட மின்சாரம்

நம் நாட்டில் இதுவரை நீர்வீழ்ச்சிகளிலிருந்தே பொதுவாக மின்சாரம் தயாரிக்கும் காரியம் நடந்துவருகிறது. நீரோட்டத்தைப் பயன்படுத்தி பொதுவாக பெரிய அளவில் மின்சாரம் தயாரிக்கப்படுவதில்லை. இப்பொழுது புதிதாகவும், முதன் முதலாகவும் நம் நாட்டில் நீரோட்டத்திலிருந்து பெரிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி கங்கை, யமுனை, டோன்ஸ், பக்ரா, கோசி, சோன், தாமோதர் ஆகிய நதிகளின் நீரோட்டத்தைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்படும். அந்நதிகளின் உற்பத்தி ஸ்தானம் தொடங்கி சங்கம ஸ்தானம் வரை பற்பல இடங்களில் மின்சார உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும். இவ்விதம் மொத்தம் 51 நிலையங்கள் உருவாகும். அவை மொத்தம் 130 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும். அடுத்த 20 - 30 ஆண்டுகளில் இந்த மின்சார நிலையங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டு தொழில்படத் தொடங்கி விடும். நம் தமிழ் நாட்டில் காவேரி நீரோட்டத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம். இதன் மூலம் காவேரிக் கரையில் புதிதாக பல தொழிற்சாலைகள் தோன்ற வசதி ஏற்படும். சென்னை ராஜ்யத்தின் தொழில்வளம் பெருக வழி பிறக்கும். ஆகையால் நம் சென்னை அரசாங்கம் இத்துறையில் உரிய கவனம் செலுத்துதல் நலம்.

கொய்யாத்தோல்

கொய்யாப் பழத்தைச் சாப்பிடும்போது அதன் தோலைச் சீவி விட்டுச் சாப்பிடுவது பொதுவான வழக்கமாக இருந்துவருகிறது. இப்பழத்திலிருந்து ஜாம் ஜெல்லி தயாரிப்பவர்களும் இதேபோல் தோலைச் சீவி விடுகிறார்கள். இது நல்லதல்ல என குன்னூரில் உள்ள சத்துணவு ஆராய்ச்சி நிலையம் சோதித்தறிந்து கூறுகிறது. நெல்லிக்காய்க்கடுத்தபடியாக வைட்டமின் ஸி. அதிகமாக உள்ளது கொய்யாப்பழமே. நூறு கிராம் பழத்தில் 299 கிராம் வைட்டமின் ஸி. அடங்கி இருக்கிறது. அரை குறையாகப்பழுத்த அதாவது காய்வெட்டான பழங்களைவிட நன்கு பழுத்த பழங்களிலேயே இச்சத்து அதிகமாக உண்டு. பழத்தோலில் உள் சதையைப்போல் 12 மடங்கு இச்சத்து அடங்கியுள்ளது. மேல் தோல், மேல் சதை, உள் சதை இவைகளில் இச்சத்து முறையே = 12:5:1 என்ற விகிதத்தில் அடங்கியுள்ளது என அந்த ஆராய்ச்சி நிலையம் கூறுகிறது.

சுரங்கத்தை மூட மணல்

சுரங்கங்கள் இடிந்து அடிக்கடி சேதம் உண்டாவதைத் தடுக்கும்பொருட்டு நிலக்கரி வெட்டி எடுத்து முடிந்த சுரங்கங்களை மணலால் மூடிவிடுவது என இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதன்படி முதன் முதலாக ஆந்திராவில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரி தோண்டி முடிந்த பகுதிகளில் மணல் நிரப்பப்படும். இதற்கான மணல் அங்கிருந்து 5 மைல் தொலைவில் உள்ள இருநதி சங்கம ஸ்தானத்திலிருந்து கொண்டுவரப்படும். இதற்கென கயிற்றுப்பாதை (Ropeway) ஒன்றும் அமைக்கப்படும் இவ்விதம் கொண்டுவரப்படும் மணல் பம்புகளின் மூலம் காலி இடங்களில் நிரப்பப்படும். இது நம் நாட்டிலேயே முதன் முதலாகக் கையாளப்படும் புது முயற்சியாகும். நம் நெய்வேலிச் சுரங்கத்திலும் இனி இம்முறை கையாளப் படலாம்.

எலக்ட்ரிக் கம்பி மத்தாப்பு

இதைத் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்

இரும்புத்தூள் மிருதுவானது	12 பங்கு
அலுமினியம் தூள் "	1 "
பொடாசியம் குளோரேட்	6 "
டெக்ஸ்ட்ரின் அல்லது பிசின்	2 "
ஜலம்	வேண்டுமளவு.

பொடாசியம் குளோரேட் வெள்ளை ஸ்படிகப் பொருள் (Crystal) ஆகும். இதைத் தனியாக கல்வத்திலோ உரலிலோ, அல்லது மில்லிலோ இட்டுப் பவுடர் செய்யவேண்டும். கந்தகம், கரிபோன்ற பொருள்களோடு இது கலந்தால் வெடித்து விபத்தை உண்டாக்கும். டெக்ஸ்ட்ரின் (Dextrin) என்பது கோந்து போன்ற ஒரு பொருளாகும். இது வெள்ளை, மஞ்சள் இரண்டு தினுசாக உண்டு. வெள்ளை நல்லது. அது கிடைக்காவிட்டால் மஞ்சளை உபயோகிக்கலாம். அதுவும் கிடைக்காவிட்டால் அதற்குப் பதில் சாதாரணப் பிசினை உபயோகிக்கலாம். விருப்பமான கனத்தில் செம்புக் கம்பிகள் கிடைக்கும். அவற்றை வாங்கி எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு நீளத்துக்குத் துண்டுகளாக நறுக்கிக்கொள்ள

லாம். கம்பி கிடைக்காது போனல் மூங்கில் சிம்புகளையும் அதற்குப் பதில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பிசின் அல்லது டெக்ஸ்ட்ரினை நீர் விட்டு நல்ல கெட்டிப் பசையாக்கிக் கொள்ளவும். பிறகு அதில் இரும்புத்தூள், அலுமினியம் தூள். பொடாசியம் குளோரேட் தூள் ஒவ்வொன்றையும் ஒன்றன்பின் ஒன்ருக சேர்த்து நன்கு கலக்கவும். ஜலம் போதாவிட்டால் புதிதாகச் சேர்த்துக் கொள்ளலாம். பசையில் கம்பியை நனைத்து எடுத்தால் அதில் பசை ஒட்டிக்கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு நீர் சேர்த்தால் போதும். கம்பியை அப் பசையில் முக்கி முக்கி எடுத்து நிழலில் உலர்த்தவும். இப்பொழுது கம்பி மத்தாப்பு தயாராகிவிட்டது. அழகிய அட்டைப் பெட்டிகளில் அடுக்கி விற்பனைக்கு அனுப்பலாம். இந்த எலெக்ட்ரிக்கம்பி மத்தாப்பு வர்ண ஒளியும் வீசவேண்டுமானல் பத்து பங்கு பொடாசியம் குளோரேட்டுக்கு 1½ பங்கு வீதம் பேரியம் நைட்ரேட் (Bariam Nitrate) அல்லது 1½ பங்கு வீதம் ஸ்ட்ரான்ஷியம் நைட்ரேட் (Strontium Nitrate) கலந்து கொள்ள வேண்டும். ஸ்ட்ரான்ஷியம் நைட்ரேட் சிகப்பு ஒளியையும், பேரியம் நைட்ரேட் பச்சை ஒளியையும் தரும்.

ஆன்டி பிலாஜஸ்டின்

நிமூ மோனியாக்காரர்களுக்கு நெஞ்சில் ஒருவகைப் பசையை டாக்டர்கள் வைத்துக் கட்டுகிறார்களல்லவா? அதுதான் ஆன்டி பிலாஜஸ்டின் என்பது. வீக்கங்கள், சுளுக்குகள் முதலியவற்றிற்கு வைத்துக்கட்டவும் இது பயன்படுகிறது. ஜலபாத்திரத்தில் வைத்து உருக்கி இதைப்பூசி மேலே பஞ்சு வைத்துக் கட்டுவார்கள்.

இதைத் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்.

கிளிசரின்	......	450 பங்கு
அயோடின்	......	1 ,,
போரிக் ஆஸிட்	......	10 ,,
ஸால்ஸிலிக் ஆஸிட்	......	2 ,,
ஆயில்ஆப் விண்டர்கிரீன்	......	2 ,,
பெப்பர்மிண்ட் ஆயில்	......	2 ,,
நீலகிரித்தைலம்	......	2 ,,
சீனக்களிமண்	......	550 ,,

சீனக்களிமண் (Chinese clay) என்பது ஒருவகை நயமான களிமண். நம் நாட்டில் பல இடங்களில் இது கிடைக்கிறது. போர்சலின், பீங்கான் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுவது இக்களிமண்ணேயாகும். போரிக் ஆஸிட், சால்சிலிக் ஆஸிட் இரண்டும் வெள்ளைப் பவுடராகும். இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் அவை கிடைக்கும்,

முதலில் சீனக் களிமண்ணை 110° செ. வரை வெப்பப்படுத்தி பிறகு காய வைத்து, இடித்து அல்லது அரைத்துத் துணியில் சலித்து நயமான பவுடராக்கிக் கொள்ளவும். பிறகு அதோடு போரிக் ஆஸிட் பவுடரைக் கலக்கவும். இரண்டாவதாக ஸால் சிலிக் ஆஸிட்டைக் கலக்கவும். அதன் பிறகு கிளிசரினை 110° செ. வரை வெப்பப்படுத்தி மேல்படி பவுடர் கலவையில் அதை ஊற்றி நன்கு கிளரவும். கடைசியாக அயடின், ஆயில் ஆப் விண்டர்கிரீன், பெப்பர் மிண்ட் ஆயில், நீலகிரித்தைலம் ஆகியவைகளை ஒன்றன் பின் ஒன்ருக அதோடு சேர்த்துக் கலந்து கொள்ளவும். இப்பொழுது ஆண்டி பிலாஜஸ்டின் தயாராகி விட்டது. காற்றுப்புகாத டப்பிகளில் நிரப்பி விற்பனைக்கனுப்பலாம்.

காகித பொம்மை

இது அதிக முதல் தேவையில்லாத சுலபமானதொரு தொழில். இதைச் செய்ய பழைய குப்பைக் காகிதம், சாக்தூள் (Chalk Powder) பிசின், வர்ணம், அச்சுக்கள். இவை போதும்.

முதலில் காகிதத்தை சுமார் ஒரு வாரம் ஜலத்தில் ஊறப்போட வேண்டும். பிறகு அதை உரலில் இட்டு நன்கு ஆட்ட அல்லது இடிக்க வேண்டும் இப்படிச் செய்யும்போது அதோடு சாக்தூள், பிசின் இரண்டையும் கலந்துவிட வேண்டும். அதாவது அவற்றையும் ஊறிய காகிதத்தோடு சேர்த்து ஆட்ட அல்லது இடிக்கவேண்டும். மூன்று பொருள்களும் நன்கு ஒன்ருகியதும் வெளியில் எடுத்து வேண்டிய உருவில் ஆன பொம்மை அச்சுக்களில் நிரப்பிக் காயவிடவேண்டும். பிறகு அச்சை விட்டெடுத்து வெளியில் நன்கு காயவைத்து வேண்டிய வர்ணம் பூச வேண்டும். ஒரு ராத்தல் காகிதப் பசைக்கு அரைக்கால் ராத்தல் சாக்தூள், அரைக்கால் ராத்தல் கோந்து வீதம் சேர்க்கவேண்டும்.

துர்காபூரிலிருந்து கல்கத்தாவுக்கு கரி ஆவி

துர்காபூரில் நிலக்கரியிலிருந்து கோக் (Coke) கரி தயாரிக்கும் தொழிற்சாலையில் கரி ஆவி ஏராளமாக உற்பத்தியாகிறது. இந்த ஆவியை குழாய்கள் மூலம் கல்கத்தாவுக்குக் கொண்டு போய் அங்கே அதன் உதவியால் பல தொழிற்சாலைகளை இயக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தக் குழாய் அமைப்பு வேலையை மேற்கு வங்க சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது. இதற்காகும் செலவு 315 லட்சம் ரூபாயாகும். 120 மைல் நீளத்துக்குக் குழாய் அமைக்கப்படுகிறது. இதே

போல் நம் நெய்வேலிப் பகுதியிலிருந்து சென்னைக்கு குழாய் அமைத்து கரி ஆவி மூலம் சென்னையில் உள்ள பல தொழிற்சாலைகளை மலிவான செலவில் இயக்கலாம். தஞ்சை அல்லது திருச்சி பகுதிக்கும் குழாய்கள் மூலம் நிலக்கரி ஆவியை (Coal gas) கொண்டு சென்று அங்கே காவேரிக்கரையில் புதிய பல தொழில்களைத் தொடங்கலாம்.

வெள்ளை பூட் பாலிஷ்

இதைத் தயாரிக்கக் கீழ்கண்ட பொருட்கள் தேவைப்படும்.

லித்தோபோன்	40 கிராம்
சோப் தூள்	3 "
சோடியம் பென்ஸோட்	1 "
தண்ணீர்	60 க.செ.மீ.
கருவக்கோந்து கரைத்த நீர்	4 கிராம்

லிதோபோன் என்பது ஜிஸ் சல்பைடு. பேரியம் சல்பேட் இரண்டும் கலந்து தயாரித்த ஒரு வெண்மையான இரசாயனப் பொருளாகும். சோடியம் பென்ஸோட் வெள்ளை ஸ்படிகமாக இருக்கும். தண்ணீரில் கரையும்.

முதலில் தண்ணீரில் சோப் தூளைக் கரைக்கவும். பிறகு அதோடு கோந்து நீர், சோடியம் பென்ஸோட் இரண்டையும் கலக்கவும். கடைசியாக லித்தோபோன் பவுடரைக் கொட்டி நன்கு கலந்துகொள்ளவும். லித்தோபோன் கிடைக்காது போனால் அதற்குப் பதிலாக கீழ்க்கண்ட திரவத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

பிரஸிபிடேடட் சாக்	5 கிராம்
ஜிங் ஆக்சைடு	2 ,,
சோடியம் பென்ஸோட்	0;1 ,,
கருவக்கோந்து கரைசல்	2.0 ,,
தண்ணீர்	40 க.செ.மீ,

தண்ணீரில் மேற்படி சரக்குகளை எல்லாம் கரைத்து லித்தோபோனுக்குப் பதிலாக இத்திரவத்தை உபயோகிக்கலாம்.

நீங்கள் கேட்டவை

(1) பாஸ்பாரிக் ஆஸிட் (2) பெட்ரோலியம் ஈத்தர், (3) ஈதலின் கிளைகோல் (4) ஈத்தைல் மித்தைல் கிடோன் — இந்த நான்கு பொருள்களுக்கும் இங்கிலீஷ் பெயரை தயவு செய்து எனக்கு எழுதுவதுடன் அவை கிடைக்கும் மெடிக்கல் ஸ்டோர் அட்ரஸையும் எழுத வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆர். கணேசன்
சிவகாசி.

மேலே குறிப்பிட்ட நான்கு பொருள்களுக்கும் இங்கிலீஷ் பெயரும் அவையேதான்.

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை
உட்கொண்டால், உங்கள் இருமல்
உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றைச் சுவைத்து ஆவி போன்ற அதன் சத்து குணமளிக்க வேலை செய்வதை உணருங்கள். வலியைக் குறைக்கவும, தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமாகிய கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது. பெப்ஸ் உடனடி நிவர்ரணம் அளித்து விரைவில் குணமடையச் செய்கிறது.

FPY-54-TAM

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

சோல் ஏஜண்டுகள் :
தாதா அண்டு கம்பெனி
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3

Phosphoric acid, Petroleum ether, Ethylin glycol, Ethyl Methyl Ketone என ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள். இவற்றில் பாஸ்பாரிக் ஆஸிட் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும். மற்றவை சாதாரணமாக இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைப்பதில்லை. கீழ்க்கண்ட விலாசங்களுக்கு எழுதினால் கிடைக்கலாம்.

(1) Boake Roberts & Co.(India)Private Ltd.,
A; 1/5 Seven wells Street
St. Thomas Mount,
Madras-16

(2) Gillanders Arbuthnot & Co. Ltd.,
First Line Beach,
Madras-1

(3) Indo German Agencics Ltd;
67, Dr Alagappa Chettiar Rd,
Madras-7

பெருங்காயம் தயாரிப்பு முறை பற்றிய எல்லா விவரங்களையும் எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

— எ. கிருஷ்ணசாமி
சென்னை. 1

பெருங்காயம் பெருங்காயச் செடியின் பாலாகும். ஆகையால் அசல் பெருங்காயம் தயாரிக்கப் பெருங்காயச்செடி பயிர் செய்தல் வேண்டும். போலிப் பெருங்காயம் செய்யும் முறை கூடிய விரைவில் வெளியிடுகிறோம்.

(அ) தொழில் துணுக்கில்பிப்ரவரி இதழில் திரவ வெள்ளை பாலிஷ் (Liquid White Polish) தயாரிக்கும் முறையைத்தெரியப்படுத்துங்கள்.

(ஆ) சமையற் கலைக்கெனத் தனிப் புத்தகமிருப்பதால் பெண்கள் பகுதியில் அத்தலைப்புக்குப் பதிலாக அழகு சாதனங்கள் தயாரிக்கும் விதங்களைத் தெரியப் படுத்தினால் நாங்களும் ஏதோ ஊதியமடையக் கூடியதாக இருக்கும்.

(இ) பெண்களுக்கு மட்டும் என்ற பகுதியில் மேஜை உப்பு (Table Salt), குங்குமம், பொட்டு, முதலியவை செய்யும் விதங்களைத் தெரியப் படுத்துங்கள்.

(ஈ) Stovax இங்கு கிடைக்கவில்லை, இந்தியாவில் கிடைக்குமிடத்தைத் தெரியப்படுத்துங்கள்.

— இ. மங்களேஸ்வரி.
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(அ) இவ்விதழில் திரவ வெள்ளை பாலிஷ் தயாரிக்கும் முறையைச் சேர்த்திருக்கிறோம்.

(ஆ) பெரும்பாலான பெண்கள் சமையற்கலை பகுதியை வெகுவாக விரும்புவதால்தான் சேர்க்கிறோம். கூடுமானவரை புத்தகங்களில் காணக்கிடைக்காத பாக முறைகளையே வெளியிடுகிறோம், கதைப் புத்தகங்கள் உள்ளன. நாவல்கள் உள்ளன. அதற்காகப் பத்திரிகைகள் நாவல்கள், கதைகள் வெளியிடுவது அவசியமல்ல எனக் கூற முடியுமா? அழகு சாதனத் தயாரிப்பு முறைகளை நாங்கள் தொடர்ந்து வெளியிட்டே வருகிறோம். இனியும் வெளியிடுவோம்.

(இ) மேஜை உப்பைப்பற்றி ஏற்கனவே தொழில் துணுக்கில் ஒரு குறிப்பு வெளியாகி இருக்கிறது. சுலபமாக வீடுகளில் மேஜை உப்பு தயாரிப்பதென்பது சாத்தியமல்ல. குங்குமம், பொட்டு முதலியவை தயாரிக்கும் முறைகள் ஏற்கனவேயே வெளியிட்டிருக்கிறோம்,

(ஈ) Stivax என்பதை Styvax எனவும் சொல்லுவார்கள். கொழும்பில் உள்ள இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கலாம். அங்கு கிடைக்காது போனால் இந்தியாவில் கீழ்க்கண்ட விலாசங்களுக்கு எழுதிப் பெறலாம்.

(1) Amarchand Sobachand
95, Nyniappa Naick Street
Madras-3

(2) Carl & Co;
44, Purasawalkam High Road
Madras-7

(3) Mount Pharmacy (Private) Ltd;
2/4, Mount Road
Madras-2

டில்லித் தபால்



கே. ஸ்ரீநிவாஸன்

முன்னாளில், அதாவது இந்தியா சுதந்திரம் அடையாமல் இருந்தபொழுது, வருடாவருடம் கூடும் காங்கிரஸுக்கு அபார மவுஸு உண்டு. இதற்குக் காரணம் அன்னாள் காங்கிரஸ் ஒரு தேசீய இயக்கம், கேவலம் ஒரு கட்சி அல்ல. காங்கிரஸில் தேசத்தலைவர்கள் கூடி என்ன முடிவு செய்யப் போகிறார்கள் என்பதை தேசமக்கள் மிக ஆர்வத்துடன் கவனிப்பது வழக்கம். ஏன், அந்த நாட்களில் காங்கிரஸ் எங்கே நடந்தாலும் ஜனங்கள் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு, குளிர் மூதலிய அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல், செல்வது வழக்கம். புரிந்ததோ புரியவில்லையோ காங்கிரஸில் சிவனேயென்று உட்கார்ந்து கேட்டுவிட்டு அங்கு கண்காட்சியில் உள்ள சாக்குகளை வாரிச் சுருட்டிக்கொண்டு ஊர் திரும்புவது வழக்கம். எங்கள் ஊரில் இருந்த ஒரு "மைனர்" நிரக்ஷரக் குக்ஷி என்றாலும் காசி காங்கிரஸுக்குச் சென்று இரு டின் காசி ஹல்வாவை வாங்கிக் கட்டிக்கொண்டு திரும்பினார். "என்னய்யா; காங்கிரஸில் என்ன நடந்தது?" என்று கேட்டபொழுது, "அடேயப்பா! படே படே ஆள்கள் வந்தார்கள்; படே படே பேச்சுப் பேசினார்கள். அதெல்லாம் விஸ்தாரமாக சொல்லவேண்டிய விஷயம் என்றார். விஸ்தாரப்பேச்சு எப்பொழுதும் "படே படே" என்ற சொற்களில் அடங்கியிருந்தது. சுருங்கச் சொன்னால் காங்கிரஸ் என்றால் தேசம் என்ற மனப்பான்மை நிலவிய காலம் அது.

1947-க்குப் பிறகு காங்கிரஸ் கேவலம் ஒரு கட்சியாகிவிட்டது. இதை எதிர்பார்த்தேதான் மகாத்மா காந்தி காங்கிரஸ் சுதந்திரம் கிடைத்த பிறகு கலைக்கப்பட வேண்டும் என்று சொன்னார். சுதந்திரம் எய்தும் வரை பாகுபாடு இல்லாமல் ஐக்கியமாகப் போராட உதவிய ஸ்தாபனத்தின் பெயர் ஒரு கட்சிக்கு நிலைக்கக்கூடாது என்பது மகாத்மாவின் கருத்து. ஆனால் மகாத்மாவின் வார்த்தைகளை யாரும் அப்பொழுது காது கொடுத்துக் கேட்கவில்லை. அதன் பலனை இன்று நாம் அனுபவிக்கிறோம்.

காங்கிரஸின் வருடாந்திரக் கூட்டங்களுக்கு இன்னும் ஏன் மதிப்பு வைக்கப்படுகிறது. ஏன் அதன் நடவடிக்கைகளைப் பத்தி பத்தியாக பத்திரிகைகளில் பிரசுரிக்கிறார்கள் என்றால் காங்கிரஸ் இன்று சர்க்காரை நடத்தும் கட்சி. இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ உள்ளதுபோல இந்தியாவிலும் காங்கிரஸுக்கு சரி சமமான கட்சி இருந்தால் அதுவும் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும். இந்தியாவில் பல உதிரிக் கட்சிகள் இருந்தபோதிலும் பதவி வகிக்கும் அளவுக்கு எதற்கும் பலம் இல்லா

தது ஒரு பெரும் குறையே. "ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு" என்று கேரளத்தில் அமைந்த சர்க்கார் கம்யூனிஸ்ட் சர்க்காரானது தேசத்தைப் பிடித்த துரதிர்ஷ்டமே. பிரஜா சோஷலிஸ்ட் கட்சி எந்த மாகாணத்திலாவது சர்க்கார் அமைத்து திறம்பட நிர்வாகம் நடத்தியிருந்தால் அதற்கு இந்தியாவில் கண்டிப்பாக உபயோகம் இருந்திருக்கும்.

நிற்க, சுதந்திரத்துக்குப் பிறகு காங்கிரஸ் கூட்டங்களில் முக்கியத்துவம் நிறைந்தது ஆவடி. ஏனென்றால் இங்குதான் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கோலத்தை மேற்கொண்டு உண்மை சோஷலிஸ்ட் சக்திகளை ஒடுக்கிற்று. கம்யூனிஸ்ட்கள்தான் காங்கிரஸுக்கு அடுத்த கட்சி என்ற நிலைமை வந்ததற்கு ஆவடி காங்கிரஸ்தான் காரணம். இதற்கு அடுத்தபடி முக்கியமான காங்கிரஸ் நாகபுரி காங்கிரஸ். ஏனென்றால் இந்தக் காங்கிரஸில் தான் கோவாபரேடிவ் பண்ணையை அமல் செய்ய பண்டித நேரு முடிவுசெய்து நேரடியாக சுதந்திரக் கட்சிக்கு அடிகோலினர். பழம் பெருச்சாளிகளான ராஜாஜி, முன்ஷி முதலிய காங்கிரஸ்காரர்கள் ஸ்தாபனத்தை விட்டு வெளியேறுவது என்பது சாமான்ய காரியமா?

நாகபுரிக்குப் பிறகு பங்களூர். அப்படி யென்ன விசேஷம் இங்கு நிகழ்ந்தது என்று கேட்கலாம். நிகழத்தான் நிகழ்ந்தது. சென்ற வருஷம் வரை நாவசைந்தால் நாடசையும் என்றிருந்த பண்டித நேருவின் போக்கையும் நடுநிலைமைக் கொள்கையையும் எதிர்க்க ஆட்கள் தோன்றினர்கள். சீன- "பாய்பாய்" இந்தியாவுக்குள் நுழைந்ததுமல்லாமல் "இதெல்லாம் எங்களைச் சேர்ந்தது" என்று சொன்ன பிறகு சீன நல்லபடியாக கட்டுப்பட்டு மறுபடியும் "பாய்" ஆகிவிடும் என்று யாராவது நம்பினல் அது பண்டித நேரு ஒருவர்தான். அவர் நம்புகிருரோ இல்லையோ நம்புவதுபோல பாவனையாவது செய்ய வேண்டியிருக்கிறது. காங்கிரஸ்காரர்களில் மூன்று தைரியசாலிகள் "நீர் சொல்லுவது தப்பு" என்று சொல்ல முன் வந்தது பாராட்டிற்குரிய விஷயம். அவர்களை உற்சாகப்படுத்தி காங்கிரஸின் வெளி நாட்டுக் கொள்கையை தீர அலசி முடிவு செய்ய இடம் கொடுப்பது அறிவுக்கு எட்டிய விஷயம். ஆனல் நடந்ததென்ன? "ஹா, இதென்ன அநியாயம்? காங்கிரஸ் மேடையிலிருந்தா இம்மாதிரி பேச்சு கிளம்புவது. இம்மாதிரி மாறுதல் நிகழ்வதைவிட காங்கிரஸ் செத்து ஒழிவதுமேல்" என்று பண்டிதர் கர்ஜித்தது மிகவும் விசனிக்க வேண்டிய விஷயம்! காங்கிரஸில் விவாதமும் ஆலோசனையும் அதிகரிக்கவேண்டும், குறிப்பிட்ட விஷயங்களை காங்கிரஸ்காரர்கள் அலசி அறிய ஆற்றல் பெறவேண்டும் என்று மேடைப்பேச்சு பேசும் நேரு பங்களூரில் பள்ளிக்கூட அரங்கில் எதிராளிக்கு அஞ்சும் பையனைப்போல் குதித்தது அவருடைய பெருமைக்கு ஹானி உண்டாக்கும் விஷயம். "ஒரு தலைவர், ஒரு கக்ஷி, ஒரு தரப்பட்ட மக்கள்" என்ற மனப்பான்மை குடியரசில் இடம்பெற முடியாது. நாஜி ஜெர்மனியிலும், ருஷ்யாவிலும், சீனவிலும், மற்றக் கம்யூனிஸ்ட்கள் ஆளும் நாடுகளிலும்தான் இதற்கு இடம் உண்டு.

பண்டித நேருவின் மனதை அறிவது சுலபமான விஷயம். ஏனென்றால் இந்தியாவினுடய எல்லைகளை கோட்டை விட்டது அவருடய நடுநிலைமைக் கொள்கையே. பறிகொடுத்தது மல்லாமல் அதைப்பற்றித் தேசத்துக்கே அறிக்கை கொடுக்காமல் இருந்தார் என்பது பிரசித்தம். தன்னுடைய மௌடீகத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்ட ஆபத்தையும் மானக்கேட்டையும் ஆராய்ந்து விவாதிப்பது பண்டித நேருவுக்குப் பிடிக்காத விஷயம். அதுவும் தன்கட்சி மேடையில் இம்மாதிரி விவாதங்கள் ஏற்படுவது என்பதை எப்படி அவர் சகிக்க முடியும்?

இரண்டு வருடங்களுக்கு முன் தேசம் இருந்த நிலைமை வேறு. இன்று அது இருக்கும் நிலைமை வேறு. அன்று பண்டித நேருவை எதிர்த்துப் பேசத் துணிந்தவர்களை அரைப் பைத்தியம் என்று சொல்லுவார்கள். இன்று அவரைக் குறை கூறுபவர்கள் விவேகிகள், தைரியசாலிகள், தேசபக்தர்கள். நாம் எதிர் பார்த்ததற்கு மாருக ஒருநிலைமை உண்டாகி விட்டது. அதைச் சமாளிக்க நம் முறைகளை மாற்ற வேண்டும் என்று நினைப்பது ராஜ தந்திரமே ஒழிய எரிமலை உச்சியில் உட்கார்ந்துகொண்டு நாம் எவரஸ்ட்மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்று நினைப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். கல்வியும் அறிவும் தேசத்தில் வளர்கிறது என்பது ஒருபுறமிருக்க,சீன சம்பந்தமாக எதிர்ப்புக் கட்சிகள் நன்ருக ஆராய்ந்து இந்திய சர்க்கார் கொள்கையை எதிர்க்கிருர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்தக் கட்சியும் ஒருதனி மனிதரின் மதிப்பை வைத்துக்கொண்டு என்றென்றும் வாழ முடியாது. அயல் நாட்டுக் கொள்கை விஷயமாக மக்கள் நினைப்பதற்கு மாருக எத்தனை நாட்கள் காலம் கழிக்க முடியும்? அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் வெற்றியடைய வேண்டும் என்ருல் அது தேச அபிப்பிராயத்தை உருவாக்கா விட்டாலும் அதை அனுசரிக்கவாவது வேண்டும். பங்களூரில் இதுவரை வாழுங்குறிகள் காணப்படவில்லை.

அயல் நாட்டுக்கொள்கை ஒரு பக்கமிருக்க, நிர்வாக ஊழல்கள், மந்திரிகளின் நடத்தை, லஞ்சம் முதலியவைகளைக் காங்கிரஸ் சரிப்படுத்த முயலாதது அதைப்பிடித்த துரதிர்ஷ்டமே. தேசமெங்கும் நிர்வாகம் சீர்பட வேண்டும், மந்திரிகள் மக்களுக்கு வழி காட்ட வேண்டும் என்ற கோஷம் முழங்குகிறது. வெகு சில மாகாணங்கள் நீங்கலாக மற்ற மாகாணங்களில் ஊழலும், லஞ்சமும், சலுகையும் மண்டிக்கிடக்கிறது. குறிப்பாக, பஞ்சாப், உத்தரப்பிரதேசம், பீஹார், வங்காளம், மத்தியப்பிரதேசம் முதலிய மாகாணங்களில் காங்கிரஸ் பெயர் சேற்றில் புதைந்து விட்டது. "சில மந்திரிகள் லஞ்சம், சலுகை முதலியவைகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அகில இந்திய அளவில் ஒரு விசாரணை மன்றம் ஏற்படுத்த உதவினால் நான் மந்திரிகளின் பெயர்களையும் விவரங்களையும் அம்பலப் படுத்தத் தயார்" என்று முன்னாள் நிதி மந்திரி, ஸ்ரீ ஸி. டி. தேஷ்முக், பல தடவை திரும்பத் திரும்பச் சொன்னதை யாரும் காது கொடுத்து கேட்டதாகத்தெரியவில்லை. பண்டிதநேரு இது பற்றிய விவரங்களைக் கேட்டார் என்றும், ஸ்ரீ தேஷ்முக் அவைகளைத் தெரிவிக்கச் சம்மதப்பட வில்லையென்றும் தெரிகிறது. ஸ்ரீ தேஷ்முக் தெரிவிக்காததற்கு காரணம் உண்டு. உத்தரப் பிரதேசத்தில் ஒரு மந்திரி வாரியோ வாரி என்று கண்டிராக்டுகளை அள்ளி விட்டார், அவைகளில் பெரும்பாலும், அவருடைய உறவினர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று எதிர் தரப்பார் புகார் செய்தார்கள். அதை யார் விசாரித்தார்கள் தெரியுமா? நம் பிரதமர்தான். சாக்ஷியமோ விசாரணையோ இல்லாமல் ஸ்ரீ நேரு பிரஸ்தாப மந்திரியின் நடத்தையில் குற்றம் இல்லை என்று சொல்லி விட்டார். இம்மாதிரி நடவடிக்கைகள் எப்படி ஸ்ரீ தேஷ்முக் போன்றவர்களைத் திருப்தி செய்ய முடியும்?

"சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு தேசம் மிகவும் நன்றாக இருந்தது. அப்பொழுது இம்மாதிரி ஊழல்களோ புகார்களோ உண்டா? வெள்ளைக்காரன் நன்றாகத்தான் ராஜ்யபாரம் செய்தான்" என்று யாராவது சொன்னால் அவர் கன்னத்தில் பளார் என்று அறையுங்கள். நாம் விடுதலையடைந்த பிறகு தேசத்தில் விரைவாக பல ஆக்க வேலைகள் உருவாகியிருக்கின்றன. அடுத்த 10 வருஷங்களுக்குப் பிறகு நாம் எங்கேயாவது சென்று விட்டு நாடு திரும்பினால் சிற்சில இடங்களை அடையாளம்கூட புரிந்து கொள்ள முடியாது. சிந்திரி, ("சிந்திரி சிரிக்கிறது வடக்கே") சித்தரஞ்சன், பெரம்பூர், துர்காபூர், பிலாய், ரௌர்காலா, பக்ரா, பிம்பிரி என்ற பெயர்களைக் கேட்காதவர்கள் இன்று இந்தியாவில் அபூர்வம்.

தேசத்தில் எல்லா மாகாணங்களும் முன்னேற வேண்டும் என்று ஆசைப்படுபவர் நம் நேரு. சீனக் கொள்கையில் மட்டும் பிடிவாதம் பிடிக்கிறாரே தவிர, தேசத்தை சரி சமமாக பாவிக்கும் வெகு சிலர்களில் அவர் ஒருவர். வெள்ளைக்காரர்கள் நடத்திய ரயில்வேயில் சில்லரை அதிகம் பெயராத பிரதேசத்தில் ரயில் மார்க்கம் உண்டா? கஷ்டமான ஆறுகள் ஓடும் பிரதேசத்தில் பாலங்கள் உண்டா? கண்டிப்பாகக் கிடையாது. கட்டாயம் முடியாது, நடக்காத காரியம் என்று முடிவு செய்யப்பட்ட பிரும்ம புத்திரா நதியைக் கடக்க பாலம்கட்ட முடிவு செய்த இந்திய சர்க்காரை அஸ்ஸாம் மாகாண மக்கள் மட்டுமல்லாது நாம் எல்லோருமே பாராட்ட வேண்டும்.

அஸ்ஸாம் இந்தியாவின் கிழக்குக் கோடியில் உள்ள மாகாணம். வடக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் மலைகள் மண்டியவை. நடுவே குழிந்த கிண்ணம்போன்ற சமவெளி. இந்த மாகாணத்தில் தான் பிரும்மபுத்திரா கிழக்கிலிருந்து மேற்காக ஓடி மாகாணத்தை இரு பிரிவாக்குகிறது. வெள்ளம் ஒவ்வொரு வருஷமும் பெருக்கெடுத்து மாகாணத்தில் பலபகுதிகளைச் சீரழிப்பது வழக்கம். தெற்குப் பகுதியில் இருப்பவர்கள் இந்நதியை ஏதோ கடலைப்போல் பாவித்து வந்தார்கள் என்றால் அவர்கள் அக்கரைக்குப் போகமுடியாமல் இருந்ததுதான் காரணம்.

பிரும்மபுத்திரா நதி நம் கொள்ளிடத்தைப் போல பலமடங்கு பெரியது. பாலம் கட்டப் போகும் இடத்தில் நதியின் சராசரி ஆழம் 50 அடி' தண்ணீர் வருடம் பூராவும் நிற்கும் இடத்தில்தான் இந்திய என்ஜினீயர்கள் அஸ்திவாரம் போட்டு பாலம் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். பாலம் கட்ட தூண்கள் போன்ற கட்டைகளைக் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். பெயருக்கு அஸ்திவாரம் என்று சென்ற மாதம் 10-ம் தேதி பிரதமர் நேரு ஒரு அஸ்திவாரக் கல்லை நாட்டினார். பிரும்மபுத்திரா விஜயத்தைப் பற்றியும் அஸ்ஸாமைப்பற்றியும் விஸ்தாரமாக பின்னர் எழுதுகிறேன். இப்பொழுது குறிப்பிட விரும்பும் விஷயம் என்னவென்றால் 10 கோடி ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டுவது என்பது மத்திய சர்க்காரின் பாரபட்சமற்ற தன்மையைக் காட்டுகிறது.

* * *

நேபா என்ற பகுதி அஸ்ஸாமுக்கு வடக்கே உள்ளது. 700 மைல் நீளமும் சுமார் 70 மைல் அகலமும் கொண்டது. இதில் வசிப்பவர்கள் மிகவும் பின்னடைந்த மலை ஜாதியினர். சமீப காலம்

வரை சமவெளியில் உள்ளவர்களை மலைப் பிரதேசங்களுக்கு அருகே கூட வரவொட்டாமல் தடுத்து வந்தவர்களில் மிஷ்மி, காரோ என்ற ஜாதியினர்கள் உள்ளடக்கம். இவர்களைக் காட்டுமிராண்டிப் பிராயத்திலேயே வைத்திருப்பது நல்லது என்று வெள்ளையர்கள் முடிவு செய்து இந்தப்பகுதியைக் கவனிக்காமலே விட்டு விட்டார்கள். அதன் பலனை இன்று நாம் அனுபவிக்கிறோம். இப்பகுதியைச் சுதந்திரம் அடைந்த பிறகே சீர்திருத்த முயற்சிகள் செய்யப்பட்டன. சத வருஷங்களாக பின்னடைந்த பிரதேசத்தில் 10 வருஷ ஆக்கவேலை என்ன செய்ய முடியும்? "நாம் இந்தியர்கள். நம் பிரதேசம் இந்தியாவைச் சேர்ந்தது" என்று இவர்களை உணரும்படிச் செய்தால் சீனப் பிசாசுகளைப்பற்றி நாம் அதிகம் கவலைப்பட வேண்டியிராது. ஆனால் இவர்களுக்குத் தங்கள் மலைப்பிரதேசங்களைத் தவிர வேறு ஸ்தலங்கள் இருப்பதாகவே தெரியாது.

சுபான்ஸுரி என்ற உப பிரிவில்தான் லாங்ஜு என்ற எல்லைப் பாதுகாப்பு ஸ்தலம் உள்ளது. இதைத்தான் சீனர்கள் ஆக்கிரமித்துப் பிடித்து தங்கள் வசம் இன்றுவரை வைத்திருக்கிறார்கள். திபெத்தை கபளீகரம் செய்தது முதல் இவர்கள் இந்திய எல்லையை ஒட்டி ரோடுகள் அமைத்து வந்திருக்கிறார்கள். இன்று கிழக்கே நேபா முதல் மேற்கே லடாக் வரை இவர்கள் லட்சக்கணக்கில் துருப்புகளையும் யுத்த தளவாடங்களையும் குவிக்க முடியும். நம் கதியென்ன? அஸ்ஸாமின் சமவெளி முடியும் இடத்திலிருந்து திபெத்— இந்திய எல்லை வரை ரோடுகள் எங்கும் கிடையாது. குதிரை, கழுதை, கோவேறு கழுதைகள் மூலமே துருப்புகளையும் தளவாடங்களையும் கொண்டு செல்ல வேண்டும். நாம் தூங்கி விட்டோம். நம் பைத்தியக்காரத்தனத்துக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று பிரதமர் நேரு உணர்ந்தால் நல்லது. துருப்பு நடமாட்டம் எப்பொழுதும் ரகசியம். ஒன்று மட்டும் தைரியமாகச் சொல்லலாம். இங்கு எல்லையை ராணுவத்தாரிடம் ஒப்படைத்த பிறகு ராணுவத்தார் இதை பலப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். சீனர்களை மேற்கொண்டு முன்னேற விடாமல் பார்த்துக் கொள்வதற்கே இன்னும் குறைந்தபக்ஷம் ஆறுமாதத் தயாரிப்பு அவசியம். "சீனர்களை எல்லைக்கு அப்பால் தூக்கியெறிவோம்" என்ற கோஷம் எவ்வளவு அபத்தம் என்பதை வெகு சிலர் தான் இன்று உணர முடியும். நாம் "அடி உதை" என்றால் நம்மை அவர்கள் உரிமை கொண்டாடும் பகுதிகளிலிருந்து ஓரிருதினங்களில் விரட்ட வல்ல பலம் இன்று சீனர்களிடம் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* * *

கேரளத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை நாம் மட்டுமல்லாமல் உலகமே இன்று கவனிக்கிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத கம்யூனிஸ்ட்கள் ஜனநாயக முறைகள் மூலம் தங்கள் ஆட்சியையும் கட்சியையும் பலப்படுத்திக் கொண்டது யாவரும் அறிந்த விஷயம். இந்த ஆட்சியை மக்கள் உதறியெறிந்தார்கள். கம்யூனிஸ்ட்கள் இந்தியாவுக்கு எவ்வளவு தூரம் அனுதாபிகள் என்பது சீன ஆக்கிரமிப்புப் படலத்திலிருந்து வெளியாயிற்று. கேரளத்தில் கம்யூனிஸ்ட்கள் மறுபடி பதவிக்கு வரமுடியாது என்பது நிச்சயம். ஆனால் காங்கிரஸ்— பி. எஸ். பி. — முஸ்லிம் லீக் ஐக்கிய முன்னணி தேர்தலுக்குப் பிறகு எப்படி சர்க்கார் அமைப்பார்கள் என்பதை இப்பொழுதே முடிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பதவி அடி பிடியில் முக்கிய நோக்கத்தை மறந்து விடுவோம். ★

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு		மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு	
	ரூ.	நயா பைசா	ரூ.	நயா பைசா
ஒரு வருஷம் (தீபாவளி மலர் உள்பட)	7	50	9	00
தனிப் பிரதி	0	50	0	62

தொடர் கதை



இன்பமே இங்கே வா!

தி. சேஷாத்திரி

கணவனையும் தொழுவாள்

வீட்டுவாசலில் சென்றதும் காரோட்டி கடம்பவனம் மோட்டாரை நிறுத்திக் கதவைத்திறந்தான், தான் இறங்க வேண்டாம் என்று துரைசாமி கைக்கடியாரத்தைப் பார்த்தார். மணி ஆறு நாற்பதாயிருந்தது.

“அமுதம், நீ இரங்கி பூஜைப்பிரஸாதத்தை உள்ளே வைத்து விட்டு வா” என்றார். அவன் உள்ளே போனான்.

“கடம்பவனம்! ஷண்முகா தியேட்டருக்கு வண்டியைவிடு! எங்களை அங்கே விட்டு விட்டு நீ போய்விட்டு வரலாம்... ஆனால்... இரு, செட்டியார் என்ன சொன்னார்?”

முதலாளி, “அங்கேயே இருந்து அழைத்து வந்து வீட்டில் விட்டுப் பிறகு வா என்று சொன்னார். ஐயா, லாண்ட்மாஸ்டர் காரை எடுத்துக்கிட்டுப் போய்விட்டாருங்கோ!”

‘சரி’ என்ற துரைசாமி மேலே பேசவில்லை.

அமுதம் உள்ளிருந்து வந்தவன் ஒருவரும் இறங்காததைப் பார்த்துச் சற்று திகைத்தான். அதற்குள் ரஜனி, “வாடா தம்பி! சினிமாவுக்குப் போகலாம்!” என்றாள். ஒரு குதி போட்டுக்கொண்டு வந்து ஏறினான் அவன்.

மோட்டார் வேகமாகப் பறந்தது. நாகரத்தினம் ஒன்றும் பேசவில்லை.

அங்கே சென்றவுடன் துரைசாமி சற்றுத் தயங்கினார். கடம்பவனத்திடம் இரண்டு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து “உனக்கும் சேர்த்து “குடும்பச் சீட்டே” எடுத்து வந்துவிடு!” என்று உத்தரவு கொடுத்தார். அமுதலிங்கம் துடித்தவனை நாகரத்தினம் அடக்கினாள்.

“ஆரம்பித்தாய் விட்டது; நியூஸ் எல்லாம் முடிந்து கதை ஆரம்பித்திருக்கும்” என்று முணுமுணுத்தான் அவன்.

“அது என்ன திடீர் என்று மனம் மாறி விட்டீர்கள்!” என்று பல்லிடுக்கால் கேட்டு வைத்தாள் நாகரத்தினம்.

ஒரு சிரிப்புச் சிரித்துக்கொண்டு அவளைப் பார்த்த அவர் பேசாமலே இருந்துவிட்டார்.

கடம்பவனம் வருகிறானா என்று பார்த்த துரைசாமிக்குத் துணுக் கென்றது. அவர் தான் போய் டிக்கட் வாங்கினால் என்ன ஆகும் என்று பயந்தாரோ அது கடம்பவனம் சென்றதால் தடைப்படவில்லை. கடம்

பவனமும் தம்பியப்பாவின் டிரைவரல்லவா? அதை எப்படி மறந்தார் அவர்!

கடம்பவனம் மட்டும் வரவில்லை. அவருடன் சினிமாக்கொட்டகை மானேஜரும் வந்து கொண்டிருந்தார்.

"வாருங்கள்" என்று அழைத்தார் அவர். துரைசாமி இதுவரை எங்கும் இப்படிக் குடும்பத்துடன் போனதில்லை. அதிசயமாயிருந்தாலும் சமூகம் அதை வரவேற்கவே தயாராயிருந்தது; பாராட்டத் தயாராயிருந்தது. அது துரைசாமி தம்பதிகளுக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஒருவாறு இப்பொழுது உணர்ந்து கொண்டாள் நாகரத்தினம். துரைசாமி படம் ஆரம்பித்தபிறகு, விளக்கு அணைத்த பிறகு வரவேண்டும் என்று விரும்பியதற்குக் காரணம் அவள் ஒருவாறு விளங்கிக்கொண்டாள். புகழுக்கு இவ்வளவு தண்டனையும் உண்டா? அவளுக்கு ஒரே ஒரு விஷயந்தான் குழப்பத்தை விளைவித்தது. "சமூகம் எப்படி துரைசாமியை மதிக்கிறது! இவ்வளவு புகழையும் பெருமையையும் வாரிச் சொரிகிறது; புகழின் ஒளியில் தப்பு நடத்தையின் கிரமம் மீறிய செயலின் கருமை வெளியே தெரிகிறதில்லையா? அல்லது தெரிந்தும் 'விளக்கின்' காலடியில் நிழல் இருக்கத்தான் இருக்கும் என்று ஏற்றுக் கொள்கிறதா?

அது எப்படியாவது போகட்டும். இவர் என் கணவர். இவர் புகழில் எனக்குப் பங்கு வேண்டாம். ஆனால், இவருக்குச் சிறுமை ஏற்பட மட்டும் நான் சம்மதியேன். இவர் தோண்டும் பள்ளத்தை நிரப்பவே நான் செய்யும் நல்ல காரியத்தின் பலன் எல்லாம் தேவைப்பட்டு செலவிடப்பட்டு விடுமென்றாலும் நான் தயார். மேலும் மேலும் என் வாழ்க்கையைச் சுத்தமானதாகப் புனிதமானதாக ஆக்கிக் கொள்கிறேன்."

தன் எண்ணங்களிலேயே மறந்த அவளை ரஜனி 'அதோ பார் அம்மா, மண்டோதரியை!' என்று எழுப்பினாள்.

அவளுக்கு ஒருமுறை தூக்கிவாரிப் போட்டது. அவளுக்கு மண்டோதரியின் கதை தெரியும். மண்டோதரி, பாவம்! அந்தப் பழிகாரன் வாழ்வை எப்படிக் கட்டிக் காத்தாள். தெய்வமே! என் கணவனை நீதான் காப்பாற்றவேண்டும்! என்று வேண்டிக் கொண்டாள்.

படம் அப்பொழுதுதான் ஆரம்பித்திருந்தது. நடிகர்களின் பெயர்களைமட்டும் சொல்லி பாத்திரங்களின் குறிப்பைச் சொல்வதற்குப் பதிலாக இந்தப் படத்தில் நடிக நடிகைகளையும் அவரவர் வேஷத்தில் காட்டி அந்த வேலையைச் செய்திருந்தார்கள். பிறகு அஞ்சனை வாயுவுடன் பேசிக்கொண்டிருக்கும் காதல் காட்சியிலிருந்து படம் தொடங்கிற்று. நாகரத்தினமும் மனதைக் கதையில் வைத்துப் படம் பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

ஆனால், இது என்ன? ஏன், எல்லோரும் பின்புறம் திரும்பிப் பார்க்கிறார்கள்? படம் பார்ப்பதையே நிறுத்திப் பின்னால் பார்க்கிறார்களே! நாகரத்தினம் புடவைத் தலைப்பை நன்றாய் இழுத்துவிட்டுக்கொண்டாள். வலது கையால் மார்பின்மேல் உள்ள புடவைப் பகுதியை மூடிவிட்டுக்கொண்டாள். இரண்டு கைகளாலும் தலைமயிரை அமுக்கி விட்டுக்கொண்டாள். ரஜனியும் சரியாக அமர்ந்திருக்கிறாளா! என்று பார்த்துக் கொண்டாள்.

"சை! இந்த ஆண்களே இப்படித்தான்; பெண்கள் என்றால் போதும். உயரம், அகலம், வயது, நிலை ஒன்றையும் கவனிக்கமாட்டார்கள்."

ஆனால்... ஆனால்!

பார்ப்பது ஓயவில்லையே—ஏன்?

கணவனைக் கேட்கலாமா என்று ஆரம்பித்தும்விட்டாள். அதற்குள் ரஜனி சொன்னாள்:

அம்மா! அப்பா கொட்டகைக்கு வந்திருப்பது எப்படியோ தெரிந்துவிட்டது அம்மா!

அப்பொழுதுதான் புரிந்தது. அவர்கள் தங்கள் அன்புக் குகந்த அர்ச்சுனனைப் பார்க்கிறார்கள் என்று. நல்லகாலமாகப் போயிற்று. மேலே பால்கனியானபடியால், படித்தவர்கள், நாகரிகம் தெரிந்தவர்கள், மரியாதையுடையவர்கள், இவர்களே வந்திருந்தார்கள். அர்ச்சுனன் மதராஸிலும் தன் சொந்த ஊரிலும் சினிமா பார்ப்பதே கிடையாது. இன்றுதான் முதல் தடவை. அதற்குத் தண்டனை இது.

இடைவேளைக்குக் கொஞ்சநேரம் இருக்கும்போதே அர்ச்சுனன் நாகரத்தினத்தின் காதில், 'இடைவேளையின்போது ஒரு ஆள் வந்து கூப்பிடுவான். நீ பேசாமல் அவனுடன் முதலாளியின் அறைக்கு வா! என்று சொன்னார். பிறகு அவரும் அவர் பக்கத்தில் புதிதாக வந்து அமர்ந்திருந்த ஒருவரும் எழுந்து சென்றுவிட்டனர். பிறகு தொந்தரவில்லாமல் பார்த்தார்கள் தாயும் சூழந்தைகளும்.

இண்டர்வெல்லின்போது நாகரத்தினம் ஒரு அதிசயமான காட்சியைக் கண்டாள். முதலாளி அறைக்குப் போகமுடியாதபடி கூட்டம். உள்ளேயும் கூட்டம். எல்லாம் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட ஆண், பெண்கள்.



அர்ச்சுனன் நமஸ்காரம் செய்துவிட்டுக் கூட்டத்தினரிடம் 'நீங்கள் போங்கள்' என்று கேட்டுக்கொண்டார். அவர்களும் பிரியம் இல்லாமலே நகர்ந்தனர்.

முதலாளி அறையில் நல்ல சாப்பாடே காத்துக்கொண்டிருந்தது. முதலாளியின் இரு பெண்களும் அங்கே இருந்தனர். மானேஜரின் மனைவியும் அழைக்கப்பட்டு வந்திருந்தாள்.

அன்று இரவு பாக்கிப் படத்தை அர்ச்சுனன் பார்க்க வரவில்லை. நாகரத்தினமும் துரைசாமியும் படம் முடிவதற்குச் சற்று முன்னமே எழுந்துவந்து விட்டார்கள்.

வீட்டுக்கு வந்தவுடன் 'கதை எப்படி இருந்தது?' என்றார் துரைசாமி. ரஜனி சீதையின் அழகை வருணித்தாள். அமுதலிங்கம் ஹனுமானின் வீரத்தைப் பற்றிப் பேசி மகிழ்ந்து போனான். நாகரெத்தினம் கணவனை ஒரேயடியாகப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

"நீ ஒன்றும் சொல்லவில்லையே!"

"நான் என்ன சொல்கிறது. எனக்கு மண்டோதரியின் நிலைதான் வருத்தத்தை உண்டாக்கி விடுகிறது."

துரைசாமி, அசடே! என்று சொல்லி அவள் தலையைத் தடவிக் கொடுத்தார்.

குழந்தைகளை அழைத்துக்கொண்டு கீழே இறங்கின தாய் அவர்களைத் தூங்கவிட்டு மேலே ஏறிவந்தாள்.

பாலைக் கையில் வாங்கிக்கொண்டே துரைசாமி அவளைப் பார்த்தார். ஏற்கனவே நெகிழ்ந்திருந்தாள் அவள். இந்தப் பார்வையில் கரைந்து போனாள் அவள்.

"ரத்தினம்! உன் நெற்றியில் இருக்கிற குங்குமப்பொட்டு இன்று ஏனோ அதிக ஒளி வீசுகிறாப்போல் தோன்றுகிறது" என்றார்.

ரத்தினம் விழித்துக் கொண்டாள்.

"பாலைச் சாப்பிட்டு விட்டுத் தூங்குங்கள். உடம்புக்கு ஆகாது" என்றாள் அவள்.

"எங்கே படுக்கை?" என்றார் துரைசாமி. அவர் குரல் நனைந்து வழுக்கிக் கொண்டிருந்தது.

"அன்பே! இன்று எனக்குக் கிடைத்த ஆன்மீக ஆனந்தம் எல்லையற்றது. அதை நான் கெடுக்க விரும்பவில்லை!" என்றவள் பால் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு விடுவிடு என்று அறையைவிட்டு வெளியேறிவிட்டாள்."

ஒரு கணம் துரைசாமி தன்னைத்தானே நொந்துகொண்டார். "ஆம்! நான் உன்னிடம் எதையும் கேட்க உரிமையற்றுப் போய்விட்டேன்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

ஆனால் படிகளில் அவள் இறங்குகிற சத்தம் அவர் ஆண்மையை, அவர் உரிமையைக் காலால் உதைத்து நசுக்க முயல்வதுபோல் தோன்றிற்று. ஆத்திரம் வந்தது.

ஊம்! என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

காலடிச் சத்தம் தேய்ந்து குறைந்து போயிற்று. கீழே கதவுகள் அடைபட்டுத் தாளிடப்படும் சத்தம் கேட்டது.

அவள் படுத்துக்கொண்டிருப்பாள்.

அவர் படுக்கையின் மேலேயே உட்கார்ந்திருந்தார். தூக்கமும் கோபமும் சண்டைக்கு முஸ்தீப்பு செய்தன.

ஆறு வருஷங்களாக அவள் இவ்விதம் நடந்துகொள்கிறார். அவர் அவளைத் தொடுவது பாவம் என்றே நினைக்கிறாளா?" ஆனால், அவள் மற்ற ஒரு அன்புப் பணியிலும் குறைபாடு வைப்பதில்லையே!

14 எழுத்தைச் சுற்றி எழுந்த ஆசை

மறுநாள் இரவு ஒன்பதரை மணிக்கு ஒரு 'கப் காப்பி' போட்டுக்கொண்டு வா! என்று உத்தர விட்டார் துரைசாமி. நாகரத்தினம் ஒருமுறை நிமிர்ந்து பார்த்தாள். அவர் கையில் வைத்திருந்த புத்தகத்தை மேஜைமீது வைத்தார். மேஜை மேல் போட்டிருந்த அவர் கால்கள் நிலைக்கு வந்தன. அவரும் அவளைப் பார்த்தார். அவள் கண்களில் கண்ட கேள்விக் குறியை விரட்ட இவர், ஏன்? என்ற கேள்வியையே கேட்டார்.

'ஒன்றுமில்லை' என்று சொன்ன நாகரத்தினம் கீழே சென்று காப்பியைத் தயார் செய்யலாம் என்று திரும்பினாள். அவர் அதற்குள், 'ரத்தினம் இங்கே வாயேன்!' என்று அழைத்தார். அவள் அருகில் வந்தாள். 'என்ன, சீக்கிரம் சொல்லுங்கள், நேரமாகிறது. காப்பி போட்டு அனுப்பிவிட்டுத் தூங்கச் செல்ல வேண்டும்!'

'இல்லை ரத்தினம், நான் ஒரு புத்தகம் வாசிக்கிறேன். அது மிகவும் நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது!'

'நாவலா?'

'ஆம். ஒரு பிரெஞ்சு நாவலின் மொழி பெயர்ப்பு. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும் மிகவும் நன்றாகச் செய்திருக்கிறார்!'

'அப்படியா?'

'ஆமாம், ரத்தினம்! கதை என்ன என்று கேட்க மாட்டேன் என்கிறாயே?'

"ஆமாம். நான் கேட்டு என்ன செய்யப் போகிறேன். எனக்கு என்ன தெரிகிறது? எனக்கு இதெல்லாம் பிடித்தால்தானே?"

"உனக்கு என்னதான் பிடிக்கிறது?"

'எனக்கு வாழ்க்கையின் உண்மை பிடிக்கிறது. உண்மையின் வாழ்க்கை பிடிக்கிறது!'

'அப்படியானால், நாங்கள் எழுதுவதெல்லாம் பொய் என்று சொல்கிறாயா?'

'அதெல்லாம்பற்றி ஏன் கேட்டு வீணாக மனதை அலட்டிக் கொள்கிறீர்கள்? உங்களுக்கு அதிர்ஷ்டம் அவ்வளவுதான் நல்ல ரசிகையாக மனைவி கிடைக்கவில்லை. மனைவியையும் ரசிகையாக்க முடியவில்லை. மற்ற நன்மைகளை நினைத்து மன்னித்து விடுங்கள். மறந்துவிட்டு உங்கள் வேலையைப் பாருங்கள்!'

இப்படிச் சொன்ன அவள் ஒரு சிரிப்புக்குள் வணக்கத்தையும் பார்ஸல் செய்து அவர் கண்ணுக்குள் போட்டுவிட்டுக் கீழே போக ஆரம்பித்து விட்டாள்.

துரைசாமி அவளைப் பின்னாலிருந்தபடி பார்த்தார். நன்றாக எடுத்துத் தூக்கி முடியப்பட்டிருந்த அவள் தலைமயிர் குடும்பப் பெண்ணின் தலையில் அமர்ந்திருக்கிறோம் என்று, கூரையின் தலையில் அமர்ந்து கூவும் கோழியின் தூக்கிய உடல்போல் இருந்தது. முழங்கை மறையாமலும் அதற்காகக் கமுக்கட்டுக்கும் மேலேறித் தோளில் அமராமலும் அழகாக நடுக்கை வரையில் வந்திருந்த அவள் ரவிக்கை, அவள் நடையில் இருந்த பணிவு எல்லாம் அவர் உள்ளத்தை ஒருகணம் என்னவோ செய்தன! என்ன சங்கடம் இது?

காப்பி வந்து சேர்ந்தது. குடித்தார். மீண்டும் புத்தகத்தை எடுத்துப் படித்தார். மிகப் பிரமாதமான காதல் நாவல் அது. அதைப் படித்து முடிக்கும்போது இரவு இரண்டு ஆகிவிட்டது.

அவருக்கு கதைக் களஞ்சியம் ஆசிரியர் கடிதம் ஞாபகம் வந்தது. அவருக்கே நாம் ஒரு நாவல் எழுத வேண்டும் என்ற ஒரு உணர்ச்சித்தூண்டுதலும் உள்ளிருந்து ஏற்பட்டு விட்டது.

இரவு அதற்குப் பிறகு தூக்கம் பிடிக்கவில்லை. கடைசியாக அவர் தன்னையும் மறந்து அசந்து கண்ணை மூடினார். உடனேயே 'சரி! அந்தப் பகுதி என் வாழ்க்கையை எழுதிவிட வேண்டியதுதான், கதையாக!' என்று அவர் தீர்மானம் செய்தார். தீர்மானம் செய்துவிட்ட பிறகு விழிப்புக் கொடுத்ததா? விழித்த பிறகுதான் தீர்மானம் ஏற்பட்டதா? அல்லது இரண்டும் ஏக காலத்தில் ஏற்பட்டனவா? என்று அவருக்கே தெரியவில்லை. விளக்கைப் போட்டார். மணி நாலரை.

அப்படியே எழுந்து சென்று மேஜை விளக்கைப் போட்டுவிட்டு, பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்தார். கதையின் நிகழ்ச்சிகள் சித்திரங்களாகச் சுழன்றன. கதையின் போக்குக்கு ஒரு அமைப்பு, அமைப்புக்கு ஒரு உருவம் எல்லாம் தந்துவிட்டார் மனதுக்குள்ளேயே!

ஆனால் தலைப்பு?

தலைப்பு! தலைப்பு!

நான்கு தலைப்புக்களை எழுதி அடித்தார்.

கடைசியில் "உடைந்த உள்ளத்தை ஒட்டிய மருந்து!" என்று எழுதி அதை நான்குமுறை வாசித்துப் பார்த்தார் "பேஷ்! பிரமாதம்!! இக்காலத்தில் இப்படித்தான் பெயர் கொடுக்கிறார்கள்."

தலைப்புக் கொடுக்கிறார்களா! கெடுக்கிறார்களா! அதையும் அவரே சொல்லிக்கொண்டார்.

தானே சிரித்துக்கொண்டார்.

எழுதத் தொடங்கியவர் நிறுத்தினார்.

இது என்ன, என் எழுத்துத்தானா? இப்படி எழுதினால் கம்பாசிட்டர் வாசிக்க முடியுமா?

ஒரு எழுத்தாவது ஒழுங்காக அமையவில்லை. 'ழ' எல்லாம் 'ம' வுக்குமேல் அமைய மறுக்கிறது! 'கு' எல்லாம் 'டு' வாக நின்று விடுகின்றன. கடைசியில் வருகிற 'ர்' எல்லாம் தலைகீழ் ஆச்சரியக் குறியாக மாறி நிற்கிறது. 'ன' ள இரண்டுக்கும் முயன்றால் கூட மாறுபாடு ஏற்படுகிறதில்லை. 'ளா' 'ரை'யாக அமைகிறது. அது மட்டுமா? வரியே கோணலாக அமைகிறது. ஏன்?

இனி நாம் எழுதவே முடியாதா?

அவர் யோசித்தார். அடிக்கடி காப்பி சாப்பிடும் வழக்கம் நரம்பைத் தளரவைத்து விடுகிறது. போதாததற்கு நேற்று இரவு முழுவதும் தூங்கவேயில்லை. அதனால்தான்!...

அதனால்தானா?

அவர் உள்ளம் துணுக்கென்றது. எழுத்தே தொலைந்துவிட்டால்!

பாடகன் தொண்டை கெட்டுவிட்டால், அரசியல் தலைவன் ஊமையாகிவிட்டால், டிரைவர் கைகள் போய்விட்டால் ஐயோ ஐயோ அவன் வாழ்க்கை பிறகுஎங்கே? என்னவாகும்?

துரைசாமிக்கு திடீரென்று ஸ்ரீமான் ரங்கநாதன் ஞாபகம் வந்தது. ஸ்ரீமான் ரங்கநாதன் துரைசாமிக்கு ஹிந்தி சொல்லிக் கொடுத்த ஆசிரியர். தேசிய நிறுவனம் ஒன்றிலிருந்து வெளியான மொழிபெயர்ப்புப் பிரசுரங்களில் எல்லாம் துரைசாமி அவருடைய பெயரைப் பார்த்திருந்தார். அந்த மொழி பெயர்ப்பில் துரைசாமி தன் ஹிந்தி ஆசிரியருடைய தமிழினிமையைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, விலாசம் தேடிக்கொண்டு துரைசாமி அவரைச் சென்னையில் திருவேட்டீசுரன் பேட்டையில் ஒரு முடுக்குத் தெருவில் சந்தித்தார்.

ஸ்ரீரங்கநாதனும் துரைசாமியைப் பற்றி என்றுமே நல்ல மதிப்புக் கொண்டிருந்தவர். துரைசாமி தபால் நிலயத்தில் வேலையாயிருந்தபோது ஹிந்தி வாசித்தார். பிறகும், அவருடைய கதைகளைப் படித்திருக்கிறார் ரங்கநாதன். இருவரும் மனம்விட்டு அளவளாவிப் பேசிக் கொண்டனர்.

துரைசாமி தன் ஆசிரியரின் எழுத்துத் திறமையைப் பாராட்டி அதிசயித்தார். பிறகு ரங்கநாதன் அவர்கள் உள்ளே சென்று தான் மொழி பெயர்த்த சில புத்தகங்களை எடுத்து

வந்து தன் அன்பளிப்பாக துரைசாமியி டம் நீட்டினார். துரைசாமி அவற்றை மரியாதையுடன் வாங்கிக் கொண்டார். பிறகு அவற்றை அவரிடமே தந்து தங்கள் கை எழுத்தைப் போட்டுக் கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டார்.

ரங்கநாதன் ஒரு அசட்டுச் சிரிப்புடன் 'வேண்டாம் துரைசாமி!' என்ருர். துரைசாமி பிடிவாதம் செய்யவே அவர் மனம் பதறும் ஒரு உண்மையைச் சொன்னுர்.

'துரைசாமி! என்ன சொல்வேன்' என் கை இப்பொழுது எழுதமுடியவில்லை.

துரைசாமிக்கு முன் உள்ள எல்லாம் சுற் றிவந்தது. ரங்கநாதன் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், மலையாளம் ஆகிய நான்கு மொழிக ளிலும் மிகத் தெளிவாய் எழுதுவார். தன் நோட்டில் திருத்தி எழுதியதெல்லாம் துரைசாமிக்கு நன்ருய் ஞாபகம் வந்தது.

"ஏன் கைக்கு என்ன?"

ரங்கநாதன் கையைக் காட்டினுர். ஒரு மாறு தலும் இல்லை. விரல்கள் அப்படியே இருந்தன. ஆனுல் ஏன்?

'ஒன்றுமில்லை. எழுத முடியாது அவ்வளவு தான்!'

துரைசாமிக்கு நம்பவே முடியவில்லை. ஒரு எழுத்தாவது எழுதித் தாருங்கள் என்று கேட்டார்.

"பாருங்களேன், என்று அவர் சொல்லும் போதே தொண்டை அடைத்து வந்தது. கண்களில் நீர் புரண்டு வந்தன.

அவரிடம் துரைசாமி தன் விலை உயர்ந்த பேனுவைக் கொடுத்தார். ஒரு புத்தகத்தில் முதல் பக்கத்தில் அன்பளிப்பு என்று தானே எழுதியும் கொடுத்தார்.

ரங்கநாதன் முயன்ருர். கை நடுங்கிற்றே தவிர பிடி இறுகவில்லை. எழுத்து அமைய வில்லை.

'பிறகு எப்படி எழுதுகிறீர்கள், இவ்வ ளவு?' எல்லாம் என் மகள் தான் எழுதுகி ருள். உங்களுக்கு மங்களத்தைத் தெரியு மோல்லியோ.

துரைசாமி அதை நினைத்தார். அப்படி எனக்கும் ஆகிவிடுமோ!

அவர் உடல் பதறிற்று. உள்ளத்தில் காவே ரிப் புது வெள்ளம் போல் கதை கரையை உடைத்து எழுகிறது. அதை எழுத்துக்க ளாக மாற்றவேண்டும். எவ்வளவு பக்கங்கள் ஓடியாக வேண்டும் அது! வந்து விடுமா ஆபத்து?

அவர் பேனுவை மூடிவைத்தார். மனதைத் திடம் செய்து கொண்டார். தூங்கி எழுந் தால் எல்லாம் சரியாகிவிடும்! அவர் சென்று படுக்கையில் படுத்தார்.

ஒரு எண்ணம் தோன்றிற்று. தொடர்ந்து கோபமும் வந்தது. நாகரத்தினம் உதவி செய்யக் கூடாதோ?

சமையல் செய்து போடுவதுதான் முக்கி யம் என்று நினைக்கிருள்! வீட்டில் இருப்பதே எனக்குக் கொடுக்கும் பெரிய உதவி என்று நினைக்கிருள். சாப்பாடு என்ன, ஹோட்டலில் இருந்து வரவழைத்துக் கொள்ளுகிரும். யார் கேட்கிருர்கள் இவள் சமையலை?

அவர் ஒரு முறை அலகாபாத் சென்றிருந் தார். அங்கே ஒரு எழுத்தாளர் வீட்டில் தங்கி யிருந்தார். அந்த எழுத்தாளர் மனைவி தன் கணவனுக்கு எவ்வளவு உபகாரமாயிருந் தார். அந்த எழுத்தாளர் மனைவி தன் கணவன் சொல்லச் சொல்ல எழுதுவார். புத்தகம் அச்சடிக்கத் தாமே அச்சகம் போ வார். கடையையும் தாமே நடத்துவார். ஒரு பெரு மூச்சுடன் அவர் படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டார். மீண்டும் பெருமூச்சு விட்டார்.

ஏனே அவருக்குப் பாமாவின் மணி மணி யான எழுத்துக்கள் நினைவுக்கு வந்தன.

15. உணர்ச்சி மெழுகும் கருத்துக் கரங்களும்

அது மிகப் பெரிய பங்களாவும் இல்லை. மிகச் சிறிய வீடுமில்லை. சுற்றிலும் சிறு தோட்டமுண்டு. கொல்லையில் பத்துப் பனிரெண்டு தென்னைமரங்கள், ஒரு சிறிய வாழைத்தோட்டம். எல்லாம் செழிப்பாக அழகும் உபயோகமும் கொண்டு விளங்கின. இரண்டு பக்கங்களிலும் நாரத்தை எலுமிச் சங் கன்றுகள் நன்கு வளர்ந்து அவற்றி லிருந்து பூவும் பிஞ்சும் பழமுமாகத் தொங் கிக்கொண்டிருந்தன.

வாசலில் இடதுபுற ஓரமாக மோட்டார் நிறுத்துவதற்கு ஒரு இடம் கட்டப்பட்டி ருந்தது. மற்ருெரு புறத்திலும் அதற்கு இணையாக அதே அளவுக்கு ஒரு அறை கட்டப்பட்டிருந்தது. அதன் கதவு பங்களா வின் பக்கமாக இருந்தது. நடுவே உள்ள மதிலின் வாயிலிலிருந்து வீட்டின் வாசற்படி வரை சிமெண்டுத் தளம் போட்ட வழி சென்றிருந்தது. அந்த வழியின் நீளம் சுமார் பத்துப் பன்னிரெண்டு அடிதான் இருக்கும். அதன் இரு மருங்கிலும் அதை ஒட்டினுற் போல விதவிதமான க்ரோட்டன்ஸ் செடிகள் வைக்கப்பட்டிருந்தன. நடுவில் இருபுறமும் நல்ல புதராக வளரக்கூடிய இரண்டு செடிக் குவியல்களின் கிளைகளையும் இலைகளையும் சேர்த்து மயில்கள்போல் வெட்டிவிட்டிருந் தார்கள். வாசலில் கமான் வளைவு அமைத்

சிறிதளவு ஸன்லைட் ஏராளமான துணிகளை வெளுக்கிறது
–காரணம், அதற்கு நுரை அதிகம்
SUNLIGHT SOAP
Rs. 10,000 Reward!
LESS LABOUR GREATER COMFORT
SUNLIGHT SOAP
கோமுவுடைய பொம்மை, கொடுத்து வைத்த பொம்மை! வெகு பளிச்சென்று வெள்ளை வெள்ளையான ஆடைகளாக அதற்கு உடுத்தி அழகு பார்ப்பதில் கோமுவுக்கு ஆசை. அந்த ஆவலில் தன்னுடையது மட்டுமின்றி தன் அக்கா, அம்மா முதலியோரின் ஆடைகளைக்கூட போட்டுப் பார்க்கத் தயங்கமாட்டாள் அவள்.
பாருங்கள்—ஆடைகளும், விரிப்புகளும், துண்டுகளுமாக எத்தனையெத்தனை துணிகள்! ஆயினும் இவ்வளவையும் சலவை செய்து முடித்தது மிகச் சிறிதளவு ஸன்லைட்தான். செழிப்பான ஸன்லைட் நுரை அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அறவே அகற்றிவிடுகிறது. உங்கள் துணிகளுக்கும் உரிய சோப் ஸன்லைட்தான்!
பளிச்சென்றும், வெண்மையாகவும் சலவை செய்வது ஸன்லைட் சோப்
S/P. 2-X52 TM
இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

திருந்தார்கள். அதன்மேல் நல்ல சிவப்பாகப் பூக்கக்கூடிய ஒரு கொடி வளர்ந்து வளைத்துக் கொண்டிருந்தது. வாயிற்படியில் ஏறிய வுடன் திறந்த ஹாலில் இரு மருங்கிலும் குடைந்த தெங்கின் அடி மரங்கள் கட்டித் தொங்கவிட்டு அவற்றில் ஏதோ செடிகள் வளர்ந்து கொண்டிருந்தன ஆகவே அந்தப் பங்களா வெளியேயும் பசுமை சுற்ற உள்ளேயும் பசுமை மிளிர மிகவும் அழகாக இருந்தது. நல்ல பண்பாடு, கலை உள்ளம், அழகு புரிந்துகொள்ளும் மதியாற்றல் கொண்ட ஆரோ இதற்கெல்லாம் தூண்டுகோலாக இருக்கவேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. கலைவீரர்களின் மெல்லிய பரிசம் எல்லாவற்றிலும் பரிமளித்துக் கொண்டிருந்தது. செல்வத்தின் செருக்கும் கலையின் மெருகும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்துச் சேர்ந்து வாழ்ந்த இல்லம் அது.

சமையலறையும் சரி, பூசை அறையும் சரி எங்கும் அதேதான். பூசை அறைக் குத்துவிளக்கு முதல் ஸ்வாமிகளின் படங்கள் வைத்திருந்த 'திருச்சிறுமரக்கோயில்' உள்பட எல்லாம் மனதைக்கவரும் ஒரு புனிதக்கவர்ச்சி கொண்டதாக இருந்தன. அந்த வீட்டின் உரிமைக்காரர்தான் சொக்கலிங்கம். அவர் மகள்தான் பாமா.

ஊருக்கு ஒதுப்புறமாய் ஆனால் ஊருடன் ஒட்டி, செண்டு, ஆயிரத்தைந்நூறு ரூபாய் வீதம் பத்து செண்டு நிலம் வாங்கி அவர் இந்த வீட்டை ஐந்து வருஷங்களுக்கு முந்திதான் கட்டினார். எலக்டிரிக் சாமான் விற்கிறவரானபடியால் அவர் வீட்டில் மின்சாரம் செய்யும் ஜாலவித்தைகளை எல்லாம் காட்டும்படி ஏவி வைத்திருந்தார். தண்ணீர் நிரம்ப, காற்று வீச ஒளி தர எல்லாம் மின்சாரமே செய்தது. கண்ணுக்குத் தெரியாத அந்தச் சக்தி பல உருவங்களின் மூலம் மனிதனுக்கு பல உதவிப்பணிகள் புரிந்து கொண்டிருந்தது.

இரவு ஒன்பதரை மணிக்கு அந்த வீட்டின் வாசலில் ஒரு லாண்டு மாஸ்டர் கறுப்பு நிறமுள்ள புதுக்கார் வந்து நின்றது. அதிலிருந்து சொக்கலிங்கம் டிரைவர் இடத்திலிருந்து இறங்கிக் கதவுகளைத் திறந்து விட்டார். அதற்கு முன்னமே இடது புறத்தைத் திறந்து கொண்டு சொக்கலிங்கத்தின் மகன் மோகன் இறங்கி விட்டான். பின் சீட்டிலிருந்து சொக்கலிங்கத்தின் மனைவி இறங்கினாள். அவளுக்கு முன்பு பாமா இறங்கினாள். அவளுக்குப் பின்னால் பாமாவின் தங்கை மோகனா இறங்கினாள்.

மோகனா கடைக்குட்டி. மோகன் நடுவில் பிறந்தவன். சொக்கலிங்கத்தின் மனைவியைப் பார்த்தவர்கள் இனிமேல் இவளுக்குக் குழந்தை பிறவாது என்று முடிவு செய்வது சுலபம். அவளுக்கென்று அந்த வீட்டில் தனியாகவே நாற்காலிகள் தனி அளவு கொடுத்துச் செய்துவைத்திருந்தார்கள். பாமா, தந்தையைக்கொண்டு பிறந்திருந்தாள். மோகன் தாயாரைக்கொண்டு வளர்ந்துவிடுவானோ என்று எல்லோரும் எண்ணியதுண்டு.

மோட்டார் வந்து நின்றதும் உள்ளே இருந்து டிரைவர் வந்து உள்ளே ஏறிக் கொண்டான். "காரை காலேஜில் விட்டு விட்டு நீ வீட்டுக்குப் போய்விடு. நாளைக் காலை வந்தால் போதும்" என்றார் சொக்கலிங்கம்,

ஹாலுக்கு வந்ததும் எல்லோரும் அவரவர் நாற்காலிகளில் அமர்ந்தனர். தவசிப்பிள்ளை தலையைக் காட்டினான். "என்ன பலகாரம்?" என்று கேட்டார் சொக்கலிங்கம். வியாழக்கிழமையன்று அரிசிச்சோறு தின்கிற வழக்கமில்லை. பர்வதம் என்கிற அவர் மனைவி இன்று கோதுமைத் தோசை செய்யச் சொல்லியிருக்கிறேன். இரண்டு தின்றுவிட்டுக் கொஞ்சம் பழம் எடுத்துக்கொண்டு பாலையும் குடியுங்கள் என்று சொல்லிவிட்டு ஏய் எல்லோருக்கும் தட்டை வை. இதோ வந்து விடுகிறோம்! என்றாள்.

அவர்கள் எல்லோரும் 'லைம்லைட்' என்ற சார்லி சாப்ளின் படம் பார்த்துவிட்டு வந்திருந்தனர். பாமா அந்தப் படத்தின் கதையையே ஞாபகம் வைத்திருந்தாள். அவளுக்கு ஏனோ அந்தப் படம் உள்ளத்தைக் கசக்கிப் புத்தியை இயக்கி மனத்தை அலையச் செய்வதாக அமைந்திருந்தது.

பர்வதம் கேட்டாள். பாமா அந்தப் பெண்ணுக்கு என்ன உடம்பு?

லலிதா பதில் சொல்லவில்லை. லைம் லைட்டின் கதை விசித்திரமான கதை. கைகூடாத காதலின் விளைவால் நாட்டியம் ஆடும் பெண் ஒருத்தியின் கால் ஆட மறுத்து விடுகிறது. காசுக்குக் கோமாளி வேஷம் போடும் ஒரு கிழவன் காலம் மாறிய காரணத்தால் மதிப்பு இழந்து ஏழ்மையில் இருக்கிறான். அவனே தற்கொலை செய்து கொள்ள விரும்பிய அவளைக் காப்பாற்றி மீண்டும் பெருமை பெறும் நாட்டியக்காரியாக்கி விடுகிறான். அந்த இளம் பெண் அந்தக் கிழவனையே அவன் உள்ளத்துக்காகவும், செய்நன்றிக்காகவும் மணந்து கொள்ள விரும்புகிறாள். அவள் யுவதி; அவன் கிழவன். அவள் அவனை மணக்க விரும்புகிறாள். நான் உன்னைக் காதலிக்கிறேன் என்கிறாள். பாமா அதையே நினைத்திருந்தாள், பதில் சொல்லவில்லை.

'ஏய் பாமா! உன்னைத்தான்...!'

அவள் விழித்துக் கொண்டாள்.

"என்ன அம்மா?"

'இல்லேடி அந்தப் பெண்...!'

"அது வா அம்மா!" பாமாவுக்கு சினிமாவில் வேறு ஒரு காட்சி ஞாபகம் வந்தது.

அவளிடம் கிழவன் நீ என்னை மணந்து கொள்ள முடியாது என்கிறான். மீண்டும் அவள்— பார் என்னால் ஆட முடியாது. கால் ஊனமாகிவிட்டது.! என்கிறாள். கோபம் கொண்ட அவன் அவள் கன்னத்தில் ஓங்கி அறைகிறான். அம்மா!"

இதைச் சொல்லும்போது பாமாவின் தொண்டை தழ தழத்து வந்தது. கண்கள் நனைந்தன.

"அதுவா! வல்லி. அதான் பார்த்தேன். ஏண்டா இந்தக் கிழவன் அடிக்கிறான் என்று பார்த்தேன்— என்றார் சொக்கலிங்கம்". அந்தக் கூட்டத்தில் பாமா ஒருத்திதான் ஆங்கிலம் அதிகம் தெரிந்தவள். அவளுக்கே பல இடம் புரியவில்லை.

அதற்குள் பர்வதம்—அதல்லடி—என்று தன் கேள்வியை மீண்டும் ஆரம்பிப்பதற்குள் தவசிப்பிள்ளை கையில் கரண்டியுடன் ஆஜராகி விடவே 'எழுந்திரு வல்லி' என்றார் சொக்கலிங்கம். பர்வதவல்லி என்ற பெயரில் அவர் வல்லி என்ற பகுதியைத்தான் உபயோகிக்கிற வழக்கம். முதலில் அதை செல்லமாக உபயோகித்தார். இப்பொழுது காரணமாகவே வல்லி என்று கூப்பிட்டார்.

லலிதா உணவு உட்கொள்ளும் போதும் அந்த இளம் காதலியையும் கிழக் கோமாளியையும் மறக்கவேயில்லை. அவன் முதலில் அவளுக்கு உயிர் கொடுத்தான். சரி! ஆனால் பிறகு அவள் அவனுக்காக எவ்வளவு தியாகம் செய்யத் தயாராகிறாள்.

அவள் கலையும் மட்டமானதில்லை.

உணவு உட்கொண்ட பிறகு பாமா தன் அறைக்குப் படுக்கச் சென்றாள். நாளை வெள்ளிக்கிழமை என்ற ஞாபகம் அவளுக்கு அர்ஜுனன் நினைவை வரவழைத்தது.

உணர்ச்சித் துடிப்புக்கு எதிரொலிக்கும் தன்மைகொண்ட உள்ளக் கடலில் அன்பு, வெறுப்பு, கோபம் எந்தச் சூறாவளி எழுந்தாலும் அது உடலையே ஆட்டிவிடும். பாமா தூங்க முயன்றாள். தூக்கம் வரவில்லை.

எதிரே மேஜையிலுள்ள விளக்கை ஏற்றிக் கொண்டாள். கையில் கிடைத்த புத்தகத்தை எடுத்து தலையணையின்மேல் பிரித்து வைத்து விட்டு அவள் குப்புறப் படுத்துக்கொண்டாள். அவள் படித்தாள்:

"நளினி தலைமயிர் அவள் முதுகில் புரண்டு வழிந்து படுக்கையில் கீழேயும் தொங்கிற்று. மேலாக்கு கீழே விழுந்து படுக்கையில் அவளுக்கு மறுபுறம் படுத்துக் கொண்டது. முழங்கால்கள் வரை படுக்கையில் பொருத்தி இரண்டு பாதங்களையும் மேலே தூக்கியிருந்தாள். பாவாடை சரிந்து அவள் கணுக்கால்கள் தெரிந்துகொண்டிருந்தன. ஒருபாதத்தை அவள் ஆட்டிஆட்டி சிறு குன்றுபோல் உயர்ந்திருந்த இடுப்பின் கீழ்பாகத்தில் உதைத்துக் கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் அந்தத் தங்கப் பதுமையைத் தலை நரைத்த கிழவன் பார்த்தாலும் கொஞ்சம் தடுமாறாமல் இரான். வயதுக்குக் கொஞ்சம் மீறியது அவள் வளர்ச்சி. மனித உடல் வளர்ச்சி மட்டுமல்ல, பெண்மையின் அடையாள அங்க வளர்ச்சியும் அப்படியேதான். அந்த அழகைக் கண்டு சுவர்கள் கூட வாயடைத்து நின்றன. அமுதம்போல் திரண்டு வரும் அவள் பெண்மை அவளறியாமலே அவள் உள்ளத்தை உசுப்ப ஆரம்பித்திருந்தது."

எடுத்தது தற்காலத் தமிழ் நவீனம். மனிதன் வாழ்க்கையே, வாழ்க்கையின் முழு அமிசமுமே அடிப்படை மிருக உணர்ச்சியான காம உணர்ச்சி கட்டுப்படுத்தி உருத்தரும் ஒரு அமைப்பும் போக்குமே என்று நம்பும் நாவலாசிரியர் எழுதிய புத்தகம் அது: அதன் பெயர் "காமநாதன்" என்பதாம்! அவள் மேலே படித்தாள்: இரவு மணி பதினொன்று. மறுநாள் அவர் வரும் நாள் என்பதால் பொங்க ஆரம்பித்திருந்த உள்ளம்; சினிமாப் பார்த்ததால் சீரழிய ஆரம்பித்திருந்தது. அதிலும் இந்த நாவலையும் எடுத்து வாசித்தவுடன் தன்னை மறந்து அழிய ஆரம்பித்தது. சை! கதையும் அப்படித்தானா?

படித்தாள். ஆணழகன் வர்ணனையுடன் ஆரம்பமாகியிருந்த அந்த நாவல் இளம் உள்ளங்களை உணர்ச்சிப் பகுதியில் ஆழ்த்தி, மூச்சுத் திணறி அலறும் வரையில் அப்படியே அமுக்கிப் பிடிப்பதாய் அமைந்திருந்தது. அவள் வாசித்தாள். உள்ளம் முறுகிற்று, உடல் வியர்த்தது. மனம் களைத்தது. அவள் படிப்பதை நிறுத்தவில்லை. (புத்தகத்தில் எழுதியிருந்ததுதான் அது.)

படித்து முடித்தாள். புரண்டு படுத்தாள். மார்பில் புத்தகத்தை வைத்துக் கொண்டாள். அதை இரு கைகளாலும் கட்டிக் கொண்டாள். ஒரு தனி யின்பம் சுவைத்தாள்.

விட்ட பெரு மூச்சில் மார்பு உயர்ந்தது. புத்தகம் உயர்ந்தது. கட்டிய கைகளும்

உயர்ந்தன. மீண்டும் எல்லாம் வீழ்ந்தன. அவள் எழுந்து பார்த்தாள்.

மணி ஒன்று!

சை! தூங்கவேண்டும். நாளை விடிந்தால் வெள்ளிக்கிழமை. விளக்கை அணைத்தாள். திரும்பி ஒருக்களித்துப் படுத்தாள். தலையணையை அணைத்துக்கொண்டாள். அதன் மேல் காலையும் தூக்கிப்போட்டாள். இறுகக் கைகளாலும் காலாலும் அதைக் கட்டிக் கசக்கினாள். கண்ணாடி கசங்கி மகிழ்ந்தது.

தூக்கம் ....? வரவில்லை. அவளை நெருங்க மறுத்தது. எங்கோ தங்கிவிட்டது. எழுந்து விளக்கைப் போட்டாள்.

மீண்டும் புத்தகத்தை எடுத்தாள். அவளுக்கே சிரிப்புவந்தது. சில மாதங்களுக்குமுன் அவள் இந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்க முயன்றதுண்டு. அன்று அவள் திடீர் என்று பிரித்ததும் இந்த வாக்கியங்கள் கண்ணுக்குப் பட்டன.

உடலுடன் ஒட்டிய உடல் பிரியத்தயாராக இல்லை. கன்னத்தில் ஒட்டிய உதடுகள் கண்ணாடித் தளத்தில் தன் பிரதி பிம்பத்தைப் பார்க்கும் பேற்றை விட்டுவிட வொண்ணாது மயங்கி நின்று விட்டன . . . .

அவள் மேலே படிக்க வில்லை. அன்று எறிந்து விட்டாள். இது இளம் வயது. பெண்கள் படிக்கும் புத்தகமே இல்லை. எழுத்தாளர் நாம் பாவம் செய்கிறோம் என்று தெரிந்துதான் 'மாபாவி' என்று பெயர் புனைந்து கொண்டிருக்கிறார்! என்று சொல்லி எறிந்து விட்டாள் புத்தகத்தை. ஆனால் இன்றோ? அது தேனாகப்பட்டது. இன்ப வெறியூட்டும் குடி பொருளாகப் பட்டது.

தன்னை மறந்தாள் பாமா. புத்தகமும் கீழே விழுந்துவிட்டது. ஆனால்......

மீண்டும் மனக்குரங்கு விழித்துக் கொண்டது. அவளை விரட்டிற்று.

எழுந்தாள் கீழே ஜில் என்று பூமியில் படுத்துக் கொண்டாள்.

அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. ஆத்திரமும் பித்துக் கொண்டு வந்தது. காரணமில்லாமல் அவள் அர்ஜுனனைத் திட்டினாள்!" அவரை, யார் வருவதாக ஒப்புக் கொள்ளச் சொன்னது?"

நாளைக்கு வீணையல்லவா வாசிக்கவேண்டும்?

"பாமா! சமர்த்தல்லவா! தூங்கு. நாளைக்கு அர்ஜுனனிடம் நல்ல பேர்வாங்க வேண்டும்! என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

எழுந்த அவள் வீணையை எடுத்துக் கொண்டாள். படுக்கையறையைத் தாண்டி அப்பாலுள்ள நெடுவறைக்கு வந்தாள். மடியில் வீணையை வைத்துக் கொண்டு அமர்ந்தாள். விரல்கள் கம்பியை ஒரு தட்டும் தட்டிவிட்டன. எழுந்த ஒலி அவளை அதட்டிற்று.

அவள் எழுந்தாள். வீணையைப் பத்திரமாக அதன் இடத்தில் வைத்தாள். ஓடிவந்து கட்டிலில் விழுந்தாள். கட்டில் அவளை ஒரு சத்தம் போட்டுவிட்டு அணைத்துக்கொண்டது. கட்டிலும் அவளும் சற்றுநேரம் அணைந்தபடி ஆடினதுபோல் இருந்தது.

அர்ஜுனன்—துரைசாமி...இரண்டுமே நல்ல பேராக இல்லை. அவர் அப்பாவுக்குத்தான் நல்ல பேராகக் கிடைக்கவில்லை. அவருக்குக் கூடவா நல்ல பெயர் பொறுக்கத் தெரியவில்லை? பேர் எப்படியானால் என்ன? அவர் இன்று தமிழ் பேசும் நல்லுலகம் போற்றிப் பணியும் நாவல் மன்னன்!

அவரெதிரே அவள் பாடப் போகிறாள்!

அவள் உதடுகளில் எழுந்த புன்சிரிப்பு அங்கேயே மயங்கிப் படுக்க ஆரம்பித்தது. அவள் இமைகளையும் தூக்கம் அழுத்திற்று.

எவ்வளவு மணிக்கு அவள் தூங்கினாள் என்று அவளுக்குத் தெரியாது.

மறுநாள் காலையில் செங்கமலம் அவளைக் கல்லூரியில் தேடும்போது அவள் வரவில்லை என்று தெரிந்தது.

செங்கமலத்துக்குத் துணுக்கென்றது.

(தொடரும்)

டெட் ஆடைகளை சுத்தமாகவும் பிரகாசமாகவும் வெளுக்கும் இந்தியாவின் சிறந்த பரிசுத்தக்கரணி. அது சோப்பைவிட வேகமாக வேலை செய்கிறது. அழுக்கை போக்குகிறது, ஏராளமாக நுரை தருகிறது.

டெட் உங்கள் வெள்ளை ஆடைகளை ரம்மியமாக வெளுக்கிறது, உங்கள் கலர் ஆடைகளை பிரகாசிக்கச் செய்கிறது. அது உங்களுடைய விலையுயர்ந்த ஆடைகளை வெளுப்பதற்கு மிகவும் உகந்தது.

டெட் பார்வைக்கு குளுமைதரும் சக்தி யடங்கியுள்ளது அதனால்தான் அது உங்கள் ஆடைகளுக்கு ஓர் அபூர்வமான பிரகாசத்தை தருகிறது.

ஆஹா! எவ்வளவு ரம்மியமான வெளுப்பு!

எல்லாவிதமான ஆடைகளை, ஸில்க், காட்டன், நைலான், ரயான், கம்பளி யாடை முதலியவற்றை குளிர்ந்த ஜலத்தில் கரைக்கப்பட்ட டெட் சுத்தம் செய்கிறது. ஆடைகளையும் காப்பாற்றுகிறது.

டெட்-ஆடைகளை நன்றாகவும் சீக்கிரமா கவும் வெளுக்குகிறது

சந்தோஷமாயிருங்கள், கவலையற்று இருங்கள், கர்வப்படுங்கள்—டெட் உபயோகித்து வெளுப்பதால்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்.

SHILPI 976 TAM

சரித்திரக் கற்பனை

சரித்திரப் புகழ் பெற்றோர் பலர். சிலரால் சரித்திரம் புகழ் பெற்றிருப்பதும் உண்டு. இவர்களில் இரண்டாவது இனத்தைச் சேர்ந்தவள் ஜான்ஸி ராணி லக்ஷ்மி பாய்.

1857-ம் வருடம் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியாவெங்கும் நடைபெற்ற சுதேச மன்னர்களின் சுதந்திரப் புரட்சியில் தன் நாட்டு மக்களின் தேசபக்தியைத் தட்டி யெழுப்பித் தானே படைமுகத்தில் நின்று, "உயிரையும் இழப்போம், ஒருநாளும் பணியோம்" என்று கர்ஜித்து, எதிரிகளும் வியப்புற்று வாய் பிளந்து நிற்கும் வண்ணம் வீர தீரச் செயல்கள் புரிந்த

வீர வனிதை

... அ. சுப்பையா ...

ஜான்ஸி ராணியினால் இந்தியச் சரித்திரம் புகழ்பெற்றது.

லக்ஷ்மிபாய, சரித்திரத்திற்குப் புகழ் தந்தவள் மாத்திரமல்ல; 'இந்தியப் பெண்கள் வீராங்கனைகள்' என்னும் ஒரு புதிய சரித்திரத்தையே சிருஷ்டித்தவள். அவளது வாழ்க்கை உரோமம் சிலிர்க்கும் சம்பவங்கள் பல நிறைந்தது. அவள் ஓர் எரிமலை; அதே சமயத்தில் சந்திரனின் குளிர்க் கிரணங்களும் அவளிடம் குடிகொண்டிருந்தன. பரமவைரிகளாகக் கருதப்பட்டிருந்த ஆங்கிலேயர்களிலேயே ஒரு குடும்பத்தாருடன்

அவள் நேசம்கொண்டிருந்தாள் என்பதே இதற்குச் சான்ருகும்.

ஹென்ஸன் என்பவன் ஒரு பிரிட்டிஷ் அதிகாரி. 1855-ல் அவன் தன் குடும்பத்தோடு இந்தியாவுக்கு வந்து ஜான்ஸி ராணியின் விருந்தாளியாகத் தங்கினன். ராணியின் உயர்ந்த பண்பும், தாராள குணமும் அவர்களை மிகவும் கவர்ந்துவிட்டன. ஹென்ஸனின் மனைவியும், மகள் எஸ்தரும் உண்மையாகவே ஜான்ஸி ராணியின் உறவினர்கள்போல ஆகிவிட்டனர். இன்னும் தெளிவாகச் சொன்னல் திருமதி ஹென்ஸன், லக்ஷ்மிபாயின் உயிர்த் தோழியாகிவிட்டாள் என்றே சொல்லிவிடலாம்.

இந் நிலையில் 1857-ல் சுதந்திரப் புரட்சி எழுந்தது. ஹென்ஸன், துரதிர்ஷ்டவசமாக ஜான்ஸி ராணியை எதிர்க்கும் படையில் சேரவேண்டியிருந்தது.

அதையறிந்த ஹென்ஸனின் மனைவி, "நீங்கள் இந்தியர்களை எதிர்த்துச் சண்டை செய்வதைப்பற்றி நான் ஆட்சேபணை செய்யவில்லை. ஆனல் லக்ஷ்மிபாய்க்கு விரோதமாக எக்காரணங்கொண்டும் நீங்கள் ஆயுதத்தைத் தூக்கக்கூடாது. அவளிடம் ஒரு தெய்வீக சக்தியிருப்பதாக நான் உணருகிறேன். மேலும், லக்ஷ்மிபாய் என்னுடைய சினேகிதை என்பதும் உங்களுக்குத் தெரியும். அவள் நம் மீது வைத்திருக்கும் அன்பும், மதிப்பும் இது வரையில் கொஞ்சமும் குறைவுபடவில்லை. அவள் நமது படையை எதிர்த்துச் சண்டை செய்துகொண்டிருந்தபோதிலும், நம் மகள் எஸ்தரின் பிறந்த தினத்தை மறந்துவிடாமல் ஒரு தங்கச் சங்கிலி பரிசாக அனுப்பியிருக்கிருள்" என்று தன் கணவனிடம் கூறினள்.

இந்த விஷயம் ஹென்ஸனுக்கும் தெரியும். இருந்தாலும் தனது கடமையைப் புறக்கணிக்க அவன் விரும்பவில்லை. லக்ஷ்மிபாயை நேருக்கு நேர் எதிர்த்துச் சண்டை செய்யும் சந்தர்ப்பமும் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. யுத்த களத்தில் ராணி லக்ஷ்மிபாய், காளி அவதாரமெடுத்தவள் போலக் காரியங்கள் புரிவதை அவன் கண்டான். அவள் கைப்பிடித்திருந்த வாள், வெள்ளைச் சிப்பாய்களின் தலைகள் தரையில் உருண்டோடும்படிச் செய்ததையும் அவன் பார்த்தான். நிஜமாகவே லக்ஷ்மிபாயின் வீரத்தையும், அபாரத் திறமையையும் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான்.

லக்ஷ்மிபாயும் ஹென்ஸன் போர்க்களத்தில் நிற்பதைப் பார்த்துவிட்டாள். உடனே அவள், "ஹென்ஸன்! நீ என்னை எதிர்க்க வேண்டாம், போய்விடு!" என்று கத்தினள்.

ஹென்ஸன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவள் சினேகிதைதான் என்ருலும் இப்பொழுது அவனுடைய எதிரி. எதிரிக்கு இடங்கொடுப்பதா என்ற உணர்ச்சி அவனை உந்தித்தள்ளிற்று. முன்னேறித் தாக்கினன் அவன். அவனே துணிந்துவிட்டான். அவள் பின்வாங்க முடியுமா? இருவரது வாள்களும் மோதின. 'டிங்-டாங்' என்ற சத்தத்தோடு வாள்களிலிருந்து தீப்பொறிகளும் பறந்தன. இருவருக்கும் பயங்கரமான வாள்போர் நடந்தது.

கண்மூடித் திறப்பதற்குள் ஜான்ஸிராணியின் ஒரே வீச்சில் ஹென்ஸனின் கையிலிருந்த வாள் ஆகாயத்தில் பறந்து விட்டது. ஹென்ஸன் நடுங்கினன். அடுத்த விநாடியில் அவனது சரீரம் ராணியின் வாளால் சின்னபின்னமாக்கப்படும் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனல்......

லக்ஷ்மிபாய், ஹென்ஸனைக் கொல்லவில்லை. "ஹென்ஸன்! கையில் ஆயுதமின்றி என் எதிரில் நிற்கும் உன்னைக் கொல்வது என் வீரத்திற்கு அழகல்ல; போ! இப்பொழுதாவது இங்கிருந்து ஓடிவிடு" என்ருள் தனது வழக்கமான அன்புக்குரலில்.

உடம்பில் ஒருவித ரத்தக் காயமுமில்லாமல் ஹென்ஸன் தப்பித்துக்கொண்டான். வீரமங்கை லக்ஷ்மிபாய் பன்மடங்கு ஆவேசத்தோடு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தாள்.

யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டது. பெரும்பாலான பிரிட்டிஷ் சிப்பாய்கள் பிணமாகிவிட்டனர். ராணியின் வாள் கொஞ்சமும் தளராமல் எதிரிகளை நிர்மூலமாக்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு வாள் லக்ஷ்மிபாயின் பின்பக்கமிருந்து பறந்து வந்தது. தன் குதிரையை 'சடக்'கென்று திருப்பினள் ராணி. பறந்துவந்த வாளைத் தடுத்தாள். ஏறிட்டு நோக்கினள். அவளது கண்கள் அக்னி ஜ்வாலையாக மாறின.

"ஹென்ஸன்! உனக்கு நான் உயிர்ப்பிச்சையளித்ததற்கு நீ செய்யும் பிரதியுபகாரமா இது? பின்புறமிருந்து கோழைத்தனமாக என்மீது வாளை வீசுகிருயே, உனக்கு வெட்கமாக இல்லை?" என்று கர்ஜித்தவண்ணம் தனது வாளை உயரே தூக்கினள். "இதோ பார்! உன் மனைவி விதவையாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் உனக்கு உயிர்ப்பிச்சை தந்தேன். ஆனல் நீ பின்பக்கமிருந்து என்னைக் கொல்ல நினைத்தாய். அதற்குரிய தண்டனையை நீ அனுபவித்துத்தான் ஆக வேண்டும்" என்ருள்.

இவ்வாறு லக்ஷ்மிபாய் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே ஹென்ஸன் தனது வாளை

அவள் மார்புக்குக் குறி வைத்தான். ஆனால் அந்த வாள் அவன் கைகளிலிருந்து கிளம்பு முன் ராணியின் வாள் அவனது தோளைத் துண்டித்துவிட்டது!

"போ! இந்தத் தண்டனை உனக்குப் போதும். இனிமேலாவது பிழைத்துப்போய் விடு" என்றாள் லக்ஷ்மிபாய். அவள் நினைத்திருந்தால் அந்த இடத்திலேயே ஹென்ஸனைப் பிணமாக்கியிருக்க முடியும். ஆனால் தனது அன்பிற்குப் பாத்திரமான திருமதி ஹென்ஸன் விதவையாகிவிடக்கூடாது என்ற தயாள குணந்தான் அந்த நேரத்திலும் அவளைத் தடுத்தது.

கையிழந்த ஹென்ஸன் சிகிச்சை பெற்று சில நாட்கள் கழிந்த பின்பு தன் வீட்டிற்குச் சென்றான். யுத்தகளத்தில் நடந்த சம்பவங்கள் முழுவதையும் தன் மனைவியிடம் கூறினான்.

திருமதி ஹென்ஸன் கணவனைத்திட்டினாள். "நீங்கள் செய்தது பெரிய தவறு. ஜான்ஸி ராணி கடைசி நிமிஷத்திலுங்கூட நம் விஷயத்தில் மிகவும் கண்ணியமாக நடந்திருக்கிறாள். நீங்கள் அவளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டீர்கள். ஆங்கிலேயர்கள் நம்பிக்கைத் துரோகிகள் என்று இந்தியர்கள் எண்ணும்படி செய்துவிட்டீர்கள்" என்று கண்டித்தாள்.

ஹென்ஸனும் தனது செய்கையை நினைத்து வருந்தினான். ஆனால் பயன்?

ஹென்ஸன் சில வருடங்களில் இறந்துவிட்டான். அதன் பின்பும் திருமதி ஹென்ஸனும், எஸ்தரும் இந்தியாவில்தான் வசித்தனர். காலம் உருண்டோடிற்று. எஸ்தருக்கு இருபது வயது ஆயிற்று. கண்டோர் மயங்கும் கன்னியாகத் திகழ்ந்தாள் அவள். எப்படியோ ஒரு ராஜபுத்திர வீரனின் மீது அவள் காதல் கொண்டாள்.

எஸ்தரின் அன்னையும் தன் மகள் ஓர் இந்தியனைக் காதலிப்பதைத் தடை செய்யவில்லை. அதிலும் ராஜபுத்திரர்களின் மீது அவள் தனி மதிப்பு வைத்திருந்தாள். எனவே எஸ்தர் ஒரு ராஜபுத்திரனை மணந்து கொள்ளப் போவதை ஒரு பெருமையாகவும் அவள் கருதினாள்.

இந்தக் காதல் விஷயம் இந்தியாவில் வசித்த ஆங்கிலேய அதிகாரிகளுக்குத் தெரிந்தது. உடனே அவர்கள், தாயையும் மகளையும் இங்கிலாந்திற்குத் திரும்பிப் போய் விடும்படி நிர்ப்பந்தம் செய்து, அனுப்பி வைத்தனர்.

1867-ல் எஸ்தரும் அவளது அன்னையும் இங்கிலாந்துக்குப் புறப்பட்டனர். போகும் வழியில் பிரான்ஸ் தேசத்தில் அவர்கள் இறங்கினர். அப்பொழுது பாரிஸ் நகரத்தில் ஒரு பெரிய பொருட்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அந்தப் பொருட்காட்சிக்கு ஓவியங்கள் வந்திருந்தன.

திருமதி ஹென்ஸனும் எஸ்தரும் பாரிஸ் நகரத்தின் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தனர். திடீரென்று திருமதி ஹென்ஸன் நோய்வாய்ப்பட்டாள். எஸ்தர் உடனே ஒரு டாக்டரை அழைத்துவந்து அன்னைக்குச் சிகிச்சை செய்யச் சொன்னாள்.

டாக்டர் பரிசோதனை செய்தார். எஸ்தரைத் தனியாக அழைத்துச் சென்று, "உன் தாய்க்குப் பயங்கரமான நோய் பீடித்திருக்கிறது. மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கிறாள். நான் ஒரு கடிதம் தருகிறேன். அதை எடுத்துச் சென்று என் மனைவியிடம்கொடு. அவள் மருந்து தயாரித்துத் தருவாள்" என்று மிகவும் அன்போடு கூறினார்.

டாக்டரே ஒரு டாக்ஸியை வரவழைத்தார். டாக்ஸி டிரைவரிடம் ஏதோ சொன்னார். பிரெஞ்சு பாஷை தெரியாத எஸ்தருக்கு டாக்டர் என்ன சொன்னார் என்று புரியவில்லை. எப்படியும் தாயின் நோய் குணமடையவேண்டும் என்பதுதானே அவள் விருப்பம்? டாக்ஸியில் ஏறிக்கொண்டாள். டாக்ஸி நகர்ந்தது.

டாக்டரின் வீடு வெகுதூரத்தில் இருந்தது. அப்படியிருந்தும் டிரைவர் ஏனோ காரை மெதுவாகவே ஓட்டினான். வீட்டையடைந்ததும் எஸ்தர், கடிதத்தை டாக்டரின் மனைவியிடம் கொடுத்தாள். அந்தக் கடிதத்தைப் படித்த டாக்டரின் மனைவி, "நீ இங்கேயே இரு; நான் மருந்தைக் கலந்து கொண்டு வருகிறேன்" என்று சொல்லி எஸ்தரை வராந்தாவில் உட்காரவைத்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஒவ்வொரு நிமிஷமும் எஸ்தருக்கு ஒரு யுகமாகத் தோன்றிற்று. அரைமணி நேரம் ஆகியும் டாக்டரின் மனைவி மருந்தைக் கொண்டுவரவில்லை. எஸ்தரின் மனம் துடியாய்த் துடித்தது. ஆபத்திலிருக்கும் அன்னையைப் பிரிந்து அவளால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவ்வளவு நேரமாகியும் டாக்டரின் மனைவி வராததால், மருந்தில்லாமலே திரும்பிப்போய்விடலாமா என்று கூட அவள் எண்ணினாள். எழுந்து வாசலுக்கும் வந்துவிட்டாள். அந்த நேரத்தில் டாக்டரின் மனைவி அவளைக்கூப்பிட்டு மருந்தைக்கொடுத்தாள். டாக்ஸி டிரைவரிடம் அவளும் ஏதோ சொல்லியனுப்பினாள்.

டாக்ஸி கிளம்பிற்று. வந்த வழியாகப் போகாமல் வேறு புதிய வழியில் காரைச் செலுத்தினான் டிரைவர். அவன் ஏதேனும் விஷமம் செய்யப்போகிறானே என்று எஸ்தர்

பயந்தாள். உடனே காரை நிறுத்தச் சொல்லி, காரிலிருந்து கீழே குதித்துவிட்டாள். பாரிஸ் நகரத்திற்கு அவள் புதியவளாதலால், வழி தெரியாமல் எங்கெல்லாமோ சுற்றி அலைந்து, கடைசியாக ஒரு போலீஸ்காரரின் உதவியோடு ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தாள்.

பொருட் காட்சியின் காரணமாக எல்லா ஹோட்டல்களிலும் ஜனங்கள் அளவுக்கும் அதிகமாக நிரம்பியிருந்தனர். எஸ்தர், ஜனங்களை இடித்துத் தள்ளிக்கொண்டு தனது அன்னை கிடந்த அறைக்கு ஓடினாள். ஆ! இதென்ன ஆச்சரியம்! அந்த அறையில் அவளது அன்னையைக் காணவில்லை, ஒரு புதிய வாலிபன் படுத்திருந்தான். அறைச் சுவர்களின் நிறம் முன்போல இல்லாமல் சிறிது மாறியிருந்தது.

எஸ்தரின் மனம் குழம்பிற்று. ஓடிச் சென்று ஹோட்டல் நிர்வாகியிடம் தன் அன்னையைப்பற்றி அவள் விசாரித்தாள்.

நிர்வாகி வியப்படைந்து, "என்ன! திருமதி ஹென்ஸனா? அந்தப் பெயருடையவர்கள் யாருமே இங்கு வரவில்லையே!" என்றார்.

எஸ்தர் ஆத்திரமடைந்தாள். "என்ன ஸார் இது? நான்கு மணி நேரங்களுக்கு முன்பு தானே நானும் என் தாயும் இங்கு வந்தோம். எங்களுக்கு ஓர் அறையும் கொடுத்தீர்கள். நான் டாக்டர் வீட்டிற்குச் சென்று மருந்து வாங்கி வருவதற்குள் அவள் எங்கு மறைந்து விட்டாள்?" என்று வினவினாள்.

ஹோட்டல் நிர்வாகி எகத்தாளமாகச் சிரித்தார். அவளைப் பார்த்ததாகவே அவர் ஒப்புக்கொள்ளவில்லை.

எஸ்தருக்குக் கண்ணீர் ததும்பிற்று. ஹோட்டலின் சகல இடங்களிலும் அவள் தேடிப் பார்த்தாள், தாயைக் காணவில்லை. உடனே டாக்டரிடம் சென்று "இதோ பாருங்கள் டாக்டர்! உங்கள் மனைவியிடமிருந்து நான் வாங்கிவந்த மருந்துப்புட்டி. நீங்கள் தானே என் தாயைப் பரிசோதித்து மருந்து எழுதித் தந்தீர்கள்?" என்று கண்ணீர் வடித்துக்கொண்டே பேசினாள்.

டாக்டர், "உன்னை நான் பார்த்ததுமில்லை, உன் தாய்க்கு நான் மருந்து எழுதிக் கொடுக்கவுமில்லை. உனக்கு ஏதோ மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று நான் சந்தேகிக்கிறேன்" என்று அழுத்தமாகச் சொன்னார்.

டாக்டர் கூறிய வார்த்தை எஸ்தரின் இதயத்தில் அணுகுண்டு போல் பாய்ந்தது. அவள் வாய்விட்டு அலறினாள். பின்பு அங்கு நின்றிருந்த ஓர் ஆங்கிலேயனிடம் விவரங்கள் முழுவதையும் தெரிவித்தாள். அவனும் எஸ்தரின் பரிதாப நிலைக்கு மனமிரங்கி, ஹோட்டல் நிர்வாகியிடம் சென்று விசாரித்தான்.

"இவளோ அல்லது இவளுடைய தாயோ என் ஹோட்டலுக்கு வரவேயில்லை. அநேகமாக இந்தப் பெண்ணுக்குப் புத்தி சுவாதீனமில்லை என்று நான் நினைக்கிறேன்" என்று நிர்வாகி பதிலளித்தார்.

அதனால் எஸ்தருக்கே தனது நிலையைப் பற்றி சந்தேகம் தோன்றிவிட்டது. உண்மையாகவே அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன? இறுதியில் பிரான்ஸிலிருந்த பிரிட்டிஷ் தூதர், மனமுடைந்து போன எஸ்தரை லண்டனுக்கு அனுப்பி வைத்தார்.

எஸ்தர், தனது தாய் காணாமற்போனது குறித்து லண்டன் போலீஸாருக்கு ஒரு மனுச் செய்தாள். அதன் மீது பாரிஸ் நகரம் முழுவதும் போலீஸார் தேடிப் பார்த்தனர்; பலன் இல்லை.

நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின் ஒரு நாள் "டெய்லி மெயில்" என்ற லண்டன் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று:

"திருமதி ஹென்ஸன் என்னும் ஒரு பிரிட்டிஷ் மாது, நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு பாரிஸ் ஹோட்டலிலிருந்து மாயமாக மறைந்தாள். அவளைப்பற்றிய மர்மங்கள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரகசியங்கள் முழுவதையும் எமது அடுத்த இதழில் விவரமாக வெளியிடப்படும்" என்று அந்தச் செய்தி கூறிற்று.

இதைப்படித்த சுமார் அறுபத்தைந்து வயதுள்ள ஒரு கிழவி, உடனே அந்தப் பத்திரிகையின் ஆசிரியரைச் சந்தித்தாள். "ஸார்! திருமதி ஹென்ஸன் மறைந்த விவரங்களை அடுத்த இதழில் நீங்கள் வெளியிடப்போவதாக நான் அறிந்தேன். தயவு செய்து அந்த விவரங்களை இப்பொழுதே என்னிடம் சொல்லமாட்டீர்களா?" என்று ஆவலோடு வினவினாள்.

"அம்மா! ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள்? அடுத்த இதழ் வரும் வரையில் கொஞ்சம் பொறுமையாக இருங்கள்" என்று பத்திரிகாசிரியர் நிதானமாகப் பதிலளித்தார்.

"முடியாது! இந்தச் செய்தியைப் பார்த்ததிலிருந்து என் மனம் என்னபாடு படுகிறது தெரியுமா? நான்தான் திருமதி ஹென்ஸனின் மகள். என் பெயர் எஸ்தர். நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு நானும் என்தாயும் பாரிஸ் ஹோட்டலில் தங்கியிருந்த பொழுதுதான் என் தாய் மாயமாக மறைந்துவிட்டாள்." உணர்ச்சி ததும்பக்கூறினாள் அவள்.

ஆச்சரியமுற்ற ஆசிரியர் சொன்னார்! "அம்மா! உங்கள் நிலைமையை நான் உணருகிறேன். ஆனால் உங்கள் ஆசையை நிறைவேற்ற முடியாத நிலையில் நான் இருக்கிறேன். அந்த விவரங்கள் முழுவதும் எங்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை. பாரிஸ் நகரத்திலிருக்கும் எங்கள் விசேஷ நிருபர்தான் அந்த விவரங்களை அனுப்புவதாக எங்களுக்கு எழுதியிருக்கிறார். இப்பொழுது அவர் அனுப்பியிருக்கும் செய்தி அவ்வளவுதான்."

நாற்பத்தைந்து வருடங்கள் வரையில் தாயை மறந்துவிட்டிருந்த எஸ்தரால் இன்னும் சில நாட்கள் பொறுத்திருக்க முடியவில்லை. ஆசிரியரை மிகவும் வற்புறுத்தி, பாரிஸ் நகரத்திலுள்ள விசேஷ நிருபருக்கு ஒரு கடிதம் வாங்கிக்கொண்டாள். துணைக்கு ஒரு ஸி. ஐ. டி. அதிகாரியையும் தன்னோடு அழைத்துக்கொண்டு பாரிஸ் நகரத்திற்குச் சென்றாள். டெய்லி மெயில் விசேஷ நிருபரைத் தேடினாள். அதிர்ஷ்ட வசமாக, முன்பு திருமதி ஹென்ஸன் மறைந்த அதே ஹோட்டலில் அந்த நிருபரும் தங்கியிருந்தார். அவரைச் சந்தித்தாள் எஸ்தர்.

"திருமதி ஹென்ஸன் எனது தாய். அவள் மறைந்த ரகசியங்களைப் பற்றி என்னிடம் கூறுங்கள்" என்று நிருபரை வேண்டினாள். ஆசிரியரிடமிருந்து வாங்கி வந்திருந்த கடிதத்தையும் காண்பித்தாள்.

நிருபர் சிறிது சிந்தித்தார். பின்பு "உங்கள் தாய்க்கு தன் வீட்டிலிருந்து மருந்து வாங்கி வரும்படி உங்களை டாக்டர் அனுப்பினாரா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றாள் எஸ்தர்.

"ஒரு டாக்ஸியில்தானே சென்றீர்கள்?"

"ஆம்!"

"அந்த டாக்ஸி டிரைவரிடம் டாக்டர் என்ன சொன்னார் என்று உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்குப் பிரஞ்சு பாஷை தெரியாது"

"காரை மிகவும் மெதுவாக ஓட்டிச் செல்லும்படியும் திரும்பி வரும்பொழுது தூரமான பாதை வழியாகச் சுற்றி வளைத்துக்கொண்டு வரும்படியுந்தான் டாக்டர் டிரைவரிடம் கூறினார். அவர் தன் மனைவிக்குத் தந்த கடிதத்திலும், 'மருந்தை உடனே கொடுத்து அனுப்பாதே, கூடுமான வரையில் அதிகக் காலதாமதம் செய்து கொடுக்கவும்' என்று எழுதியிருந்தார்.

தோசை, இட்லியிடம் கூறிற்றும்...



சமையலில் துஷாரை
உபயோகிப்பதனால் உயர்ந்த
வைட்டமின்கள் 'ஏ' மற்றும்
'டி' கிடைக்கிறது.
உங்களது ஆகாரத்தில்
துஷார் அளிக்கும் சிறந்த
வாசனை அனுபவித்துப்
பாருங்கள்.

துஷார்

வைட்டமின் சேர்ந்த வனஸ்பதி

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்., கர்னூல்.

"ஏன்?"

"உன் அன்னைக்குப் 'பிளேக்' நோய் பீடித்திருந்தது. அது பெரிய தொத்து நோய் அல்லவா? அதனால் டாக்டர் மிகவும் பயந்து ஹோட்டல் நிர்வாகியிடம் ரகசியமாகத் தெரிவித்தார். ஹோட்டலில் தங்கியிருக்கும் இதர வாடிக்கைக்காரர்களுக்கு அந்த விஷயம் தெரிந்துவிட்டால் எல்லோரும் அறைகளைக் காலி செய்துவிடுவார்கள். அதனால் தனக்குப் பெரும் நஷ்டம் ஏற்படும். நகரத்திலும் செய்திபரவும். ஜனங்கள் பீதியடைந்து பாரிஸ் நகரத்தைவிட்டே ஓட ஆரம்பித்துவிடுவார்கள். அதன் காரணமாக பொருட்காட்சியும் பாதிக்கப்படும் என்றெல்லாம் ஹோட்டல் நிர்வாகி எண்ணினார். டாக்டரும் அவரும் கலந்து ஆலோசனை செய்து ஒரு திட்டம் வகுத்து நோயாளியை அங்கிருந்து அப்புறப்படுத்தி வேறிடத்திற்குக் கொண்டு சென்றனர். நீங்கள் தங்கியிருந்த அறையையும் சுத்தம் செய்து, புதிய வர்ணமும் பூசி விட்டனர்..."

"ஆம், வாஸ்தவம்! நான் திரும்பிவந்தபொழுது அறைச் சுவர்களின் நிறம் மாறுபட்டிருந்தது. அதுசரி..., என் தாயை எங்கே கொண்டு போனார்கள்?"

"ஹோட்டல் நிர்வாகி, தன் வீட்டிற்குத்தான் கொண்டு சென்றார். தனியாக ஓர் அறையில் உங்கள் தாய் வைக்கப்பட்டிருந்தாள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அன்று மாலையிலேயே அவள் இறந்துவிட்டாள். நிர்வாகி அதிர்ச்சியுற்றார். தமது நண்பராகிய ஒரு போலீஸ் அதிகாரியிடம் உண்மை முழுவதையும் கூறினார். போலீஸ் அதிகாரி "இந்தச் சாவு விஷயம் வெளிப்பட்டால் நீர் சங்கடத்தில் மாட்டிக்கொள்வீர். யாருக்கும் தெரியாமல் பிணத்தை உமது தோட்டத்தில் புதைத்துவிட்டு ஒன்றுமே தெரியாதவர் போல நடந்தால்தான் நீர் தப்ப முடியும். அதனால் உமக்கு ஆபத்து வராமல் நான் கவனித்துக்கொள்கிறேன்" என்று நிர்வாகிக்கு யோசனையும் கூறி, தைரியமும் அளித்தார். அதே பிரகாரம் உங்கள் தாயின் பிணத்தைத் தன் வீட்டுத் தோட்டத்திலேயே நிர்வாகி புதைத்துவிட்டார்."

இந்த விவரத்தைக் கேட்டதும் எஸ்தரும், ஸி. ஐ. டி. அதிகாரியும் ஸ்தம்பித்துப் போய் விட்டனர்.

"இந்த விஷயமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று ஸி. ஐ. டி. அதிகாரி நிருபரைக் கேட்டார்.

நிருபர் சொன்னார்: "அந்த நிர்வாகி இறந்துபோய்விட்டார். இப்பொழுது அவரது மகன் நிர்வாகத்தில் இந்த ஹோட்டல் நடந்துவருகிறது. அவன் எனது நண்பன். சில நாட்களுக்கு முன்பு இந்த ஹோட்டலில் தங்கியிருந்த ஒருவனுக்குப் பிளேக்நோய் பீடித்தது. உடனே அவன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான்; அவன் தங்கியிருந்த அறைக்குச் சுண்ணாம்பும் பூசப்பட்டது. நானும், நிர்வாகியும் அந்த நோயாளியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவன் உங்கள் தாயைப் பற்றிய விஷயத்தை என்னிடம் கூறினான். பத்திரிகைக்கு அது ஓர் நல்ல செய்தியாக இருக்கும் என்று நினைத்து நான் ஓர் அறிவிப்பு அனுப்பினேன்.

"ஹோட்டல் நிர்வாகியை நான் சந்திக்க விரும்புகிறேன்" என்றாள் எஸ்தர்.

நிர்வாகி வந்தார். நிருபர் கூறியவைகள் யாவும் உண்மை என்று அவரும் ஒப்புக்கொண்டார்.

"சாகுந்தருவாயில் என் தாய் ஏதாவது சொன்னாளா?"

"ஆம். அவள் பையில் ஒரு படம் இருந்தது. அதை என் தந்தையிடம் கொடுத்து, 'இந்தப் படத்தை மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளுங்கள். இதை உங்கள் வீட்டிலேயே நீங்கள் வைத்துக்கொண்டால் உங்களுடைய குடும்பம் வீரர்கள் நிறைந்ததாகத் தழைத்தோங்கும்!' என்று கூறினாள். நாங்கள் அந்தப் படத்தை இன்னும் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறோம்."

"நான் அந்தப் படத்தைப் பார்க்கலாமா?" ஆவலோடு கேட்டாள் எஸ்தர்.

நிர்வாகி எல்லோரையும் தன் பங்களாவுக்கு அழைத்துச் சென்று சுவரில் தொங்கிக்கொண்டிருந்த படத்தைக் காண்பித்தார்.

எஸ்தர் ஒரு பெருமூச்சுவிட்டாள். "இப்பொழுதுதான் நான் உங்கள் வார்த்தையைப் பூரணமாக நம்புகிறேன். இந்தப் படந்தான் ஜான்ஸிராணி லக்ஷ்மிபாய்! நாங்கள் இந்தியாவிலிருந்து இந்தப் படத்தைக் கொண்டுவந்தோம்" என்று பெருமையோடு கூறினாள்.

ஹோட்டல் நிர்வாகி அந்தப் படத்தை எஸ்தருக்கே கொடுத்துவிட்டார். எஸ்தர் ஆசையோடு அந்தப்படத்தை வாங்கித் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் உதிர்ந்தது. பின்பு, தனது தாய் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அவள் சென்றாள். அங்கு நின்ற ஒரு மரத்திலிருந்து புஷ்பங்கள் உதிர்ந்தன. அத்துடன் அவளது கண்ணீரும் 'பொலபொல' வென்று வழிந்து பெருகிற்று. ★



விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

சிகரெட் குற்றவாளியா?

நுரையீரலில் தோன்றும் புற்று நோய்க்கும், சிகரெட் புகைக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று பிரிட்டிஷ் மருத்துவர்கள் கூறுகிறார்கள். அமெரிக்காவிலோ, "இது தவறு" என்று நிரூபிக்கும் அறிஞர்கள் இருக்கிறார்கள். இவர்களில் யார் கூறுவது உண்மை என்பதை அறிவது நம்மால் இயன்ற செயல் அல்ல. இப்போது வேறொரு மருத்துவரின் ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. டாக்டர் டீன் என்ற இவர் தென் ஆப்பிரிக்க நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் ஆராய்ச்சி நடத்தினார். உலகிலேயே அதிகமாகச் சிகரெட் பிடிப்பவர்கள் தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள். இவர்கள் அன்றாடம் சராசரி 25 சிகரெட்டுகள் பிடிக்கிறார்கள் என்று கணக்கிடுகிறார்கள். இவ்வளவு அதிகமாகப் புகை பிடிக்கும் மக்களிடையே நுரையீரல் புற்று எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்று அவர் ஆராய்ந்தார். ஆனால், அவர்கண்ட உண்மையோ வேறு. ஐரோப்பிய நாடுகளில் சிகரெட் குடிக்கும் பழக்கம் குறைவு எனினும் அந்நாடுகளில் வாழ்வோரை விடத் தென் ஆப்பிரிக்கரிடையே நுரையீரல் புற்று குறைவு என்று தெரிந்தார். அதனால் அவர் சிகரெட்டுக்கும் இந் நோய்க்கும் தொடர்பு இல்லை என்று கூறுகிறார். அவரது ஆராய்ச்சியில் வேறொரு உண்மையும் தெளிவாயிற்று. டர்பன் நகரில் அதைச் சுற்றியுள்ள நாட்டுப்புற பகுதிகளைப்போல் ஐந்து மடங்கு நுரையீரல் புற்று இருக்கிறது. நகரத்தின் காற்றில் புகையும், தூசும் மிகுதி. நாட்டுப் புறங்களிலோ காற்றுத் தூய்மையாக இருக்கும். காற்றிலுள்ள அசுத்தங்களே புற்று நோயை விளைவிக்கின்றன என்று அவர் கூறுகிறார்.

தூசினால் விளையும் தீங்கு

தூசினால் விளையும் தீமையை வேறோர் அறிஞர் மிக்க விரிவாய் ஆராய்ந்து, தம் முடிவுகளை வெளியிட்டிருக்கிறார். தூசு இல்லாத சூழ்நிலையில் சில எலிகளையும், சாதாரணமாக நகரத்திலே காணப்படும் சூழ் நிலையில் வேறு சில எலிகளையும் இவர் வளர்த்தார். தூய காற்றை உட்கொண்டு வளரும் எலிகளின் உடல் நிலை மற்ற எலிகளைவிடப் பல வகைகளில் சிறந்து விளங்கியது. அவை விரைவில் எடையில் கூடிப் பருத்து வளர்ந்தன. ஊட்டமுள்ள உணவு இல்லாத நிலையிலும்கூட இந்த எலிகளின் வளர்ச்சி குறைந்ததே தவிர அறவே நிற்கவில்லை. ஆனால் சாதாரணச் சூழ்நிலையில் வளர்ந்த எலிகளுக்குச் சத்துக் குறைவான இந்த உணவை அளித்தபோது அவற்றின் வளர்ச்சி அறவே தடைப்பட்டது. அவை விரைவில் மெலிந்துவிட்டன. ஆனால், நல்ல காற்றிலேயே வளர்ந்த எலிகளிடம் ஒரு குறை காணப்பட்டது. நோயை எதிர்க்கும் திறன் அவற்றினிடையே மிகக் குறைவாக இருந்தது. சாதாரணச் சூழ்நிலையில் வளர்ந்த எலிகள் இத்திறமையைப் பெற்றி

ருந்தன. வெளிக் காற்றிலே காணப்படும் நோய்க் கிருமிகளை உட்கொண்டு நமது உடல் அதற்கு எதிரான தற்காப்புப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளு கிறது. ஆனால், காற்றிலே கிருமிகளே இல்லாதவாறு அதை அமிதமாகத் தூய்மை யாக்கி விட்டால் உடலில் இத்தகைய பொருள்கள் உற்பத்தியாக வாய்ப்பு இருப்பதில்லை. அதனால் உடலைக் கிருமி கள் தொற்றினால் தற்காப்பு ஏதும் இன் றிக் கடுமையான நோய் தோன்றுகிறது. "அவன் வாழும் சூழ்நிலையைச் செயற்கை யில் மாற்றியமைத்துக் கொள்ளுவதால் மனிதனுக்கு உடலில் தற்காப்புச் சாதனங் கள் இல்லாதுபோகும். அதனால் அவன் எளிதில் நோய் நொடிகளுக்கு இரையாக நேரும்" என்று மேற்கூறிய அறிஞர் எச்சரிக்கிறார். 'ஏர்-கண்டிஷனிங்' போன்ற விஞ்ஞான சாதனங்களால் இதுபோன்ற தீமைகளும் நேர வழியுண்டு.

ஓட்டலில் பொரித்த அப்பளம்

அப்பளம், வடை முதலிய பலகாரங்களைப் பொறிப்பதற்கு எண்ணெயைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் பழக்கம் நம் மிடையே உள்ளது. பலமுறை பயன் படுத்துவதால் எண்ணெய் ஒருவகைக் காறல் நாற்றம் எடுக்கத் தொடங்கும். இக்காறல் எண்ணெயைப் பற்றிய முக்கிய மான உண்மையொன்றை மேனாட்டு மருத்துவர் ஒருவர் கண்டறிந்திருக்கிறார். இந்த எண்ணெயில் வயிற்றில் புற்று நோயை விளைவிக்கத்தக்க நஞ்சான ரசாய னப் பொருள்கள் இருப்பதாக அவர் சோதனைகளில் தெரிந்தார். வயிற்றுப் புற்று நோய்க்கு இந்த எண்ணெயே முக்கியமான காரணம் என்பதும் இப் பொருள்கள் நோயை விளைவிக்கும் அளவுக்கு அதிகமாக உள்ளனவையா என்ப தும் இனிமேல்தான் தெளிவாகவேண்டும். ஓட்டலில் காறல் எண்ணெய் பயன் படுகிறது. இதனால் பயங்கரமான அபாயம் நேரலாம்

வயிற்றுப் புண்

வயிற்றில் புற்று நோய் தோன்று வதைப் பற்றிப் பார்த்தோம். இனி வயிற் றில் தோன்றும் சாதாரணப் புண்ணைப் பற்றித் தெரிந்துகொள்வோம். "நாகரீக வாழ்வுக்காகத் தற்கால மனிதன் கொடுக் கும் விலை வயிற்றுப் புண்" என்று பொது வாகக் கூறுவதுண்டு. தற்கால வாழ்க் கையின் விளைவாகக் கவலை, மன அதிர்ச்சி, மன நெருக்கடி முதலியவை அதிகமாய் விட்டன. உள்ளம் சீர்கெடுவதால் உட லுக்குள் வயிற்றில் புண் தோன்றுகிறது என்பதே தற்கால மருத்துவர்களில் பெரும் பாலோரது கருத்து. ஆனால் சிகரெட் டுக்கும், நுரையீரலுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்ற கருத்தைப் போலவே இதிலும் உண்மையில்லை என்று ஆங்கில மருத்துவக் கழகத்தினர் நடத்திய சோதனைகள் சில தெளிவாக்குகின்றன. இச் சோதனைகளின்போது இரைப்பையில் புண் உள்ள 2 00 பேரை ஆராய்ந்தார்கள். இவர்களது உள்ள நிலை, வாழ்க்கை முறை, உணவுப் பழக்கங்கள் ஆகியவற்றை விரி வாய் ஆராய்ந்தார்கள். பலவகைப் பொறுப்புக் கொண்டு, வேலைத்தொல்லை களுக்கிடையே அல்லற்பட்டுக் கிடக்கும் பெரிய அதிகாரிகளைவிட மிகச் சாதாரண வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களிடையே வயிற்றுப் புண் அதிகமாக இருக்கிறது என்று சோதனைகள் காட்டின. வயிற்றுப் புண் கொண்ட நோயாளிகளில் பெரும் பாலோரது உணவுப் பழக்கங்கள் ஒழுங் கற்று இருந்தன. கண்டபடி வேளை தப்பி உணவு அருந்துவதும், சர்க்கரைப்பண்டங் களை அமிதமாக உண்பதும் வயிற்றுப் புண்ணுக்கு முக்கியமான காரணமாக உள்ளன. இனிப்புப் பண்டங்களை வரம்பு மீறி உண்ணும் குழந்தைகளுக்குக் கூட வயிற்றிலே புண் தோன்றக் கூடும். ஒரு முறை உணவு கொண்டபின், வேலை நிமித்தம் பலமணி நேரம் தொடர்ந்து பட்டினி இருப்பதும் வயிற்றுப் புண்ணுக்கு அடிகோலக் கூடும். கிராமங்களைவிடப் பட்டணப் பகுதிகளில் இது அதிகமாக இருக்கக் காரணம் நாகரிக வாழ்க்கையோடு தோன்றும் உள்ளக் கோளாறுகளால் அல்ல. கிராமவாசிகளது உணவுப் பழக்கம் சீராக அமைந்திருப்பதுதான். புகை பிடிப் பதால் வயிற்றுப் புண் தோன்றுகிறது என்பதும் தவறு. வயிற்றுப்புண் தோன்று வதால் உள்ளம் புகை பிடிக்கும் அனுப வத்தை நாடுகிறது என்று கூறவேண்டும். இவையனைத்தும் சோதனை முடிவுகள். குறித்த காலங்களில் சமநிலை உணவு அருந்துவதன் அவசியத்தை இச்சோதனை கள் வலியுறுத்துகின்றன.

வயிற்றுப்புண் தோன்றி விட்டால் அது எளிதில் குணமாவதில்லை. ஆயுள் முழு தும் இதனால் தொல்லைப்படுவோர் உண்டு.

கடிதங்களை துரிதமாக பட்டுவாடா செய்வோம்

விலாசத்தில் தபால்
பிராந்திய நெம்பரை
குறிப்பிடுங்கள்

பெரிய நகரங்கள் பெரும்பாலும், தபால் பட்டுவாடாவிற்கு பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

எல்லா தபால்களையும் ஒரே இடத்தில் விவரமாகப்பிரித்து பாகுபாடு செய்வதற்குப் பதிலாக, பரவலாக அந்தந்த பிராந்தியங்களில் அவ் வேலை செய்யப்படுவதால், தபால் சேவகர் போகவேண்டிய தூரம் குறைகிறது. இப்படி, பிராந்திய முறை தபால் பட்டுவாடா வேலையைத் துரிதப்படுத்துகிறது.

விலாசத்தில் 'பிராந்திய நெம்பர்' குறிப்பிடப்பட்டிருக்கும் தபால்கள் அந்தந்த பிராந்திய தபால் பட்டுவாடா நிலையத்திற்கு நேரிடையாக அனுப்பப்படுகின்றன.

இந்த நெம்பர் குறிப்பிடாவிட்டால், தபால் பாகுபாடு வேகம் குறைந்து, பட்டுவாடாவில் தாமதமும் ஏற்படக்கூடும். தபால் பிராந்தியங்கள் பிரிக்கப்பட்டிருக்கும் நகரத்தில் நீங்கள் வசித்தால், உங்களுக்கு கடிதம் எழுதுபவர்களை, விலாசத்தில் பிராந்திய நெம்பரையும் குறிக்கும்படி சொல்லவும்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி இலாகா DA 591348

கடற்பாசிகள் சிலவற்றிலிருந்து மிக மலிவாகத் தயாரிக்கும் மருந்து ஒன்று இரைப்பையில் தோன்றும் புண்ணுக்கு மிகச் சிறந்தது என்று தெரிகிறது. உணவு செரிப்பதற்காக இரைப்பையில் ஊறும் திரவப் பொருள்களில் 'பெப்ஸீன்' என்ற ரசாயனப் பொருளும் ஒன்று. இது அமிதமாக இரைப்பையில் சுரந்தால் தீமை விளைவித்து இரைப்பையின் உட்புறத்தைப் புண்ணாக்குகிறது. மேற்கூறிய மருந்துப் பொருள் இதன் இயக்கத்தைக் குறைத்துப் புண்களை ஆற்றுகிறது. இம்மருந்து இன்னும் விற்பனைக்கு வரவில்லை.

பாசை உணவு

விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாக மனிதர்கள் பாசையை உண்ணும் காலம் வரக்கூடும் என்பதை இப்பகுதியில் நான் முன்னர்க் குறிப்பிட்டிருக்கிறேன். சில வகைப் பாசைகளில் புரதச்சத்தும், உலோகச் சத்தும் மிகுந்தவை. ஆகையால் மிக எளிதிலும், விரைவிலும் வளரும் இத்தாவரத்தை நாம் உணவாக உட்கொள்ள முடிந்தால் உலகத்தின் உணவுப் பிரச்னை எளிதில் தீர்ந்துவிடும். ஆனால், இதை உட்கொள்வதில் பெரிய தடையாக இருப்பது பாசையின் சுவையும், மணமும். இவற்றை அநேகமாக அறவே நீக்கி இதைச் சுவையும் மணமும் இல்லாமற் செய்யும் முறையொன்றை இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். வலிமை வாய்ந்த ஒளிக்கதிர்களை மிகுதியாகப் பாசையின்மேல் குவித்து, பாசையின்மேல் ஒளி விழுமாறு செய்தால் பாசையில் உள்ள பச்சைப்பொருள் (குளோரோபில்) சிதைந்து போகிறது. பச்சையான பாசை வெளுத்துவிடும். இவ்வெள்ளைப் பொருளுக்குச் சுவையும் மணமும் இல்லை. அதனால் நாம் தேவையான வாசனைப் பொருளையும், சுவைதரும் பொருளையும் அத்துடன் சேர்த்து அதைச் சுவையான பொருளாகத் தயார் செய்து கொள்ளலாம். இம்முறை இன்னும் சோதனை நிலையில் உள்ளது. நடைமுறையில் இது இலாபகரமானதாக இருக்குமா என்று தெரியவில்லை. நடைமுறைக்கேற்ற முறை இது என்று தெரிந்தால் மிக்க மலிவாகப் புரதச் சத்தைப் பெறும் பொருட்டு, சூரிய சக்தியை நிறையப் பெறும் இந்தியாவைப் போன்ற நாடுகள் இம்முறையைக் கையாண்டு பாசை உணவை எளிதில் தயாரிக்கலாம். ஒவ்வொரு வீட்டின் கூரையின் மேலும் நீர்த்தொட்டிகளை அமைத்து அவற்றில் பாசையை வளர்த்து வீட்டினருக்கு வேண்டிய உணவை அவர்களே பயிர் செய்து கொள்ளலாம். பாசை உணவு இதைவிட வேறொரு துறையில் இன்னும் பயன்படும். புவியை விட்டு நீங்கி வானவெளியில் செயற்கைச் சந்திரனிலோ, சந்திரமண்டலத்திலோ வாழச் செல்லும் மனிதர்கள் தமக்குத் தேவையான உணவுச் சத்தை பாசையைப் பயிராக்கிப் பெறலாம். இவ்வாறு பாசையைப் பக்குவப் படுத்துவதால் அதன் ஊட்டச் சத்து குறைவதில்லையாம்.

சேர்க்கைக் காப்பி

மைசூர் மலையிலும், தென் அமெரிக்கக் காடுகளிலும் வளராது ரசாயன அறிஞனின் ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தியான காப்பியைச் சுவைத்து அதன் தரத்தை மதிப்பிடும் வாய்ப்பு காப்பிப் பிரியர்களான நமக்கு மிக விரைவில் ஏற்படலாம் (காப்பிக் கொட்டையைத் தவிர மற்றெல்லாப் பொருள்களிலிருந்தும் காப்பிப் பொடியைத் தயாரித்து விற்கும் நிபுணர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள்! அது வேறு விஷயம். காப்பிக்குச் சிறப்பான சுவையும், மணமும் தரும் ரசாயனப் பொருள்கள் சுமார் ஐம்பது. இவற்றுள் சுமார் முப்பது பொருள்களை விஞ்ஞானிகள் இப்போதே பிரித்தெடுத்து விட்டார்கள். மிக்க விரைவில் எஞ்சிய பொருள்களையும் பிரிக்க முடியும் என்று நம்புகிறார்கள். இது முடிந்தால் இப்பொருள்களைச் சேர்க்கையில் தயாரித்துத் தக்க விகிதத்தில் மரக்கரியைப் போன்ற சுவையற்றதொரு பொருளுடன் சேர்த்து விட்டால் காப்பிப் பொடி தயாராய்விடும். இந்த ரசாயனப் பொருள்கள் அனைத்தையும் மலிவாகத் தயாரிக்க இயலும் என்று நம்புகிறார்கள். ஆகையால் சேர்க்கைக் காப்பித்தூள் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் என்று பல விஞ்ஞானிகள் திடமாக நம்புகிறார்கள். சேர்க்கைக் காப்பி வழக்கத்துக்கு வந்தால் தென் அமெரிக்க நாடுகள், ஆப்பிரிக்கப் பகுதிகள் போன்ற பல இடங்களின் பொருளாதார அமைப்பு அடியோடு சீர்குலைந்துவிடும், ஏனெனில் இவை காப்பி ஏற்றுமதியை முற்றிலும் நாடிப் பிழைப்பவை. ✶

சுசீலாவின் உள்ளம்

எஸ். ரங்கநாயகி...

கதிரவன் உலகத்தை உய்விக்கத் தன் செங்கிரணங்களை தூது அனுப்பி வைத்தான். நக்ஷத்திர மங்கைகள் இரவு முழுவதும் நர்த்தனமாடிக் களைத்து அமைதியாகத் தூங்கச் சென்றுவிட்டனர். மல்லிகையும், முல்லையும் வெண்திரையைத் திறந்து அழகுக் கடையைப் பரப்பிவிட்டன. சம்பங்கிக் கொடி ஈன்ற மலர் கன்னிகைகள் மறைந்திருந்து சுகந்தத்தைப் பரப்ப, தென்றல் அச் சுகந்தத்தைப் பரப்பி அக் கன்னிகைகளை விளம்பரப் படுத்திக்கொண்டிருந்தது. இதழ்க் கடையில் தேனூற்றை வைத்து காதலனை கூவி அழைத்தன ரோஜாப் புஷ்பங்கள்.

சுசீலா, மலர்களை தன் தளிர்க் கரங்களினால் பறித்து வந்து தொடுத்துக் கொண்டிருந்தாள். அத்தை கொல்லைப்புறம் இருந்தாள். அத்திம்பேர் வயல் வெளிக்குப் போய்விட்டார். அத்தை வீட்டு ஸ்வாமி படங்களுக்கு மாமலர்களைச் சூட்டிவிட்டுச் சுசீலா தன் இல்லத்திற்குப் போகவேண்டும்.

"சுசீலா!"

சுசீலா திரும்பி நோக்கினாள். கையில் பல் விளக்கும் பிரஷ்ஷுடன் அத்தை மகன் சந்தானம் நின்றுகொண்டிருந்தான்.

"விடிந்து நாலு நாழிகை ஆகிவிட்டது. இப்பொழுதுதான் எழுந்தீர்களாக்கும்!"

"என் தவறில்லை அம்மணி! விடிந்ததும் இத்தேவியின் முகத்தில்தான் விழிக்கவேண்டும் என்பது என் நியதி. தேவியார் இன்று 'லேட்' என் விழிப்பும் லேட்" என்று கூறிக்கொண்டே சந்தானம் மலர்களை அடுக்கித்தர வந்தான்.

சுசீலா அவனைத் தடுத்து "உஷ், இந்த எச்சில் பிரஷ்ஷோடு மலர்களைத் தொடாதீர்கள். நான் எப்படி வந்திருக்கிறேன் பாருங்கள்" என்றாள்.

"நீயா? சொல்லட்டுமா...சொல்லட்டுமா?"

"என்னமோ பயமுறுத்துகிறீர்களே, பேஷாகச் சொல்லுங்கள்."

"கவிதை பாஷையிலா, காதல் பாஷையிலா?"

"சும்மா மனித பாஷையில் கூறுங்கள், போதும்."

"சொல்லுகிறேன் கேள். மாமதிபோல் முகமும், மானினைப் பழிக்கும் கயல் விழிகளும், செவ்விதழும்..."

"போதும் போதும்! கல்லூரிப் படிப்பில் இதெல்லாம்தான் சொல்லித் தருகிறார்களாக்கும். சொட்டச் சொட்ட ஈரத்தலையை முடிந்திருப்பதும், நெற்றியில் புதிதாக விளங்கும் திலகமும், கொடிப் புடவையும் உங்கள் கண்ணில் நான் ஸ்நானம் செய்துவிட்டு வந்திருப்பவளாகப் படவில்லையாக்கும்...முதலில் பல்லைத் தேய்த்துவிட்டு வாருங்கள்."

சந்தானம் முற்றத்திலேயே நின்று பல் தேய்க்க ஆரம்பித்தான். கண்கள் சுசீலாவின் அழகைப் பருகியபடி இருந்தன.

சுசீலா சந்தானத்தின் மாமன்மகள். சிறு வயதிலேயே தந்தையை இழந்துவிட்டுத் தாயுடன் அக்குக்கிராமத்தில் குடியேறி விட்டாள் சுசீலா. அவள் தாய் மீனாக்ஷி மகளைக் கண்ணெனப் போற்றி வளர்த்தாள். இருவர் வயிற்றையும் கழுவ போதுமான நிலம் இருந்தது. அவர்களுக்கு வேண்டிய உதவியை சந்தானத்தின் தாய் பாக்கியமும், தந்தை சங்கரனும் செய்து வந்தனர்.

சங்கரனின் ஒரே மகன் சந்தானம். சிறு வயதில் சுசீலாவும் சந்தானமும் ஒரே பள்ளியில் படித்து வந்தனர். அக்கிராமப் பள்ளியில் எட்டாவது வகுப்பு வரையிலுமே இருந்ததால் சந்தானம் தன் மேல் படிப்பைத் தொடர சென்னைக்குச் சென்றான். சுசீலா தன் படிப்பை நிறுத்திக் கொண்டாள்.

விடியற்காலை எழுந்து ஸ்நானம் செய்து விட்டு தன் வீட்டிலிருந்து பூக் கூடையைத் தூக்கி ஓடோடி வந்து விடுவாள் சுசீலா. அத்தையின் வீட்டுத் தோட்டத்தில் பூத்திருக்கும் மலர்களைப் பறித்துத் தொடுத்து ஸ்வாமி படத்திற்குப் பாதி மலர்களைச் சூட்டி விட்டு மிகுதியைத் தன் இல்லத்திற்கு எடுத்துச் செல்வாள்.

வசந்தத்தின் நறுமணத்தைப் பரப்பி காலக்கன்னி சுற்றிச் சுற்றி வந்தனள். ஒவ்வொரு விடுமுறைக்கும் சந்தானம் ஓடோடி வந்து விடுவான். புத்தம் புதிய மலராக நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக சுசீலா வளர்ந்து வருவதில் அவன் உள்ளம் வண்டென ஆனந்த ரீங்காரமிட்டது. இந்தப் பாழும் படிப்பு எப்பொழுது தான் முடியுமோ! ஏன்தான் அப்பா இந்தப் படிப்பை விவாகத்திற்குத் தடையாக நிறுத்தினாரோ என்றெல்லாம் அவன் மனம் அலைபாய்ந்தது.

அன்னையின் உபதேசப்படி சுசீலாவும் 'நீ' என்ற ஒருமையை நீக்கி 'நீங்கள்' என்று மரியாதைக்குறி வைத்துப் பேசினாள். அவனுடன் பழக அவளுக்கு அனுமதி இருந்தாலும் ஒரு எல்லைக்குட்பட்ட நிலையில் இருந்தனர்.

"சுசி!" சந்தானம் கூப்பிட்டான்.

"ஐயே 'சுசி' என்று என்ன கூப்பாடாம்? சுசீலா என்று வாய் நிறையக் கூப்பிடுங்கள்"

"அப்படியே ஆகட்டும். நீயும் என்னை 'சந்தானம்' என்று வாய் நிறையக் கூப்பிட வேண்டுமாக்கும்"

"ஐயையோ! உங்கள் பெயரை நான் எப்படிச் சொல்ல முடியும்?"

"நீ சொன்னால்தான் இன்று நான் உன்னை விடுவேன்"

"அதுதான் இங்கு முடியாது. நான் ஓடி விடுவேன்"

"நீ ஓடினால் நான் பிடித்துக் கொள்வேன்"

"இதோ பாருங்கள், பெரியவர்கள் அனுமதி கொடுக்கும்வரை நீங்கள் என் அருகில் வரக்கூடாதாக்கும், தப்பி வந்தால்...... அத்தையைக் கூப்பிட்டு விடுவேன்" என்று பயமுறுத்திய அவள் அத்தையைக் கூப்பிடவும் ஆரம்பித்தாள்.

"ஏய்...ஏய்... போதும்; போதும். நிறுத்திக்கோ. உன்னோடு பெரிய வம்பாப் போச்சு" என்று கூறிய சந்தானம் பிரஷ்ஷைக் கழுவி விட்டு வாயில் ஜலம் விட்டுக் கொப்பளித்தான்.

"ஐயையோ, இதோ பாருங்களேன்......சீ......போ......சனியன்"

கூக்குரல் கேட்டதும் சந்தானம் திரும்பி நோக்கினான். சுசீலாவைச் சுற்றிச் சுற்றி வந்தது ஒரு குளவி. அதைத்துரத்த சுசீலா முயற்சித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்புறம் சுவற்றில் அக்குளவி கூடுகட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.

"பார்த்துக்கொண்டே நிற்கிறீர்களே. ஈவில்லையா, இரக்கமில்லையா?" சுசீலா வீரிட்டாள்.

சந்தானம் சிரித்துக்கொண்டே அவள் அருகில் வந்தான். "நான் என்ன செய்யட்டும் சுசீலா! பெரியவர்கள் அனுமதி கொடுக்கும் வரை உன் அருகில் வரக்கூடாதே!" விஷமப் புன்னகையுடன் கூறினான்.

"ராம ராமா! இதுதான் விளையாடுவதற்கும் பரிகசிப்பதற்கும் நேரமா?" சுசீலா பீதியுடன் அக்குளவியைத் தன் கையை ஆட்டி ஆட்டித் துரத்தினாள். அக் குளவி இன்னமும் சுற்றிச் சுற்றி வந்தது.

"இதோ பார் சுசீலா, என் பெயரைச் சொல்கிறாயா? சொன்னால்தான் துரத்துவேன்"

"சொல்கிறேன். சொல்கிறேன். இந்தச் சனியனை முதலில் துரத்துங்கள்."

"முதலில் பெயரைச் சொல்லு .."

சுசீலா சிணுங்கினாள். பிறகு "சந்தா... சந்..."

"உம்...முழுவதும் சொல்லு..."

"சந்தானம்...போதுமா..."

"சரி. இன்னொரு நிபந்தனை. இந்த ரோஜாப்பூவை உன் தலையில் நான் சூட்டுவேன்... சம்மதமா..."

"நீங்கள் என்னவாவது செய்து கொள்ளுங்கள். முதலில் இச்சனியனை விரட்டுங்கள்"

மெல்லிய ரோஜா மலரை அவள் குழலில் சூட்டிய அவன் பெரிய வெற்றி வீரனாக முன் வந்தான். தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த டவலை குளவியின்மீது வீசிப் பிடித்தான்.

"அப்பாடா! சனி ஒழிந்தது...உங்கள் பிடிவாதமும் நிறைவேறியது..." என்றாள் சுசீலா.

"இதோ பார் சுசீலா! உன்னைத் தொடக் கூட இல்லை. பூவின் காம்பைப் பிடித்துத் தலையில் சூட்டினேனாக்கும்," சந்தானம் வெற்றிப் புன்னகையுடன் கூறினான்.

இதற்குள் கொல்லைப்புறத்திலிருந்து அத்தை வந்து விடவே இருவர் விளையாட்டிற்கும் முற்றுப்புள்ளி விழுந்தது.

மறுநாள், சந்தானம் தன் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டுவரச் சென்னைக்குக் கிளம்பினான்.

பகலும் இரவும் சுற்றிச்சுற்றி வந்தன. சந்தானம் கல்லூரிப் படிப்பை முடிப்பதற்குள் திக்குமுக்காடினான். மூன்று மாதங்களும் மூன்று யுகங்களாகக் கழிந்தன. சங்கரன் கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். ஆனால், அந்தக் கடைசி ஒருமாதத்தில் அவர் கடிதமே எழுதவில்லை. காரணம் புரியாமல் வாரத்திற்கொருமுறை சந்தானம் கடிதம் எழுதிக் கேட்டான். கடைசியில் ஒரே ஒரு பதில்தான் தந்தையிடமிருந்து வந்தது. சந்தானத்திற்கு மறுமாதம் பத்தாம்தேதி விவாகம் என்று எழுதி இருந்தார். வேறு ஒரு விபரமும் காணப்படவில்லை.

சந்தானத்திற்கு ஒரு கவலையுமில்லை. மிக்க ஊக்கத்துடனேயே படித்துப் பரீக்ஷை எழுதினான். பெயிலாகிவிட்டால் மீண்டும் இந்த படிப்பைக் கட்டிக்கொண்டு யார் அழுவதாம்!

பரீக்ஷை முடிந்த தினமே சைனா பஜாரைச் சுற்றி சுசீலாவிற்குப் பிடித்த சாமான்களாக வாங்கிக்கொண்டு அன்றிரவே கிராமத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

சந்தானம் குதூகலத்துடன் வீட்டுப் படியேறினான், கண்கள் சுற்றும் முற்றும் நோக்கின. அவன் தேடின நபர் அங்கு காணப்படவில்லை. ஒவ்வொரு முறையும் ஊரிலிருந்து திரும்பும்போது ஆவலுடன் எதிர்நோக்கி ஓடிவரும் இந்தச் சுசீலா எங்கே?

"வாடாப்பா சந்தானம்!" தந்தை வரவேற்றார்.

மகனைப் பார்த்ததும் பாக்கியத்தின் முகத்தில் ஏனோ ஒரு விசனக்குறி பரவியது. கவிழ்ந்தமுகத்துடன் 'வாடாப்பா!' என்றாள்.

சந்தானத்தின் மனத்திலும் ஏதோ பீதி படர்ந்தது. சற்றுப் பொறுத்து கேட்டே விட்டான். "அம்மா, சுசீலாவும் மாமியும் சுகந்தானே! சுசீலா ஏன் வரவில்லை!"

"வருவாள் என்றுதான் நினைத்தேன். வரவில்லை." அத்துடன் நிறுத்திக்கொண்டாள் பாக்கியம்.

இதற்குள் அங்குவந்த சங்கரன் 'சந்தானம்! முஹூர்த்தப் பத்திரிகைகளை அச்சிட்டு அந்த அலமாரியில் வைத்திருக்கிறேன். உன் சிநேகிதர்களுக்கு அனுப்பிவிடு" என்றார்.

சந்தானம் பத்திரிகையை எடுத்தான். பிரித்துப் பார்த்தான் ஆவலுடன், உடனே ஒரு பேரிடி. ஆ என்ன இது சூது...சுசீலா பெயர் எங்கே? ஒருக்கால் புகுந்த வீட்டில் பெயர் மாற்றமோ...மேலும் கண்ணோட்டம் விட்டான். குடும்பத்தின் பெயரிலும் மாறுபாடு...

உள்ளக் குமுறலும் மன ஏமாற்றமும் எரிமலையாக வெடித்து அக்னிக் குழம்பைத் தெளித்தது. "அப்பா!" பெரியதொரு கர்ஜனை.

"என்னடா அமர்க்களம்?"

"ஏன் இந்த சூது? குழந்தைப் பருவத்திலிருந்தே என்னைச் சுசீலாவோடு இணைத்துப் பேசிய பேச்சுகள் எங்கே மறைந்தன? முஹூர்த்தப்பத்திரிகையில் மகாலிங்கத்தின் பெண் சாந்தாவின் பெயரை எப்படி அச்சடித்தீர்கள்?" வெடித்துச் சிதறின வார்த்தைகள்.

"விவரங்களைக் கேட்டுவிட்டுக் கத்துடா. சுசீலாவை குளவி கொட்டிவிட்டதுடா"

"அதனால்?"

"கத்தாதேடா சந்தானம்" முகத்தில் சோகம்படர ஒரு மூலையில் உட்கார்ந்தபடி கூறினாள் பாக்கியம். "நிதானமாகக் கேள். குளவி கொட்டி விட்டால் அந்த விஷம் இறங்கும் வரை குழந்தை பிறக்காதென்று வைத்தியர் கூறினார்."

"எந்தப் பைத்தியக்காரன் சொன்னான்? அப்படியே பிறக்கா விட்டால்தான் போகட்டுமே!"

"குடும்பம் விருத்தியாக வேண்டாமாடா?... காலேஜ் படிப்புப் படித்து விட்டாய், அப்பா உனக்குத் துரும்புக்குச் சமானம். என் பேச்சுக்கு மதிப்பில்லாமல் கத்தறே..." சங்கரன் கூறினார்.

"அப்பா, நீங்களே யோசித்துக் கூறுங்கள். காத்திருந்தோம், காத்திருந்தோம், வருடக் கணக்கில் காத்திருந்தோம். உங்கள் பேச்சுக்கு மதிப்பு வைக்காமலா காத்திருந்தோம்? எவனோ ஒரு அரைகுறை வைத்தியன் சொன்னதைவைத்துக்கொண்டு எல்லாவற்றையும் நாசமாக்கிவிட்டீர்களே! மாமியும், சுசீலாவும் மனத்தில் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது?" விடாப்பிடியாகச் சண்டைக்கு இழுத்துக் கொண்டிருந்தான் சந்தானம். அவன் மனம் சுழன்றுச் சுழன்று சூறாவளியாகத் தவித்தது. ஆசையுடன் சுவைக்க வந்ததொரு பண்டத்தைத் தட்டிப் பறித்து விட்டனரே!

"சந்தானம், இரையாதேடா! சுசீலாவே இந்தச் சம்பந்தம் வேண்டாமென்று கூறி விட்டாள்" பாக்கியம் கூறினாள்.

"என்ன? என்ன சொன்னுள்?" நெருப்பாகவந்தது வார்த்தைகள். மின்னல் கண்களைப் பிடுங்கிப் போய்விட்டதென்ருல் இடியோ தலைக் கூரையிலேயே விழுகிறதே!

"ஆமாண்டாப்பா! உன் அப்பாவை எவ்விதமாவது சமாதானம் செய்துவிடலாம் என்ற எண்ணத்துடன்தான் நான் இருந்தேன். ஆனல் அந்த சுசீலாவே தடுத்துவிட்டாள்."

சுழன்று வந்த சூருவளி திசை மாறியது. உயிருக்குயிராய் மதித்திருந்த மாமன் மகள்



மீது ஆத்திரமும் கோபமும் திரும்பியது. சுசீலாவைப் பார்க்கக் கிளம்பி விட்டான்.

"டே சந்தானம்! அங்கு போய் அவளைச் சண்டைக்கு இழுக்காதே. பாவம்! சுசிலா மெலிந்து உருகி விட்டாள். மனசில் அவள் என்னவெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறாளோ! பெண் மனசை துன்புறுத்தாதே

டாப்பா," இரு முத்துக்கள் பாக்கியத்தின் கண்களிலிருந்து சிதறின.

எவ்வளவு கோபத்துடன் சென்றுனே, அவ்வளவு கோபமும் அணைய சுசீலாவைப் பார்த்து நின்று விட்டான் சந்தானம்.

"சுசீலா!"

சடக்கென எலும்புருவம் ஒன்று எழுந்து நின்றது. "வா அண்ணு!"

வரவேற்புரையில் அதிர்ந்து நின்று விட்டான் சந்தானம். ஒருமையில் இழைந்து வந்த 'வா' என்ற சொல்லும், உரிமையோடு கலந்து வந்த 'அண்ணு!' என்ற சொல்லும் அவன் மனத்தை ஒரே நிமிடத்தில் அவனுக்கு விளங்கவைத்தது.

"உள்ளே வா, சந்தானம் அண்ணு! அம்மா அடுத்த தெருவிற்குப் போயிருக்கிருள். சீக்கிரம் வந்து விடுவாள்," என்று கூறியபடி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டாள். 'சந்தானம்' என்ற பெயரை அவள் அநாயாசமாகப் பிரயோகித்து விட்டாள். அந்த ஒரு பெயர்கூற, அடேயப்பா! அவள் எவ்வளவு பிகு செய்வாள்!

"சுசீலா, போதும் உன் வரவேற்பு. பெண்களை நம்பக்கூடாது என்று எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. உன் மனம் என்ன, கல்லா இரும்பா? என்னை ஏமாற்றவா இவ்வளவு நாட்கள் பசப்பு வார்த்தைகள் பேசினுய்? காதல் கீதம் பாடினுய்? வஞ்சித்து விட்டாயே..." துரித காலத்தில் கோபத்தின் ஸ்வரங்கள் மேலே ஏறின. அம்மா கூறின உபதேசம் மறைந்தது. எலும்புக்கூடாக நின்ற சுசீலாவின் உருவம் மறைந்தது. மனத்தில் புகைந்து கொண்டிருந்த ஏமாற்றமும் கோபமும் மீண்டும் அக்னிச் சுவாலையாகக் கிளம்பியது.

திட்டித் திட்டி அவன் வாய் ஓய்வு கண்ட போது சுசீலா, பூமியில் பதிந்திருந்த கண்களை உயரத்தூக்கினுள். "அண்ணு! எல்லாம் முடிந்ததா?" துயரச் சாயையில் தோய்ந்த செயற்கை இன்முறுவல் உதட்டில் நெளிந்தது. கண்களில் மட்டும் அணை உடைந்த நீர் வெள்ளம்.

"போதும்! அண்ணு அண்ணு என்று கூப்பிட்டு என் இதயத்தைத் துளைக்காதே. இந்த வார்த்தைக் காவல் எனக்கு அவசியமில்லை!"

"ஆனுல், அண்ணு உறவு எனக்கு ரொம்ப அவசியம். இதோ பார் சந்தானம், உன் குடும்பத்தில் நீ ஒரே மகன். உங்கள் வம்சம் விளங்க வேண்டாமா? வைத்தியன் கூறியது பொய்யோ, நிஜமோ நான் நடுவில் உங்கள் குடும்பத்தில் புகுந்து விஷப் பரிக்ஷை செய்யத் தயாராக இல்லை. நானும் நீயும் எவ்வளவோ நினைத்தோம், எவ்வளவோ பேசினேம்.... போனது போகட்டும், எல்லாவற்றையும் மறந்து விட்டு என்னை தங்கை ஸ்தானத்தில் ஏற்றுக்கொள்..." வெதும்பித் தவித்தவாறு கூறினுள் சுசீலா.

சந்தானம் ஆடாது அசையாது உட்கார்ந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான். "அண்ணு, தயவு செய்து தங்கையின் வேண்டுகோளை நிராகரிக்காமல் சாந்தாவை ஏற்றுக்கொள். அவள் நல்ல பெண். என்பொருட்டு, உன் தங்கையின் மனம் நிம்மதியடையும் பொருட்டு அவளை ஏற்றுக் கொள்வாயா, அண்ணு?"

சந்தானத்தின் உள்ளம் நெகிழ்ந்தது. அந்த நெகிழ்ச்சியில் உள்ளம் உருகித் தவித்தது. "சுசீலா! தங்கைக்குரிய கடமையை நீ செய்துவிட்டாய். தங்கையின் வாழ்வு கருகுவதை ஒரு அண்ணன் பார்த்துக்கொண்டிருப்பானு? விஷம் விஷம் என்று கதையைப் பரவச் செய்துவிட்டாயே. உன்னை..."

"உன் எண்ணம் புரிகிறது அண்ணு! அதற்கும் ஏற்பாடு செய்துவிட்டேன்,"

"உண்மையாகவா?" ஆச்சரியத்துடன் வினவினுன் சந்தானம். தன்னை மறந்து அவள் வேறு இடத்தில் வாழ்க்கையைத் தொடங்க மாட்டாள் என்று திடமாக நினைத்திருந்தான். இப்பொழுது அங்கும் ஏமாற்றம். "பெண்கள் உள்ளத்தைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை."

"அண்ணு! உள்ளம் வேறு, உடல் வேறு. இந்த உள்ளத்தைமட்டும் வைத்துக்கொண்டு உலகின்கண் நிர்ப்பயமாக வாழ முடியாதோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. அதனுல் உள்ளத்தை மறந்து உடலைக் காப்பாற்றிக் கொள்ள வேறு ஒருவருடன் வாழ்க்கையைத் தொடங்க நிச்சயித்துவிட்டேன். புத்திரப்பேறு அவசியமில்லாதவர்களும் உலகில் இருக்கிருர்களே! ஆழங்குடி பரசுராமருடைய மகன் சிதம்பரம் நாக்பூரில் வேலையாக இருக்கிருரல்லவா?"

சட்டெனக் காதைப் பொத்திக்கொண்டான் சந்தானம். "போதும், போதும்! இளையாளாக மணம் புரியவா நீ பிறந்தாய்?"

"அதனுல் என்ன வந்துவிட்டது? அவர் உன்னைவிட இரு வயதுதான் மூத்தவர். முதல் விவாகம் சீக்கிரமே முடிந்துவிட்டதால் இரு குழந்தைகளுக்குத் தந்தையாகிவிட்டார். அவ்வளவுதானே! அதுபோன்ற குடும்பந்தான் எனக்கு வேண்டும். புத்திரப்பேறு அவசியமில்லை அங்கு,"—அமைதியை வரவழைத்துக்கொண்டு கூறியதுபோல் அவளுடைய வார்த்தைகள் வெளிவந்தன.

"போய் வருகிறேன்" என்றுகூட கூறுமல் சந்தானம் அங்கிருந்து சென்றுவிட்டான்.

சாந்தாவின் பெற்றோர்கள் விவாகத்தைச் சிறப்பாகவே முடித்தனர். மாப்பிள்ளை சந்தானம் மட்டும் எதையோ பறி கொடுத்தவன்போல் இருந்தான். அதே மாதத்தில் சுசீலாவின் கையை ஆடம்பரமில்லாமல் பிடித்தான் சிதம்பரம். வேதனைச் சுழல்களை மனப் பெட்டிக்குள் அடைத்துவிட்டு கணவனுடன் கிளம்பினாள் சுசீலா. அவள் விடைபெற வந்தபோது சந்தானம் அவளை ஏறிட்டும் பார்க்கவில்லை. ஒரே வாரம் அவளுடன் பழகிய சாந்தா மட்டும் கண்ணீரிடையே விடை கொடுத்தாள். 'சித்தி! சித்தி' என்று மணப்பந்தலிலேயே ஒட்டிக்கொண்டு விட்ட குழந்தைகளுடன் கணவன் காட்டிய வழியைப் பின்பற்றிச் சென்று விட்டாள் சுசீலா.

ஏழை சுசீலா பணக்கார அத்தைக்கு மருமகளாகச் சென்று சுகபோகமாக வாழ்வதை விரும்பாத வைத்தியன் நாகலிங்கம் தன் மனம்போல் எல்லாம் நடந்தது குறித்து நிம்மதியாக மூச்சுவிட்டான்.

காலப் போர்வையினுள் மெள்ள மெள்ள பத்து ஆண்டுகள் மறைந்தன. இதற்குள் காலனின் கட்டளைக்குப் பணிந்து சுசீலாவின் அன்னை விண்ணுலகு எய்தி விட்டாள். தாயின் மரணத்திற்கு வந்த சுசீலா பிறகு அந்த ஊருக்கு வரவேயில்லை. அத்தையைக் கூட மறந்து விட்டாளே இப்பெண் என்று அங்கலாய்த்தாள் பாக்கியம்.

சாந்தா சுசீலாவின் இடத்தை நன்றாகவே பாதுகாத்தாள். கணவனுக்கும், மாமி மாமனுக்கும் வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள். தோட்டத்தில் பூத்த மலர்களைப் பறித்து அம்பாள் படத்திற்குச் சூட்டிவிட்டு தானும் வைத்துக் கொண்டாள்.

இவ்வளவு நிறைவுகள் இருந்தும் ஒருகுறை மட்டும் இருந்தது. தோட்டத்தில் இருந்த மரங்களும் செடிகளும் பூவும் காயுமாக நிறைந்தபோது, வீட்டிற்கு வந்த மருமகள் மட்டும் இன்னமும் மொட்டை மரமாகவே இருந்தாள். தன் பெற்றோர்களிடம் சுசீலாவைப் பிரித்து வைத்த குற்றத்தை ரகசியமாக எடுத்துக் காட்டத் தவறவில்லை சந்தானம்.

அன்று காலை மன நிம்மதியை நாடி காசிக்குப் புறப்பட்டு விட்டார் சங்கரன். பாக்கியம் அவருடன் கிளம்பவில்லை.

சந்தானம் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வாசலில் ஒருவண்டி வந்து நின்றது. சாந்தா ஓடிச்சென்று கதவைத் திறந்தவள், வண்டியில் வந்து இறங்கியவளைப் பார்த்ததும் சாந்தா உள்ளே ஓடினாள். "அம்மா, சுசீலா வந்திருக்கிறாள். திருஷ்டி சுற்றி அழையுங்கள்" என்று மாமியை இழுத்துக்கொண்டு ஓடினாள்.

பாக்கியம் சுசீலாவைப் பார்த்து ஆச்சரியத்துடன் நின்று விட்டாள். உடனே சமாளித்துக்கொண்டு, நிறைமாத கர்ப்பிணியான சுசீலாவை, திருஷ்டி சுற்றிக் கொட்டி உள்ளே அழைத்துச் சென்றாள். சந்தானம் கைகளை அலம்பிவிட்டுச் சுசீலாவை ஏறிட்டு நோக்கினான். பிறகு பொருள் செறிந்த பார்வையை தாயின் பக்கம் செலுத்தினான். வந்தவளை 'வா' என்று கூறி கூப்பிடவும் தோன்றவில்லை அவனுக்கு.

"அண்ணா, சுகமா?" சுசீலாதான் கேட்டாள்.

"சுகத்திற்கு என்ன குறைவு? நிலத்தில் விளைவதைச் சாப்பிடுகிறேன். கிணற்றில் ஊறுவதைக் குடிக்கிறேன். ஒரு மனிதன் சுகத்திற்கு அது போதும் என்று நீ சொல்லித் தந்த பாடம்தானே?" என்று கூறி விட்டு வாசல்புறம் சென்று விட்டான் உள்ளத் தவிப்புடன்.

"ஏம்மா! சுசீலா, இரண்டு மாதங்களுக்கு முன்பே வந்திருக்கக் கூடாதா? நிறை மாதத்தில் வந்து நிற்கிறாயே!" அத்தை குறை பட்டுக் கொண்டாள்.

"பிரசவத்திற்கு அனுப்பவே அவருக்குச் சம்மதமில்லை அத்தை. எனக்குத்தான் இச் சந்தர்ப்பத்தில் பிறந்த வீட்டில் இருக்க வேண்டுமென்ற நப்பாசை. வந்துவிட்டேன்."

"போகட்டும், இதற்காவது பிறந்த வீட்டு நினைவு வந்ததே, ஒருகடிதம் போடக்கூட உனக்குத் தோன்றவில்லை"

"கடிதம் போட்டு யார் சுகம் காணப்போகிறார்கள் அத்தை? எல்லோருடைய வேதனையையும் அதிகமாக்க எனக்கு விருப்பமில்லை." உள்ளத்துயருடன் கூறினாள் சுசீலா.

சாந்தாவிற்குச் சுசீலா வந்ததில் ஒரே குதூகலம். ஓடி ஓடி அவளுக்குப் பணிவிடைகள் செய்தாள். 'அக்கா அக்கா' என்று நிமிடத்திற்கு ஒருமுறை உறவு கொண்டாடி உபசரித்தாள். அத்தை வாய்க்கு வேண்டியதைச் செய்து கொடுத்தாள்.

இருவருடைய உபசரிப்பிலும் சுசீலாவின் மனம் நிறையவில்லை. சந்தானம் அவளுடன் சரளமாகப் பழகாதது அவள் உள்ளத்தில் தாங்கொணா வேதனையை அளித்தது. எவ்வளவு ஆசையுடன் அவனைப் பார்க்க ஓடி வந்தாள் அவள்!

சந்தானம் வைத்தியரிடம் சென்று அவரை நன்றாகத் திட்டினான். விஷம் உடலிலிருந்து இறங்கும் வரை புத்திரப் பேறு இருக்காது என்றுதானப்பா சொன்னேன்" பதில் வாதம் செய்து தப்பித்துக்கொண்டார் அவர்.

நாலைந்து நாட்கள் கழித்து, நர்ஸ் ஒருவளை ஏற்பாடு செய்து விட்டுவர சாந்தாவும் பாக்கியமும் சென்றனர். சந்தானம் ஊஞ்சலில் அமர்ந்திருந்தான். சுசீலா அவனிடம் வந்தாள்.

"அண்ணா, நான் இன்றே நாக்பூருக்குத் திரும்பிவிடலாம் என்று பார்க்கிறேன்."

சந்தானம் திடுக்கிட்டு அவளை நோக்கினான். "ஏன் சுசீலா?"

"நாக்பூரில் எனக்கு ஒரு குறையுமில்லை. வீடு நிறையப் பணியாட்கள், அன்பு செலுத்தும் மூத்தவளின் குழந்தைகள், குறை வைக்காத கணவர், அவ்வளவு இருந்தும் நான் இங்கு ஏன் வந்தேன் தெரியுமா? உன்னைப் பார்க்கவேண்டும் நீதான் எனக்கு ஆதரவளிக்கும் பிறந்த வீடு என்றெல்லாம் நினைத்து வந்தேன். நீயோ என்னுடன் பேசுவதையே வெறுக்கிறாய். இனி இங்கு என்ன வேலை? உன்னைப் பார்த்தாகிவிட்டது, போகிறேன்." வார்த்தைகள் தொண்டையில் சிக்கித் தவித்து வெளி வந்தன.

"சுசீலா என் மனம் எவ்வளவு பாடுபடுகிறது தெரியுமா? நீங்களெல்லோரும் கூடி என்னை வஞ்சித்துவிட்டதாகவே தோன்றுகிறது. என்னால் பேசவே முடியவில்லை. பேசினால் கோபம் அதிகமாகி உன்னைக் கண்டபடி ஏசிவிடுவேனோ என்ற பயம், அல்லது நெஞ்சுக் குமுறல்களை தாங்க முடியாமல் அழுது விடுவேனோ என்ற பயம். நான் என்ன செய்யட்டும் சுசீலா?...பைத்தியக்காரச் சந்தானம் என்று என்னை ஒதுக்கிவிடு" துயரத்துடன் கூறினான் அவன்.

"அண்ணா, சென்றதை மறந்துவிடு. விதி செய்த கூத்து. நான் ஒரு குழந்தையை விரும்பவே இல்லை. மூத்தவளின் குழந்தைகள் எனக்குத் தாய்க்குரிய ஸ்தானத்தை அளித்துவிட்டன. அவருக்கும் குறைவில்லை. எனக்கும் குறையில்லை. ஆயின் இங்கும் விதிப்பயன் என்றுதான் கூறவேண்டும்.. போகட்டும் சந்தானம்! பின் இருக்கும் வஸ்துக்களை நாம் காணமுடியாதபடி கடவுள் பின்பக்கம் கண்கள் வைக்காததுபோல், பின் தங்கிவிட்ட நிகழ்ச்சிகளையும் நாம் பார்க்கவேண்டாம். நான் இங்கு வந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு .."

"என்ன சுசீலா?"

"நானும் ஏதோ வாழ்க்கை நடத்துகிறேனே தவிர, என் உள்ளம் என்றோ செத்து மடிந்துவிட்டது. இந்த செத்த உள்ளத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு நாட்கள் நான் வாழமுடியும்? இப் பிரசவம் எனக்கு எமனாக இருக்கும்......இருக்கட்டும் என்றுதான் விரும்புகிறேன்..."

சட்டெனப் பாய்ந்து அவள் வாயைப் பொத்தினான் சந்தானம். "சுசீலா! என்ன பேச்சு இது?"

"நானாக வரவழைத்துக்கொள்ளவில்லை. வந்தால் வரவேற்கத் தயார். அப்பொழுது தாயற்ற என் குழந்தைக்குச் சாந்தாவை அன்னையாக நியமிப்பாயா, அண்ணா?"

சந்தானம் காதுகளைப் பொத்திக்கொண்டான். பிறகு இவ்வாறு பேசிய அவளைக் கோபித்தான். அவளோ கைகளில் முகத்தைப் புதைத்து அழுது தீர்த்துவிட்டாள்.

"சுசீலா, அழாதே. நீ நல்லபடி பிழைத்து எழுந்து விடுவாய். பிறகு உன்னைமட்டும் உன் கணவன் இல்லத்திற்கு அனுப்பிவிட்டு உன் குழந்தையை நான் வைத்துக்கொள்ளப்

METTUR Sandal Soap
மேட்டூர் சந்தன சோப்
இப்பொழுது...
முன்னைக் காட்டிலும்
அதிக மணத்துடன்
கமழ்கின்றது
மேட்டூர் சந்தன
சோப்!
மேட்டூர் சந்தன சோப்பின் மேன்மை குணம் அதன் கலவையில்தான் இருக்கிறது. இப்பொழுது கலவை இன்னும் பிரமாதம்! பரிபூரண சந்தன நறுமணத்திற்கு நீங்கள் கேட்டு வாங்கவேண்டிய சோப் மேட்டூர் சந்தன சோப்!
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா.
மானேஜிங் ஏஜண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.
MC-636

போகிறேன். அங்கு உன் மூத்தவளின் குழந்தை உனக்குப் போதும். நீ தான் எனக்குக் கிடைக்கவில்லை. உன் குழந்தை யாவது என்னிடம் இருக்கட்டும்.'' சந்தானம் அவளை சமாதானம் செய்தான்.

மறுநாளிலிருந்து சந்தானம் சுசீலாவோடு சரளமாகப் பழகினன். சுசீலா எல்லாவற்றையும் மனத்துள் அடக்கி, சாந்தாவையும் இழுத்துவைத்து சிரித்துச் சிரித்துப் பேசினுள். அவள் கணவன் தினம் ஒரு கடிதம் எழுதத் தவறவில்லை. மூத்தவளின் குழந்தைகள் அவளைப் பார்க்கத் துடித்தன.

பத்து நாட்களில் சுசீலாவிற்குப் பிரசவ வேதனை கண்டது. துடித்துவிட்டாள் அவள். வீட்டிற்கு வந்த நர்ஸால் சமாளிக்க முடியாமல் சந்தானம் அடுத்துள்ள டவுனிலிருந்து பெரிய லேடி டாக்டரை அழைத்து வந்தான். சுசீலா நல்லபடி பிழைத்து எழுந்திருக்க சாந்தா கடவுளை வேண்டிக்கொண்டாள். பாக்கியம் சுசீலாவின் அருகிலேயே இருந்தாள்.

அழகானதொரு பெண் குழந்தை சுசீலாவே உருவெடுத்து வந்ததுபோல் பிறந்துவிட்டது. ஆனல், அன்று மாலை சுசீலா எதிர்பார்த்த நிலை வந்துவிட்டது. நல்ல ஜுரம் இருந்தது. மெதுவாக அவள் தன் நினைவிழக்க ஆரம்பித்துவிட்டாள். டாக்டர் வந்து பார்த்து கையை விரித்துவிட்டார்.

பாக்கியம் கண்ணீர் சிந்தியபடி அவள் அருகில் உட்கார்ந்திருந்தாள். சாந்தா அவள் தலையைத் தன் மடியில் வைத்தபடி கண்ணீர் உகுத்தாள்.

ஒரு நிமிடம் தன் நினைவு வந்தபோது சுசீலா சந்தானத்தைத் தன் அருகில் கூப்பிட்டாள்.

“சந்தானம்...நான்...சொன்னதை மறந்து விடாதே. குழந்தை இனி உன்னுடையது. சாந்தா, நீதான்...குழந்...தைக்குத் தாய்...” அத்துடன் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள் சுசீலா.

சந்தானம், சுசீலா சுசீலா என்று கதறித் துடித்து விட்டான். சாந்தா குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

சிதம்பரம் செய்தி அறிந்ததும், தன் முதல் இரு குழந்தைகளையும் அழைத்து வந்தார். சுசீலாவை நினைத்து அவ்விரு குழந்தைகளும் கதறியதைப் பார்த்து இவ்வளவு அன்பைச் செலுத்தி விட்டாளே சுசீலா என்று அனைவரும் வியந்தனர்.

போகும் போது சிதம்பரம் கூறினர். “சந்தானம், சுசீலாவிற்குத் தான் பிழைக்க மாட்டோம் என்ற பீதி ஏனே, இருந்து கொண்டே இருந்தது. அதனல் அவள் இங்கு வரும் போது, ஒருக்கால் நான் திரும்பாவிட்டால் குழந்தையை சந்தானம் அண்ணவிடமே விட்டு விடுங்கள். அவன் வீட்டில் வளர வேண்டிய குழந்தை இது என்று கூறினள். அவள் விருப்பப்படியே நீங்கள் குழந்தையை வளர்க்க முடியுமானல் வைத்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் நானே எடுத்துச் செல்லுகிறேன்... பெற்ற தாயை இழந்தபோது கூட இவ்வளவு துடிக்காத இந்த மூத்த குழந்தைகளை இனி எவ்விதம் சமாளிக்கப் போகிறேனே! இக்குழந்தைகள் மீதுகொண்ட அன்பினல்தானே என்னவோ, சுசீலா தனக்கென ஒரு குழந்தை பிறப்பதை துளியும் விரும்பவில்லை. ஆனல் எல்லாம் வேறுவிதமாக முடிந்துவிட்டது.'' துயர நெஞ்சுடன் கூறினர் அவர்.

சந்தானம் குழந்தையை ஏற்று சுசீலா என்றே பெயரிட்டு விட்டான். சாந்தா அன்னைக்குரிய ஸ்தானத்தை ஏற்றுள்.

அவன் வீட்டில் பிறந்து வளர வேண்டிய அக் குழந்தை, மாற்றானுக்குப் பிறந்து அவன் கையில் வளர ஆரம்பித்தது.



கட்டழகி

வனமாலிகை

மலையாளக் கரையில் பரணஙானம் என்ற இடத்தில் என்னை ஜூனியர் எஞ்சினியராக நியமித்து விட்டார்கள். பாரதப் புழையாற்றில் புதிதாக உருவமெடுக்கும் பாலத்தை மேற்பார்வை செய்து கட்டி முடிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது.

நாகர்கோயிலில் வைத்து நண்பர் நாயகத்தைப் பார்த்தேன். அவர் நாகர்கோயிலிலுள்ள ஒருபெரிய மருந்து வியாபாரி.

"உலகம் தெரியாத பிள்ளைகளுக்குக் கல்லூரியை விட்டு வெளியேறுவதற்குள் உத்தியோகம் காத்திருக்கிறது" என்றார்.

"தொழில் கல்விக்கு அத்தனை மதிப்பு" என்றேன் நான்.

"பொறுப்பு இன்னதென்று அறியாத உங்களுக்குப் பொறுப்பான உத்தியோகம்"

நான் இலேசாகச் சிரித்துக் கொண்டேன். நண்பர் பரணஙானத்தில் அவரது நண்பர் ஒருவருக்குக் கடிதம் கொடுத்தார். அவர் ஒரு மருந்துக் கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதியாம். ஊர் ஊராக அலைந்து 'ஆர்டர்' வாங்க வேண்டும். நான் போகும்போது ஊரில் இருப்பாரோ என்னவோ?

நண்பர் கொடுத்த விலாசப்படியுள்ள வீட்டின் கதவைத் தட்டினேன். அறுபது வயது தாண்டிய பாட்டியொருத்திக் கதவைத் திறந்தாள். அவர் பெயரைச் சொல்லி, இருக்கிறாரா? என்று கேட்டேன். அதற்குப் பாட்டி மலையாளத்தில் பதில் சொன்னாள். திருவனந்தபுரத்தில் நான் படித்ததால் எனக்கு 'அரைகுறை' மலையாளம் புரியும்.

"அவிடே ஆரம்மே?" என்று ஒரு ஆண் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து நாற்பத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒருவர் வந்தார். கட்டு மஸ்தான உடம்பு; இடையிடையே நரைவிழுந்த தலை; முதுமைக் கோடுகள் அச்சாரம் வாங்கிவிட்ட முகம்; புது நிறமான மனிதர்!

நான் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அதைப் படித்ததும் அவர் முகம் மலர்ந்தது. என்னை மிகவும் அன்புடன் வரவேற்று மாடிக்கு அழைத்துச் சென்றார்.

"வேலையை ஒப்புக்கொண்டு விட்டீர்களா?"

"இல்லை, நாளைக்கு ஒப்புக்கொள்ளவேண்டும். இன்று நல்லநாள் இல்லை" என்றேன். வைதீகக் கோட்பாடுகளில் ஊறிப்போன குடும்பத்தில் பிறந்தவன் நான். எதற்கெடுத்தாலும் நாளும் நட்சத்திரமும் பார்க்கும் என் தந்தை, நான் புறப்படும்போது, "நல்ல நாள் பார்த்து வேலையை ஒப்புக்கொள்" என்று சொல்லியனுப்பினார்.

"இதோ ஐந்து நிமிஷத்தில் வந்துவிட்டேன்" என்றவர் மாடிப்படியிறங்கிக் கீழே போய்விட்டார். நான் அறையைக் கண்ணோட்டமிட்டேன். அறை மிகவும் துப்புரவாக இருந்தது. சுவரில் அரசியல் தலைவர்களின் படமும் தெய்வங்களின் படமும் தொங்கின. ஜன்னல்களில் பூவேலைப் பாடுகள் நிறைந்த திரைகள், மேசை விரிப்பு, மேசையில் மலையாளத் தந்தத்தில் செதுக்கிய ராதை-கிருஷ்ணன், வீட்டின் மேற்குப் பக்கத்தில் அருமையான பூந்தோட்டம். சுற்றுப் புறங்கள் பசுமைக் காடாக எழில் பூத்துக் குலுங்கும் இன்பக் கோட்டையாகச் சிரித்துக் கொண்டிருந்தன.

"சார், எனக்கு இன்றைக்குக் கம்பெனி விஷயமாகக் கோழிக்கோடு வரைக்கும் போக வேண்டும். ஒருவாரத்தில் திரும்பிவிடுவேன்" என்றார் உண்ணிநாயர்.

"தங்குவதற்கு வசதியாக ஒரு வீடு பார்த்தால் தேவலை" என்றேன் நான். முன் பின் பழக்கமில்லாத இடத்தில் எங்கே போய் வீடு தேடுவது?

"நான் வருவது வரைக்கும் இங்கேயே இருங்கள். நான் திரும்பிவந்த பிறகு மற்றவைகளைக் கவனிக்கலாம்."

அதை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

காலைக் காப்பி முடிந்ததும் உண்ணிநாயர் புறப்பட்டு விட்டார். புறப்படும்போது, "உங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பார்கள். வித்தியாசமில்லாமல் பழகுங்கள்" என்று சொன்னார். நான் தலையசைத்தேன்.

மத்தியான்ன சாப்பாட்டை ஹோட்டலில் முடித்துக்கொண்டு திரும்பினேன். முதல் நாள் இரவு முழுவதும் பிரயாணம் செய்ததால் களைப்பாக இருந்தது. படுக்கையில் விழுந்ததும் கண்கள் தானாக மூடிக்கொண்

டன. யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டது. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தேன்.

உறக்கத்திற்கும் விழிப்பிற்குமிடையே இருந்த நான் அது கனவா? நிஜமா? என்ற முடிவுக்கு வர முடியாமல் ஒருகணம் திகைத்துப் போனேன். கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டேன். கனவல்ல ! இவள் யார்?

அந்த சௌந்தர்ய தேவதை நான் படுத்திருந்த அறைக்குப் பக்கத்தறையில் நின்ருள். நான் விழித்திருப்பதை அவள் கவனிக்கவில்லை. அவள் அழகு என் இதயத்தில் போதையைப் பொங்கச் செய்தது.

எழிற்கோலம் காட்டும் அவளது தங்கத் திருமேனி; பள பளக்கும் கருமையான சுருள் கேசம்; வில் போன்ற வளைந்த புருவங்கள் அஞ்சனம் தீட்டிய கருநீல நீள்விழிகள்; செம்பவளத் தேன் இதழ்கள்; பட்டுப் போன்ற மிருதுவான மாம்பழக் கன்னங்கள். வலம்புரிச் சங்கு போன்ற வெண்மையான கவர்ச்சி நிறைந்த கழுத்து; விம்மித் துடிக்கும் மார்பகம்; தந்தத்தில் அளவெடுத்து வார்த்தெடுத்த கைகள்; மருதோன்றி அழகு வீசும் நகங்கள்... அப்பப்பா! பிரமன் இவ்வளவு அழகையும் என்று திரட்டிப் படைக்க எவ்வளவு சிரமப் பட்டாரோ?

என் நெஞ்சக்குழியினுள் அவள் அழகை அப்படியே பிடித்து வைத்துக்கொண்டேன். அவளது வலது கரத்தில் நாலைந்து தங்க வளையல், கழுத்தில் புதிய மாலை, ஆகாய நிறத்தில் கரையில் பூவேலைப் பாடுகள் நிறைந்த நைலான்புடவை, முழங்கை அளவிற்கு கைநீண்ட 'புடவை'க்கேற்ற ஜாக்கெட். அவளைப் பார்க்கப் பார்க்க என் இதயத்தில் இன்பப் போதைப் பெருக்கெடுத்தோடியது.

"மந்தா!" கீழே பாட்டியின் குரல்கேட்டது.

"வராம் அம்மச்சி" (பாட்டி) என்று சொல்லிவிட்டுத் திரும்பியவள், நான் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டாள். ஒரு கணம் தலைகுனிந்தாள். முகத்தில் செக்கர்வானக் கோலம் அழகை அள்ளி வீசியது. மீண்டும் தலையை உயர்த்தி என்னைப் பார்த்தாள். அவளது செம்பவள இதழ்களில் ஒளிக்கோலம். அது என் நெஞ்சைச் சிறைப் பிடித்தது.

"காப்பி கொண்டுவரச் சொல்லட்டுமா?" குரலில்தான் எவ்வளவு இனிமை. கொள்ளை அழகை அவளிடம் கொட்டிக் குவித்த கடவுள் குரல் இனிமையையும் அதைவிட அதிகமாக வைத்துவிட்டானே!

"வெளியே போய் சாப்பிட்டுக் கொள்கிறேன்" எவ்வளவோ சிரமப்பட்டு இதைச் சொல்லிவிட்டேன். சொல்லி முடித்த பிறகு மலையைப் புரட்டிய மகிழ்ச்சி என்னுள் பரவியது.

"பரவாயில்லை, கொண்டுவரச் சொல்கிறேன்" என்ற அந்த வஞ்சிக்கொடியாள் ஒய்யாரமாக என்னைப் பார்த்துவிட்டு நடந்தாள். அப்பப்பா ..அந்தப் பார்வை என் நெஞ்சை நனைத்தது!"

நான் கிராமத்து சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவன். இயற்கையிலேயே பெண்களிடம் பேசக் கூச்சம். பாழாய்ப்போன சங்கோஜம் நிழலைப்போல என்னைத் தொடர்ந்து கொண்டிருந்தது. எனக்கு வந்த ஆத்திரத்தில் அதைக் கழுத்தைத் திருகிக் கொன்று விடத் தோன்றியது. ஆனல் அது முடிகிற காரியமா?

அவள் வரவை எதிர்பார்த்தேன். ஆனல், பாட்டி வந்தாள் கையில் காப்பியுடன்-என் முகம் வெளுத்தது.

"தம்பி, மந்தா வெளியே போகிருளாம். வேண்டுமானல் நீயும் அவளுடன் போய் விட்டு வாயேன்."

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மலங்க விழித்தேன். "பாட்டி! சீக்கிரம் வரச் சொல், நேரமாயிட்டு" என்று கீழே நின்று சொன்னுள் மந்தா. என் உள்ளத்தில் ஒருவித இன்பக் கிளர்ச்சி பரவியது. அவளுடன் வெளிக் கிளம்பத் தயாரானேன்.

அவளுடன் நடக்கும்போது தரையில் நடப்பதாக எனக்குத் தோன்றவில்லை. வான விதானத்தில் பறப்பது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவள் எதை எதையோப் பேசினள்; சிரித்தாள். காயல்கரையோரத்துத் தென்னம்பாளை வெடித்துச் சிரிப்பது போலிருந்தது அவள் சிரிப்பு!

இருவருமாக நடந்து பக்கத்திலுள்ள பகவதியம்மன் குன்றை அடைந்தோம்.

"உங்கள் பெயர் மந்தாவா?"

"இல்லை. மந்தாகினி" சொன்னவள் குழி விழச் சிரித்தாள்.

வீட்டிற்குத் திரும்பும்போது புதிதாகக் கட்டப் போகும் பாலத்தின் வழியாக வந்தோம். ஆற்றில் குளித்துக் கொண்டு நின்ற ஒருயுவதி என்னையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தாள். அவள் மந்தாகினியைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்தாள்.

தலைமட்டும் நீருக்கு மேலே தெரியும்படியாக நின்ற அந்தப்பெண் மந்தாகினியைப் பார்த்து, "மந்தா, 'புடவுடை' எப்போது?" என்று கேட்டாள்.

"கௌரிக்குட்டி! வாயைமூடு" என்று ஆத்திரமாகச் சொன்னுள் மந்தாகினி.

அதற்கு மேல் அவள் என்னிடம் அதிகமாகப் பேசவில்லை. பகல் நழுவுவதற்குள் வீட்டிற்குத் திரும்பிவிட்டோம்.

இரவு சாப்பாட்டை அங்கே வைத்துக் கொள்ளும்படி பாட்டியும், மந்தாகினியும், வற்புறுத்தினார்கள். எனக்கென்னவோ மனமில்லை. வேறு வழியின்றி சாப்பாட்டுக் கடையை அன்றைக்கு அவர்கள் வீட்டிலேயே வைத்துக் கொண்டேன்.

நிலா பால் போல முற்றத்தில் காய்ந்து கொண்டிருந்தது. வெளி முற்றத்தில் சாய்வு நாற்காலியைத் தூக்கிப் போட்டுக் கொண்டு படுத்தேன்.

பாட்டி வந்தாள்!

அவளைத் தொடர்ந்து மந்தாகினியும் வந்தாள்.

"தம்பி, மந்தாவுக்குக் கொஞ்சம் தமிழ் சொல்லிக் கொடுப்பியா?" என்று கேட்டாள் பாட்டி.

"அதற்கென்ன? ஓய்வு கிடைக்கும்போது சொல்லிக் கொடுக்கிறேன."

"சம்பளம் எவ்வளவு?" என்று கேட்டாள் மந்தாகினி.

"நூற்றைம்பது ரூபாய்"

"ஆயுள் முழுவதும் சொல்லிக்கொடுக்கவா?" என்றவள் 'கலகல'வென நகைத்துவிட்டாள்.

"என் ஒரு மாதச் சம்பளத்தைச் சொன்னேன்"

"நான் அதைக் கேட்கவில்லை. தமிழ் சொல்லிக் கொடுக்க சம்பளம் எவ்வளவு என்று கேட்டேன்" என்றாள் உயிர் ஓவியம்.

பேச்சு திசை மாறியது.

ஊர் வம்புகள்; உலக விவகாரங்கள் முதலியவைகளைப் பேசிக்கொண்டோம். என் பார்வை முழுவதும் அந்த 'வனதேவதை'யைச் சுற்றி வட்டமிட்டது. எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைப் போல அந்தக் கன்னி என் இதயத்தில் நிறைந்துவிட்டாள்.

அன்றிரவு இனிய எண்ணங்கள் என் இதயத்தில் கரைபுரண்டோடின.

மறுநாள் விடிந்ததும் வேலையை ஒப்புக் கொள்வதற்காகப் போய்விட்டேன். போகும் வழியில் வைத்து மந்தாகினியை சந்தித்தேன். அவள் கையில் பூத்தட்டுடன் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

இப்பொழுதே அவன் ஈரலை உஷாராகக் கவனிக்கவும்

அது அவனுடைய ஆரோக்யத்தை ஆயுள் முழுவதும் கவனித்துக்கொள்ளும்

உடம்பில் மிகச் சிறந்த ஆராய்ச்சி சாலையாக விளங்குவது ஈரல். காலப் போக்கில் இதனுடைய வேலைகளில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. தாய்ப் பாலுக்கடுத்தபடியாக வேறு உணவை மாறி உட்கொள்ளும்போது ஈரலுக்கேற்படும் சிரமம் மிக அதிகம். பல் முளைக்கும் வேளையில் ஏற்படும் மாறுதல்கள், சீராகவும், சரியாகவும் இல்லாத உணவு முதலியவற்றால் குழந்தையின் ஈரல் கோளாறடையலாம். இதனால் சிக்கல்கள் பல தோன்றும்.

ஜம்மியின் லிவர்க்யூர் கோளாறுகள் ஏற்படாது பாதுகாப்பதுடன், குழந்தைகளின் வளர்ச்சிக்கு டானிக்காகவும் உதவுகிறது.

ஜம்மியின் **லிவர்க்யூர்**

அவனுடைய ஈரலைப் பரீட்சியுங்கள் ஜம்மியின் டாக்டர் உங்களுக்கு அருகே உள்ள டவுனுக்குப் பிரதி மாதமும் விஜயம் செய்கிறார். சுற்றுப் பிரயாணத் திட்டத்துக்கு எழுதவும்.

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டி கோளாறுகளுக்கு...

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்

சென்னை-4 — கும்பகோணம் — திருச்சிராப்பள்ளி

J.V.5a.

கட்டுக் குலேயாத பொன் மேனியிலே நாகரிக அலங்காரம், காலே ஒளிக்கதிரில் அவள் உடம்பு பளபளத்தது.

"வேலேயை ஒப்புக்கொள்ளப் போகிறீர் களா?"

"ஆமாம்."

"இந்தாருங்கள் பிரசாதம்" என்றவள் பூத் தட்டிலிருந்து பிரசாதத்தை எடுத்து என் கையில் வைத்தாள். அவளது கைபட்டதும் என் உடம்பில் மின்அலே பாய்ந்தது. உணர்ச்சி ஏற்பட்டது. உள்ளத்தைக் கிளு கிளுக்கவைத்தது.

"நல்ல சகுனம்" என்று நினைத்துக்கொண் டேன்.

வேலேயை ஒப்புக்கொண்டதும் நானும் மேலதிகாரியும் சிப்பந்தி கோவிந்தப் பணிக் கருமாக பாலங்கட்டும் இடத்திற்குச் சென் ருேம். என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்துவிட்டு, மேஸ்திரி நாயரிடம் எனக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுக்கும்படி சொல்லிவிட்டு மேலதிகாரி போய்விட்டார். அவர் போகும்போது, "மிஸ்டர்! நீங்கள் உத்தியோகத்திற்குப் புதிய ஆள். காண்டிராக்டர்கள் கண்ணில் மண் ணைத்தூவ சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டி ருப்பார்கள். நீங்கள் கவனமாக இருந்து கொள்ளுங்கள். இல்லேயானல் நமக்குக் கெட் டபெயர் வந்துவிடும்" என்று எச்சரித்தார்.

காண்டிராக்டர்கள் செய்யும் திருவிளேயா டல்களைப்பற்றி ஓரளவு கேள்விப்பட்டிருக் கிறேன். எதற்கும் விழிப்பாக இருந்து கொள்ள வேண்டும். வீட்டிற்குத் திரும்பும் போது மணி ஏழாகிவிட்டது!

என் வரவை எதிர் நோக்கி வாசலில் காத்திருந்தாள் மந்தாகினி. "வழி தெரியாமல் எங்கேயாவது போய்விட்டீர்களோ என்று பயந்து போனேன்" என்ருள் மந்தாகினி. இதைக்கேட்டதும் என் உள்ளம் சிலிர்த்தது?

உடை மாற்றிக் கொண்டு அறையில் உட் கார்ந்தேன். வஞ்சிக்கொடி அசைவதுபோல அந்தச் சிற்றிடை சிங்காரி சிரித்துக் கொண்டே வந்தாள். கையில் ஒரு மலேயாள வாரப்பத்திரிகை இருந்தது.

"இந்தக் கதையைப் படித்துப் பாருங்கள்" என்று சொல்லி இதழை விரித்தாள்; அவள் இதழ்களில் ஒளிக்கீற்று பரவியது.

"நீ கதை எழுதி யிருக்கிருயா?"

"இல்லே?"

"எனக்கு மலேயாளம் பேசவருமே தவிர வாசிக்கத் தெரியாது"

"பேசுவதற்கு எப்படிப் பழகிக் கொண்டீர் கள்?"

"ஐந்து வருஷங்களாகத் திருவனந்தபுரத்தில் படித்ததால் பேசப்பழகிக் கொண்டேன்."

அதற்குள் பாட்டி 'சனி' மாதிரி வந்து விட்டாள்.

"தம்பி, அவளது மாப்பிள்ளை கதை எழுதி யிருக்கான்" என்ருள் பாட்டி. என் இதயத்தில் கூடை நெருப்பைக் கொட்டிய சூடு ஏற்பட்டது.

"மந்தாகினிக்குக் கல்யாணமாகி விட் டதா?"

"இன்னும் 'புடவுடை' ஆகல்லே. ஆனல், எங்க வழக்கப்படி அறிவு தெரியாத வயதில் ஒரு கல்யாணம் நடக்கும். அப்போது பையன் பெண்ணின் கழுத்தில் தாலிகட்டுவான். அதுக்குக் 'கட்டு மின்னி' என்று பெயர். மந் தாவுக்கு அத்தை மகன் கோபிநாதன் அவ ளுக்கு 'கட்டுமின்னி' கட்டியவன். அவனுக்கு அவளைக் கொடுப்பதாக நிச்சயமாகி விட்டது என்ருள் பாட்டி. என் இதயத்தில் பலமாகக் குட்டு விழுந்துவிட்டது. திணறிப்போனேன்.

நாயர் சமுதாய வழக்கப்படி சிறுவயதில் 'கட்டுமின்னி' கட்டுவதுண்டு. ஆனல் 'கட்டு மின்னி' கட்டியவனுக்குத்தான் அந்தப் பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்பதில்லே. வேறு ஒருவனுக்கும் திருமணம் செய்து கொடுக்கலாம். அது பெற்ருேர்களேயும் பெண்ணேயும் பொறுத்தவிஷயம்.

அப்படியானல் இந்த சௌந்தரிய தேவதை எனக்குச் சொந்தமாகமாட்டாளா? எனக்கு உலகமே சுற்றியது. என் உடம்பெல்லாம் வியர்க்கத்தொடங்கியது. குளிர்ந்த நீர் என்று நினைத்துக் கொதிக்கும் நீரில் குதித்து விட் டது போல அவஸ்தைப்பட்டேன்.

"சாப்பிட வா தம்பி' என்ருள் பாட்டி.

"வரும் வழியில் சாப்பிட்டு விட்டேன்" என்று பொய்சொன்னேன். பெருமித உணர்ச் சியால் இதயம் விம்மும்போது, இதயம் வெடித்துவிட்டதுபோலாகிவிட்டது எனக்கு.

பாட்டியும் பேத்தியும் போய்விட்டார்கள். மந்தாகினியின் சிரிப்பு கீழே கேட்டது! ஆகா கொள்ளே கொள்ளும் மோகனச் சிரிப்பு! அது என்னைச் சித்ரவதை செய்தது. நான் செயலிழந்து உட்கார்ந்து விட்டேன்.

அவளே மனேவியாக அடையும் அந்த எழுத்தாளன் பாக்கியசாலி! அவனது கற்ப னைக்கு அந்தக்கன்னி .. ..

என் கவலேயை உணராத காலம் ஓடிக் கொண்டு இருந்தது. விடிந்ததும் முதல் வேலே யாக மேஸ்திரியிடம் சொல்லி வேறு வீடு பார்க்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தபிறகு கனத்த இதயத்தோடு படுக்கைக்குச் சென் றேன்.

பசித்தவன் பார்வைக்கு அந்தக் 'கனி' பலி யாகக் கூடாதல்லவா?

புடவுடை என்பது நாயர்களின் திரு மணத்தைக் குறிக்கும் சொல். தமிழர்களுக்குத் தாலி முக்கியம். அவர்களுக்குப் புடவை முக்கி யம். புடவை கொடுத்தல், என்பது தான் 'புடவுடை' என்ருகி விட்டது!

'கட்டுமின்னி' என்பது கட்டக்கூடிய தாலியைக் குறிக்கும்.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
T.S.R'S
GOKUL

பெண்களுக்கு மட்டும்

எஸ். விஜயா

குழந்தைகள் ஸ்நானம்

குளிர் காலமானாலும் வெயில் காலமானாலும் தினசரி குழந்தைகளைக் குளிப்பாட்டுதல் வேண்டும். பகல் 11 அல்லது 12 மணிக்கு வெந்நீரில் குளிப்பாட்டுவதே நல்லது. சோப்பில் கடினமானது, மிருதுவானது என இரண்டு வகைகள் உண்டு. மிருதுவான வகை சோப்பே குழந்தைகளுக்கு ஏற்றது. கிளிசரின் கலந்த சோப்புகள் மிருதுவான வகையைச் சேர்ந்தவையாகும்.

சோப்பை நேரடியாக குழந்தைகளின் சருமத்தின்மேல் தேய்ப்பதைவிட, ஒரு மிருதுவான கைக்குட்டையில் சோப்பைப் பூசி அக் கைக்குட்டையால் குழந்தைகளின் உடலில் சோப்புப் பூசுவது நல்லது. கையால் சோப்பைத் தேய்த்து அலம்புவதைவிட கடற்பஞ்சால் (Sponge) தேய்த்து அலம்புவதே சிறந்தது. சொம்பில் ஜலத்தை எடுத்து ஊற்றிக் குளிப்பாட்டுவதைவிட நீர் நிறைந்த தொட்டியில் உட்கார வைத்து உடலை அலம்பிவிடுவதே நல்லது. குழந்தைகளை அதிகபட்சம் 3 நிமிஷத்திற்கு அதிகமாகக் குளிப்பாட்டுவது கெடுதல் பயக்கும். ஸ்நானம் முடிந்ததும் ஈரத்தைத் துவட்டி கையால் உடல் முழுவதும் நீவிக் கொடுக்கவேண்டும் தோலுக்கு இரத்த ஓட்டம் ஏற்பட இது உதவும். தடவி முடிந்ததும் பவுடர் பூசலாம். சாம்பிராணிப் புகை காட்டுவதும் நல்லதுதான்.

பிறந்த குழந்தையை 100° எப் வெப்பமுள்ள நீரில் ஸ்நானம் செய்விக்கலாம். ஆனால் பிறகு நாளாக ஆக நீரின் வெப்பத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வர வேண்டும். 5 வது மாதத்தில் 85.9°, எப். வெப்பமுள்ள நீரே போதும் 5 வயதில் 50°. எப். வெப்பமுள்ள வெதுவெதுப்பான நீரே போதுமானது. குளிர்காலத்தில் ஒரு முறையும் வெயில் காலத்தில் இரு முறையும் குளிப்பாட்டலாம். வெயில் காலத்தில் வெதுவெதுப்பான நீரில் ஸ்நானம் செய்விப்பதே நல்லது.

வாஸ்லின் பொமேடு

இதைத் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருட்கள் தேவை -

லேனோலின்	...	1	அவுன்ஸ்
வெள்ளை மெழுகு	...	4	,,
,, வாஸ்லின்	...	16	,,
பர்கோமட் தைலம்	...	30	மினிம்
லவண்டர் ,,	...	15	,,
லெமன் ,,	...	10	,,

லேனோலினை உல்ஃபாட் (Wool fat) எனவும் சொல்லுவார்கள். முதல் மூன்று சரக்குகளும் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும். கடைசி மூன்றும் எஸ்ஸன்ஸ் கடைகளில் கிடைக்கும்.

முதல் மூன்று சரக்குகளையும் ஒரு ஜல பாத்திரத்திலிட்டு (Water bath) உருக்கவும். அவை எல்லாம் உருகியதும் ஒன்ருகக் கலக்கி அவற்ருேடு ஒன்றன் பின் ஒன்ருக மூன்று வாசனைத் தைலங்களையும் கலந்து கொள்ளவும். நல்லநிறம் வேண்டுமாஞல் எண்ணெயில் கரையும் வர்ணம் வாங்கி சிறிது எண்ணெயில் கரைத்து சேர்த்துக் கொள்ளவும். தைலம் கலந்த பிறகு அடுப்பை விட்டிறக்கி ஆறவிட்டால் அது இறுகி வாஸ்லின் பொமேடாகிவிடும்.

தெரிந்துகொள்ளுங்கள்.

(1) சுவற்றிற்கோ, கதவுக்கோ, ஜன்னலுக்கோ, வேறு மரச் சாமான்களுக்கோ பெயிண்ட் அல்லது வார்ணிஷ் பூசினல் அறை முழுவதும் அதன் நாற்றம் வீசுகிறதல்லவா? ஒரு வாளியில் ஜலம் நிரப்பி அதில் காய்ந்த புல்லை நிரப்பி வர்ணம் பூசிய இடத்தருகே வைத்து விடவேண்டும். இப்படிச் செய்தால் நாற்றம் வீசாது.

(2) அரிசியை அதிக நாள் வைத்திருந்தால் புழு பற்றிவிடுகிறதல்லவா? அரிசி கொட்டி வைக்கும் டின்களின் அடியில் வேப்பிலையைப் பரப்பி, அதன் மேல் அரிசியைக் கொட்டி மூடிவைத்தால் புழுப்பற்றுவதில்லை.

(3) தேங்காயைப் பாதி துருவிவிட்டு, அப்படியே வைத்துவிட்டால் துருவாத மறு பாதி கெட்டு விடுகிறது. ஒரு பாத்திரத்தில் ஜலம் விட்டு அதில் பாதி துருவிய தேங்காயைப் போட்டு விடுங்கள். ஜலத்தில் சிறிது உப்பும் சேர்த்து விடுங்கள். தேங்காய் கெட்டுப்போகாது. அடுத்தநாளும் உபயோகிக்க இயலாதுபோனல் பழைய ஜலத்தைக் கொட்டிவிட்டு புதிதாக ஜலம் நிரப்பி அதில் சிறிது உப்பைக் கரைத்துவிடுங்கள்.

அவரைக்காய் பக்குவ முறைகள்

நம் காய்கறிகளில் சிறப்பானதொன்று அவரைக்காயாகும். இதில் பச்சை அவரை, சிகப்பு அவரை, வெள்ளை அவரை, வெல்வெட் அவரை, கணு அவரை குட்டை அவரை, மொச்சை அவரை, ஆட்டுக் கொம்பு அவரை— இன்னும் இதுபோன்று ஏராளமான ஜாதிகள் உண்டு. நம்பக்கம் ஆடியில் நட்டால் தை மாதம் காய்காய்க்கிறது. கார்த்திகை மார்கழியிலும் ஓரளவு காய்ப்பதுண்டு. வங்காளத்தில் ஜுலை 15லிருந்து நவம்பர் 15 வரை, பஞ்சாபில் நவம்பர் 15 லிருந்து டிசம்பர் 15 வரை, மலைகளின்மேல் ஏப்ரல் 15 லிருந்து ஜுலை 15 வரை அவரை பயிரிடுகிருர்கள். ஆகையால் அதற்கேற்றபடி அப்பிரதேசங்களில் அவரைக்காய் கிடைக்கும் காலமும் மாறுபடுகிறது. பொதுவாக நம்நாடு முழுவதும் பயிராகும் ஒரு சத்துள்ள காய் இது. இரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில் இதில் ஜலம் 82.4, புரதம் 4.5 கொழுப்பு 0.1 உலோகசத்து 1.0 மாச்சத்து 10.0 கால்சியம் 0.05. பாஸ்பரஸ் 0.06, இரும்பு 0.0016 சத விகிதம் அடங்கி இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. வைட்டமின் ஸி. சத்தும் இதில் ஓரளவு உண்டு.

சோமாசி

பெரிய அவரைக்காய் அரை ராத்தல், நெய் அரைக்கால் படி, சர்க்கரை ஒரு ராத்தல், சிறிது ஏலக்காய், மைதா, கிஸ்மிஸ், முந்திரிப்பருப்பு, ரோஸ்வாட்டர் தேவை.

காயை வேகவைத்து நரம்பெடுத்து நெட்டு வாக்கில் கீறிக் கொள்ளவும். சர்க்கரையை இரண்டிழைப்பாகக் காய்ச்சிக் கொள்ளவும். ஏலக்காய், முந்திரிப்பருப்பு முதலியவைகளை பொடிசெய்துரோஸ்வாடர், கிஸ்மிஸ், சிறிதுசர்க்கரை சேர்த்துப் பிசைந்து கீறிய அவரைக்காயுள் செலுத்தி விடவும். மைதாவை உப்பிட்டுக் கரைத்து அதில் அவரைக் காயை முக்கி எடுத்து எடுத்து நெய்யில் பொரித்து எடுத்துக்கொள்ளவும்.

போண்டா

அவரைக்காய் அரை ராத்தல், உருளைக்கிழங்கு 2 ராத்தல், மைதா அரை வீசம்படி, கடலைமாவு வீசம்படி, நெய் மூன்று வீசம்படி, உப்பு, பச்சை மிளகாய், மஞ்சள், இஞ்சி, மல்லிக்கீரை சிறிது வேண்டும்.

காயை சிறு துண்டுகளாக நறுக்கி அதோடு உப்பு மஞ்சள்பொடி போட்டுக்கிளரி தனியே வைத்துக் கொள்ளவும்; உருளைக்கிழங்கை வேக வைத்து தோலுரித்து அதோடு இஞ்சி பச்சை மிளகாய், மல்லிக்கீரை கடைசியில் அவரைக் காய் சேர்த்துப் பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். மைதாவையும் கடலை மாவையும் கலந்து உப்பு, மிளகாய்பொடி சேர்த்து பஜ்ஜி மாவு போல் கரைத்து அதில் கிழங்கு உருண்டைகளைத் தோய்த்து நெய்யில் பொரிக்கவும்.

சிப்ஸ்

காயைக்கீறி உள்ளே உள்ள விதையை எடுத்து விடவும். பிறகு உப்பிட்டு வேகவைக்கவும். விதைகளை சாம்பாருக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அல்லது காயவைத்து மொச்சையாக உபயோகிக்கலாம். வேகவைத்த விதை நீக்கிய காயிலிருந்து நாரை உரித்து விட்டு வெயிலில் காயவைக்க வேண்டும். பிறகு டப்பிகளில் பத்திரப் படுத்தி வைத்துக்கொண்டு உருளைக்கிழங்கு சிப்ஸ் போன்று வேண்டிய போது பொரிக்கலாம்.

சகோதரிகள் உதவியவை

வி, சுந்தரவல்லி, பெரிய காஞ்சீபுரம்

பக்கோடா

கடலைமாவு அரை ஆழாக்கு, அரிசிமாவு ஒன்றரை ஆழாக்கு, பிஞ்சு அவரைக்காய் பத்து, எண்ணெய் ஐந்து பலம் வேண்டும்.

அரிசி மாவு கடலை மாவு இரண்டையும் ஒரு சிட்டிகை சோடா மாவு, சிறிது நெய். வேண்டிய அளவு உப்பு ஜலம் சேர்த்து பிசைந்துகொள்ள வும். அவரைக்காயை பொடியாய் நறுக்கி உப்பு சேர்த்துப் பிசைந்து மாவோடு கலந்து பக்கோடாவாக உருட்டிப் பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

குழம்பு வடாம்

கால்படி உளுத்தம்பருப்பை ஊறவைத்து நைஸாக ஆட்டிக்கொள்ளவும். அவரைக்காயை பொடியாக நறுக்கி அதோடு உப்பு மஞ்சள் பொடி, மிளகாய்ப் பொடி, கறிவேப்பிலை சேர்த்துப் பிசைந்து மாவோடு கலந்து வடாமாகத் தயாரித்துக் கொள்ளவும்,

சாதம்

ஆழாக்கு அரிசியைப் போட்டுப் பொல பொலவெனச் சாதத்தை வடித்துக் கொள்ளவும். 5 பலம் அவரைக்காயை நறுக்கி உப்பு மஞ்சள் பொடி சேர்த்துப் பிசைந்துகொள்ளவும். க. பருப்பு, உ. பருப்பு வகைக்கு 2 மேஜைக் கரண்டி, மிளகாய் 10, சிறிது காயம் இவைகளை எண்ணெய் விட்டு வறுத்து, துருவின கொப்பரை 2 மேஜைக்கரண்டி அவற்ளேடு சேர்த்துப் பொடித்துக்கொள்ளவும். வெண்கல உருளியில் கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு முதலிய வைகளை நெய் விட்டுத் தாளிதம் செய்து அதில் ஏற்கனவேயே நறுக்கித் தயார் செய்துவைத்துள்ள அவரைக்காயைப் போட்டு வதக்கவும். பாதி வதங்கியதும் இடித்து வைத்துள்ள பொடியில் பாதியை காயிலும், மறு பாதியை சாதத்திலும் சேர்த்துக் கிளரவும். பிறகு அவரைக்காயைச் சாதத்தில் கலந்து சிறிது உருக்கிய நெய், மல்லிக் கீரை, வறுத்த முந்திரிப்பருப்பு, வறுத்த குழம்பு வடாம் சேர்த்துக் கிளரி மூடிவைத்துப் பிறகு உபயோகிக்கவும்.

குமாரி ரெ. வேதவல்லி, ஸ்ரீரங்கம்

சித்திரான்னம்

அவரைக்காய் கால் வீசை, ரவை அல்லது புலவு அரிசி அரைக்கால் படி, மல்லி விரை, பட்டாணி வகைக்கு அரை வீசம்படி, கசகசா கடலைப்பருப்பு வகைக்கு 2 தேக்கரண்டி, வெந்தயம் கடுகு ஒரு தேக்கரண்டி, பெரிய கொப்பரைத் தேங்காய் ஒன்று, நெய், லவங்கப்பட்டை, பாதாம், முந்திரி, உப்பு, காயம் எலுமிச்சம்பழம் சில தேவை.

அவரைக்காயை வெட்டி அலம்பி நீர் வடிய விடவும். சிறிது நெய்விட்டு மிளகாய், வெந்தயம், பட்டாணி, லவங்கப்பட்டை, பாதாம், கசகசா, கடலைப்பருப்பு, காயம், கொப்பரை துருவலில் மூன்றில் ஒரு பங்கு, மல்லி இவைகளை பொன் நிறமாக வறுத்துப் பொடி செய்துகொள் ளவும். பிறகு ஒரு பாத்திரத்தில் கடுகு மிளகாய் தாளிதம் செய்து அதில் ஜலம் வடிந்த அவரைக் காயைப் போட்டு நன்ருகக் கிளரவும். காய் வெந்தபிறகு சிறிது உப்பும் நெய்யும் அதோடு சேர்த்து ஏற்கனவே தூள் செய்து வைத்துள்ள பொடியையும் கொட்டி கிளரவும். பிறகு பாக்கியுள்ள மூன்றிலிரண்டு பங்கு கொப்பரைத் துருவலை அதோடு சேர்த்துக் கிண்டி அடுப்பை விட்டு இறக்கிவிடவும். ரவையை நெய் விட்டு வறுத்து அது வேகும் அளவு ஜலம் தெளிக்கவும். வெந்த ரவை உதிர் உதிராக இருக்கவேண்டும். சிறிது உப்பு, வறுத்த முந்திரிப்பருப்பு, வதக்கிய அவரைக்காய், சிறிது நெய் எல்லாம் ஒன்ருகச் சேர்த்துக் கிளரிக்கொள்ளவும். புளிப்புக்கு வேண்டிய அளவு எலுமிச்சம்பழச் சாறு சேர்த்துக்கொள்ளலாம்.

குமாரி ஸி. சுலோசனு, கிழக்குத் தாம்பரம்.

மசாலா கூட்டு

அவரைக்காய் 5 பலம், உருளைக்கிழங்கு பெரியது 2, வெங்காயம் ஒருகைப்பிடி. சீரகம் ஒரு டீஸ்பூன், மிளகாய் வற்றல் 4, பச்சைமிளகாய் 2, மல்லி விதை 4 டீஸ்பூன், கடுகு 1 டீஸ்பூன், பெருஞ்சீரகம் 2 டீஸ்பூன், பூண்டு 4 பருப்பு, எண்ணெய் அல்லது நெய் 3 மேஜைக்சரண்டி, மஞ்சள், உப்பு, மல்லிக்கீரை சிறிது வேண்டும்.

மசாலைச் சாமான்களை விழுதாக அரைத்துக் கொள்ளவும். நெய்விட்டு ஜீரகத்தைப் பொரித்து அதோடு மசாலை விழுதையும் சேர்த்துக் கிளரவும். அவரைக்காயை நறுக்கி அவற்ருேடு சேர்த்து வதக்கவும். பிறகு வேண்டிய அளவு உப்பும் ஜலமும் சேர்த்து பாத்திரத்தை மூடி வேகவிடவும். காய் வெந்தவுடன் தனியே வேக வைத்து உரித்துத் துண்டு செய்து வைத்துள்ள உருளைக்கிழங்கையும் சேர்த்துச் சிறிது மாவும் கரைத்து குத்தி இறக்கி விடவும்.

ரொட்டிக் கூட்டு

அவரைக்காய் 5 பலம், பயத்தம் பருப்பு 1 ஆழாக்கு, வெங்காயம் 2 பலம், முள்ளங்கி அல்லது காரட் 1, தக்காளிப்பழம் 2½ பலம், தேங்காய் 1 பத்தை, மிளகு 2 டீ ஸ்பூன், ஜீரகம் 1 டீ ஸ்பூன், உளுத்தம்பருப்பு 2 டீ ஸ்பூன,

நேர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கு மிகுந்த கவனத்தோடு, சிறந்த சாதனமும் அவசியம். நன்கு வளர்ந்த கேசம், தானே பிரகாசிப்பதுடன் தான் அலங்கரிக்கும் முகத்தையும் பொலிவு பெறச் செய்கிறது. பார்ப்போர் மனத்தையும் கவருகிறது.

கூந்தல் வளர்ச்சிக்கு **கேசவர்த்தினி** ஒரு சிறந்த சாதனம் என்பதற்கு 20 வருடங்களாக மென்மேலும் பெருகி வரும் ஆதரவே ஒரு அத்தாட்சி. நீங்களும் பூரண பயன்பெற இன்றே இந்நன்னாளில் **கேசவர்த்தினி**யை உபயோகிக்க ஆரம்பியுங்கள்.

கேசவர்த்தினி

கேசவர்த்திலி பிராடக்ட்ஸ்

கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்

பச்சைமிளகாய் 4, மல்லிக்கீரை சிறிது வேண்டும்.

பருப்பை வேகவைத்து அதில் முள்ளங்கி அல்லது காரட்டை நறுக்கிப்போடவும். மிளகையும் உளுத்தம் பருப்பையும் நெய்யில் காந்தாமல் வறுத்து பச்சைமிளகாய், வெங்காயம், மல்லிக்கீரையை லேசாக வதக்கி அவற்றோடு தேங்காய், தக்காளிப்பழமும் சேர்த்து எல்லாவற்றையும் வெண்ணெய்போல் அரைத்துக்கொள்ளவும். பிறகு அதை அடுப்பில் வேகும் பருப்பு கிழங்கு கூட்டோடு மஞ்சள், உப்பு சேர்த்துத் தாளிதம் செய்து இறக்கிக்கொள்ளவும்.

குமாரி ஸி. சரோஜா, கிழக்குத்தாம்பரம்

எண்ணெய்க் குழம்பு

எண்ணெயை ஒரு பாத்திரத்தில் விட்டு காய்ந்ததும் அதில் நெடுக்காகக் கீறிய அவரைக்காய், உரித்த பூண்டு, நறுக்கிய வெங்காயம் கறிவேப்பிலை இவைகளைப் போட்டு வதக்கவும். காய் அரை வேக்காடானதும் இறக்கி விடவும். புளி ஜலம், திட்டமான உப்பு, மஞ்சள் பொடி கலந்து அடுப்பேற்றி அதில் வதக்கிய அவரைக்காய் முதலியவைகளைப் போட்டு வேகவிடவும். நன்கு வெந்ததும் கசகசா, தேங்காய் அரைத்துப் போட்டு தாளிதம் செய்து இறக்கிவிடவும்.

ஸ்ரீமதி ஹம்ஸா, என். எச். ரோடு, கோவை

பாயஸம்

சிறிது அவரைக்காயை வேகவை. அம்மியில் வைத்துத்தட்டு. நசுங்காத தோல் நார் முதலியவைகளை நீக்கிவிடு. சிறிது அவரைக்காய், நறுக்கிய வெங்காயம், கிராம்பு, ஏலக்காய் முதலியவைகளை நெய்யில் வதக்கித் தட்டிய அவரைக்காயோடு சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். சிறிது ரவையை ஜலம் சேர்த்துக் கஞ்சி காய்ச்சி துண்டு செய்த வெங்காயம், கிராம்பு, ஏலக்காய் முதலியவைகளை வதக்கி அக்கஞ்சியோடு கலந்து கொள்ளவும். சர்க்கரையை பாகு காய்ச்சி அதோடு வறுத்த முந்திரிப்பருப்பு, கிஸ்மிஸ் கலந்து கொள்ளவும். இப்பொழுது ரவைக்கஞ்சி சர்க்கரைபாகுப்,பிசைந்த அவரைக்காய் மூன்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

மார்ச் இதழில் முள்ளங்கிக் கிழங்கைப் பலவிதமாகப் பக்குவம் செய்யும் முறைகளை வெளியிடுவதாக இருக்கிறோம். சகோதரிகள் தங்களுக்குத் தெரிந்த புதுமையான முறைகளை எழுதி 15—2—60க்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பி வைத்தால் அவற்றையும் சேர்த்து வெளியிடுகிறோம்.

(தொழில் துணுக்குகள்) நீங்கள் கேட்டவை

டிசம்பர் '59 இதழில் வெளியாகியுள்ள "தாமிரப் பச்சையம்" பற்றி அதிக விவரம் கொடுக்கமுடியுமா? நானே அத்துறையில் ஈடுபட விரும்புகிறேன். இல்லாவிடில் அத்துறையில் ஆர்வமுள்ள என் நண்பர்களுக்கு பயனுள்ள அத்தகவல்களைக் கொடுக்க விரும்புகிறேன்.

— கே. பஞ்சாபகேசன்
"லெக்ஸ் போர்டு"
குன்னூர்.

தங்கள் ஆர்வத்தை அறிய மகிழ்ச்சி. டேராடூன் வன ஆராய்ச்சிக் கழகத்துக்கு எழுதினால் தங்களுக்கு வேண்டிய தகவல்கள் அனைத்தும் கிடைக்கும். அத்தொழிலில் இறங்குவதானால் தாங்கள் ஒரு முறை நேரே டேராடூன் சென்று வருவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

நான் ஒரு ஸ்கிரீன் பிரிண்டிங் ஹவுஸ் ஆரம்பிக்க விரும்புகிறேன். அதற்கான எல்லா வேலைகளும் எனக்குத் தெரியும். ஆனால் துணிக்குச் சாயம் தோய்த்தல், அச்சிடுதல் இவை இரண்டிலும் போதிய அனுபவமில்லை. ஆகவே அந்த விவரங்களைத் தெரிவிக்கக் கோருகிறேன். மேலும் இதற்கான புத்தகங்கள் தமிழில் இருந்தால் தெரிவிக்கவும்.

எல். ஜி. லாஜரஸ் (ஓவியர்)
சென்னை 23

அனுபவமில்லாது தொழில் ஆரம்பிப்பது விரும்பத்தக்கதல்ல. தாங்கள் ஈரோடு அல்லது ஸ்கிரீன் பிரிண்டிங் ஒர்க்கஸ் உள்ள வேறு ஏதாவது ஒரு இடத்தில் டிசைனராக வேலைக்கமர்ந்தால் சுலபமாக அவற்றைக் கற்றுக்கொண்டு விடலாம். தமிழில் இதற்கான நல்ல புத்தகங்கள் கிடையாது. சாயந் தோய்த்தலைப் பற்றிய விவரங்களை நாங்கள் வெளியிடுகிறோம்.

சபரிமலை ஐயப்பன்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே! அனுபவித்தவர்களுக்குத் தான் அதன் உண்மை புலப்படும். குளிர்ந்த முகம் காட்டி, அன்புடன் அழைத்தால், குழந்தை நம்முடன் கொஞ்சி விளையாடும்; நமக்குக் குதூகலமும் ஊட்டும். தெய்வமும் அப்படியே!

புண்ணியக்கோயில்கள் பலவற்றுள் ஒன்றாய்த் திகழும் சபரிமலையிற் குடிகொண்டுள்ள ஸ்ரீ தர்மசாஸ்தாவின் மூர்த்தி நிலையில் சைவமும், வைஷ்ணவமும் இணைந்திருப்பதுடன், சக்தியின் சைதன்னியமும் பொருந்தி இருக்கின்றது என்பது ஆன்றோர் கொள்கை.

சர்வேசனின் லீலா விநோதங்களில், அவதார மகிமைகளில் இக் கலியுகத்தில் மேலானதாய்க் கருதப்படுவது ஐயப்பனின்—தர்ம சாஸ்தாவின் திரு அவதாரமாகும். தாரகப் பிர்மமாய், சர்வ மங்கள ஸ்வரூபியாய் - கலியுக வரதனாய் இப் பூவுலக மாந்தர்களைக் காத்து அவர்களது அபிலாஷையை நிறைவேற்றி சம்சாரக் கடலைக் கடத்தி முக்தியளிப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கும் தர்ம குல தெய்வமான வீரமணி கண்டன், அருளைவீசி மக்களைக் கடாக்ஷித்து வருகின்றான் என்பது கேரள நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் கண்கூடாகத் தெரிந்த விஷயம்.

அவ்வாண்டவனின் பெருமையும் மகிமையும் கேரள நாட்டில் மட்டுமல்லாது இதர தேசங்களிலும் பரவியுள்ளன என்பது நாடோறும் அவ்வீசனின் குளத்துப்புழை, ஆரியங்காவு, அச்சன் கோவில் சபரிமலை என்னும் புண்ணியக் கோயில் முதலியவைகளில் தரிசனத்திற்குப் பெருகி வரும் எண்ணற்ற பக்தர்களால் தெரியவரும்.



சபரி வாழும் நீலிமலை

சபரிமலை, ஸஹ்ய பர்வதத்தில் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் மத்தியில், மேற்குக் கடற்கரையிலிருந்து ஐம்பது மைல் தூரத்தில் இருக்கிறது. இக் காட்டில் பலவிதக் கொடிய விலங்குகள் வசிக்கின்றன. தவிரவும், இங்கு யாத்திரிகர் செல்வதற்கு சரியான பாதை இல்லை என்பது குறிப்பு. ஆலயம் மணிமலைத் தொடர்ச்சியில் 'ரன்னி ரிசர்வ்' காட்டுப் பிரதேசத்தில் உள்ளது.

சாஸ்தாவின் வரலாறும் அவரது பெருமையும்:

சாஸ்தா என்பது புத்தருக்குப் பௌத்த நூலில் கூறப்பட்டுள்ள பெயர். பிற்காலத்தில் சாஸ்தா இந்துமதக் கடவுளாகக் கருதப்பட்டு வந்துவிட்டதாகக் கூறுவாருமுளர். சபரிமலைக்கோயில் புத்த பகவானுடைய பழமையான கோயில் என்று வரலாறுகள் கூறுகின்றன. பலர், சாஸ்தா ஹரி ஹர புத்திரர் என்று கூறுவர். அமிர்தம் கடைந்து எடுத்த காலத்தில் திருமால் மாயமோகினி வடிவெடுத்துத் தேவர்களுக்கு அமுதம் பங்கீடு செய்தார்.

"விஞ்சை வானவர் சாரணர் சித்தர்
வியந்து துதி செய்ய பெண்ணுருவாகி
அஞ்சுவை யமுத மன்றளித்தானை"

என்ற திருமங்கை மன்னரின் பாடல் மோகன அவதாரத்தைப்பற்றிக் கூறுகிறது. மாயமோகினியின் அழகிலே தம்மைப் பறிகொடுத்தார் சிவபெருமான். மோகன வேஷத்துத் திருமால், சிவபெருமான் ஆகியோர் கூட்டுறவால் பிறந்தவரே சாஸ்தா என்கிற ஐயப்பன். 'சாத்தனை மகனாக வைத்தார்' எனக்கூறும் அப்பர் தேவாரம்.

மலையாளத்து ஐயப்பனும் தமிழகத்து ஐயனாரும் ஒருவரே! மலையாளத்திலும், தமிழகத்திலும் சாத்தன் எல்லோர்க்கும் தெய்வமாகக் கருதப்பட்டமை நன்கு தெரியவரும். பரசுராமர் கேரள ராஜ்யத்தை ஸ்தாபித்த பிறகு கிழக்கு எல்லையில் சாஸ்தா கோயில்களை நிறுவினர் எனக்கூறும் 'கேரளோற்பத்தி'. மலைநாட்டு எல்லையை அந்நியரிடமிருந்து காப்பதற்குச் சாஸ்தாவிற்குப் பூஜை முதலியன செய்து அவரைத் திருப்தி செய்வது நெடுநாளையப் பழக்கமாய் இருந்தது. இந்த சாத்தன் அல்லது சாஸ்தா வேதகாலத்துக்கு முன்னரே வழங்கி வந்த பழந் தெய்வம். பின்னர் வேதமதமும், பழைய திராவிடமதமும் இணைந்த காலத்தில்

இவர் ஹரிஹர புத்திரராகக் கருதப் பட்டார்.

பிங்கல நிகண்டு சாஸ்தாவின் பெயர்களைத் தொகுத்து மிக அழகாகக் கூறுகிறது. "சாதவாகனன், கோழிக்கொடியோன், சாத்தன், வெள்ளையானை வாகனன், காரி, செண்டாயுதன், கடல்நிறவண்ணன், பூரணை கேள்வன், புட்கலைமணாளன், ஆரியன், அறத்தைக் காப்போன், யோகி, ஹரிஹர புத்திரன், ஐயன்பெயரே" என்று கூறுவதினால் அறியலாம். பூரணை, புட்கலை என்ற இரு மனைவியர் உளராதலின் பூரணைகேள்வன், புட்கலைமணாளன் என்றும், கோழிக்கொடி உடையவராதலால் கோழிக்கொடி உடையோன் என்றும், வெள்ளையானை வாகனம் உடையவராதல் பற்றி வெள்ளைவாரணன் என்றும் அழைக்கப்படுகிறார்.

சாஸ்தா அறத்தைக் காக்கும் தரும தேவதையாகவும் யோகியாகவும் கருதப்பட்டார். அவர் கையில் ஒரு செண்டு ஆயுதமாக விளங்கும். சாஸ்தா அளித்த செண்டை கரிகாலன் என்னும் மன்னன் இமயத்தின்மேல் எறிந்தான் என ஒரு வரலாறு மலையாள நாட்டில் கூறப்பட்டு வருவது கண்கூடு. இதனை,

"கச்சி விளக்கைச் சிவகாமக் கோட்டங்காவல்
மெச்சியினிதிருக்கும் மெய்ச்சாத்தன்—கைச்
செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரி திரித்த செண்டு."

என்ற பழைய பாடல் இதனை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

"சீரார் செம்புழுதிக் காப்பிட்டுச்—செங்குறிச்சித்
தாரார் நறுமாலை சாத்தற்குத் தான் பின்னும்
நேராதன நேர்ந்தாள்" (16-17 சிறிய திருமடல்)

என்று திருமங்கை மன்னர், குறிஞ்சிமாலையணிந்த சாத்தனை, நாயகி வழிபாடு செய்வதைக் கூறுகிறார். புறமதம் தொழாளாகிய

அழுதையாற்றின் கரையில் தங்கியிருக்கும் சிறு குடில்

அநங்கை காரியசித்தியை முன்னிட்டுச் சாத்தனை வழிபட முன்வந்தாள் என்று கூறுவதிலிருந்து ஆழ்வார் காலத்தில் இத்தெய்வ வழிபாடு இருந்ததை ஒருவாறு உணரலாம்.

மேலும், சேரமான்பெருமாள், சுந்தரமூர்த்தி நாயனாரோடு கைலாயத்துக்கு எழுந்தருளி அங்குச் சிவபெருமான் முன்னால் திருக்கைலாய ஞான உலா என்ற பிரபந்தத்தை அருளிச் செய்தார். அப்போது அங்கிருந்த சாஸ்தா அப்பிரபந்தத்தை நினைவில் வைத்திருந்து தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அருளினார் என்று கூறுவர். அவர் பிரபந்தத்தை வெளியிட்ட இடம் திருப்பிடவூர் என்பது.

தவிர, காவிரிப்பூம்பட்டினத்தில் திருமால், சிவன், பலராமன், அருகன் முதலானோர் கோயில்களோடு சாஸ்தாவின் புறம் பணையான் கோட்டமும் இருந்ததாக இளங்கோ வடிகள் தாம் பாடிய சிலப்பதிகாரத்தில் கூறுகிறார். எனவே, ஏனைய தெய்வங்களோடு ஒப்பவைத்துச் சாஸ்தா வணங்கப் பட்டமை தெளியலாம்.

'புறம் பணையான்' என்பதால் ஊருக்குப் புறம்பே கோயில் கொண்டவன் என்பது அறியக்கிடக்கின்றது. தமிழ் நாட்டில் ஐயனார் கோயில்கள் பரந்தவெளியில் ஊருக்குப் புறம்பே உள்ளதை இன்றும் காணலாம். உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. ஐயனாருக்கு ஆட்டுக்கடாபலி முதலியவை கொடுக்கும் வழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. இதனால், பிராமணர்கள் இத்தெய்வத்தை வணங்கும் வழக்கம் இல்லை என்பர். ஆனால், பெரும்பாலும் இவ் வழக்கம் திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்டங்களில் இன்றும் நடந்து வருவது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இதற்குச் சான்றாக 'மாடலன்' என்னும் மறையவன் சாஸ்தாவை வழிபட்டு முற்பிறப்பை அறியும் வல்லமை பெற்றான் எனக்கூறும் சிலப்பதிகாரம். ஆழ்வார், நாயன்மார் காலத்திலும் சாஸ்தா வழிபாடு இருந்ததாக அறியக் கிடக்கிறது.

'சாஸ்தா என்பது புத்தரே' என்பது பௌத்தமதத்தினரின் கொள்கை. புத்தரின் பெயர்களில் சாஸ்தாவும் ஒன்று என்று 'அமரகோசம்' அறுதியிட்டுக் கூறுகிறது. விநாயகர் என்ற பெயரும் புத்தருக்கு உண்டென்று 'அமரகோசம்' மேலும் வலியுறுத்துகிறது. எனவே பெயர் ஒற்றுமையைக்கொண்டே புத்தரும் சாஸ்தாவும் ஒன்றென்று கூறுவது தவறுதலாகும். பௌத்தர்கள் மூன்று சரணங்கள் கூறுவர். 'புத்தம் சரணம் கச்சாமி' என்பது அவற்றுள் ஒன்று. 'சாமி சரணம் ஐயப்பா!' என்பர் சாஸ்தா வழிபாட்டினர். இப்பொது

முறையால் சாஸ்தாவும் புத்தரும் ஒருவரே என்று வாதாடுவோரும் உண்டு. ஆனால், சரணம் கூறுவது எல்லா மதத்தினருக்கும் பொதுநியதி. அது ஒருவருக்கும் சொந்தமில்லை; சொந்தம் பாராட்டவும் முடியாது.

மேலும் மனித சஞ்சாரமில்லாத காட்டுப் பிரதேசத்தில்தான் புத்த ஆலயங்கள் அமைந்துள்ளன. எனவே, சாஸ்தா, புத்த மதத்தின் பின்னாள் சின்னம் என்பாரும் உளர். புத்த மதம் அஹிம்ஸா தத்துவமுடையது; புனித வாழ்க்கையை வற்புறுத்துகிறது; ஜாதிபேதத்தைக் கண்டிக்கிறது. எனவே இரு மதங்களும் ஒன்றென்பார். ஆனால், துருவிப்பார்ப்போமாயின், இவை எல்லா மதங்களுக்கும் பொதுவான கொள்கைகள் என்பது சொல்லாமலே எளிதில் விளங்கும்

சாஸ்தா, மலையாள நாட்டில் யுத்த தேவதையாகக் கருதப்படுகிறார். வீரர்கள் போருக்குப் புறப்படுமுன் சாஸ்தாவிற்குப் பூஜைகள் செய்கின்றனர். இதனை 'பாணு' என்று மலையாளத்தில் வழங்கி வருவது கண்கூடு. யுத்த தேவதையான சாஸ்தா, அஹிம்ஸா மூர்த்தியாக–போதி சத்துவராக இருக்க முடியாது. உருவத்திலும் சாஸ்தாவின் பிம்பத்திற்கும் புத்தர் சிலைக்கும் வேற்றுமைகள் எவ்வளவோ உண்டு. சாஸ்தா, தமிழ் நாட்டு ஐயனாரின் வடிவானவர்.

புராண இதிகாசங்களில்:-

மத்திய திருவாங்கூரில் பந்தளம் அரசனுக்கு நெடுநாள் மகப்பேறு இல்லாமலிருந்தது. மன்னன் பார்வதி பரமேஸ்வரனை நோக்கி மிகவும் தவம் செய்தான். ஈசனின் கிருபா கடாக்ஷம் அவன்மீது விழுந்தது. ஹரிஹரபுத்திரனாய்த் திருவவதாரம் செய்தான். வேந்தன் காட்டிற்கு வேட்டைக்கு வரும் சமயத்தில் குழந்தையாகக் கிடந்தான். அதனை எடுத்து மன்னன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தான். ஈசனும் பந்தள பூபாலனிடம் பாலகனாய் சேவகம் செய்து வந்தான்.

சில ஆண்டுகள் உருண்டோடின.

இப்பொழுது பந்தள பூபாலனுக்குப் பட்டமகிஷியிடம் ஒரு ஆண் மகவு பிறந்தது. இதனால் பட்டத்திற்கு யார் உரியவர் என்ற கேள்வி எழுந்தது. இதனால் பட்ட மகிஷி அசூயையுற்று காட்டில் கிடைத்த மகன்மீது வர்மம் பாராட்டினாள். அதாவது, தனக்கு கொடிய தலைவலி இருப்பதாகவும் அதைத் தீர்க்கப் புலிப்பால் கொண்டுவந்தால் உடன் தீர்ந்துவிடுமென்றும் சொல்லி நம் பாலகனைக் காட்டிற்கு அனுப்பத் திட்டமிட்டாள். இதற்கு அனுசரணையாகப் பந்தள மன்னனும் உடன்பட்டான். பாலகனோ இச்சமயத்தை எதிர்பார்த்து இருந்தானாதலால் உடனே பெற்றோரிடம் விடைபெற்றுக் கானகம் சென்று தாம் எடுத்த அவதாரத்தைப் பூர்த்தி செய்யக் கருதினான்.

சர்வேஸ்வரனின் கட்டளைப்படி மண்ணில் மானிடனாய்ப் பிறந்து திரும்பவும் கானகம் வந்ததைக்கண்ட தேவர்களும் பூதகணங்களும் ஓடோடியும் வந்து ஐயப்பனை எதிர்கொண்டழைத்துத் தங்கள் துயரைக் கூறினர். ஐயப்பனும், தேவர்களின் துன்ப நிவர்த்திக்காக 'மகிஷமுகி' என்னும் அரக்கியைக் கொன்று பின் தேவர்களை புலிகளாக உருமாறச் சொல்லி, அமரேசனாகிய வேங்கையின் மீதேறிக்கொண்டு பந்தள நாட்டையடைந்தான். ஐயப்பனின் வருகையைக்கண்ட நகர மாந்தர்கள் நடுநடுங்கிக் குய்யோ முறையோ என்று ஓலமிட்டலறினர். பின் பெற்றோர்களைக்கண்டு வேண்டிய புலிப்பாலைக் கறந்து கொள்ளும்படி சொல்லவே அவர்களும் ஐயப்பனின் காலில் விழுந்து வணங்கி பயத்தை நீக்குமாறு வேண்டினர். அப்படியே புலிக்கூட்டம் மறைந்தது. ஐயப்பனும் இன்னும் பல ஆச்சரியமான செயல்கள் காட்டி மறைந்துவிட்டார். பின் தம்முடைய வளர்ப்புத் தகப்பனாரைச் சபரிமலையில் தமக்கொரு ஆலயம் கட்டிக் கொடுக்கும்படி சொல்லிச் சென்றார் என்றும், அதன்படியே ஆலயம் கட்டப்பட்டதென்றும் வரலாறுகள் கூறும். இதனையே கேரள மக்களும் கர்ணபரம்பரையாகச் சொல்லி வருகிறார்கள். இன்னும் இக்கோயிலின் நிர்வாகம் பந்தள மன்னர்களின் சந்ததியாரிடமே இருந்து வருகிறது. விலையுயர்ந்த ஆபரணங்களும் இவர்களிடமே உள்ளன என்பது குறிப்பு.

சபரிமலைக்கோயிலுக்குச் செல்பவர்கள் சில முறைகளையும் ஒழுக்கங்களையும் கைக்கொள்ளவேண்டும். சிந்தையிலும் செயலிலும்

அழுதையாற்றில் யாத்திரிகர்கள் நீராடுதலும் கல்லெடுத்தலும்

புனிதர்களாக இருக்கவேண்டும். ஐயப்பனை நினைத்து நல்ல குருவினைப் பணிந்து அவன் ஆசிபெற்று அவன் கைவழியாக ஒரு மாலை, அது துளசிமணிகளாலோ அல்லது ருத்ராக்ஷத்தினாலோ செய்யப்பட்டதாக இருக்கலாம். வாங்கிக் கழுத்தில் அணியவேண்டும். மாலையணிந்த நாளிலிருந்து ஒரு மண்டலம் வரை காய்கறி ஆகாரம் உண்டு அஹிம்சா முறைகளைக் கையாளவேண்டும். நோன்பு நூற்போர் யாவரும் பிரம்மசரியத்தை நன்கு காப்பாற்றவேண்டும். பெண்பாலுள்ள இச்சைகளும் சுகங்களும் மற்றும் செய்கைகளும் வெறுக்கவேண்டும். தன்னைப்போல் விரதம் அனுஷ்டித்து வருபவரை ஐயப்பன் என்றே கருதி வழிபடவேண்டும்.

யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன் இடுப்பில் கறுப்புக் கச்சையை அல்லது வர்ண ஆடையைக் கட்டிக்கொள்ளவேண்டும். சிலர் கையில் ஒரு முக்கோல் வைத்துக்கொள்ளுவதுமுண்டு. அதனுடன் ஒரு பை இருக்கும். அப் பையில் இரண்டு அறைகள் இருக்கும். ஒரு அறையில் ஐயப்பனுடைய அபிஷேக நைவேத்தியத்துக்கு வேண்டிய சாமான்கள் வைக்கவேண்டும். தவிர, பிரதானமாக நெய் நிறைந்த தேங்காய் ஒன்று கொண்டுவரவேண்டும். மற்றொரு அறையில் யாத்திரிகர்களுக்கு பதினைந்து நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அடங்கி இருக்கும். அந்தப் பையைக் கட்டுவதற்குக் 'கெட்டு முறுக்கு' என்று பெயர். அந்தப் பையைத் தலையில் வைத்துக்கொண்டு ஐயப்பன் நினைவோடு யாத்திரை செய்யவேண்டும். பக்தர்கள் தலையில் தாங்கிவரும் அந்தக் கெட்டு 'இருமுடிக்கெட்டு' அல்லது 'திருமுடிக்கெட்டு' என்று சொல்லிவருவது கண்கூடு. யாத்திரிகர்கள் அடிக்கடி பையை வணங்கி வழிபாடு செய்வார்கள். ஜாதி பேதமன்னியில் எல்லோரும் ஒருவருக்கொருவர் பழகிவருவார்கள்.

சபரிமலை செல்லும் யாத்திரீகர்கள்

சபரிமலைக்குப் புனலூரிலிருந்தும் கோட்டயத்திலிருந்தும் போகலாம். யாத்திரிகர்கள் எல்லோரும் எருமேலிக்கு வந்துதான் பொதுவாக யாத்திரையைத் தொடங்குவார்கள். மலை மேடுகளிலும், காட்டிலும் நடக்க வேண்டி இருப்பதால் ஒரு தடியை உதவியாகக்கொண்டு செல்வோருமுண்டு.

எருமேலி கடந்ததும், பக்தர்கள் யாவரும் 'காளைக்கெட்டி' என்னும் இடத்தையடைந்து அங்கு வந்தனைகளும் வழிபாடுகளும் செய்து, அவ்விடம் விட்டு, அலசையாற்றின் (அழுதையாறு) கரையையடுத்து அவண்தாவள மடித்து, அத்தீர்த்தத்தில் குளித்து, தோத்திரம் முதலானவைகள் செய்து உணவருந்துவர். நதியில் மூழ்கிக் குளிக்கையில் அதிலிருந்து ஒரு கல் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்வர். மஹிஷியின் உடல் வளராமல் இருப்பதற்கு அமரர்கள் கற்களை எறிந்து மூடியிருப்பதால் அவ்வுடல் கிடக்கும் கல்லிடுங்குன்றின் மீது போட்டு வணங்கவேண்டும். பின் அங்கிருந்து 'உடும்பாறை' என்னும் மலையின் உச்சியை அடைந்து பூஜைகள் செய்து பெருங்காடு வழி நடந்து 'கரிமலை' வந்து அங்குள்ள 'கரியிலைத்தோடு' என்னும் கால்வாயில் குளித்து ஐயப்பனை நினைந்து வணங்கவேண்டும். பின் அங்கிருந்து 'பம்பாநதி'க்கரையை அடைந்து, அங்கு சந்தோஷ மனத்தினராய் தாவள முறைப்பித்து தேவகங்கையில் மூழ்கி நித்திய கருமங்களும், பிதிர் கருமங்களும் செவ்வனே நடத்தி பூஜைகளும் ஸமாராதனைகளும் செய்து பம்பை விளக்கேற்றி ஐயப்பன் நினைவாய் இராப்பொழுதைக்கழிப்பர். இங்குதான் யானை முதலிய கொடிய விலங்குகள் வாசம் செய்கின்றன. ஆனால், அவைகள் பக்தர்களிடம் நெருங்குவதில்லை. பக்தர்களைக் கண்டவுடன் கூட்டம் கூட்டமாய் விலகிச் சென்றுவிடும். புலிகளும் சிறுத்தைகளும் அப்படியே!

மறுநாள், ஸ்நானம் செய்து உணவு முடித்து அங்கிருந்து புறப்பட்டு சபரிவாழும் நீலமலையை (நீலிமலை என்பாருமுண்டு) அடைந்து சபரி தவம் செய்யும் இடத்தையடைந்து அவளை வணங்கி, வழிபட்டுப்பின் மேலே செல்லவேண்டும். அங்குள்ள சரங்குற்றி என்னும் அரையால விருக்ஷத்தையடுத்து அன்பர்கள் தற்காப்புக்காகக் கொண்டுவரும் அம்பு, கதை முதலியவைகளை அங்கு எறிந்து விட்டு மேலே நோக்கினால் சபரிமலைக்கோயில் தென்படும். பக்தர்கள் ஒவ்வொருவரும் ஆனந்தப் பரவ

சத்துடன் ஆலயத்தை அடைகிறார்கள். மகர சங்கராந்தியன்றுதான் இங்கு பார்க்க வேண்டியவை. அன்று பக்தர்களின் கூட்டம் கணக்கில் அடங்காது.

ஆலயத்தின் சிறப்பு:-

சபரிமலைக் கோயில் ஒரு சதுரமைல் பரப்புடையது. அதைச்சுற்றிலும் அகன்ற அகழி இருக்கிறது. ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் கருப்பசாமி, கடுத்தசாமி கன்னி மூலையில் கணபதி, வாயு மூலையில் மாளிகபுரத்துப் பகவதி, வட பக்கத்தில் வாபகர சாமி முதலிய பரிவாரத் தேவதைகள் எழுந்தருளியிருக்கிறார்கள். சாஸ்தாவின் சிலை 18 படிக்கட்டுகளுக்குமேல் 25 சதப்பரப்புள்ள இடத்தில் இருக்கிறது. இப்படிகள் மிகப் புனிதமானவைகளாகக் கருதப்படுகின்றன. அதனால், யாத்திரிகர்கள் இதனை "பதினெட்டாம்படியே சரணம் ஐயப்பா!" என்ற கோஷமிட்டு மிகப் பயபக்தியுடன் வழி படுவார்கள்.

சபரிமலை ஐயப்பன் தலையில் கிரீடம் அணிந்து, யோகாசனராய் தவக்கோலத்துடன் காட்சியளிக்கிறார். இவ்வாலயம் பந்தள அரசர்கள் கட்டியது. இவர்கள் மதுரைப்பாண்டிய மன்னரது கிளையினர் என்பர். மேலும், கோயில் வருமானத்தில் இவர்களுக்கு ஒரு பங்கு உண்டு. சுவாமியின் ஆபரணங்கள் இவர்களிடமே உள்ளன. விழாக்காலத்தில் அவைகள் மிக்கபந்தோபஸ்துடன் மலைக்குக் கொண்டுவரப்படும்.

மலையாளத்திலுள்ள பதினெட்டுப் புண்ணிய கோயில்களில் அதுவும் மலை உச்சியில் இருந்து நாட்டைக் காத்து வருவதாக ஐதீகம். சபரிமலையில் யோகநிலையில் யுவனாகக் காட்சியளிக்கிறார். ஆச்சாள் கோயிலில் (ஆரியங்காவு) அரசராக வீற்றிருக்கிறார். எருமேலியில் புலிவாகனராகவும், காந்த மலையில் ஜோதி சொருபராகவும் ஐயப்பன் காட்சி கொடுக்கிறார். இந்தச் சாஸ்தா வட இந்தியர் அறியாத ஒரு தெய்வம். பாஷண்ட சாஸ்திரங்களை விவரிக்கும் சாஸ்தா ஒரு யோகி. மக்களுக்கு இடையில் எழுந்தருளியிருக்கிறார். தர்மத்தைப் பாதுகாப்பவர் என்ற முறையில் தர்ம ராஜ்யமான மலையாள நாட்டில் பரசுராமரின் ஆணைப்படி காத்து வருகிறார். அதனால் திருவாங்கூர், கொச்சி இராஜ்யத்தின் முன்னாள் ராஜ குடும்பத்தினர் இவ்வாலயத்துக்கு வருஷந்தோறும் வேண்டிய உதவிகள் செய்து வருவது நாடறிந்த உண்மை. ★

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ. எண் 99 ... 214 & 251 மேலமாசிவீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை - 1.

தொடர் கதை

வஜ்ர வீணை

கே. சுந்தராம்பாள்

அத்தியாயம் 5

வண்டியிலிருந்து இறங்கிய பாமினி வில்லிலிருந்து விடுபட்ட அம்பெனப் பாய்ந்து சென்றனள் தாயின் பக்கத்திற்கு. கண்களை மூடியபடி படுத்திருந்த தாயின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். இவள் உட்கார்ந்த அதிர்ச்சியில் கண்விழித்த காத்தியாயனி "வந்துவிட்டாயா பாமினி! நீ போனகாரியம் வெற்றிகரமாக முடிந்து விட்டதா?" என்றாள்.

"அம்மா! என்னை மன்னித்துவிடு. ஒரு வித ஆவேசத்தில் இப்படி நடந்துகொண்டு விட்டேன். உன்னை இந்த நிலைமையில் விட்டுவிட்டு நான் சென்றது மன்னிக்க முடியாத குற்றந்தானம்மா" என்று தாயின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினள். மகளின் தலையை வருடிய படியே "நீ ஒருகுற்றமும் செய்யவில்லை; நேர் மையான முறையைத்தான் கையாண்டாய். சாகும்தருவாயில் தாயின் மன பாரத்தைக் குறைத்து விட்டாய். அதுல்யன் வரமறுத்து விட்டானு? உடைமைப்பொருளை உடைய வரிடம் சேர்த்துவிட்டாயா?" என்று தங்கி வரும் மூச்சிற்கிடையே கேட்டாள்.

தாயின் மூச்சுத் திணறலைக்கண்ட பாமினி சட்டென நிமிர்ந்து "அம்மா! உனக்கு என்ன செய்கிறது? ஒருமாதிரியாக மூச்சு விடுகிறுயே" என்று கேட்கும் பொழுதே "அம்மா! உங்களுக்கு என்ன உடம்பு?" என்று கேட்டான் சசி, பாமினிக் குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டு.

"அப்பா! சசி! மூச்சுத்திணறுகிறது; சரி உன் மனிதர்களைப் பார்த்தாயா?"

"என் மனிதர்களா? அப்படீன்னு நீங்கள் யார்? நான் யார்? நான் யார்?" என்று திரும்பத் திரும்பச் சொல்ல ஆரம்பித்தான்.

"நீங்கள் என் அண்ணன், இதோ அம்மா வைப் பாருங்கள்" என்று அவன் கவனத் தைத் திருப்பினுள்.

"பாமினி! டாக்டர் எங்கே? கூப்பிட்டு அம்மாவைப் பார்க்கச் சொல்லு."

இதற்குள்ளாகவே நிலைமையைப் புரிந்து கொண்ட டாக்டர் ஊசிக்குழாயில் மருந்தை ஏற்றிக்கொண்டு நோயாளியின் அருகாமை யில் வந்தார்.

"டாக்டர்! இந்த ஊசி எனக்கு சில மணி நேரம் பேசும் சக்தியைக் கொடுக்குமா?" என்றுள் காத்யாயனி.

"பேசமட்டுமென்ன, எழுந்து நடமாடும் சக்தியைக்கூட கொடுக்கும்."

"நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் தொழில் முறை இவ்விதந்தானே பேச வைக்கும். நடமாடும் ஆசையை என்றே விட்டு விட்டேன் டாக்டர்! சிறிது நேரம் தெளிவாகப் பேசும் சக்தி மட்டும் கொடுத் தால் போதும்.!

ஊசியின் மருந்தைக் கையில் ஏற்றி விட்டு "நீங்கள் நாளைக்காலையில் சாவகாச மாகப் பேசலாம். ஆனுலும் இப்பொழுது பேசவேண்டும் என்ற தீவிர எண்ண மிருக்குமானல் பேசுங்கள். நான் தடுக்க வில்லை?" என்றுர்.

"வந்தனம் டாக்டர்" என்று சொல்லி விட்டு பாமினியைப் பார்த்து "அதுல்யம் வர மறுத்து விட்டானு?" என்றுள்.

"எல்லோரும் வந்திருக்கிறுர்கள்; கூப்பிடு கிறேன்" என்றுள் பாமினி.

"பாமினி! பால்காய்ச்சி வைக்கச்சொல்லி யிருக்கிறேன். பழங்களும் வாங்கி வைத் திருக்கிறது. முதலில் எல்லோருக்கும் பாலை

யும் பழத்தையும் கொடு, பிறகு என்னிடம் அழைத்துவா" என்றாள்.

தாயின் விசித்திரமான மாறுதலைக்கண்டு திகைப்படைந்தாலும், நிலைமையைச் சமாளித்துக்கொண்டு தாயின் கட்டளையை நிறைவேற்றச் சென்றாள்.

வெளியே சென்ற டாக்டர், அதுல்யரிடம் தனிமையில் ஏதோ சொன்னார்.

"அட கஷ்டமே! தேவி! இதுவும் உன் சோதனையா?" என்று எண்ணியவராகக்காத்தியாயனியின் கட்டிலுக்கருகில் வந்து நின்றார். "வா! இப்படி உட்கார்" என்று கட்டிலின் வலது பக்கத்தில் தனது மார்புக்கு நேராகச்சுட்டிக் காட்டினாள். மூன்றுபேர் தாராளமாகப் படுத்துக்கொள்ளக் கூடிய அளவுள்ள கட்டிலின் நடுவில் காத்தியாயனி படுத்திருந்ததினால், இரண்டு பக்கமும் மனிதர்கள் தாராளமாக உட்காரக்கூடிய அளவு இடமிருந்தபடியினால் அவள் காட்டிய இடத்தில் தயங்காமல் உட்கார்ந்தார் அதுல்யம். அவரைப் பின்பற்றி வந்த மேகலா, கலா, லெக்ஷ்மி மூவரும் வாயிற்படியின் அருகில் வந்து நின்றார்கள். அவர்களைப் பார்த்த காத்யாயனி,

"மேகலா! கலா! லெக்ஷ்மி! இப்படி வாருங்கள்; என் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று இடது பக்கத்தைச் சுட்டிக்காட்டினாள்.

தட்டில் பழங்களும், டம்ளரில் பாலும் வைத்து ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு தட்டை நீட்டினான் வேலைக்காரன்.

"எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். இப்பொழுதுதானே சாப்பிட்டுவிட்டு வந்தோம்" என்றார்கள்.

"கடந்ததை யெல்லாம் மறந்து மறையப் போகும் ஒரு ஆத்மா சாந்தியைப் பெறவேண்டும்; ஆத்மாவின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும், என்ற இரக்கம் வைத்து நீங்கள் சாப்பிடத்தான் வேண்டும்" என்றாள் காத்தியாயனி.

"இப்படி யெல்லாம் பேசாதே; உனக்கு ஒன்றுமில்லை" என்றார் அதுல்யம்.

"என் நிலைமை எனக்குப் புரியாமலிருக்குமா? எது எப்படியானாலும் கவலைப்படவில்லை. என் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள். மேகலா! கண்ணே, கலா! அம்மா லெக்ஷ்மி! பாலையும் பழத்தையும் சாப்பிடுங்கள்; என் கடைசி வேண்டுகோள்" என்று திணறிப் பேசியபடி வேண்டினாள் காத்யாயனி.

"வருத்தப்படாதீர்கள், இதோ சாப்பிடுகிறோம்." என்று சொன்ன மேகலா ஒரு தட்டை எடுத்து சசியின் பக்கம் நீட்டி இந்தாப்பா சசி! நீயும் சாப்பிடு" என்றாள்.

பதில் பேசாமல் அவளை வெறிக்கப் பார்த்தவண்ணம் தட்டை வாங்கிக்கொண்டான்.

"அம்மா பாமினி! நீயும் எங்களுடன் சாப்பிட வேண்டும்" என்றாள் மேகலா.

"ஆகட்டுமம்மா!" என்று தட்டைக் கையிலெடுத்துக்கொண்டு, சாப்பிடாமல் தட்டைக் கையில் வைத்த வண்ணம் சசியையே பார்த்துக் கொண்டிருந்த கலாவின் பக்கத்தில் அமர்ந்து "கலா! கவலைப்படாதே. எல்லாம் சரியான நிலைமைக்கு கூடிய சீக்கிரம் வந்து விடும் சாப்பிடு" என்றாள் பாமினி.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும், காத்தியாயனியின் விருப்பப்படி வலது பக்கத்தில் அதுல்யரும், இடது பக்கத்தில் பாமினி, மேகலா, கலா, லெக்ஷ்மி நால்வரும் கட்டிலின் மீதே உட்கார்ந்து கொண்டார்கள். ஒன்றிலும் ஒட்டாதவனாக தன் படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்டான் சசி.

மேகலாவினிடமிருந்து தட்டைக் கையில் வாங்கினவன் மளமளவென்று சாப்பிட்டு விட்டு வெளியில் சென்றான். பாமினியும், கலாவும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

"கலா! அதோ அந்த அறையில்தான் அவர் படுத்துக்கொள்ளுவார். நீ அவரிடம் சென்று உங்களுக்குள் மிகமிக அந்தரங்கமாக நடைபெற்ற ஏதாவது ஒரு விஷயத்தை நினைவு படுத்திப் பார். புரிந்துகொள்ளவில்லையென்றால் வற்புறுத்தாமல் வந்துவிடு. வற்புறுத்தினால் மயக்கம் வந்துவிடுகிறது" என்று கலாவை அனுப்பிவிட்டு வேறு வேலையாக மற்றொரு பக்கம் சென்றாள் பாமினி.

சற்றுப் பொறுத்து வெளியே வந்த பாமினி வாசற்படியருகில் முகத்தைத் தலைப்பால் மூடி விசிம்பியவாறு நிற்கும் கலாவைக் கண்டதுமே அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அருகில் சென்று அன்புடன் அணைத்துக் கொண்டு "என்ன நடந்தது கலா?" என்று கேட்டாள்.

"கண்களை மூடியவாறு படுத்திருந்தார். அருகில் உட்கார்ந்து மெதுவாக கன்னத்தின் மீது கையை வைத்தேன் அவ்வளவுதான்; துள்ளியெழுந்து தள்ளி 'உட்கார்ந்து எனக்கு மனைவியிருக்கிறாள் நீ போய்விடு" என்றார்.

"நான்தான் உங்கள் மனைவி கலா" என்று இன்னும் அந்தரங்கமாக முன் நடந்த சில விஷயங்களையும் எடுத்துக் கூறினேன். ஐயோ பாமினி! அவர் ஒன்றையுமே புரிந்து கொள்ளவில்லை. என் வாழ்வு இனி இப்ப

படியே தானு? எனக்கு விடிவே கிடையாதா?" எனக் கதறியழுதுவிட்டாள்.

"கலா! மனதைத் தளரவிடாதே! ஒரே மாதிரி இருந்த அவரது நிலைமையில் இன்று சிறு மாறுதல் தோன்றியிருக்கிறது பார்! அதுவே நல்ல காலத்திற்குரிய சுப சூசகம். நிச்சயம் அவர் சுய உணர்வை அடைவார். உன் வாழ்வு வளம்பெறும்" வா! எனது அம்மாவின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றலாம் என்ருள்.

சட்டென அழுகையை நிறுத்திவிட்டு, "பாமினி! என்ன சொல்லுகிருய்? கடைசி விருப்பமா? டாக்டர் அப்படிச் சொன்ன பிறகுமா என்னுடன் வந்தாய்? உன்னை... உன்னை...நான்" என்று முடிப்பதற்குள்,

"வா! கலா! பிறகு பேசிக்கொள்ளுவோம்" என்று அவள் கையைப் பற்றியவண்ணம் நடந்தாள். இவர்கள் சென்று கட்டிலில் காத்தியாயனியின் தலைப்பக்கம் அமரும் பொழுது அதுவரை ஏதோ சொல்லிக்கொண்டிருந்தவள் சற்று நிறுத்தி இளைப்பாறிவிட்டு மறுபடியும் தொடர்ந்தாள் காத்யாயனி.

"அதுல்யா! நான் இப்படி அழைப்பதற்காக மன்னித்துக்கொள். முறை வைத்துக் கூப்பிடவேண்டும்" என்று தோன்றவில்லை.

"நாம் குழந்தைப் பருவத்தில் பெயர் சொல்லி அழைத்தேதானே விளையாடினேம். முதுமைப் பருவமும் அதுபோலத்தானே? காத்யாயனி" என்ருர் அதுல்யம்.

"ஆம், நீ சொல்வது உண்மைதான்" என்று சொல்லிவிட்டு சற்றுநேரம் பேசாமலிருந்தாள்.

"மனிதர்கள் நல்ல இரத்த ஓட்டத்துடன் நடமாடிக் கொண்டிருக்கும் வரையில், நல்லது செய்துகொண்டு வந்தாலுமே, அல்லது மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களைச் செய்து வந்தாலுமே அதைப்பற்றிய சிந்தனையிலீடுபடுவதென்பது அபூர்வமான விஷயம். ஏனென்று கேட்பாயானல் அதற்கு அவர்களுக்கு அவகாசமிருப்பதில்லை. வியாதியிலடிபட்டு, நடமாட முடியாமலும் அதே சமயம் நல்ல ஞாபக சக்தியுடனும் படுக்கையில் படுத்தபடி காலம் கழிக்கும் பொழுது தான் செய்த ஒவ்வொரு சிறு விஷயத்தையும் பற்றிய சிந்தனையில் காலம் ஓடுகிறது என்பதை எனது அனுபவ பூர்வமாகவே சொல்லுகிறேன் அதுல்யா" என்று நிறுத்தினுள்.

ஆமாம் என்பதுபோல மண்டையை அசைத்துவிட்டு நீண்ட மூச்சு விட்டார் அதுல்யம்.

"உலகில் தாயைப்போல சேய், நூலைப் போல சேலை" என்று வசனம் சொல்லுவார்களல்லவா? ஆனுல், அதுவிஷயம் எனக்கும் என் கண்மணி பாமினிக்கும் பொருந்தவே பொருந்தாது. காதலில் ஏமாற்றமடைந்த நான் பழிக்குப்பழியென்ற வெறிபிடித்து அலைந்தேன். என் பாமினியும் காதலில் ஏமாற்றமடைந்தாள். ஆனுல் அவள் தியாகியாக மாறினுள். பெற்ற தாயாகிய என்னிடமே தன் உள்ளத்தை மறைத்துப் போராடினுள்" என்றவள் சற்று நிறுத்திவிட்டுப் பிறகு தொடர்ந்தாள். "அன்று, இன்னுரென்று அறியாத நிலைமையில் ரயிலில் கண்ட சசியினிடம் தன் மனதைப் பறிகொடுத்து விட்டாள் பாமினி. உயிருக்கு மன்ருடி வண்டியைவிட்டுக் குதிக்கும் பொழுதுகூட அவனையெழுப்பிக் காப்பாற்றத் துடி துடித்தாள் பாவி, நான்தான் முரட்டுத்தனமாக அவளை இழுத்துச் சென்றேன்; என்னே! தெய்வ எத்தனம். சற்று நேரத்திற்குள் அவளிடமே வந்து சேர்ந்தான் சசி. அவனை உயிருடன் கண்டபொழுது அவள் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லப் பதமே கிடையாது. வைத்தியர் சொன்ன சிகிச்சையெல்லாம், இரவு பகல் இமைக்காமல் அவன் அருகிலிருந்து பணிவிடைசெய்து அவனது உயிரை மீட்டாள். முதலில் சசி இறக்க வேண்டும், உன்வாழ்வு பாழடைந்து உன்குடும்பமே நாசமடைய வேண்டுமென்று நினைத்தேன். பிறகு என் கண்மணி தன் உள்ளத்தைப் பறிகொடுத்து உழைப்பதைப் பார்த்ததும், அதே சமயம் நமது குழந்தையின் வாழ்வு மலரலாம் என்ற நினைப்புடன் பட்டணவாசம் சென்று டாக்டரை நாடினுல் என்ன நடக்குமோ, நாட்டு வைத்தியமே நமது இஷ்டப்படி நடக்குமென்று செய்தேன். அதன்படியே அவன் சுய உணர்வு இல்லாமலேயே எழுந்தான்.

இருவருக்கும் மணமுடித்து ஒரு குழந்தையுடன் உன்னிடம் கொண்டு வந்துவிட்டு உன்னைச் சித்திரவதை செய்ய வேண்டுமென்று விரும்பினேன். ஆனுல் பாக்யவதியான கலாவின் கணவன் பிறமாதரைத் தீண்டாதவிதமான ஒரு தன்மையைப் பெற்றிருந்தான் என்பதை நான் அறியாமலிருக்கப் பாடுபட்டாள் என் கண்மணி" என்று முடிக்கு முன்,

"அம்மா" என்று ஆச்சர்யத்துடன் கூவினுள் பாமினி.

"பயப்படாதே பாமினி! உன் செய்கையை நினைத்துப் பெருமிதம் கொள்ளுகிறேன். உன்னைப் பெற்ற நான் மிக்க பாக்யசாலி என்று அளவிலா ஆனந்தமடைகிறேன்" பேச்சை நிறுத்திவிட்டு நாக்கினுல் உதட்டைத் தடவிக் கொண்டாள்.

அருகில் மேஜைமீது வைத்திருந்த பழ ரசத்தை எடுத்து, "வாயைத்திற காத்யாயனி! உன் உதடு உலர்ந்து விட்டது" என்றார் அதுல்யம். அதுல்யத்தின் கையினால் வாயில் விட்ட பழ ரசத்தை அருந்தினாள் காத்தியாயனி.

"சசி விஷயத்தில் நீ நடந்து கொண்டது போல், உன் விஷயத்திலும் நீ நடந்து கொண்டிருந்தாயானால் இப்படி நமது மூவரின் வாழ்வும் பாழ்பட்டிருக்காது. நம்மை மீறிய சக்தி ஒன்றிருந்து கொண்டு நம்மை ஆட்டி வைக்கிறது. நமது எண்ணப்படி எதுவுமே நடப்பதில்லையென்பதை அனுபவ பூர்வமாக அறிந்தும்கூட, மண விஷயத்தில் இவளுக்கு இவன் கணவன் என்று சொல்லி சின்னஞ்சிறு பருவத்தில் இள உள்ளத்தில் ஆசை விதை விதைத்து விடுகிறார்கள். செடியிலேயே வளைப்பது கஷ்டம். மரமான பிறகு வேருடன் பிடுங்கி எறிவது என்பது சுலபமான காரியமா?

மேகலா! நமது இருவர் நிலைமையும் ஒன்றே. அதனால் என் மனப்பாரத்தைக் குறைத்துக்கொண்டு கடைசி யாத்திரை புறப்படுவதைப்பற்றி நீ தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாய் என்று...

"ஐயோ! இப்படியெல்லாம் பேசாதீர்கள். நீங்கள் யோஜிக்காமல் உங்கள் மனப்பாரத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் மேகலா.

"எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல் நீதான் என்கணவன் என்ற சொல் என் மனதில் ஆழப்பதிந்து விட்டது. சங்கீதம் என்பது என் வரையில் சுத்த சூன்யமாக இருந்த பொழுதிலும் உனக்காக வேண்டி அதைக் கற்க வேண்டுமென்று நான் பட்ட பாடு அந்தக் கலாதேவிதான் அறிவாள். உன்மீது நான் வைத்த பிரேமைக்கு உபமானம் சொல்லப் பதமே கிடையாது. நீ மேகலாவை மணக்கப் போகிறாய்" என்று கேள்விப்பட்டதும், என் மனம் அடைந்த வேதனை? உயிரை விட்டுவிடலாமென்று கூடத் துணிந்தேன். நடக்கவில்லை. மேலும் பெற்றோர்களுக்கு நான் ஒரே பெண்ணல்லவா? அதனால் பிறகு அந்த முயற்சியைத் தொடரவில்லை.

அதுல்யா! உன் தாயார், என் அத்தை. என்னை நாட்டுப் பெண்ணே! என்று தான் கூப்பிடுவாள். அவர் சத்யம் செய்து வேண்டுமானால் சொல்லாதிருந்திருக்கலாம். ஆனால் அவரது அந்தரங்க ஆவல் நான் உன் மனைவியாக வேண்டுமென்பதுதான். உனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு நம்பிக்கையிருந்தது அதனால் எப்படியாவது, அதாவது நீ என்னை அன்புடன் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் வேண்டாம், நான் உன் மனைவி என்ற பெயருடன் அந்த வீட்டில் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அதனால் நீ என்னையும் மணந்து, மேகலாவையும் மணந்து கொள்ளுவதில் என்ன தவறு என்றுதான் தோன்றியது. நினைவிருக்கிறதா? உன் அப்பா இறப்பதற்குப் பத்து நாள் முன்னதாக, இரவு எட்டு மணி சுமாருக்கு மாடி அறையில் உன் காலைக் கட்டிக்கொண்டு அழுதேனே"

"மறக்கவில்லை காத்யாயனி! உங்களைத் தவிர வேறு ஒருவரையும் என் மனதினால் கூடத் தீண்ட முடியாது. யாவரின் மனமும் குளிர்ந்திட என்னையும் மணந்து மேகலாவையும் மணந்து கொள்ளுங்கள். கலையுலக ஜோடியான உங்கள் சந்தோஷத்தில் நான் குறுக்கிடமாட்டேன். 'மனைவி' என்ற பெயர் மட்டுமே போதும். என்னுடன் கணவன் மனைவியாகப் பழக வேண்டாம். மேகலா உத்தம குணமுள்ள பெண். இந்த ஏற்பாட்டை மறுக்கமாட்டாள் என்று மன்றாடினாய், என்று அதுவரை எங்கோ பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தவர், சட்டெனத் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தவாறு காத்யாயனி! அப்பொழுது நான் உன்னைப் புரிந்துகொள்ளவில்லை. நீ இவ்வளவு பிரேமை வைத்திருப்பாயென்று நினைக்கவில்லை. எனது லக்ஷ்யம், கொள்கை, இவைகளைப் புறக்கணித்து இரண்டு மனைவியை ஏற்றுக்கொள்ளுவதா? மேலும், என்னை மணந்தால் நீ சுகத்தைக் காண்பதே அரிதாகிவிடும். வீணாக ஏதோ ஒரு சொல்லிற்காக ஒரு பெண்ணின் வாழ்வை வீணாக்கக் கூடாது என்ற ஒரு நல்லெண்ணத்துடன்தான் உன்னிடம் கடுமையாக நடந்து கொண்டேன். என்னை வெறுத்து நீ மற்றவனை மணந்து நல்வாழ்வு பெறவேண்டுமென்றே, உன்னுடன் முகம் கொடுத்துப் பேசவே விரும்பாதாவன்போல் நடித்தேனே தவிர ஒருநாளும் உன்னை வெறுத்ததில்லை. பின்னால் மேகலா வாழ்வு பாழான பிறகுதான், நாம் லக்ஷ்யம் லக்ஷ்யம் என்று ஒன்றையே நினைத்துக்கொண்டு நடப்பதைவிட சூழ்நிலை, சந்தர்ப்பம், பிறரின் லாப நஷ்டம் இவைகளையும் மனதில் நினைவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஞானம் உதயமாயிற்று.

பின்னால் சசிக்கும் இதேமாதிரி சோதனை ஏற்பட்டபொழுது வாரிஜாக்ஷனது வேண்டுகோளை புறக்கணிக்காது நடந்து கொண்டேன். சூழ்நிலையையும் சந்தர்ப்பக் கோளாறையும் அனுசரித்து நடந்து கொண்டார்கள் என் கண்மணிகள் சசியும் கலாவும். ஆனால் விதி அக்குழந்தைகளைச் சதிசெய்து விட்டது காத்யாயனி!" குரல் தழு தழுக்க நாக்குளற சொல்லி நிறுத்தினார் அதுல்யம்.

"வருத்தப்படாதே அதுல்யம். பழைய சூழ்நிலைக்கு அழைத்துச் சென்று, எங்கள் டாக்டரின் ஆலோஜனைப்படி நடந்தாயானல் நிச்சயம் குணமடைந்து விடுவான். இப்பொழுது சீமை சென்றிருக்கும் நீலமேகம் சொன்ன வைத்தியம் அதுதான், 'யாராவது ஆப்ரேஷன் செய்யலா மென்ருல் சம்மதிக் காதேயுங்கள்' என்ருர். அன்றே "வீணுவி கார்" அழைத்து வந்திருந்தேனுல் இப்பொழுது நல்ல நிலைமையிலிருப்பான். ஆனுல் அப்பொழுது எனது வெறி மனப்பான்மை மாறியிருக்கவில்லையே! அதுபோகட்டும் என் மனக்குறை முழுவதும் கேளுங்கள்.

அன்று நீ மூர்க்கத்தனமாக பேசினுயல்லவா? அப்பொழுதே அந்த நிமிஷமே பழிக்குப்பழி என்ற வெறி மனப்பான்மை தோன்றிவிட்டது.

"நான் இப்படிக்கேட்பதற்காக மன்னித்து விடு. என்னைப்பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானது சரி. ஆனுல் உனது மண வாழ்க்கைப் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லையே" என்ருர் பாமினியைக் கடைக்கண்ணுல் பார்த்த வண்ணம்.

"கட கடவென மூச்சைப் பிடித்தவாறு சிரித்துவிட்டு மேகலாவிற்கும் அருமை மகள் கலா இருக்கிருள். அதனுல் .." என்றவள் ஆயாசம் மேலிடவே கண்களை மூடிக் கொண்டாள்.

மறுபடியும் பழரசத்தை அவள் வாயில் விட்டார். கண்களை விழித்தாள். "போதும் காத்தியாயனி. பாக்கி விஷயத்தை நாளைக்குச் சொல்லலாம்."

"இல்லை! இல்லை,! இப்பொழுதே சொல்லியாக வேண்டும். நாளை சூரியோதயத்தை நான் பார்பேனென்று நம்பவில்லை."

"நான் வாழ்ந்த வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள். நான் உன்னை மணந்துகொள்ள வேண்டுமென்று வரும் பொழுதே நான் ஒரு பி. ஏ. பட்டம் பெற்றவள். இப்பொழுது நான் ஒரு எம். ஏ. என்ருல் நம்புவாயா? அந்த சமயம் என்னை மணந்து கொள்ள ஆசைப்பட்டு அநேகர் நம்மில் இல்லாத வழக்கமாக வலிய பெண் கேட்டனர். எல்லோரையும் விரட்டியடித்தேன் என்று சொன்னுல் மிகையாகாது.

மேகலாவை அந்தக் கயவனுக்கு மண முடித்து வைக்கக் கூடாது என்று நான் சொன்னேனென்ருல் நீ நம்பமாட்டாய். மேகலாவின் மீது என்றைக்குமே எனக்கு ஒருவித மான தனிப் பாசம் தோன்றும், அதற்குக் காரணம் அவளது அடக்கமான குணமே. மேகலாவை எங்கேயாவது ஒளித்து வைத்து விடுவோம்; எனது மணம் முடிந்த பின்பு, அவளைக் கொண்டுவந்து உன்முன் நிறுத்தி விடலாம். பிறகு எல்லாம் சரியாகப் போய் விடும் என்றுதான் சொன்னேன். ஆனுல் அப்பா அந்த முத்துக் குமரனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு மேகலா வாழ்வை பலியிட்டு விட்டார்.

கடைசியாக உன்னுடன் சண்டை போட்டு விட்டு உன்னுடைய பணத்தையும் வாங்கிக் கொண்டுவந்தோமே அந்தசமயம் பாமினியின் அப்பா, நல்லபாம்பும் பார்க்க அழகாகத் தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் என்னையே மணந்துகொள்ளுவேனென்று பிடிவாதம் பிடித்தார். நானும் யோஜித்தேன். அப்பாவிற்காக கல்யாணம் செய்து கொண்டேயாகவேண்டும் என்று சம்மதித்தேன்.

ஆனுல் மனதிலொருவனை நினைத்து மற்றவருடன் வாழ்வது சாத்தியமான விஷயமல்ல. பாவம் என்னிடம் அவர் பட்டபாடு! என் வெறி கொண்ட மனதில் இரக்கத்திற்கோ அன்பிற்கோ இடமில்லை. அதுல்யா! பணம் என்னிடத்தில் ஏராளமாகக் குவிந்தது. வாரிவாரிக் கொடுத்தேன். என்னவெல்லாமே, செய்து பார்த்தேன். என்மனம் அமைதி பெறவில்லை. சங்கத்தில் அவருக்கு ஈடுபாடுண்டு. நானும் சேர்ந்து கொண்டேன். அந்த இடம் ஒன்றில் தான் நான் அவருடன் ஒற்றுமையாக நடந்தேன். மனதில் சற்று அமைதி கிடைத்தது. கல்யாணமான மறு வருஷமே பாமினி பிறந்து விட்டாள். குழந்தையினுல் இருவரும் ஒன்றுபடுவார்கள் என்று சொல்லுவார்கள். ஆனுல் அது விஷயம் என்னிடத்தில் நேர் மாருக நடந்தது. ஏதோ பத்துவருஷம் அவல வாழ்க்கை நடத்தி விட்டு மீளாத இடத்திற்குச் சென்றுவிட்டாரவர். பாமினி பிறந்ததுமே அப்பாவும் விடை பெற்றுக் கொண்டு விட்டார். மன அமைதியைக் காண வேண்டி பம்பாயிலுள்ள ஒவ்வொரு பொது ஸ்தாபனங்களிலும் பங்கு கொண்டேன் ஒருவருக்கும் பயப்படவே மாட்டேன் மகா ஜனங்கள் என்னை மட்டுங்கா மகாராணி என்று பட்டப்பெயர் கொடுத்து அழைத்தார்கள்" என்றவள் கண்களை மூடிக்கொண்டாள்.

சலனம்

மயிலன்

நிலக்கரிப் புகையைச் சுருள் சுருளாகக் கக்கிக் கொண்டு பூனா ஜங்ஷன் பிளாட்பாரத்துக்குள் மதராஸ் எக்ஸ்பிரஸ் நுழைந்தது. அதற்குப் பிரயாணம் இன்னும் முடிவு பெறவில்லை. ஆனால், அதன் உள்ளே இருந்த சரஸ்வதிக்கு இதோ பயணம் முடிந்து விட்டது. பூனாவில் இறங்க வேண்டியவள்!

எக்ஸ்பிரஸ் வண்டி ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு நின்றது. பிளாட்பாரத்துக்குள் நுழைந்தவுடனேயே, எழுந்து நின்ற வண்ணம் ஜன்னல் வழியாக ஆவலுடன் பார்த்து வந்த சரஸ்வதியும் ஜன்னல் கட்டையைப் பிடித்த படியே ஆடினாள். இந்த ஆட்டத்தோடு 'அவரைக் காணோமே. வரவில்லையோ ஸ்டேஷனுக்கு?' என்கிற கேள்வி அவளது நெஞ்சில் குலுங்கிற்று.

இறங்கவேண்டியவர்கள் பரபரப்போடு இறங்கினார்கள். அவளும் இறங்கத்தான் வேண்டும். எனினும், இறங்காமல் ஜன்னல் வழியாகப் பிளாட்பாரத்தின் நீளத்தை ஆசைக் கண்களோடு அளந்து கொண்டு நின்றாள். சில விநாடி நேரத்தில் அந்தப் பார்வையில் மிதந்த ஆசை தணிந்தது. ஜயராமன் வேக நடை போட்டு அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

சரஸ்வதியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. இடுப்பில் சொருகியிருந்த கைக்குட்டையை எடுத்து, கரத்தை நீட்டி உற்சாகமாக ஆட்டினாள்.

ஜயராமன் இதைப் பார்த்து விட்டான். உடனே நடையைத் துரிதப் படுத்திக் கொண்டு அவளிடம் ஓடிவந்தான்.

அவள் இறங்கினாள். அவளோடுகூட சாமான்களும் இறங்கின.

போர்ட்டர் தலையில் சாமான்களை ஏற்றி விட்டு, முன்னால் நடந்தான் ஜயராமன்.

சரஸ்வதி பின் தொடர்ந்தாள்.

அவள் மனசில் 'அவர் எங்கே? வரவில்லையா, என்ன?' என்கிற கேள்வி புரண்டது. ஒரு சமயம் உடம்பு சரிஇல்லையா? இல்லை, எங்கேயாவது வெளியூருக்கு ஆபீஸ் அலுவலாகச் சென்று விட்டாரா?' என்று தனக்குத்தானே ஊமைக் கேள்விகள் கேட்டுக் கொண்டாள்.

சரஸ்வதியை அழைத்துப்போக வந்த ஜயராமன் அவளிடம் ஒன்றுமே பேசவில்லை. வேகமாக நடந்து ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான். 'டக்'கென்று ஒரு டாக்ஸியைப் பிடித்தான்.

சாமான்கள் அந்த டாக்ஸிக்குள் ஏறிக் கொண்டன. சரஸ்வதி பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள். ஜயராமன் போர்ட்டர் கூலியைக் கொடுத்துவிட்டு, கார்டிரைவருக்கு அருகில் உட்கார்ந்தான்.

மறுகணம் கார் நகரலாயிற்று,

அப்பொழுதும் ஜயராமன் ஒரு தகவலும் சொல்லவில்லை. அவன் திரும்பிப் பின்பக்கம் பார்க்கக்கூட இல்லை. சரஸ்வதிக்கு நெஞ்சில் ஆவல் அடக்க முடியாமல் உண்டாகிவிட்டது.

லேசாக அவள் கனைத்தாள்.

ஜயராமன் திரும்பினான்.

"அவர் வரவில்லையா?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் வேலை. அதனால் நான் வந்தேன்." என்ற ஜெயராமன் பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டான். அவன் தலையும் திரும்பிவிட்டது.

கார் விரைந்து சென்றது. சரஸ்வதிக்கு யோசனைமேல் யோசனை; 'வேலையாமே வேலை! கட்டிய மனைவி ஊருக்கு வருகிறாள். அவளை ஸ்டேஷன் சென்று அழைத்து வருவோம் என்று நினைக்காமல், வேலை பெரிதாகிவிட்டதோ? ஒரு சமயம்...'

அவள் மறுமுறையும் கனைத்தாள்.

ஜயராமன் மறுமுறையும் தலையைத் திருப்பிப் பார்த்தான்.

"அவர் ஊரில்தானே இருக்கிறார்? இல்லை..."

"உள்ளூரில் தான் இருக்கிறான். வீட்டில் உங்களுக்காகக் காத்திருப்பதாகச் சொன்னான்" இதைச் சொல்லிவிட்டு ஜயராமன் திரும்பிக்கொண்டான்.

கணவனது நண்பன் ஜயராமனை அவளுக்கு மிக நன்றாகத் தெரியும். அவனுடைய சங்கோச சுபாவமும் அவள் அறிந்ததுதான். எனவே, மேலே துருவித் துருவி ஏதும் கேளாமல் சும்மா இருந்துவிட்டாள்.

இன்னும் சில நிமிஷ நேரத்தில் அவள் கணவனை நேருக்கு நேராகக் காணப் போகிறாள். அந்த அளவுக்குப் பொறுக்கக் கூடாதா, என்ன?

சரஸ்வதி நினைவுகளை அடக்கிக்கொண்டு பொறுத்திருந்தாள். அவளையும் ஜயராமனையும் சுமந்துவந்த கார் விரைந்து ஓடி வீட்டு வாசலில் நின்றது.

சரஸ்வதி காரைவிட்டு இறங்கி ஆவல் துடிக்க வீட்டுக்குள் ஓடினாள். மாடிப்படி ஏறும்போது, அதன் உச்சியில் சிவராமன் நிற்பதைக் கண்டுவிட்டாள்.

அவளது பெண் உள்ளம் உணர்ச்சியில் மலர்ந்தது. அவளுடைய வதனம் மகிழ்ச்சியில் புன்னகை பூத்துப் பிரகாசித்தது!

ஆனால் ..?

அந்த முகத்தில்.. ஆவலின் துடிதுடிப்பு இல்லை.

அந்தக் கண்களில்... உணர்ச்சியின் அறிவிப்பு லவலேசமும் இல்லை.

சிவராமன் சிலைராமனாக நின்றான்!

ஊர் திரும்பி வந்துள்ள மனைவியைப் பார்த்து அவன் மகிழ்ச்சியில் சிரிக்கவில்லை; 'சரசு! வா' என்று உள்ளம் குளிர அழைக்கவில்லை!

* * *

அறைக்குள் நுழைந்ததும் சரஸ்வதிக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. கணவன் சிவராமனிடம் கண்ட மாற்றத்தையெல்லாம் தூக்கி அடிக்கக்கூடிய மாற்றங்கள் அறையில் தென்பட்டன. குப்பையும் கூளமும் மண்டி அறை அவலக்ஷணமாக இருக்கும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அதற்கு மாறாக அது துப்புரவாக இருந்தது. மாடத்திலும் மேஜையிலும் புஸ்தகங்கள் இறைந்து கிடக்கும் என்று நினைத்தவளுக்கு வியப்புத்தான் உண்டாயிற்று. மேஜைமேல் வரிசையாக அடுக்கப்பட்டு புஸ்தகங்கள் காட்சி தந்தன. மாடத்தில் ஒரு புஸ்தகம்கூட இல்லை. அதை நன்றாக ஒழித்துப் பார்க்கலக்ஷணமாக வைத்திருந்தது.

இத்தனையும் அவள் கணவன் சிவராமனின் வேலையா?

இக் கேள்வியை மௌனமாகக் கேட்டுக்கொண்டு தனிமையில் நிற்கையில், சிவராமன் அறைக்குள் வந்தான்.

"சரசு! நீ சிரமப்படாதே. நீண்ட பயணம். உனக்கு உடம்பு அலுப்பாக இருக்கும். வெந்நீர் தயாராக இருக்கிறது. ஸ்நானம்பண்ணு. ஹோட்டலிலிருந்து 'செட்' வந்திருக்கிறது; சாப்பிட்டுவிட்டு, ஒரு தூக்கம் போடு. வேலையைப் பாதியில் போட்டுவிட்டு ஓடிவந்தேன். சொச்சத்தையும் செய்துவிட்டு, இரண்டு மணி சுமாருக்கு வந்து விடுகிறேன்" என்று சாவதானமாகச் சொன்னான் சிவராமன்.

இத்தனை வார்த்தைகளையும் சரஸ்வதி தன் காதால் கேட்டாள். அவளுக்கு ஒன்றும் சரியாகப் புரியவில்லை. கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று கணவனிடம் திரும்பினாள். ஆனால் அவனோ—?

சிவராமன் 'தட தட' வென்கிற சத்தத்தோடு மாடி இறங்கிச் சென்றுகொண்டிருந்தான்.

இரண்டு மாதங்களுக்கு முன்புவரை இருந்த சிவராமனை அவள் நன்றாக அறிவாள். நான்கு வருஷங்கள் அல்லவா அவனோடு இரவு பகலாகப் பழகியிருக்கிறாள். ஆனால் இந்தச் சிவராமனை—? சில நிமிஷ நேரத்தில் என்ன புரிந்து கொள்ள முடியும்?

'ஹூம்!' என்று ஒருபெருமூச்சைத் தவிப்பின் சின்னமாக விட்டு விட்டு, ஸ்நானம் செய்யத் தொடங்கினாள்.

ஸ்நானத்துக்குப் பின் சாப்பாடு. சாப்பிடும் போது, சாதமோ, கறியோ – ஒன்றுமே அவள் தொண்டைக்குள் இறங்கவில்லை. தொண்டைக்குள்ளே ஏதோ ஒன்று இருந்துகொண்டு சங்கடப்படுத்திற்று அவளை.

ஸ்நானம்; ஸ்நானத்துக்குப் பின் சாப்பாடு. அதற்குப் பின் – ?

அவள் கணவன் சொன்னபடி ரயிலில் வந்த அலுப்புத் தீரப் படுத்துத் தூங்க வேண்டும். அதன்படியே, கட்டிலை ஒரு தட்டுத் தட்டிவிட்டு படுத்துக்கொண்டாள். அறைக் கதவை இழுத்துச் சாத்தித் தாளிட்டாள்.

படுத்தவளுக்கு உடம்பு அசதிதான். அந்த அசதியில் கண் மூடினவுடன் தூக்கம் வந்திருக்க வேண்டும். ஆனால் வரவில்லை.

நெஞ்சில் கணவனைப்பற்றிய நினைவுகள் வட்டம் போட்டன. தன்னிடம் அவன் காட்டும் உதாசீனம் அவள் பெண்மைக்கு ஒரு சவாலாய் அமைந்தது. அத்தோடு, இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்று புரியா

மல் தவிக்கிற தவிப்பு! தூக்கமாவரும் இது மாதிரி நிலைமையில்?

உடம்பு உறக்கத்துக்குக் கொஞ்சியது. உள்ளம் ஆசைக்கும் பரிவுக்கும் அன்புக்கும் ஏங்கியது! இந்த நிலைமையில் சரஸ்வதி தூங்காமல் தூங்கினாள்!

சரியாக மணி இரண்டு. அறைக்கதவைச் சிவராமன் தட்டினுன்.

படுக்கையை விட்டு எழுந்தவள் மெதுவாக நடந்து, கதவைத் திறந்தாள். கணவன் கையில் கனமான பை ஒன்று இருந்தது.

"பையில் என்ன?"

"டிபன். பிளாஸ்க்கில் காப்பியும் உனக்காக வாங்கி வந்திருக்கிறேன். சாப்பிடு" என்று சொல்லிய வண்ணம் அறைக்குள் வந்தவன பிளாஸ்க்கை எடுத்து மேஜையின்மேல் வைத்தான். பையையும் அதற்குத் துணையாக அதன் அருகில் வைத்தான்:

"என் ஒருத்திக்குத்தான இந்த டிபனும் இந்தக் காப்பியும்?"

"ஆமாம்."

"உங்களுக்கு?"

"நான் சாப்பிட்டு விட்டேன்."

அறையின் வாசலில் கழற்றிப்போட்ட செருப்பை மாட்டிக்கொண்டு வெளியே போக எத்தனித்தான் சிவராமன்.

சரஸ்வதி அவனே உற்றுப்பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின. நெஞ்சு குழம்பியது. துக்கம் விம்மி எழுந்து தொண்டையை வந்து அடைத்தது.

இத்தனையும் கட்டிய கணவனின் கண்ணில் படவே இல்லை. அவன் சொன்னுன்: "சரசு! எனக்கு இன்னும் வேலை கிடக்கிறது. நீ டிபனைச் சாப்பிட்டுவிட்டு, சொச்சத் தூக்கத்தையும் படுத்துத் தூங்கு."

இந்த உபதேசத்தோடு கணவன் சென்றுவிட்டான். மனைவி சரசு அழுகையை அடக்கிக் கொண்டாள். கண்களைப் பொத்திக்கொண்டாள். தள்ளாடித் தள்ளாடி, கட்டிலை அடைந்து அதில் பொத்தென்று விழுந்தாள். அந்த வேகத்தில் ஒரு பெருமூச்சு அவள் தேகத்தை விட்டுப் புறப்பட்டது.

சற்று நேரம் குப்புறக் கிடந்து செருமியவளுக்கு வீட்டு நினைவும், தான் இந்த வீட்டுக்குத் தலைவி என்கிற எண்ணமும் உண்டாகி விட்டன. உடனே எழுந்து, கதவை இழுத்துச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, மறுபடியும் கட்டிலில் வந்து குப்புற விழுந்தாள்.

சரஸ்வதி கட்டிலில் சுருண்டு, வெந்து, குமைந்து கிடந்தாள். பக்கத்து மேஜையில் காப்பியும் பலகாரமும் சௌக்கியமாக இருந்தன!

* * *

முள்ளில் கிடப்பதுபோல் படுக்கையில் இப்படியும் அப்படியும் புரண்டவளுக்குக் கடமைஉணர்ச்சி திடீரென்று உண்டாகி விட்டது தொட்டுத் தாலிகட்டிய கணவனுக்கு மனைவி என்கிற உரிமையில் பங்கம் ஏற்பட்டாலும் அவன் வீட்டு நிர்வாகத்துக்கு அவள் பொறுப்பாளி என்கிற ஸ்தானத்தில் மாற்றமோ, மழுங்கலோ ஒன்றும் உண்டாகிவிடவில்லையே! இதை நினைத்துக் கொண்டு இரவு வேளைச் சாப்பாட்டுக்குத் தயார் பண்ண முற்பட்டாள்.

அவள் கை வீட்டு வேலையில் மும்மரமாக ஈடுபட்டிருந்தது. மனமோ, சிவராமனை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு சஞ்சலப்பட்டது!

இரண்டு மாத காலம் பிரிந்து சென்று வெளியூரில் தங்கிவிட்டு வந்திருக்கும் இளம் மனைவியோடு கணவனுக்குப் பேச நேரம் இல்லை என்றால், அதை என்னவென்று சொல்லுவது? வேலை வேலை என்று ஓடுவது வெறும் பாசாங்குதான். இந்தத் திரைக்குப் பின்னுல் ஏதோ ஒன்று—பயங்கரமானது, அபாயகரமானது — ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். அந்தப் பயங்கரம், ஆபத்து என்ன?

இந்தப் பீதி ஒரு கற்பனைப் பெண்ணைச் சிருஷ்டித்து, சரஸ்வதியின் மனக்கண்ணின் முன்னுல் கொண்டு வந்து நிறுத்திற்று. உடனே அவள் உடம்பு முழுவதும் நடுநடுங்கிச் சிலிர்த்தது. 'அட ராமா! அட ராமா! என்று இரண்டு தடவை சொல்லிப் பெருமூச்செறிந்தாள்.

தெய்வத்தின் பெயரைச் சொன்னதனுலே அவளுக்குச் சகாயம் புரிவதுபோல், அவளுடைய மனசு தேற்ற முற்பட்டது. 'சரசு! சிவராமனை என்ன அவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டாய்? இது மாதிரி அதமமான காரியத்தில் உன் கணவர் என்றுவது இறங்குவாரா? உன் நம்பிக்கை, உன் விஸ்வாசம் இத்தனை தானு?'

இப்படிக் கேட்ட மனசை அவள் திருப்பிக் கேட்டாள். "அப்படியானுல் இந்த உதாசினத்துக்கு உண்மையான காரணம் எது?"

"அவசரப்படாதே. பொறுத்துப் பார்" என்றது அவளது நெஞ்சம்.

சரி என்று ஒத்துக் கொண்டாள் சரஸ்வதி. பொறுத்துத்தான் பார்ப்போமே என்று தனக்குத் தானே சமாதானம் பண்ணிக் கொண்டாள்.

அன்றிரவு மணி ஒன்பது இருக்கும். சிவராமன் மெதுவாக அறைக்குள் நுழைந்தான். தரையில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து அவன் கேட்டான். "சரசு! கடிதமா எழுதுகிருய்? யாருக்கு?"

"அம்புஜத்துக்கு".

"ஓகோ".

சிறிது நேரம் மௌனம்.

அதன் பின்னர் "சரசு! நீ சாப்பிட்டு விட்டாயோ?" என்று கேட்டான் சிவராமன்.

"இல்லை உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிருயா?" என்று இழுத்தாற்போல் சொன்னவன் "சரி; தட்டைப் போடு" என்று தெரிவித்தான்.

அவள் உடனே தட்டைப் போட்டு அவனுக்குப் பரிமாறினாள். கணவன் சாப்பிடும்போது, உன்னிப்பாக அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

சரஸ்வதி இந்தச் சிவராமனுக்கு எத்தனையோ தடவைகள் சாதம் போட்டிருக்கிறாள்; இது மாதிரி பக்கத்தில் இருந்து எத்தனையோ தடவைகள் அவனைக் கவனித்து வந்திருக்கிறாள். உணவுக் கவளத்துக்காகத் திறக்கும் அவனுடைய வாய் நாலு கவளத்துக்கு ஒருமுறையாவது 'சரசு!' என்று கூப்பிட்டு, எதையாவது பேசுமே. இன்று ஏன் அது மாதிரி இல்லை? 'வாயை மூடிக்கொண்டு' அவன் சாப்பிட்டான். மௌனமாக இதைக் கவனித்தாள் சரஸ்வதி.

சாப்பாடு முடிந்து, கையை அலம்பினவன் மனைவியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் முன் அறைக்கு வந்துவிட்டான்.

சரசு சாப்பிட்டாள். சாப்பிட்டோம் என்று பெயர் பண்ணினாள். நெஞ்சுக்குள் உணர்ச்சிகள் கிடந்து தவிக்கும்போது, வயிறு பசிக்குமா? உணவுதான் செல்லுமா?

மணி ஒன்பதரை. சிவராமன் மேஜையண்டை அமர்ந்து படித்துக்கொண்டிருந்தான். அங்கே வந்த சரஸ்வதி அவன் பின்பக்கம் வந்து நின்று, எட்டிப் பார்த்தாள்.

"என்ன புஸ்தகம்?"

"நீ தான் சொல்லேன்!"

"எனக்கு என்ன தெரியும்? நீங்கள் சொன்னால் தெரிந்து கொள்ளுகிறேன்."

"சரசு! இந்தக் கவலையெல்லாம் உனக்கு எதற்கு? இரண்டுநாள் ரயில் பிரயாணம் உன் உடம்பை நன்றாகக் குலுக்கியிருக்கும். தூங்கின தூக்கம் போதாது. படுத்துத் தூங்கு."

"ஆகா! தூங்குகிறேன்" அமைதியாகப் பதில் கூறினாள் சரசு.

அப்படிச் சொன்னவள் உடனே தூங்கப் போய்விடவில்லை. கணவனுக்குப் பின்புறத்தில் அப்படியே நின்றாள்.

"ஏன் நிற்கிறாய்? படு, போ"

"சரிதான்"— சரசு நகர்ந்தாள். கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

அவள் நெஞ்சில் சற்றுத் தெளிவு உண்டாயிற்று. எனினும், அந்தத் தெளிவில் எண்ணற்ற சந்தேகங்கள் பின்னலிட்டு மிதந்தன!

* * *

இல்லற ஆசிரமத்தில் மனைவியின் பூரணசம்மதத்தோடு இறங்கின சிவராமன் நான்கு வருஷத்துக் குடும்ப வாழ்க்கைக்குள் எப்படியோ அதைவிட்டு நழுவிப் போகும் பரிபக்குவத்தை அடைந்துவிட்டான்! அதனால், மனைவி சரசுவின் மனச் சம்மதம் பெறுமலேயே தன் போக்குப்படி காரியங்களில் இறங்கலானான். இந்த அவனது போக்குக்கு அனுசரணையாக ஒரு சாமியார் தாடியோடும் தண்டு கமண்டலத்தோடும் அவனுக்கு வந்து வாய்த்தார்!

இந்தச் சாமியாரின் உபதேசம்தான் சிவராமனின் உதாசீனத்துக்குக் காரணம்.

நெஞ்சு அவளுக்குப் புழுங்கிற்று. அந்தப் புழுக்கத்தில் உள்ளத்து எண்ணங்கள் குமைந்தன. ஆத்திரம் புகைந்து புகைந்து நெஞ்சகத்தில் சுருண்டது!

உடம்பில் ஏறி நின்ற அசதியும் உள்ளத்துக்கு வந்து சேர்ந்த இந்த வாதனையும் அவளை வாட்டி வதக்கின. துணை இல்லாமல், ஆறுதல் கூறுவார் யாரும் இல்லாமல் இரவின் தனிமையில் நெஞ்சு நொந்து, துன்பத்துக்குக் கரைகாணமாட்டாமல் திண்டாடினள்!

அதன் ஸ்தூல அடையாளமாக நெடு மூச்சுவிட்டாள்.

இந்த நெடுமூச்சு பக்கத்தில் மேஜையண்டை அமர்ந்து வாசித்துக் கொண்டிருந்த சிவராமன் உள்ளத்தைப் போய்ப் பரிசிக்கவில்லை. ஆனாலும், செவிப்புலனை எட்டத்தான் செய்தது. அதன் பேரில் திரும்பி மனைவியை உற்று நோக்கினான்.

இருகணநேரம் நிசப்தம்.

"சரசு!"

"உம்."

"நீ இன்னும் தூங்கவில்லையா?"

"தூங்குகிறேன்."

சரசுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. வேகமாகப் படுக்கையில் புரண்டு படுத்தாள்.

* * *

சரஸ்வதி பூனவுக்கு வந்த நான்காவது தினம். இந்த நான்கு தினங்களில் சிவராமன் போக்கில் எந்த மாற்றமும் இல்லை. அதே உதாசீனம் மங்காமல், மழுங்காமல், வடுப்படாமல் அப்படியே நிற்கிறது!

பொறுமையின் எல்லைக்கு வந்து நின்றவள் கணவனைப் பார்த்துக் கேட்டாள். "ஆமாம்; அன்றைக்கு ஸ்டேஷனுக்கு நீங்கள் வராமல் நண்பரை அனுப்பியிருந்தீர்களே. அப்படி என்ன வேலை உங்களுக்கு?"

"இது என்ன இப்பொழுது ஒரு கேள்வி?" என்று அன்புவற்றி வரண்டுபோன குரலில் பதிலுக்குக் கேட்டான்.

"கேள்விக்குப் பதிலைச் சொல்லுங்கள். பதில் கேள்வி போட வேண்டாம். இந்தக் கோணல் புத்தி எத்தனை நாளாக உங்களுக்கு உண்டாகியிருக்கிறதோ?" – ஆத்திரத்தை அடக்க மாட்டாமல் மனசில் பளிச்சிட்ட எண்ணத்தை அப்படியே வெளியிட்டு விட்டாள் சரஸ்வதி.

நல்ல வேளை; சிவராமன் வேக உணர்ச்சிகளை எல்லைக்குள் நிறுத்திக்கொண்டான். நிறுத்திக்கொண்டு உண்மையை அப்படியே சொல்லிவிட்டான்: "இந்த ஊருக்கு வந்திருக்கிறாரே சாமியார்; அவர் காரியம்தான்."

"அவர் காரியம் உங்கள் காரியமாக ஏன் ஆக வேண்டும்?" என்றுகேட்க நினைத்தாள் சரஸ்வதி. ஆனாலும் கேட்கவில்லை.

மனைவியின் மௌனத்தைக் கண்ட சிவராமன் அவளைப்பார்த்து "சரசு! சாமியார் பெரிய ஆசாமி. வேத வேதாந்தங்களைக் கரைத்துக் குடித்தவர். தினம் சாயங்காலம் மடத்தில் உபநிஷத்பாடம் சொல்லுகிறார். எத்தனையோ பேர்கள் வந்து கேட்கிறார்கள். பெண்களும் ஒரு பக்கத்தில் இருந்து கொண்டு கேட்கிறார்கள். நீயும் வந்து கேளேன்."

சரசுவுக்கு அடங்கிய ஆத்திரம் நிமிர்ந்து நின்றது. அந்த வேகத்தில் "சாமியாரும் சாஸ்திரமும் உங்களோடு இருக்கட்டும். இதையெல்லாம் கேட்டு, புத்தி கெட்டுப்போக நான் தயார் இல்லை." என்று உரக்கச் சொன்னாள்.

"சரசு! வாயில் வந்ததை உளறிக்கொட்டாதே. உன் மூளைக்கு இது ஒன்றும் புரியாது." என்று மனைவியின் குரலுக்குப் பணியக்கூடாத குரலில் உரக்கக் கத்தினான்!

"புரியவில்லையே என்று இங்கே யார் அழுதார்கள்?"

"நீ அழவில்லைதான். சரசு! நீ மடத்துக்கு வந்து உபநிஷத் கேட்க வேண்டாம். ஒன்று பண்ணு.

"என்னது?"

"உன் அக்கா அம்புஜம் உன்னைப்பார்க்க வேண்டும் என்று ரொம்ப ஆவலாக இருக்கிறாள். ஒரு நடை பம்பாய் போய்விட்டு வாயேன்."

"அதற்கென்ன போகிறேன். உங்கள் வேதாந்த விசாரத்துக்கும் உங்களுக்கும் இடையே நான் நிற்பானேன்?" என்றாள்.

அவன் அவளை விழித்துப் பார்த்தான். உதட்டை அழுத்தி இறுக மூடிக்கொண்டான். அடுத்த கணம் அறையை விட்டு வெளியேறிவிட்டான்.

மறுநாள் காலை வண்டியில் பம்பாய்க்குப் பயணமானாள் சரஸ்வதி!

* * *

அம்புஜத்தைப் பார்க்கப் பம்பாய் சென்ற சரஸ்வதி அங்கேயே தங்கிவிட்டாள்.

5 மணங்கிலிருந்து 50 மணங்கிற்கு....

.... இப்படி ஏக்கர் விளைச்சலில் அதிகரிப்பை ஷேக் அப்துல் காபரும், **அவரது ஐந்து சகோதரர்களும் சாதித்துள்ளனர்.** அவர்கள் வெற்றியின் ரகசியம் : **சிறந்த சாகுபடி முறையும் கூட்டு விவசாயமும்** தான்.

பீஹாரின் வாட்கன்ஞ் கிராமத்தில் உள்ள இந்த விவசாயிகள், முதன் முதலாகச் **செய்யும் உணர்ச்சியுடன்,** நவீன **சாகுபடி, சால் விதைப்பு** முறைகளை பின்பற்றியதுடன், சிறந்த விதைகள், **போதிய உரங்களையும் உபயோகித்து** வந்தனர். இத்துடன் புதிய கருவிகளையும் **விவசாய** முறைகளையும் கையாண்டு **கூட்டாக** சுமார் 45 ஏக்கர் நிலத்தில் **பயிரிட்டனர்.** இவை யாவற்றையும் தங்கள் சொந்த முயற்சியினாலேயே செய்தனர்.

பலன் : சம்பிரதாயமான முறையினால் முன்பு சராசரியில் ஒரு ஏக்கருக்கு 5 மணங்கு கோதுமை அல்லது நெல்தான் கிடைத்து வந்தது. ஆனால், இப்பொழுதோ, சிறந்த சாகுபடி முறைகள் அவர்களுக்கு ஏக்கருக்கு 40 முதல் 50 மணங்கு வரை தந்துள்ளன.

உங்கள் நிலமும் அதிக உற்பத்தியை அளிக்க முடியும். சிறந்த விவசாய முறைகளைக் கையாண்டு அதிக மகசூலை அடையுங்கள். இதனால் யாவருக்கும் அதிக உணவும் கிடைக்கும்.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்



அவள் கிளம்பிப்போய் ஒரு மாதத்துக்குமேல் ஆகிறது. இன்னும் திரும்பி வரவில்லை.

"கோபத்தில் கிளம்பிப் போயிருக்கிருள். எத்தனை நாட்கள், எத்தனை வாரங்கள், எத்தனை மாதங்கள் வேண்டுமோ, அத்தனை காலமும் தமக்கையின் அன்பையும் உபசரணையையும் அனுபவித்துவிட்டு, மெதுவாக வரட்டும்," என்று சிவராமன் எண்ணிவிட்டான். ஒரு விதத்தில் இதுவும் அவனுக்குச் சௌகரியம்தான்!

ஓரிரவு கீழே வீட்டுக் கதவை 'லொட்டு லொட்டு' என்று தட்டும் சத்தம் கேட்டது. 'சிவராமன் சிவராமன்' என்கிற கூக்குரலும் கலந்து ஒலித்தது.

சிவராமன் எழுந்து கீழே சென்ருன். கதவைத் திறந்து பார்த்தால், காக்கி உடையில் எதிரே தபால் சிப்பந்தி ஒருவன் சைக்கிளோடு நிற்கிருன். அவன் கையில் தந்தி!

தந்தியை வாங்கி, உறையை உடைத்துப் பார்த்தான்.

"சரஸ்வதிக்கு உடம்பு அதிகமாக இருக்கிறது படுக்கையில் அவள் கிடக்கிருள். உடனே புறப்பட்டு வரவும்" என்று தந்தி அறிவித்தது.

ஆத்ம முன்னேற்றப் பாதையில் திடசித்தத்தோடு நடைபோட்ட சிவராமனுக்கு உணர்ச்சிகள் மேலோங்கின. அறிவின் குரல் கம்மிற்று. படுத்து உறங்கிய இதய உணர்ச்சிகளுக்கு இப்பொழுது வேகம் பிறந்து, அந்த வேகத்தில் உக்கிரமும் கூடிக் கொண்டு விட்டது!

இத்தனை நாளும் அலட்சியமாக ஒதுக்கியிருந்தானே, அந்த சரஸ்வதி இப்பொழுது அவன் நெஞ்சு, உள்ளம், இருதயம் இவற்றின் ஒவ்வொரு அணுவிலும் எல்லா இடத்திலும் நிறைந்து நின்ருள்!

அன்றிரவே பூனவை விட்டு பம்பாய்க்குக் கிளம்பினுன் சிவராமன்.

மறுநாள் அதிகாலையில் அம்புஜத்தின் வீட்டுக்குள் நுழைந்தான். 'விடு விடு' வென்று சரஸ்வதி படுத்திருக்கும் அறையை அடைந்தான்.

சரஸ்வதி கட்டிலில் நீட்டிப் படுத்துக் கிடக்கிருள். அவளது மெலிந்த தேகத்துக்குள் ஜீவன் இருக்கிறதா இல்லையா? அவனுக்குப் புரியவில்லை.

கட்டிலின் விளம்பைப் பிடித்துக் கொண்டு, அதில் தலையைச் சாய்த்து 'சரசு! சரசு!' என்று இதயம் அதிரக் கூவினுன். அவன் உடம்பும் குலுங்கிற்று.

அவன் வந்து சேர்ந்த இரண்டாவது நாள் மாலை. இருளும் ஒளியும் ஒன்று கூடி ரகசியம் பேசும் புனித வேளை. அடித்துப் போட்டது போல் கிடந்த சரஸ்வதி லேசாக விழியைத் திறந்தாள். தன்னுடைய கணவர் பக்கத்தில் இருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. 'இது நிஜந்தானு?' என்கிற எண்ணத்தில் கண்ணை உடனே மூடிக்கொண்டு விட்டாள்.

அதே க்ஷணம் 'சரசு! சரசு!' என்று அன்பில் குழைத்த குரலில் அழைத்தான் சிவராமன்.

சரஸ்வதி மெதுவாகக் கண்ணை விழித்தாள். முகத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள்.

"நீங்களா?"

"ஆமாம், நான்தான், உன்னுடைய சிவராமன்."

"பூனவிலிருந்தா வந்திருக்கிறீர்கள்?"

"உம்."

"சாமியாரை விட்டுவிட்டா வந்தீர்கள்?"

"ஆமாம்,"

"உங்கள் புஸ்தகம்?"

"அது எந்த மூலையில் கிடக்கிறதோ?"

"என்னைப் பார்க்கவா ஓடிவந்தீர்கள்?"

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். அத்தோடு நின்றதா? உன்னை அழைத்துப்போகவும் வந்திருக்கிறேன்" என்ற சிவராமன் மனைவியின் கரத்தை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டான்.

சரஸ்வதியின் உதட்டில் மிருதுவான புன்னகை இழையோடியது. அவள் பெருமூச்சுவிட்டாள்.

ஒரு வாரத்துக்குள் எல்லா ஆபத்துக்களையும் தாண்டிவிட்டாள் சரஸ்வதி. படுக்கையில் எழுந்து உட்காரவும் சற்றே அறையில் நடமாடவும் அவளால் முடிந்தது.

இன்னும் பதினைந்து நாளில் அவள் உடம்பு முழுவதும் தேறிவிட்டது. அதன் பிறகு ஒரு மாதம் கழித்து மனைவியைப் பூனவுக்கு அழைத்து வந்தான் சிவராமன்.

இப்பொழுதெல்லாம் சிவராமன் மனைவியிடம் துளி அலட்சியம் காட்டுவது கிடையாது. அவள் போக்குக்கெல்லாம் அனுசரித்து, இதயத்து அன்பை முழுசாகக் கொட்டி அபிஷேகம் புரிகிருன்!

கணவனின் அன்புப் பெருக்கு மனைவிக்குச் சில சமயம் சங்கடமாகக்கூட இருக்கும். "என்ன போங்கள்!" என்று அப்பொழுதெல்லாம் சரஸ்வதி அன்போடு உதறுவாள். உடனே சிவராமன் "இந்தா சரஸு! உன்னை நான் பம்பாயிலிருந்து அழைத்து வரவில்லை. எம லோகத்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். இது ஞாபகம் இருக்கட்டும்" என்று அதிகாரக் குரலில் சொல்லுவான்.

சரசுவும் உடனே பதில் கூறுவாள். "நான் மட்டும் என்ன, உங்களை இமயப் பெருமலையின் பனிச் சிகரத்திலிருந்து வென்று அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேனுக்கும்!"

அவன் சிரிப்பான், அவள் புன்னகைபுரிவாள்!

சிறுவர் பகுதி

எஸ். விசாலாட்சி

தெரிந்துகொள்ளுங்கள்

வெயில் நேரத்தில் வடகடலின் நீர் பார்க்கப் பசுமையாக இருக்கும். ஆனால், வானம் மேகம் சூழ்ந்து இருந்தால் இந்தப் பசுமை மாறி பழுப்பு நிறமாகத் தோன்றும்.

* * *

செங்கடலின் நீர் சிகப்பல்ல. ஆனால், அக்கடலில் சிகப்பு நிறமான பவளப் பூச்சிகள் ஏராளம். ஒருவகை சிகப்புப்பாசியும் அங்கு அதிகமாகக் காணப்படுகிறது. இதனால்தான் அக்கடலுக்குச் செங்கடல் எனப் பெயர் வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

* * *

உலகிலேயே மிகவும் ஆழக் குறைவான கடல் பாரசீகவளைகுடாவேயாகும். அதன் சராசரி ஆழம் 84 அடிதான்.

* * *

கி. பி. 500-லிருந்து 1940 வரை 1440 ஆண்டுகளில் உலகில் மொத்தம் 903 யுத்தங்கள் நடந்துள்ளன.

* * *

இந்தியாவில் கல்கத்தா, பம்பாய், டில்லி, கான்பூர் ஆகிய நான்கு நகரங்களில்தான் ட்ராம் வண்டிகள் இப்பொழுது ஓடுகின்றன.

கோடிட்ட இடங்களை நிரப்புக

கோழி —— நாள் அடைகாக்கிறது
வாத்து —— ,,
புரு —— ,,
டர்க்கி கோழி —— ,,

மனிதனின் நகம் வருடம் —— அங்குலம் வளர்கிறது.
,, தலைமயிர் ,, —— ,,

(மேலே கோடிட்ட இடங்களில் $2\frac{1}{2}$, 16, 18 21, 26, 30 ஆகிய ஆறு எண்களை நிரப்பினால் சரியான விடை கிடைத்து விடும். எங்கே உங்களால் சரியானபடி நிரப்ப முடிகிறதா பாருங்கள். சரியான விடை மற்றொரு இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு உங்கள் விடையை ஒப்பிட்டு உங்கள் திறனை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்,)

பால் கொடுக்கும் காலம்

பசு சாதாரணமாக ஒன்பது மாதங்கள் பால் கொடுப்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. பசுவைப்போலவே தன் பிள்ளைகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் ஏராளமான மிருகங்கள் உண்டு. அவையெல்லாம் எவ்வளவு காலம் தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கின்றன என்பதைப் பாருங்கள்.

அணில்	28 நாள்
எலி	28 ,,
கங்காரு	39 ,,
முயல்	40 ,,
நாய், ஓநாய்	62 ,,
நரி	62 ,,
பன்றி	63 ,,

பூனை	63	,,
சிங்கம்	108	,,
கழுதை	380	,,
கரடி	6	மாதம்
குரங்கு	7	,,
மான்	8	,,
திமிங்கிலம்	10	,,
குதிரை	11	,,
ஒட்டைச்சிவிங்கி	14	,,
யானை	22	,,

யார் சொல்லுவது சரி?

(1) ஆப்பிரிக்காவில் சூடான் என ஒரே ஒரு நாடுதான் உண்டு என்கிறான் ரவி. இல்லை. இரண்டு சூடான்கள் உண்டு என்கிறாள் சசி. இவர்களில் யார் சொல்லுவது சரி!

(2) பறவை இனத்தில் மிக வேகமாகப் பறப்பது சிட்டு என்கிறான் கிட்டு. இல்லை, கரிச்சான் என்கிறாள் பட்டு. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(3) மான் தன் மூக்கால்தான் சுவாசிக்கிறது என்கிறான் குப்பு, இல்லை, அது தன் கண்ணால்தான் சுவாசிக்கிறது என்கிறாள் சுப்பு, இவர்களில் யார் சொல்லுவது சரி?

(4) "ஜனகணமன" என்னும் தேசீய கீதத்தை 1928-ல் கவியரசர் தாகூர் இயற்றி முதன் முதலாக சாந்தி நிகேதன பிரார்த்தனைக் கூட்டத்தில் பாடினார் என்கிறான் பாலன், இல்லை 1918-ல் நடந்த முப்பதாவது காங்கிரஸ் மகா சபையில் கவியரசர் முதன் முதலாக அக்கீதத்தை இயற்றிப் பாடினார் என்கிறாள் பாலம், இவர்களில் யார் சொல்லுவது சரி?

(5) இந்திய தபால் தலையில் ஏழாம் எட்வர்டு மன்னரின் தலை 1908-ல் தலைகீழாக அச்சானது என்கிறான் ராமஸ்வாமி. 1928-ல் ஐந்தாம் ஜார்ஜின் தலைதான் அவ்விதம் அச்சானது என்கிறான் கிருஷ்ணசாமி இந்தியாவை ஆண்ட எவர் தலையும் தலைகீழாக அச்சானதில்லை என்கிறான் கந்தசாமி. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(சரியான விடை மற்றொரு புறம்)

யாருடைய கார் தெரியுமா?

பட்டு, கிட்டு என இரண்டு நண்பர்கள். பள்ளிக்குச் சென்றாலும் சரி, விளையாடச் சென்றாலும் சரி, வேறு எங்கு சென்றாலும் சரி அவர்கள் சேர்ந்தே போவதுதான் வழக்கம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, விளையாடப் பார்க்குக்குப் போவதென முந்தின நாள் மாலையே இருவரும் பேசி முடிவு செய்திருந்தனர். காலையில் காப்பி சாப்பிட்டானதும் பட்டு கிட்டுவின் வீட்டுக்கு வந்தான். இருவருமாகச் சேர்ந்து பார்க்குக்குக் கிளம்பினார்கள்.

பார்க்கில் என்ன விளையாட்டு விளையாடலாம். காவல் காரனை ஏமாற்றிவிட்டு பூத்திருக்கும் பட்டு ரோஜாக்களை எப்படித் தட்டி வருவது எனத்திட்டம் தீட்டியபடி பார்க்கை நோக்கி அவர்களிருவரும் போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது அப்பக்கமாக வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்த கார் ஒன்று திடீரென அவர்கள் அருகே வந்ததும் நின்றது. இதைப் பார்த்த அவர்கள் திடுக்கிட்டு காரை நிமிர்ந்து பார்த்தனர். காருக்குள்ளே முன் சீட்டில் ட்ரைவர் அமர்ந்திருந்தான். பின் சீட்டில் சேட் ஒருவனும் ஆங்கிலேயன் ஒருவனும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தனர்.

திடீரென்று நின்ற கார் அவ்விதமே கிளம்பியும் போய்விட்டது. அவர்கள் தர்க்கத்துக்கும் நல்ல விஷயம் ஒன்று அகப்பட்டுக் கொண்டது.

"டேய் பட்டு! அந்தக் கார் யாருடையது என்று நினைக்கிறாய்? அந்த சேட்டுடையதா? வெள்ளைக்காரனுடையதா?"

"சந்தேக மென்ன? வெள்ளைக்காரனுடையதுதான்" என்றான் பட்டு.

"இல்லை. அது அந்த சேட்டுடையதுதான் என்கிறேன் நான்" என்றான் கிட்டு.

"அதெப்படி சேட்டுடையதென்கிறாய்?" எனக் கேட்டான் பட்டு.

"சேட்டைப் பார்த்தாலே தெரியவில்லையா? அவன் போட்டிருக்கும் கோட்டே ஆயிரம் ரூபாய் பெறுமே!"

"வெள்ளைக்காரன் மட்டும் என்ன? அவன் போட்டிருக்கும் சூட்டே நாலாயிரம் பெறுமே!" என்றான் பட்டு தன் கட்சியை விட்டுக்கொடுக்காமல்.

"நாலாயிரம் பெற்ருல் என்ன? ஏழாயிரம் பெற்ருல் என்ன? உட்கார்ந்திருந்த கம்பீர மான தோரணையிலிருந்தே கார் அவனு டையதுதான் எனத்தெரியவில்லையா?"

"ஏண்டா! உன் கண் என்ன புல் மேயப் போயிருந்ததா? வெள்ளைக்காரனை நீ பார்க் கவே இல்லையா? அவன் எவ்வளவு மிடுக் காக உட்கார்ந்திருந்தான்? அதிலிருந்தே அவன் கார்தான் அது என்று தெரிய வில் லையா?" என்ருன் பட்டு.

"டேய் பட்டு! நாவை உள்ளே அடக்கிப் பேசு. என்கண் புல்மேயப் போயிருந்த தென்ருல் உன் கண் குப்பைமேட்டை வட்டமிடப் போயிருந்ததோ?"

"டேய் கிட்டு. வாயைமூடு! குப்பைமேடு கிப்பைமேடு என்ருல். எனக்குப் பொல்லாத கோபம்வரும்" எனச் சீறினன் பட்டு. இவ் விதம் ஒருவருக்கொருவர் வாய்ச்சண்டை முற்றிக் கைகலப்பு ஏற்பட்டு விட்டது. தெரு வில் போவோர் வருவோர் கூடி நின்று அவர்கள் சண்டையை வேடிக்கைதான் பார்த்தார்களே ஒழிய அவர்களை விலக்கி விட யாரும் முன் வரவில்லை.

வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தவர்களில் தமாஷ்காரன் ஒருவன் கிட்டுவை சுட்டிக் காட்டி "இவன்தான் ஜெயிப்பான். நான் பத்து ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்" என் ருன். இதைக்கேட்ட மற்ருெரு தமாஷ் காரன் பட்டுவைச் சுட்டிக்காட்டி "இவன் தான் ஜெயிப்பான் நான் இருபது ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்" என்ருன்.

"இல்லை இவன்தான் ஜெயிப்பான். நான் முப்பது ரூபாய் பந்தயம்" என்ருன் கிட்டு ஆதரவாளன்.

"இல்லை இவன்தான் ஜெயிப்பான் நான் நாற்பது ரூபாய் பந்தயம்" என்ருன் பட்டு ஆதரவாளன். இவ்விதம் பந்தயத் தொகை போட்டிமேல் போட்டியாக ஏறிக்கொண்டே போனது.

அச்சமயம் சண்டைக்குக் காரணமான கார் எங்கிருந்தோ திடீரென அங்கு வந்து அவர்கள் அருகே நின்றது. சண்டை போடுவதை விடுத்து இருவரும் காரை நோக்கிப் பாய்ந்தோடினர். ஆனல் காரில் வெள்ளைக்காரனே சேட்டோ இல்லை. ட்ரைவர் மட்டும்தான் இருந்தான்.

"ஏன் ட்ரைவர்! இந்தக் கார் அந்த சேட் டுடையதுதானே?" எனக் கேட்டான் கிட்டு ஆவல் பொங்க.

"ஏன் ட்ரைவர்! இந்தக் கார் அந்த வெள்ளைக்காரனுடையதுதானே!" என்ருன் பட்டு ஆவல் உந்த.

"இந்தக்கார் சேட்டுடையதுமல்ல; வெள் ளைக்காரனுடையதுமல்ல. மாணிக்கம் செட்டியாருடையது. செட்டியார் வீட் டுக்கு வந்திருந்த அவர்களிருவரையும் அவரவர்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்புகிறேன்" என்ருன் ட்ரைவர். அங்கு கூடியிருந்த எல்லோரும் இதைக் கேட்டுக் கை தட்டி நகைத்தனர். பட்டுவும் கிட்டுவும் வெட்கத்தால் தலை குனிந்தனர். அன்றிலிருந்து அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உயர்வு எனப் போட்டி போடுவதே இல்லை.

குழந்தைகளே! உங்கள் நண்பர்களைவிட நீங்கள் உயர்வு என்ற எண்ணம் கொள்ள வேண்டாம். அப்படிக் கொண்டால் பட்டுவையும் கிட்டுவையும்போல் என்று வது ஒரு நாள் நீங்கள் அவமானப்பட்டு நிற்கவே நேரிடும்.

கோடிட்ட இடங்களை நிரப்புக (சரியான விடை)

கோழி	21	நாள் அடை காக்கிறது.
வாத்து	30	,,
புரு	18	,,
டர்க்கிகோழி	26	,,

மனிதனின் நகம் வருடம் $2\frac{1}{2}$ அங்குலம் வளர்கிறது.

,, தலைமயிர் ,, 16 ,,

யார் சொல்லுவது சரி? (சரியான விடை)

(1) சசி சொல்லுவது சரி, ஆப்ரிக்கா வில் எகிப்துக்குத் தெற்கே சூடான் என்று ஒரு நாடு இருக்கிறது. மேற்கு ஆப்ரிக்கா வில் சஹாராப் பாலைவனத்தில் மாரிடா னியா, அல்ஜீரியா நைஜர், வோல்டெய்க் குடியரசு ஆகியவைகளுக்கு இடையில் சூடான் என மற்ருெரு நாடு இருக்கிறது,

(2) இருவர் சொல்லுவதும் தவறு. பறவை இனத்தில் மிக வேகமாகப் பறப் பது அன்னம், அது ஒரு விநாடியில் 120–140 அடி, அதாவது ஒரு நிமிடத்தில் 7200–8400 அடி தூரம் பறக்கும் ஆற்றல் பெற் றிருக்கிறது.

(3) இருவர் சொல்லுவதும் பாதி பாதி சரி, மான் தன் மூக்கு, கண் இரண்டாலும் சுவாசிக்கிறது.

(4) இருவர் சொல்லுவதும் தவறு, 1919-ல் மதனபள்ளி தியாசாபிகல் காலே ஜில் நடந்த பிரார்த்தனைக்கூட்டம் ஒன்றில் தான் முதன் முதலாகக்கவியரசர் "ஜனகண மன"வை இயற்றித் தானே பாடினர்.

(5) மூவர் சொல்லுவதும் தவறு. 1854-ல் விக்டோரியா ராணியின் தபால் தலை இவ்விதம் தலை கீழாக அச்சடிக்கப்பட்டு வினியோகமாயிற்று.



"நீ இறக்கவில்லை"

இராச மாரப்பா

"இந்தத் திருக்கூத்தைப் பார்த்தீர்களா," என்று அப்பொழுது தன் கணவர் அப்பரிடம் வந்து அவசரத் தாக்கீதைச் சமர்ப்பித்தாள் சிவகாமி.

"எதைச் சொல்லுகிறாய்," என்றார் அப்பர் நிதானமாக.

"பாருங்கள், உங்க பிள்ளைகள் விளையாடுகிற லட்சணத்தை,"

"ஏன் உன் பிள்ளைகள் இல்லையா?"

"ஆமாம். நம்ம பிள்ளைகளைத்தான் சொல்றேன்.

"இப்ப என்ன வந்தது?"

"அண்ணன் தங்கையாட்டமாகவா அவர்கள் விளையாடுறாங்க. அவன் அவளுடைய விரலை வாயில்வைத்து உறிஞ்சிறதும், அவள் அவனுடைய காலைத் தன் மடியில் வைத்து முள்ளை எடுக்கிறதும், அவர்கள் ஒருத்தருக் கொருத்தர் முறைச்சு முறைச்சுப் பார்க்கிறதும், செச்சே சகிக்கலே போங்க"

"நாம் ரொம்ப பாக்கியம் பெற்றவர்கள் என்று நீ நினைக்க வேண்டும்."

சிவகாமி தன் காதைப் பொத்திக் கொண்டே "சிவ, சிவா, நல்ல பாக்கியம். பொல்லாத பாவம் என்று சொல்லுங்க. உலகம் பிழைக்க வேண்டுமே. இந்த மாதிரி அநியாயம் நடந்தா உலகம் அழிஞ்சுதான் போகும்.

இதைக் கேட்ட அப்பர், "நிறுத்து சிவகாமி; ஏன் அவசரப்படுகிறாய். அவர்கள் தவறவேயில்லை. அன்பொழுகப், பழகுகிறார்கள் – முறையோடு என்றார்" அப்பர்.

"இந்தக் கழுதைகளுக்கு முறைவேறா" என்றாள் சிவகாமி.

"இல்லாமல் என்ன? இயற்கை தன் வழியில் என்றுமே தவறியதில்லை. நான் இப்பொழுது சொல்லப்போவதைக் கவனமாய்க் கேள். உனக்குத் தலைப்பிள்ளை பிரசவ வேளையில் ஆஸ்பத்திரியில் நீ பிதற்றியதெல்லாம் நினைவிருக்கிறதா?"

"இப்பொழுது சரியாக நினைவில்லை"

"அன்று குழந்தை பிறந்ததும், இறந்து விட்டது. உடனே டாக்டர் என்னிடம் ஓடி வந்து அவசரமாக ஒரு யோசனை கூறினார்.

அப்பொழுது அதை ஏற்றிருக்காவிட்டால் உன்னை நான் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?"

"... ம் ... " என்று அசைவற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள் சிவகாமி.

"இதோ உங்கள் குழந்தை இறக்கவில்லை," என்று டாக்டர் உன்னிடம் சொல்லி ஒரு ஆண் குழந்தையை அப்பொழுதே உன்



பக்கத்தில் கிடத்தினார். நீ தெளிந்தாய், சிரித்தாய்." என்று அப்பர் கூறி முடித்தார்.

"அப்படின்னா ரவி அனாதைக் குழந்தையா" என்றாள் சிவகாமி.

"சும்மா நிறுத்து சிவகாமி. கடைசியில் பார்த்தால் எல்லோருக்கும் மண் சொந்தம். மண்ணுக்கு எல்லோரும் சொந்தம். எனவே, அனாதை என்று உலகில் யாரும் கிடையாது."

"என்ன ரொம்பத்தான் அளக்கிறீங்க. ஒட்டு, உறவு, ஒண்ணையுமே பார்ப்பதில்லையா?"

"ஏன் அதையுந்தான் வைத்துக்கொள்ளேன். இப்பொழுது அதுவும் உன் பக்கமே இருக்கிறது"

"சரி, சரி, ரவி யார்"

"யாராவது குழந்தையைக் கொடுக்க முன் வருவார்களா?

அன்று பிரசவத்தில் குழந்தை இறந்த செய்தியை நீ கேட்டதும், அதிகமாகப்புலம்ப ஆரம்பித்துவிட்டாய். உனது ரத்த ஓட்டமே நின்றுவிட்டதோ என்று டாக்டர் அஞ்சி விட்டார். அப்பொழுது ரவியை உன் குழந்தை என்று உன்னிடம் ஒப்புவித்திருக்காவிட்டால் உன் நிலைமை மோசமாயிருந்திருக்கும். அதே நேரத்தில், அதே ஆஸ்பத்திரியில், உன் தம்பியின் மனைவி பெற்றிருந்தாள் ரவியை"

"பார்த்தீர்களா...என்ன இருந்தாலும் உடன் பிறந்த பாசம் விட்டுப் போகுமா"

"அடடா எத்தனை ஒட்டு, உறவு, பாசம்! இப்பொழுது நெருங்கத்தானே செய்வாய்"

"முன்பே ஏன் சொல்லவில்லை?"

சிவகாமி கண்ணீரை மட்டும் உகுத்தாள். அடுத்த ஒரு நல்ல நாளே, சிவகாமியின் தம்பி சேகருக்குத் தந்தி பறந்தது.

சேகர், பம்பாயிலிருந்து தன் மனைவி, நண்பர் சிலருடன் கார்களில் வந்து இறங்கினான்.

சேகர் தன் சகோதரியுடன் நீண்ட நாளைய விஷயங்களைப்பற்றி அளவளாவினான்.

ஆனால், ரவிக்கும், முல்லைக்கும் மட்டும் ஏனோ அத்தனையையும் ரகசியமாகவே வைத்து விட்டனர்.

ரவியும், முல்லையுந்தான் திருமணத் தம்பதிகள் என்பதை அவர்களுள் ஒருவருக்கும்

அறிவிக்கவில்லை - கட்டுப்பாடாக. வேறொன்றும் இல்லை. சிறிது வேடிக்கை காட்டுவதற்குத்தான். அண்ணன் தங்கை என்ற உறவில் வளர்ந்தவர்கள். ஆனால், அவர்கள் தான் முறைப்பெண், முறை மாப்பிள்ளை என்பதைத் திடீர் என்று அறிவித்து வேடிக்கை பார்க்க எண்ணினார்கள். ரவியைத் தனியே அழைத்து அவனுக்குக் கலியாணம் என்று மட்டும் கூறிவிட்டுப் பெண் யார், எந்த ஊர் என்பதைக் கூறவில்லை. ரவியும் பெண் யார்? என்று கேட்கவில்லை! கேட்டுத் தெரிய விரும்பவில்லை. காரணம் – கலியாணம் என்ற சொல்லைக் கேட்ட உடன் கலியாணமே வேண்டாம், என்று கூறிப் போய் விட்டான் ரவி.

அதேபோல் முல்லையை மட்டும் தனியே அழைத்து, அவளுக்குக் கலியாணம் என்று மட்டும் சொல்லி, மாப்பிள்ளை யார், எந்த ஊர் என்பதைச் சொல்லவில்லை. முல்லையும் கேட்டறிய விரும்பாதவளாய், "கலியாணமே, வேண்டாம்," என்று சொல்லி விட்டுப் பதில் எதுவும் பெற விரும்பாதவளாய் அவ்விடம் விட்டு அகன்று விட்டாள்.

ரவியும், முல்லையும் கலியாணத்தை அப்பொழுது ஏன் விரும்பவில்லை?

"கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கட்டும் அவர்கள் மனம்போல்தானே முடியப்போகிறது," என்ற சமாதானத்தை அவர்களது பெற்றோர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டனர்.

பாவம்! மற்றக் குடும்பத்து அண்ணன் தங்கைபோல் இல்லாமல் இந்தப் பிள்ளைகள் இரண்டும் அண்ணன் தங்கையாக அதிக நெருக்கத்துடன் பழகிவிட்டனர்.

கலியாணம் முடிந்ததும், பிரிந்துவிடவேண்டுமே என்ற பயத்தினால், ஒருவர், ஒருவரை விட்டுப் பிரியமனமில்லாமல் தத்தளித்திருக்க வேண்டும். ஆகையினால் தான், ரவியும், முல்லையும் 'கலியாணம் வேண்டாம்' என்று சொல்லி வைத்தாற்போல் சொல்லியிருக்கின்றனர். ஆனால், இருவருந்தான் திருமணத் தம்பதிகள் என்றால் பிறகு அவர்களுக்குள் பிரிவு ஏது? என்றும்போல் கூடி மகிழட்டும், என்றுதான் ரவி, முல்லைக்கு 'முறை மாப்பிள்ளை—அத்தான் என்ற உறவு'—என்ற அந்த சின்ன ரகசியத்தை, ரவியிடமோ, முல்லையிடமோ கூறிக் கொள்ளாமல் மூடி வைத்திருந்தனர். நல்ல வேடிக்கை...!

ஆனால். அன்று முல்லை கண் விசித்துக் கொண்டிருந்தாள். பார்த்துவிட்ட ரவி பதறிப் போய்விட்டான்.

"முல்லை! உன் கண்ணில் கண்ணீரா? யாரம்மா கற்றுக் கொடுத்தது. உன் கண்ணில் கண்ணீர் என்றால், என் நெஞ்சில் அது நெருப்பு என்பதை இன்றாவது தெரிந்து கொள்ளம்மா!"

"ஏனண்ணா! நீங்கள் முகவாட்டமாக இருக்கிறீர்கள்," என்றாள் முல்லை.

"இதற்குத்தானா அம்மா உன் கண்ணில் கண்ணீர். ஆண்களுக்குப் பல வேலைகளிருக்கும். அதில் வெற்றி தோல்வி மாறி மாறி வரும்பொழுது சில வேளைகளில் கவலையும் வந்து போவதுண்டு. இதை எல்லாம் நீ பொருட் படுத்தலாமா?"

"உங்கள் கண்ணிலும் கண்ணீரா" என்று அலறியே விட்டாள் முல்லை.

ரவி எழுந்து போய்விட்டான். அவர்கள் இருவரும் கண்ணீர்சொட்டவிட்டதே இல்லை.

அன்று ஏன் அங்கிலை? ரவி குழம்பினான். முல்லை ஏன் அழுதாள். என் மனைவி வந்ததும் முல்லைமேல் வைத்திருந்த அன்பு குறைந்துவிடும். 'அண்ணியின்மீது விளையும் புது அன்பிற்கு அண்ணன் அடிமையாகி விடுவான்' என்று நினைத்து அழுதிருப்பாள்.

"அண்ணன் ஏன் அழுதார். எனக்குக் கலியாணம் என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். நான் கணவருடன் சென்று விடுவேன்; பிறகு புதுப்பாசத்தால் அண்ணனை மறந்து விடுவேன்," என்றுதான் அவர் கண்ணீர் விட்டிருக்கிறார் என்று முல்லை நினைத்து ஏங்கிக் கிடந்தாள்.

ரவி, முல்லை, இருவரும் படித்தவர்களே! அண்ணன் தங்கைகளும், பருவத்தில் குடும்ப வாழ்க்கை நடத்தப் பிரிந்துவிடுவதே சமுதாய ஒப்பந்தத்தில் தத்தம் கடமை என்பதை இருவரும் அறிவார்கள். இருந்தாலும் அவ்விருவரும் தம்மை எப்படியோ அப்படிப்பட்ட புது உறவுக்கு அடிமையாக்கிக்கொள்ள விரும்பாதவராகிவிட்டனர்.

மறுநாளும் முன்னைப்போல், முல்லை கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். ரவி பார்த்து விட்டான்.

"ஏனம்மா முல்லை! என் அன்பைச் சோதிக்கவும் துணிந்து விட்டாயா" என்று ரவி மனம் நொந்து கேட்டு விட்டான்.

"ஏனண்ணா! மறைக்கிறாய். எனக்குக் கலியாணமாமே," என்று முல்லை முடிப்பதற்குள், "உனக்குக் கலியாணமா" என்று ரவி அதிர்ச்சி அடைந்தவனைப்போல் கேட்டான்.

"ஆமாம் அண்ணா! கலியாணம் வேண்டவே வேண்டாம்! உங்களைப் பிரியவே மாட்டேன். என்னை விட்டு விடாதீர்கள் அண்ணா"

முல்லைக்குத் திருமணம் என்பதை அப்பொழுது முல்லை சொல்லத்தான் ரவி அறிய முடிந்தது. அதுவரை தனக்குத்தான் கலி

யாணம் என்று ரவிக்குத் தெரியும். அதனால் அவருக்கு வரும் மனைவி அவன்மீது காட்டும் அன்பிற்கு அவன் பாத்திரம் ஆகிவிடுவான் – அதனால் தங்கையை மறந்துவிட நேரிட்டு விடும் – என்று தன் அன்பைச் சந்தேகிக்கா விட்டாலும் அப்படி ஒரு சந்தர்ப்பத்தைச் சபித்துக் கொண்டிருந்தான். எனவே, அவன் தனது பெற்றோரிடம் கெஞ்சியாவது, தனது கலியாணத்தை நிறுத்தி விடலாம் என்று பெற்றோரை அணுக நேரம் பார்த்திருந்தான். அதற்குள் முல்லை வெளியிட்ட அவளுக்குக் கலியாணம் என்ற அத்தகவல் அவனை இரட்டைத் தாக்குதலுக்குள் அமுக்கிக் கொண்டது.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "ஆமாம் அம்மா முல்லை! சற்று யோசித்துப் பார். காலமும் சமுதாயமும் இட்ட கருத்துப்படி பருவத்தில் கணவன் என்ற புது உறவினனோடு, இணைந்து தங்கை வாழும் குதூகலத்தைப் பார்த்து மகிழ வேண்டியது தானே அண்ணனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும்," என்று தன் உள்ளத்தை இரும்புத் திரையிட்டு, முல்லையைச் சமாதானம் செய்ய முயற்சித்தான்.

முல்லை துள்ளி எழுந்து விட்டாள். "அண்ணா! நீங்கள் ஒரு சூது செய்கிறீர்கள். என்னை உதறிவிடத்தான் நீங்களும் துடிக்கிறீர்கள்," என்று ரவிமீது கோபக்கனலை எறிந்த முல்லை, அடுத்த கணமே, "இல்லை அண்ணா! இல்லை. மன்னித்து விடுங்கள். என்னை நீங்கள் வேண்டும் என்றே சோதிக்கிறீர்கள் நன்றாகச் சோதியுங்கள். அத்தனையும் என்மேல் நீங்கள் கொண்டுள்ள அபரிமிதமான அன்பைத்தான் காட்டுகிறது. உங்களை எனக்கு நன்றாகத் தெரியும்."

"இல்லை, முல்லை! நான்தான் தவறி ஏதேதோ உளறிவிட்டேன். இனிமேல் யாரும் நம்மைப் பிரிக்கமுடியாது. எப்பேர்ப்பட்ட, பெண், மாப்பிள்ளை என்று வர்ணித்தாலும் முடிவாகப் பிடிவாதத்துடன் நமக்குக் கலியாணம் வேண்டாம் என்று கூறி விடுவோம்." என்று ரவி முல்லையைத் தூக்கி நிறுத்தினான்.

அன்று ஒரு நாள்

அப்பா ரவியை மட்டும் தனியாகக் கூப்பிட்டு, எல்லோர் முன்னிலையிலும் உட்காரச் செய்தார், ஊரில் உள்ள உற்ற நண்பர் சிலர், பழைய டாக்டர் வேணு, உட்பட அனைவரும் அக்குழுவில் இருந்தனர்.

அதுதான் சரியான சந்தர்ப்பம் என்று எண்ணியவனாய் ரவி, குழுவினர் பேச்சை ஆரம்பிக்குமுன், "அப்பா எனக்குக் கலியாணம் இப்போது வேண்டாம்." என்றான்.

"யாரப்பா அது-கலியாணம், என்றதும் தம் பெற்றோரிடம் உடனே 'சரி' சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தானாகவே செய்து வைக்கச்சொல்லி தொந்தரவு செய்வார்கள். ஆனால் பெற்றோர்கள் முன் வந்தால் கொஞ்சம் பிகு பண்ணத்தான் செய்வார்கள்," என்றார் டாக்டர்.

"அப்படி யொன்றுமில்லை," என்று சற்று சினந்த முகத்தோடு டாக்டரை நோக்கினான் ரவி.

"இருந்தாலும் நாங்கள் அப்படி விட்டு விடலாமா. காலம் கடந்து போகிறது."

"முடியாது...எங்கள் முடிவை மாற்ற முடியாது," என்றான் ரவி.

"அதாரப்பா..... எங்கள்......"

"என் தங்கையைப் பிரியவே மாட்டேன்"

"சரி.....அவள்"

"அவளுந்தான்"

"ரொம்ப சரி,"—எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். ரவிக்கு இன்னும் விளங்காத நிலைதானே.

எதுவும் விளங்காதவனாய், ரவி அவ்விடம் விட்டு நகர ஆரம்பித்தான். டாக்டர் எழுந்து சென்று ரவியை நிறுத்தி மீண்டும் அவனை உட்காரும்படி வேண்டிக்கொண்டார்.

ஒரு பொம்மையைப் போல உட்கார்ந்தான் ரவி.

ரவியின் பிறப்பின் வரலாற்றை டாக்டர் தொடங்கினார்.

அங்கு நிசப்தம் நிலவிற்று.

ரவிக்கு முல்லை உண்மையில் எந்த உறவுக்குள் அடக்கமானவள் என்ற நிகழ்ச்சிகளை டாக்டர் 'ஆதியோடந்த'மாக ரவியிடம் எடுத்துக் கூறி முடித்தார். "நீ முல்லையை இனிமேல் என்றுமே பிரியவேண்டியதில்லையல்லவா. மகிழ்ச்சிதானே," என்று ரவியிடம் எல்லோருமே கூறினார்கள்—மகிழ்ச்சியுடன்.

"இது ரவிக்கு ஆச்சரியத்தைத்தானே கொடுத்திருக்கும்! அதனால்தான் பேசாமல் போகிறான். அங்கு போய் தனியாக எண்ணிப் பார்ப்பான். அடையப் போகும் அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்வான்." என்று அங்குள்ளோர் நினைத்துத் தாமும் மகிழ்ந்தனர்.

அடுத்தே முல்லையையும் அழைத்து விஷயத்தைக் கூறினார்கள். அவளும் மௌனமாகவே எழுந்து சென்றுவிட்டாள்.

கலியாணத்தின் முதல்வேலையாக. கலியாண அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு ரவி, முல்லை இருவருக்கும் மட்டும் முதலில் கிடைக்கும்படி செய்தனர்.

ஒரு கூட்டுறவு முயற்சி

உற்பத்திக்கும், விற்பனைக்கும் கூட்டுறவு முறையில் திருத்தியமைக்கப் பட்டு வரும் கைத்தறித் தொழிலானது நிலையான முன்னேற்றம் அடைந்து வருகிறது. 1952ல் இருந்த 6.82 லக்ஷம் தறிகளானது இன்று கூட்டுறவுத் திட்டத்தில் சுமார் 12 லக்ஷமாக பெருகி உள்ளன. விற்பனைக்கு தற்சமயம் மற்ற வழிகளைத் தவிர 1595 விற்பனை டெப்போக்களும், 29 ராஜ்யங்களுக்கிடையே விற்பனைக்கான டெப்போக்களும், 37 மோட்டார் விற்பனை வான்களும் உள்ளன.



கைத்தறிகள்

இந்தியப் பொருளாதாரத்தின்
இன்றியமையாத ஓர் அம்சம்

அகில இந்தியக் கைத்தறி போர்டு
தபால் பை நம்பர் 10004, பம்பாய்

DA 59/403

ஆனால், மறுநாள் காலையில் "ரவியையும், முல்லையையும், இருவரையுமே வீட்டில் காண வில்லை," என்ற குரல்கள் அவர்களது வீட்டின் எல்லையைவிட்டு வெளிப்பாய ஆர்ப் பரித்தன.

அவர்களது பெற்றோர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"எங்கே சென்றுவிட்டனர். ஏனிப்படி?" என்ற கலக்கம் அவர்களை வாட்டியது.

அப்பொழுது ரவியின் அறையில் ஒரு கடி தத்தைக் கண்டெடுத்தனர். அது முல்லையால் ரவிக்கு எழுதப்பட்ட கடிதம்:-

"அன்புள்ள அண்ணா! எனக்குக் கலியாணம் என்று மட்டும் சில நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். அண்ணா! நம்மைப் பிணைத்த சகோதர பாசம் அத்தனை எளிதில் உடனே பிறர் நினைப்பதுபோல் பிரித்துவிடக் கூடி யதா?

அதுவல்ல பேரிடி. ஆனால், அந்தக் கண வரே தாங்கள்தான் என்று இப்பொழுது கூற முன்வந்துவிட்டனர். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. நான் தங்களது அத்தை மகளாம். மனைவியாகத் தகுந்த வளாம்; உரிமை உள்ளவளாம். இதை எழுதுவதற்கே கை கூசுகிறது. நெஞ்சம் பதறுகிறது.

இவற்றைவிடக் கொடியது மற்றும் ஒன்றுளது. இந்தக் கலியாணத்திற்குத் தாங்களும் தங்களது சம்மதத்தைக் கொடுத் திருப்பதுதான். இல்லாமலா இத்தனை ஏற்பாடுகளும் நடைபெறும்? இதைத் தான் மிகக் கொடியது என்று கூறு கிறேன். என்னைப் பிரிய முடியாதுதான் தங்களால்; என்னாலுந்தான். அதற்காகக் கணவன் மனைவியாக வாழ்வதா? என் மனம் இடம் மாறாதண்ணா! சிறிது நாள் என் தோழியிடம் செல்லுகிறேன். நம் பெற்றோ ருக்கு ஆறுதல் கூறுங்கள்.

இப்படிக்கு
உங்கள் தங்கை.

ஆச்சர்யம் ஓர் பக்கம், அதிர்ச்சி மற்றோர் பக்கம். வேடிக்கை வினையாகி விட்டது. இவற்றிற்கிடையே அனைவரும் சிக்கித்தவித் தனர்.

அதே சமயத்தில் முல்லை தன் பெட்டி படுக்கையுடன் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து கொண்டிருந்தாள்.

முந்தினநாள் இரவு முல்லை யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வெளியில் சென்ற பொழுது, தன்னோடு எடுத்துச்சென்ற அவளது படுக்கையில் சிக்கியிருந்த ரவியின் கடிதம் ஒன்றை நடுவழியில் முல்லை பார்த் துத்தான், தன்னுடைய தோழியின் ஊருக் குப்போவதை நிறுத்தித் தன் வீடு திரும்பி விட்டாள்.

வீட்டிலுள்ளோர் ஒவ்வொருவரும் திரும்பி வந்துகொண்டிருந்த முல்லையை வரவேற்கத் தவறவில்லை, விசாரிக்காமலும் விடவில்லை. எவர்க்கும் பதில் எதுவும் கூறாமல், ரவியின் கடிதத்தை மட்டும் அவர்களிடம் கொடுத்து விட்டு மாடிக்குப் போய்விட்டாள் முல்லை.

ரவியின் கடிதமிது:-

"அன்புத் தங்கையே! மற்றொருவன் கணவன் என்ற போர்வையில் உன்னை வரிந்து போகப் போகிறானே – அதற்குப் பயந்து நீ என்னைப் பிரிய முடியாது என்று நினைத்திருப்பாய். உண்மை. நானும் உன்னைப் பிரிய முடியுமா? நம்மால் அது முடியாது என்று நமக்குத் தெரியும். ஆம். நம்மிடையே அப்பிரிவு ஏற்பட்டுவிடக் கூடாது என்பது நம்முயற்சி அல்ல; என்றோ வேறான்றிவிட்ட இயற்கை அன்பு, ஆனால், இன்று நீ என் அத்தை மகளாம். இது நாம் பிறந்த வரலாறு தரும் உண்மையான உறவு. எனவே, நீ என் மனைவியாகத் தகுந்தவ ளாம். நீ என் மனைவியாகி விட்டாலும் அவர்களும்— ஏன் நாமுந்தான் நினைக்கிற படி நம்மிடையே பிரிவு ஏற்படாததுதான். ஆனால், அண்ணன் தங்கை என்ற உறவில் வார்க்கப்பட்ட நமக்கு கணவன் மனைவி என்ற அந்தப் புது உறவு கருத்தரிக்கவே இடமில்லையம்மா. அன்று உன்னைத் தனி யாக அழைத்து நம் பெற்றோர்கள் உன்னி டம் கேட்டதற்கு நீ உன் சம்மதத்தைக் கொடுக்காமலா, இந்தக் கலியாணத்திற்கு ஏற்பாட்டை ஆரம்பித்திருப்பார்கள்? அம்மா! முல்லை, என் அன்பு என்றும் ஒரே ருசி வாய்ந்தது. உடையை எப்படியும், எப்பவும் மாற்றலாம். ஆனால் உள்ளத்தை அப்படி மாற்றத்திற்கு உடந்தையாக்க முடி யாதம்மா.

இப்படிக்கு, உன் அண்ணன்.

இந்த இரண்டு கடிதங்களுந்தான், நிலை மையை உள்ளது உள்ளவாறு அவர்களு டைய பெற்றோர்களுக்குப் புரியவைத்தன.

"இத்தனை நாளும் அவர்கள் அன்னியோன் னியமாக பழகியதை சரியாகக் கவனிக்காதது நாம்தான்" என்று அப்பரும் நினைத்து அசந்து உட்கார்ந்துவிட்டார்.

முல்லையின் ஏதோ ஒரு முடிவு அவளது முகத்தில் பதிந்தது.

மிக அவசரமான முடிவு ஒன்றைக் கையாண்டாள். ரவியினுடைய நண்பன் ஒருவன் மாதவன். அவனையே மணப்பது என்று தீர்மானித்தாள். ஏற்றுக்கொண்டாள் மாதவனையே கணவனாக; எவரும் தடைசெய்ய முடியவில்லை.

மறுநாளே முல்லையைத் தன் ஊருக்கு மாதவன் கூட்டிச் சென்றுவிட்டான்; முல்லையின் விருப்பத்தையும், அவசரத்தையும் முன்னிட்டு.

ரவி சென்றுவிட்ட இடத்தை மாதவன் அறிவான். எதிர்பாராமல் தனக்கும், முல்லைக்கும் நடந்தேறிய திருமணத்தைப்பற்றி விளக்கிய ஒரு கடிதத்தை ரவிக்கு மாதவன் தூதுவிட்டான். உடனே ஊர் திரும்பிவிடவும் ஓர் வேண்டுகோளையும் இணைத்திருந்தான்.

மாதவனின் கடிதத்தைப் பார்த்த ரவியும் நேராகத் தன் இல்லம் வந்து சேர்ந்தான். எவரும் அவனுக்குக் கலியாணம் செய்து வைக்க முயற்சிக்கவும் அஞ்சிப்போயினர். அவன்தான் கலியாணம் என்ற சொல்லையே வெறுத்துதறிவிட்டானே?

முல்லைப் பாசம் மட்டும் ரவியைவிட்டு அகலவேயில்லை. அந்த நினைவுதான் ரவியை உயிர் வாழச் செய்தது. நாளாக, ஆக, முல்லையைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற ஆவல் துளிர்த்தது; வளர்ந்தும் விட்டது வலுவாக.

முல்லையை அனுப்பி வைக்கும்படி, ரவி மாதவனுக்கு ஓர் கடிதமும் எழுதி விட்டான்.

முல்லை வரவில்லை. ரவியை வந்து போகும்படி மாதவனிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அவன் செல்ல முடியாமைக்கு வருந்தி முல்லையை அனுப்பி வைக்கும்படி மட்டும் மாதவனை வற்புறுத்தி கடிதம் எழுதினான். பதில் இல்லை.

பதிலே இல்லை... முல்லையையும் காணோம். நாட்கள், மாதங்கள், ஆண்டு ஒன்றும் மாண்டு விட்டது.

அப்பொழுதுதான், மாதவன். ரவிக்கு ஓர் நீண்ட கடிதம் எழுத ஆரம்பித்தான்.

"அன்புள்ள ரவி, உன்னிடமிருந்து சுமார் ஓராண்டுக்கு முன்னால் ஓர் கடிதம் வந்தது. முல்லையை அனுப்பி வைக்கும்படி அதில் எழுதியிருந்தாய். ஆனால், முல்லையிடம் உன் கடிதம் வரும் முன்பே, அவளை உன்னிடம் ஒருமுறை போய்வரச் சொல்லியிருக்கிறேன். மௌனமாக இருந்து விட்டாள். உனது கடிதத்தைக் காட்டினேன். அதற்கும் மௌனம்தான் பதில் என்பதைத் தெரிந்தேன். பிறகுதான் உன்னை வரும்படி கடிதம் எழுதினேன். நீயும் அதை மறுத்து, அவளைத்தான் அனுப்பி வைக்கும்படி மீண்டும் வற்புறுத்திக் கடிதம் எழுதினாய். நான்தான் அவளை அனுப்பவில்லை என்று மட்டும் என்னை வருந்திக் கொள்ளாதே. என் வேண்டுதல், வற்புறுத்தல் எல்லாம் அவளிடம் பலிக்கவில்லை.

'ஓரிரவு. முல்லை தன் தோழியிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தாள். இது வரை எமது வாழ்வில் அவளது நீண்ட நேரப் பேச்சே அதுதான். ஒட்டுக் கேட்க விரும்பவில்லை. எனினும் உனது நலனுக்காகவும், அவளது நலனுக்காகவும் அவளது மனதை அறிய விரும்பி, அப்பேச்சைக் காது கொடுத்துக் கேட்க விரும்பினேன்: கேட்டேன்; அவள் பேசியது," எனது அண்ணனைப் பார்க்க எப்படிப் போவேனடி. என் அண்ணன் என்னைத் தன் கண்ணிலும் மேலாகக் காத்தார். நாங்கள் உடன் பிறக்காவிட்டாலும் உலகமே கண்டறியாத ஒரு சகோதர வாஞ்சை எங்களிடம் இடம் பெற்று விட்டது.

ஆனால் நான் அங்கு தங்குவதால் ஏற்படும் தீங்கை நினைத்துப்பார். எங்கள் உறவிலே புதுமை புகுந்திருக்கிறது அல்லவா? நான் அவருக்கு முறைப் பெண்ணும். அதனால் வந்த வினை தானேடி இத்தனையும்.

அந்தப்புது உறவு எங்களை இரையாக்கிக் கொள்ள முடியவில்லைதான். ஆனால் மக்களில் பலர்......! வீண் பழி சுமத்துவதிலே ருசி மிக்கவர்களாகத் திரிகின்றனரே. எங்களைப் பிணைத்துப்பேசி விடுவார்கள். உலகம் அதை எளிதில் நம்பிவிடும். அந்தக் கொடுமையை உயிரோடு இருந்து நுகர்வதா?'

ரவி, எனக்குத்தெரியும்—முல்லையும் ரவியும் அன்பு உலகத்திலே அதிசயப் பிறவிகள் என்று.

ஆனால் ஆச்சரியம் ஒன்று. இடையில் ஓர் நாள் முல்லை உன்னைப் பார்த்து வர வேண்டும் என்று என்னிடம் அவளே வந்து கேட்டாள். என்னை மன்னித்துவிடு ரவி, அப்பொழுது முல்லையை அனுப்பி வைக்க நான் மறுத்து விட்டேன். அன்றுதான் கணவன் என்ற உரிமையில் இடும் ஓர் கட்டளையை யிறுத்தவனானேன். அதை அவள் மீறி விடுவாள் என்ற அச்சம் – பின்னால் அவள் மீறுததால் – இல்லை; ஆனால், அன்று அவள் பட்டபாடு! கான்படு கண்ணியில் மான்படுமாறு துடிதுடித்து விட்டாள். அன்

புள்ள ரவி! இந்தக் கடிதத்தில் எதைச் சொல்லுவது, எதை மறைப்பது என்றே விளங்கவில்லை.

நான் யார்? அவள் யார்? உனக்குத் தெரியுமே. நான் ஒரு பொது நல ஊழியன். எல்லாரும் ஆகிவிட முடியுமா? நூற்றில் ஆயிரத்தில் ஓரிருவர் அப்படி உதிக்கமுடியும்.

பொது நல ஊழியன், வாழவிடு, என்ற கோட்பாட்டை கொண்டியங்க வேண்டும்' பொது நலத் தொண்டன் முதலில், தான் வாழவேண்டும் என்ற சுயநலம் துளிர்த்தாலே, பிறர் நலம் பேணுவதிலே பிழை மலிந்து விடுவது சகஜம்.

அசல் பொது நலத் தொண்டன் நான். திருமணம் வேண்டாம் என்று இருந்தவன் நான். இவையெல்லாம் தற்புகழ்ச்சி, புகழ் ஈட்டும் வழி, என்று எண்ணிவிடாதே; என் நினைவு முழுதுமே பிறருக்காகப் பிறந்துள்ளது.

'அவளும் திருமணமே கூடாது' வேண்டாம் என்று இருந்தவள் தானே.

இதில் ஒரு புதுமை பார். திருமணம் வேண்டாம் என்றிருந்த எங்கள் இருவருக்குந்தான் திருமணம் நடந்திருக்கிறது. எதிர்பாராத நிகழ்ச்சி. ஆனால் உண்மை என்ன?

உனக்கும், முல்லைக்கும். இடையில், தெரிவிக்கப் பட்ட ஓர் புதிய உறவு முள் சமூகம் ஏற்றுக் கொள்ளும்

ஆனால், அம்முள் உங்களைக் குத்திவிடக் கூடாதே என்று அதையும் ஒரு சமூகத் தொண்டாக நினைத்தே முல்லையை மனைவியாக ஏற்றேன், அவ்வளவு தான்.

திருமணம் ஆன பிறகு நாங்கள் ஒருவருக்கொருவர் வெறுக்கவும் இல்லை.

ஆனால் பெயர்தெரியாத ஒரு பெரு நோயின் வித்து நான் என்பது உனக்குத் தெரியுமா? எனக்கே இப்பொழுதுதானே தெரியும்.

மொத்தத்தில் இனிமேல் முல்லையும் உயிரோடு இருந்தால்.......................... நானும் அவளும் இந்த உலகத்தையே பற்ற வைக்கும் நெருப்பாகி விடுவோம்?

இதுதான் என் கடைசிக் கடிதமாகும். என்னைக் கொலைகாரன் என்று பிறர் நினைக்காமல் இருக்க என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளப் போகிறேன்.

(முல்லை— அவள்தான் உன் அன்புச் சகோதரி என் செயலுக்கு இறையாகி மாதங்கள் உருண்டோடி விட்டனவே.)

இவற்றை நீ நம்புவாய்."

இப்படிக்கு
மாதவன்.

சகோதரப் பாசத்தால் கட்டுண்டு, முல்லையைக் காண முடியாததுயருக்குப் பலியான ரவி உயிரோடிருந்தால் தானே மாதவன் கடிதத்தைப் பெற்றிருக்க முடியும்!

திரை உலகம்

விச்வம்

<u>விமர்சனம்</u>

தாய் மகளுக்குக் கட்டிய தாலி.

வினோதமான தலைப்பு! புரட்சிகரமானதுங்கூட. புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். கதாநாயகன். கதை, அறிஞர் அண்ணுவினுடையது. நான்கு ஆண்டுகள் பாடுபட்டுத் தயாரித்த படம். பொதுமக்கள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து அடங்கிவிட்ட நேரத்தில் திடீரென்று வெளியான படம். கூட்டத்திற்குக் குறைச்சலா?

சிறு கருத்தைக்கொண்டு எழுதப்பட்ட சிறு கதையை நீட்டிப் பெருக்கியதால் ஒரே குழப்பம்.

சுந்தரம் பிள்ளையின் மகள் காவேரி. (மறந்துவிட்டேன்; சுந்தர முதலியார் யாராணுலென்ன) அவருடைய நண்பர் மகள் சுந்தரி. நடனப் போட்டியில் காவேரி கெலிக்கவில்லை யென்பதற்காக குரோதம் கொண்டு நண்பன் நெல்லைக் கொள்ளையடித்து அவனையும் கொன்று ஆற்றில் போட்டுவிடுகிருர் சுந்தரமுதலியார். கடனுக்குப் பயந்து நெல்லை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதாகக் கதையும் கட்டிவிடுகிருர். (ஓடிப்போகும் ஒருவன் தன்னேடு எடுத்துக்கொண்டு போகக்கூடிய பொருள் பாருங்கள் நெல்! நல்லவேளை நிலத்தையும் வீட்டையும் தூக்கிக் கொண்டு போனுர் என்று கதை எழுதாமல் விட்டார்களே!) கதையை நம்பிய மனைவி தனபாக்கியம் மகளோடு ஊரைவிட்டுப் போகிருள். (ஏன்? நிலம் இருக்கிறதே! ஏன் ஊரைவிட்டுப் போகவேண்டும் என்கிறீர்களா?) போகாமல் என்ன செய்வது? கதாநாயகன் வேறு ஊரில்தானே இருக்கிருன்!

போன இடத்தில் கதாநாயகனை அதாவது லோகு முதலியாரின் மகன் கனகுவை ஆற்றிலிருந்து காப்பாற்றுகிருள். அவள் யாரென்றே தெரியாத முதலியாரும் ஏனையோரும் அவளைத் தாழ்ந்த சாதி என்று நினைத்து விடுகிருர்கள். (முன்பின் தெரியாதவர்களையெல்லாம் தாழ்ந்த சாதி என்று கருதுவது பண்போ என்னமோ!)

சுந்தரி-கனகு காதல் கொள்கிருர்கள். பூசாரியின் எதிர்ப்பு வளர்கிறது. இடையில் சுந்தர முதலியாரிடம் பணம் கடன் வாங்கச் சென்ற கனகுவின்மேல் காவேரி காதல் கொள்கிருள். சுந்தர முதலியாரும் கல்யாணம் பேசுகிருர். லோகு முதலியார் மறுத்து விடுகிருர். எதிர்ப்பு நம்பர் இரண்டு. கனகு அடுத்த ஊர் திருவிழாவுக்குப் போய் அங்கு சுந்தரியைப் பதிவு மணம் செய்து கொள்கிருன். (ஏன் பிரமித்து நிற்கிறீர்கள்! தந்தையின் சம்மதம் இருக்கிறது. பெண்ணின் சம்மதம் இருக்கிறது. பெண்ணைப் பெற்றவரின் சம்மதம் இருக்கிறது. யாருக்கும் தெரியாமல் பதிவு மணம் எதற்கு என்ருே? தந்தை மனம் மாறிவிட்டால்! தன் மனமுந்தான்...) அன்று இரவே பெருமழை அவர்களைப் பிணைக்கிறது. வேண்டுமென்றே யாரோ ஒரு வீட்டைத் திறந்து போட்டு வெளிச்சமும் போட்டிருக்கிருர்கள். (உங்களுக்கு நம்பிக்கையில்லையா?... படத்தைப் பாருங்கள். சுந்தரிக்குக் குழந்தை பிறக்க வேண்டியிருக்கிறதே கதையில்)

சுந்தரி கர்ப்பவதியாகிருள். லோகு முதலியார் பொய்க் கடிதத்திற்குப் பயந்து சுந்தரியை மணக்க மறுக்கிருர். தனபாக்கியம் வீடு தீக்கிரையாகிறது (யார் தீ வைத்தார்களோ தெரியவில்லை) அவர்களைக் காப்பாற்ற கனகு வீட்டுக்குள் புகுந்தும் அவர்களைக் காணவில்லை. தனபாக்கியமும் சுந்தரியும் வண்டியில் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிருர்கள். ("வண்டியேது?" என்று கேட்காதீர்கள். புரொட்யூசரும் டைரக்டரும் கொடுத்தார்கள்.)

இந்த அழகில் போகிறது கதை.

கனகு நாட்டாமைக்காரரிடம் கையெழுத்து ஏது மில்லாமல் மூவாயிரம் ரூபாயைக் கொடுத்து விடுகிருன்!

பத்து வயதில் காணுமல் போன லோகு முதலியாரை அவர் மகன் வயதே இருக்கக்கூடிய மானேஜர் பாலுவை விட்டுத் தேடச் சொல்கிருர் அவருடைய அண்ணன் அருமைநாயகம்.

கடைசியில் ஒரு சர்க்கஸ் கொட்டகை. ஊருக்கு வெளியே காரில் போகக்கூடிய தூரத்தில். பார்க்க ஜனங்களில்லாமலேயே சர்க்கஸ் நடக்கிறது.

பெண்ணைக் கடத்துதல், கொலை செய்ய முயற்சி, மிரட்டிக் கையெழுத்து வாங்குதல், பைத்தியக்கார ஆஸ்பத்திரி எல்லாக் கூத்தும் மலிவாய் இருக்கின்றன.

கதையில் புதுமை தாய் மகளுக்குக்கட்டும் தாலிதான்— சமூகம் கேட்குமோ என்ற பயத்தில் சுந்தரியாக ஜமுனுவும், காவேரியாக ராஜசுலோசனுவும் நன்கு நடிக்கிருர்கள்.

218563

தனபாக்கியமாக கண்ணாம்பா நன்கு நடித்தும் அனுவசியமான கத்தலாலும் அடிக்கடி காம்ராவைப் பார்த்துப் பேசுவதாலும் நடிப்பைக் கெடுத்துக் கொள்கிறார்.

லோக்குவாக நடிக்கும் டி. பாலசுப்ரமணியம் நடிப்பு பலே ஜோர்.

சுந்தர முதலியாராக வரும் எம். ஜி. சக்ரபாணி குணசித்ர நடிகர். என்றுமே சோடை போகமாட்டார். பார்வை, பேச்சு, நடை எல்லாமே நடிப்பு மயம்.

கதாநாயகனாக திரு எம். ஜி. ஆர். திறம்பட நடித்தும், கட்டமெல்லாம் பிரசாரமாக அமைந்து விட்டதால் எடுபட வில்லை.

தங்கவேலு தாங்கும் பாத்திரம் கோமாளிக்கூத்து ஆயினும் நடிப்பு பிரமாதம். குறிப்பாக சுந்தர முதலியாரிடம் வந்து குடித்தவன்போல் பாடி ஆடும் கட்டத்தைச் சொல்ல வேண்டும்.

பூசாரி வேஷம் மிகப் பொருத்தம்.

டைரக்‌ஷன்......டைரக்‌ஷனா அது!

வசனம்......அரங்கண்ணல் எழுதியதுதானா?

இருபது வருஷங்களுக்கு முன்னால் எடுத்திருந்தால் படம் பிரமாதமாய் ஓடியிருக்குமோ என்னவோ?

இரும்புத் திரை.

கதை பழையது. கருத்தும் பழையதுதான். ஆனால் கருத்துக்குத் தகுந்த கதையை அமைத்திருக்கும் விதம் புதியது. கதையைப் படமாக்கியிருக்கும் விதமும் புதியது. படம் முழுவதும் நட்சத்திர மண்டலம்.

நட்சத்திர மண்டலத்தைச் சுட்டிக்காட்டி எந்த நட்சத்திரம் அதிகம் பிரகாசிக்கிறது என்று கேட்டால் சொல்வது கடினந்தான்.

சிவாஜியின் துடி துடிப்பும் வைஜயந்தியின் துறுதுறுப்பும்; சிவாஜியின் சீற்றமும் வைஜயந்தியின் சோகமும்; சிவாஜியின் லாகவமும் வைஜயந்தியின் லாவண்யமும் – எதை உயர்த்திச் சொல்வது?

இவர்களுக்குச் சளைக்காமல் சக்கை போடு போடுகிறார் சுப்பையா. பார்ப்பவர்கள் பூரித்துப் பெருமையடையும் வகையில் நடிப்பின் உச்சியை எட்டிப் பிடித்து விடுகிறார்.

எவருக்கும் இளைத்தவரல்ல எஸ். வி ரங்காராவ். மில் முதலாளியாகவே மாறிவிடுகிறார். சிவாஜிக்கு ஆசை காட்டும் கட்டத்தில் இருவரும் ஒருவரையொருவர் மிஞ்சி விடுகிறார்கள்.

வசுந்தராதேவி சோகம் பொழிகிறார். எங்கே திரும்பினாலும் நட்சத்திர ஜொலிப்பு. எந்த நட்சத்திரத்தைக் குறித்துச் சொல்வது நட்சத்திர மண்டலத்தின் அழகில் லயித்த மனித உள்ளம் அதைப் படைத்த ஆண்டவனைப் பாராட்டுதல்போல், இரும்புத் திரையைப் பார்க்கும் ரசிகர்கள் அதைப் படைத்த படாதிபதியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

* * *

பாராட்டுகிறேன்

தமிழ் சினிமா பொங்கல் மலரில் பிரபல படாதிபதி எம். ஏ. வேணு எழுதியுள்ள "நீங்களும் நாங்களும்" என்ற கட்டுரைக்குப் பாராட்டு இந்தக் கடிதம்.

அன்புடையீர்!

தமிழ் சினிமா பொங்கல் மலரில் தாங்கள் எழுதிய கட்டுரை உவப்பூட்டுகிறது. சினிமா உலகில் புதுக் கலைஞர் புகுவதற்கு முதல் எதிர்ப்பு ரசிகர்களிடமிருந்து தான் கிளம்புகிறது என்பதை வெகு அழகாக எடுத்துக் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தும் தவறு முற்றிலும் ரசிகர்களுடையதல்ல. தாங்கள் முதன்முதல் தயாரித்த "நால்வர்" படத்தில் எழுத்தாளர் புதியவர்; கதாநாயகன் புதியவர். டைரக்டர் புதியவர். முக்கிய பல நடிக நடிகையர் புதியவர். மக்கள் அப்படத்தை ரசிக்கவில்லை! அந்த ரசனைதானே ஸ்ரீ A. P. நாகராஜனை உயர்த்திற்று; டைரக்டர் சோமுவை உயர்த்திற்று; மற்றவருக்கும் திரையுலகில் இடம் கொடுத்தது. தங்களுடைய "முதலாளி" மட்டும் என்ன? அதன் மூலந்தானே ஒரு கதாநாயகன் முதலாளியானார்! வெங்கடராமானுஜம் எழுத்தாளரானார்? திரையுலகுக்குத் தங்கள் தொண்டு பாராட்டத்தக்கது. தொடர்ந்து செய்யுங்கள். கலை உலகம் வளரும். இளங் கலைஞர்கள் வாழ்த்துவார்கள். ஊசிப்போன அறுசுவை விருந்துணவை விட புதிய கஞ்சி உடம்புக்கு நல்லது. காய்ச்சிக்காய்ச்சி ஊற்றுங்கள். ஏமாந்த சோணகிரிகளை ஏற்றுங்கள் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* * * *

ராஜ மகுடம்

காதல், வீரம், ஹாஸ்யம், சோகம், சூழ்ச்சி, எதிர் சூழ்ச்சி பயங்கர வாள்போர் முதலியவை நிரம்பிய மகத்தான "ராஜ மகுடம்"—பிரபல வாஹினியின் முதல் தமிழ்ப் படம்—பிப்ரவரி இறுதியில் வெளிவர விருக்கிறது.

ஸ்வர்க்கசீமா, மல்லேசுவரி, பங்காரு பாப்பா முதலிய உயர்தரப் படங்களைத் தயாரித்தவரும் டைரக்ட் செய்தவருமான திரு. பி. என். ரெட்டி அவர்களே ராஜமகுடத்தைத் தயாரித்து டைரக்ட் செய்துள்ளார்.

Edited & Published by N. R. Ramanujam, B. A., & Printed by S. Rangaswami, B. A., at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

சொற்ப வருமானம் அதிகரித்த தேவைகள் எவ்விதம் சேமிப்பது?

மிகவும் சிரமந்தான். ஆனால் இதற்கு ஒரு சுலபமான வழி இருக்கிறது. நீங்களே இதை நிரூபிக்கலாம். பகுத்தறிவுடன் உங்கள் மாதாந்திர வரவு செலவுக் கணக்கை தயாரியுங்கள் தேவையற்ற செலவுகளை தவிருங்கள். உங்களால் முடிந்ததை தவருமல், சேமிக்கத் தொடங்குங்கள். ஆண்டுகள் செல்லச் செல்ல உங்கள் சேமிப்பு எவ்வளவு பெருகி உங்கள் தேவைகளை நிறைவேற்றுகிறது என்பதை அறிவீர்கள்.

வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்

உங்கள் தேவைக்கு உகந்தது

(விவரங்கள் எந்த தபால் நிலையத்திலும்)

சேமித்து இந்தியாவின் வருங்காலத்திற்கு முதலீடு செய்யுங்கள்

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

S. G. RADHAKRISHNAN
KRISHNA NEWS AGENCY
SOUTH GATE ... RANGAM

மறுபடியும் ஆச்சரியப்படும்படியான

ஆரோக்கியத் ... இருங்க

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
ஆரோக்கியத்தை அளிக்கும் சிறந்த டானிக் என்று நிரூபணம் செய்யப்பட்டது. அதை ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர்களும் அவர்களது குழந்தைகளும் உலகமெங்கும் தினசரி உபயோகப்படுத்துகிறார்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில்
போஷாக்கை ஊட்டும் கலவைகள் இருக்கின்றன. அவைகள், நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் வீர்யத்துடனும், ஆரோக்கியத்துடனும் சந்தோஷத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படி சக்தியை அளிக்கின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
இடைவிடாதிருந்துவரும் இருமலையும், ஜலதோஷத்தையும், தொண்டைப்புண்ணையும் போக்குகிறது. நோயுற்று குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேறுவதற்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.

இப்பொழு
திருட இயலா
மூடியுடனு
புதிய சிக
முத்திரையு
னும் கிடைக்கு

சிவப்பு உறை
இப்பொழுது
நிறுத்தப்
பட்டுள்ளது.

நீங்களும் ஆரோக்கியத்துடன் இருக்க நாவிற்கினிய

வாட்டர்பரீஸ் காம்பவுண்

சாப்பிடுங்கள்